முன்னுரை

பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போன யூதர்கள், எழுபது வருஷங்களுக்கு பின்பு, தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வருவார்கள் என்று எரேமியா தீர்க்கதரிசனமாகச் சொன்னார். எரேமியா சொன்ன தீர்க்கதரிசனம் நிறைவேறுகிற சம்பவம் இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

சுவிசேஷ சபையானது புதிய ஏற்பாட்டு பாபிலோனிலிருந்து விடுதலை பெறும் என்பதற்கு, யூதாதேசத்தார் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுதலை பெற்றது. அடையாளமாயிருக்கிறது.

பாலஸ்தீன தேசத்தில் கி.மு. 546 - 461 ஆகிய வருஷக்காலத்தில் இந்தப் புஸ்தகம் எழுதப்பட்டிருக்கிறது. மறுஜாதி ஸ்திரீகளை விவாகம் பண்ணியவர்கள் தங்களுடைய ஸ்திரீகளைத் தள்ளிவிட்ட பின்பு, இந்தப் புஸ்தகம் எழுதப்பட்டிருக்கிறது.

யூதமார்க்கத்தின் பாரம்பரியம் எஸ்றாவே இந்தப் புஸ்தகத்தின் ஆசிரியர் என்று கூறுகிறது. இந்தப் புஸ்தகத்தின் முதலாவது பகுதி (எஸ்றா 1-6) பொது ஆவணங்களிலிருந்து தொகுக்கப்பட்டதாகும். இந்தப் புஸ்தகத்தின் மீதமுள்ள பகுதி (எஸ்றா 7-10) தன்னிலை மறுபெயரில் **(first person)** எழுதப்பட்டிருக்கிறது.

எஸ்றா எருசலேமுக்கு வந்த பின்பு, நடைபெற்ற நிகழ்ச்சிகள் இந்தப் புஸ்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. எஸ்றாவின் புஸ்தகமும், தானியேலின் புஸ்தகமும் பல விஷயங்களில் ஒத்திருக்கிறது. இவர்கள் இருவருமே பாபிலோனிய தேசத்து சிறையிருப்பிலிருந்த யூதர்கள்.

எஸ்றா பிரதான ஜெபாலயத்தின் தலைவராக இருந்தார். இவர் இந்தப் புஸ்தகத்தை எழுதியதோடு யூதமார்க்கத்தின் வேதநூலையும் தொகுத்தார். யூதமார்க்கத்தார் இந்தப் புஸ்தகத்தை எஸ்றாவே எழுதியதாகக் கூறுகிறார்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரும் எருசலேமுக்குத் திரும்பி வருகிறார்கள். தேவாலயம் மறுபடியும் திரும்பக் கட்டப்படுகிறது. பாலஸ்தீன தேசத்தைச் சுற்றிலுமுள்ள புறஜாதியாரிடமிருந்து வேறுபிரிந்து ஜீவிப்பதில் இஸ்ரவேல் புத்திரருக்குப் பல இடையூறுகள் உண்டாயிற்று.

இஸ்ரவேல் புத்திரர் புறஜாதியார் மத்தியில் சிதறடிக்கப்பட்ட பின்பு, மறுபடியும் எருசலேமுக்குத் திரும்பி வந்து, மகா சபையாகக் கூடுகிறார்கள். மோசேயின் பிரமாணத்தின்படி ஜீவிப்பதற்கு இவர்கள் பல ஆவிக்குரிய மறுமலர்ச்சியின் வழியாகச் செல்ல வேண்டியிருக்கிறது. கர்த்தருடைய பிரமாணத்திற்குச் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள் உடன்பட்டு, கர்த்தரோடு உடன்படிக்கை செய்து கொள்கிறார்கள்.

எஸ்றா புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிற சரித்திர சம்பவங்களெல்லாவற்றையும் எஸ்றா ஆவணங்களாக பாதுகாத்து வைத்திருக்கிறார். இந்த சரித்திரம் பின்வரும் சந்ததியாருக்கு தெரியவேண்டும் என்பதற்காக, எஸ்றா இதைத் தொகுத்து இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறார்.

எஸ்றாவைப்பற்றிய விவரங்கள் இந்தப் புஸ்தகத்தின் ஏழாவது அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் எஸ்றாவே தன்னைப்பற்றி விரிவாகச் சொல்லுகிறார்.

எஸ்றா - விரிவுரை
EZRA - COMMENTARY

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

எஸ்றாவின் புஸ்தகத்தில் நான்கு பாகங்கள் உள்ளன. அவையாவன:

1. யூதர்கள் தங்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பி வருகிறார்கள் (எஸ்றா 1,2 ஆகிய அதிகாரங்கள்).

2. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள் எருசலேமிலே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறார்கள். அவர்கள் எதிர்ப்புக்களை சந்திக்கிறார்கள். கர்த்தருடைய உதவியினால், சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்கள், கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டி முடிக்கிறார்கள் (எஸ்றா 3-6 ஆகிய அதிகாரங்கள்).

3. எஸ்றா எருசலேமுக்கு வருகிறார் (எஸ்றா 7,8 ஆகிய அதிகாரங்கள்).

4. எஸ்றாவின் ஊழியம். மறுஜாதி ஸ்திரீகளை தள்ளிவிடுகிறார்கள் (எஸ்றா 9,10 ஆகிய அதிகாரங்கள்).

1 அதிகாரம்

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களை, பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசு விடுதலைபண்ணுகிறான். அவர்கள் எருசலேமிலே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கும் அனுமதி கொடுக்கிறான் (எஸ்றா 1:1-4).

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்த திரளான யூதர்கள் தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வருகிறார்கள் (எஸ்றா 1:5,6). கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுகளை யூதர்களிடம் திருப்பிக்கொடுக்குமாறு அரசு ஆணை பிறப்பிக்கப்படுகிறது (எஸ்றா 1:7-11). சிறையிருப்பிலிருந்த யூதர்களுக்கு விடுதலை உண்டாயிற்று.

பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசு எஸ்றா 1:1-4

எஸ்றா 1:1. எரேமியாவின் வாயினாலே கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறும்படி, பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசுடைய முதலாம் வருஷத்திலே, கர்த்தர் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் ஆவியை ஏவினதினாலே அவன்:

எஸ்றா 1:2. பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் பூமியின் ராஜ்யங்களையெல்லாம் எனக்குத் தந்தருளி, யூதாவிலுள்ள எருசலேமிலே தமக்கு ஆலயத்தைக் கட்டும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்.

எஸ்றா 1:3. அவருடைய ஜனங்கள் எல்லாரிலும் எவன் உங்களுக்குள் இருக்கிறானோ, அவனோடே அவனுடைய தேவன் இருப்பாராக; அவன் யூதாவிலுள்ள எருசலேமுக்குப்போய், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டக்கடவன்; எருசலேமில் வாசம்பண்ணுகிற தேவனே தேவன்.

எஸ்றா 1:4. அந்த ஜனங்களில் மீதியாயிருக்கிறவன் எவ்விடத்தில் தங்கியிருக்கிறானோ, அவ்விடத்து ஜனங்கள் எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்துக்கென்று அவனிடத்தில் உற்சாகமாய்க் காணிக்கை கொடுத்து அனுப்புகிறதுமன்றி, அவனுக்குப் பொன் வெள்ளி முதலிய திரவியங்களையும், மிருகஜீவன்களையும் கொடுத்து, உதவிசெய்யவேண்டும் என்று பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் அறிவிக்கிறார் என்று தன்ராஜ்யமெங்கும் எழுதியனுப்பி விளம்பரம்பண்ணுவித்தான்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலே இருக்கிறார்கள். கல்தேயர்கள் யூதர்களை வெறுக்கிறார்கள். ஆனாலும் யூதர்களால் கல்தேயருக்கு விரோதமாக ஒன்றும் செய்ய முடியவில்லை. பாபிலோன் தேசத்திலே கர்த்தருடைய ஆலயமும் இல்லை. கர்த்தருக்கு பலிசெலுத்த அங்கே பலிபீடமும் இல்லை.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள், கர்த்தரைத் துதித்து சங்கீதங்களைப் பாடும்போது, அவர்களுடைய சத்துருக்கள் அவர்களைப் பரியாசம்பண்ணுகிறார்கள். ஆனாலும், யூதர்கள் அந்நிய தேசத்திலே இருக்கும்போது, கர்த்தர் அவர்கள் மத்தியிலே தம்முடைய தீர்க்கதரிசிகளை எழுப்பி, தம்முடைய ஆறுதலான வார்த்தைகளை அவர்களுக்கு சொல்லுகிறார்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களில் சிலர், பாபிலோன் தேசத்தையே தங்களுக்கு சொந்த தேசமாக்கிக்கொள்கிறார்கள். ஆனாலும் சிறையிருப்பிலிருக்கிற யூதர்களில் அநேகர், தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பிப்போகவேண்டும் என்று விரும்புகிறார்கள். அப்படிப்பட்ட யூதர்கள், பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுதலையாகப்போகும் நாளை, விசுவாசத்தோடும், ஆவலோடும் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

பாபிலோன் தேசம் விக்கிரகாராதனை மிகுந்த தேசம். யூதர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்தாலும், அவர்கள் பாபிலோனியரின் விக்கிரகாராதனையில் பங்குபெறவில்லை. யூதர்கள் பாபிலோன் தேசத்தாரிடமிருந்து வேறு பிரிந்து ஜீவிக்கிறார்கள். யூதர்கள் சிறையிருப்பிலிருந்தாலும், கர்த்தருடைய வார்த்தைகளை ஆர்வமாய்த் தியானிக்கிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்தை சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார். கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், அவரை விட்டு விலகிப்போகிறார்கள். கர்த்தர் அவர்களை அந்நிய தேசத்தாரின் கையிலே ஒப்புக்கொடுக்கிறார்.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், தன்னுடைய முதலாம் வருஷ ராஜ்யபாரத்தின்போது, யூதாதேசத்தாரில் அநேகரை தன்னுடைய தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோனான். இது யோயாக்கீம் ராஜாவுடைய நான்காம் வருஷ ஆட்சிக்காலமாகும்.

நேபுகாத்நேச்சார் பாபிலோன் தேசத்தில் நாற்பத்தைந்து வருஷங்கள் ஆட்சி செய்தான். அவனுடைய குமாரன் ஏவில்மெரொதாக் பாபிலோன் தேசத்தை இருபத்து மூன்று வருஷங்கள் ஆட்சி செய்தான். நேபுகாத்நேச்சாரின் பேரனான பெல்ஷாத்சார் பாபிலோனை மூன்று வருஷங்கள் ஆட்சி செய்தான். இவர்கள் மூன்றுபேரும் சேர்ந்து பாபிலோனை ஆட்சி செய்த மொத்த காலம் எழுபது வருஷங்களாகும்.

"உலகத்தை வனாந்தரமாக்கி, அதின் நகரங்களை அழித்து, சிறைப்பட்டவர்களைத் தங்கள் வீடுகளுக்குப் போகவிடாமலிருந்தவன் என்பார்கள்" (ஏசா 14:17).

நேபுகாத்நேச்சார் பாபிலோன் தேசத்தில் சிறை வைக்கப்பட்டிருக்கிற யூதர்களுக்கு இரக்கம் காண்பிக்கவில்லை. அவர்களை விடுதலைபண்ணவேண்டும் என்னும் எண்ணம் அவனுடைய மனதில் ஏற்படவில்லை. நேபுகாத்நேச்சார் சிறுமையானவர்களுக்கு இரக்கம் காண்பிக்கவில்லை.

"ஆகையால் ராஜாவே, நான் சொல்லும் ஆலோசனையை நீர் அங்கீகரித்துக்கொண்டு நீதியைச் செய்து உமது பாவங்களையும், சிறுமையானவர்களுக்கு இறங்கி உமது அக்கிரமங்களையும் அகற்றிவிடும்; அப்பொழுது உம்முடைய வாழ்வு நீடித்திருக்கலாம் என்றான்" (தானி 4:27).

தானியேல் நேபுகாத்நேச்சாருக்கு கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளை சொன்னபோதிலும், அவன் சிறுமையானவர்களுக்கு இரங்கவில்லை. அவன் சிறைப்பிடிக்கப்பட்ட யூதர்களைக் கொடுமைப்படுத்தி, தன்னுடைய அக்கிரமத்தின் அளவை அதிகரிக்கச் செய்கிறான்.

பாபிலோனின் பாவம் அதிகரிக்கிறது. கர்த்தர் பாபிலோன் தேசத்திற்கு விரோதமாக வருவதற்கு பெர்சியர்களுக்கு அனுமதி கொடுக்கிறார். மேதியனாகிய தரியுவும், பெர்சியனாகிய கோரேசும் பாபிலோன் தேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணு கிறார்கள். அவர்கள் பாபிலோன் தேசத்தை பெர்சிய தேசத்தோடு இணைத்துக் கொள்கிறார்கள். இந்த சம்பவம் தானியேல் 5-ஆவது அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

தரியு வயது முதிர்ந்தவன். அவன் பெர்சியா தேசத்தை ராஜ்யபாரம்பண்ணும் பொறுப்பை கோரேசுவிடத்தில் ஒப்புக்கொடுக்கிறான். கர்த்தர் கோரேசின் ஆவியை ஏவுகிறார். கோரேசு பாபிலோன் தேசத்தில் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கிற யூதர்களை விடுதலை பண்ணுகிறான். கோரேசு ஏசாயாவின் தீர்க்கதரிசனத்திற்கு மதிப்பு கொடுக்கிறான்.

"கோரேசைக் குறித்து: அவன் என் மேய்ப்பன்; அவன் எருசலேமை நோக்கி: நீ கட்டப்படு என்றும்; தேவாலயத்தை நோக்கி: நீ அஸ்திபாரப்படு என்றும் சொல்லி, எனக்குப் பிரியமானதையெல்லாம் நிறைவேற்றுவான் என்று சொல்லுகிறவர் நான்" (ஏசா 44:28).

"கர்த்தராகிய நான் அபிஷேகம் பண்ணின கோரேசுக்கு முன்பாக ஜாதிகளைக் கீழ்ப்படுத்தி, ராஜாக்களின் இடைக்கட்டுகளை அவிழ்க்கும்படிக்கும், அவனுக்கு முன்பாக வாசல்கள் பூட்டப்படாதிருக்க, கதவுகளைத் திறந்துவைக்கும்படிக்கும், அவனைப் பார்த்து, அவன் வலதுகையைப் பிடித்துக்கொண்டு, அவனுக்குச் சொல்லுகிறதாவது" (ஏசா 45:1).

நான் உனக்கு முன்னே போய், கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன். உன்னைப் பெயர்சொல்லி அழைக்கிற இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் நானே என்று நீ அறியும்படிக்கு, வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன்; நான் என் தாசனாகிய யாக்கோபினிமித்தமும், நான் தெரிந்துகொண்ட இஸ்ரவேலினிமித்தமும், நான் உன்னைப் பெயர்சொல்லி அழைத்து, நீ என்னை அறியாதிருந்தும், உனக்கு நாமம் தரித்தேன்" (ஏசா 45:2-4).

எரேமியாவின் வாயினாலே கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறும்படி, பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசுடைய முதலாம் வருஷத்திலே, கர்த்தர் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் ஆவியை ஏவுகிறார் (எஸ்றா 1:1).

கோரேசு என்னும் பெர்சிய பெயருக்கு "சூரியன்" என்று பொருள். அவன் கர்த்தருடைய சபைக்கு வெளிச்சத்தைக் கொண்டு வருகிறான். சிறையிருப்பிலிருக்கிற யூதர்களுக்கு காயம் கட்டுகிறான். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நீதியின் சூரியனாகயிருக்கிறார். கோரேசு இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறான்.

பெர்சிய தேசத்தில் பல ராஜாக்கள் ஆட்சி புரிந்திருக்கிறார்கள். அந்த ராஜாக்களைப் பற்றியும், அவர்களுடைய ஆட்சிக் காலங்களைப் பற்றியும் பல கல்வெட்டுக்களில் எழுதப்பட்டிருக்கிறது. பெர்சியர்கள் களிமண் உருளைகளில் தங்களுடைய வரலாற்றைப் எழுதி வைத்திருக்கிறார்கள். இந்த வரலாற்று ஆவணங்கள் மூலமாகப் பெர்சிய ராஜாக்களைப் பற்றிய விவரங்களை ஓரளவு தெரிந்து கொள்ள முடிகிறது.

பாபிலோனின் கிழக்குச் சாலையில் பெஹிஸ்துன் பாறை என்னும் 1,700 அடி உயரமுள்ள பாறை இருக்கிறது. இந்தப் பாறையில் பெர்சிய ராஜாக்களைப் பற்றிய கல்வெட்டுக்கள் அநேகம் உள்ளன. இந்தக் கல்வெட்டுக்களைப் பற்றிய விவரங்கள் கி.பி. 1846 ஆம் வருஷத்தில் வரலாற்று ஆசிரியர்களுக்குத் தெரியவந்தது. இந்தக் கல்வெட்டுக்களில் தரியு ஹிஸ்டாஸ்பிஸைப் பற்றிய வம்சவரலாறு முழுவதுமாகக் காணப்படுகிறது.

பெர்சிய தேசத்து ராஜாக்கள் அகாஸ்வேரு, அர்தசஷ்டா, தரியு என்று அழைக்கப்படுகிறார்கள்.இவையெல்லாம் அவர்களுடைய உண்மையான பெயர்கள் அல்ல. இவை புனைப்பெயர்களாகும். "அகாஸ்வேரு" என்பதற்கு "மாமல்லன்" என்று பொருள். "அர்தசஷ்டா" என்பதற்கு "பேரரசன்" என்றும், "தரியு" என்பதற்கு "கட்டுப்படுத்துகிறவன்" அல்லது "பராமரிக்கிறவன்" என்றும் பொருள்.

எஸ்றா, நெகேமியா ஆகிய புஸ்தகங்களில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகளுக்கு முன்பாகவே எஸ்தர் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்று முடிந்து விட்டன. எஸ்றா 1:1 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் கோரேசு ராஜா என்பவன் எஸ்தர், அகாஸ்வேரு ஆகியோருக்குப் பிறந்த குமாரன். இவனைப் பற்றி ஏசாயா முன்னறிவித்திருக்கிறார். (ஏசா 44:28-45:1) நெகேமியா புஸ்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் சில நிகழ்ச்சிகள் (நெகே 1:1-7:4) எஸ்றா 1:1-14 ஆகிய வசனங்களுக்கு முன்பு நடைபெற்றவையாகும்.

எஸ்தர் 1:1 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் அகாஸ்வேரு ராஜாவும், தானி 5:31 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் மேதியனாகிய தரியு ராஜாவும் ஒரே நபராவர்.

எபிரெய பாஷையில் இந்தப் புஸ்தகத்தின் முதல் வார்த்தை, "இப்பொழுது" **"Now"** என்று ஆரம்பமாகிறது. 2நாளாகமம் புஸ்தகத்தின் கடைசி வசனங்களும், இந்தப் புஸ்தகமும் தொடர்புடையது. கோரேசு ராஜாவின் ஆணை 2நாளாகமத்திலும் மேலும் எஸ்றா 1:1-4 ஆகிய வசனங்களிலும் காணப்படுகிறது. கோரேசுடைய முதலாம் வருஷம் என்பது சுமார் கி.மு. 538 ஆம் வருஷமாகும்.

கோரேசு இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை அறியாதவன். கர்த்தரை எவ்வாறு ஆராதிக்கவேண்டும் என்பதும் அவனுக்கு தெரியாது. ஆனாலும் கர்த்தர் கோரேசை அறிந்திருக்கிறார். கர்த்தர் தம்முடைய திட்டத்தை கோரேசு மூலமாக நிறைவேற்றுகிறார்.

"வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன்; நான் என் தாசனாகிய யாக்கோபினிமித்தமும், நான் தெரிந்துகொண்ட இஸ்ரவேலினிமித்தமும், நான் உன்னைப் பெயர்சொல்லி அழைத்து, நீ என்னை அறியாதிருந்தும், உனக்கு நாமம் தரித்தேன்" (ஏசா 45:4) என்று கர்த்தர் கோரேசைப்பற்றிச் சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சர்வலோகத்திற்கும் அதிபதியாகயிருக்கிறார். அவரே சர்வலோகத்தையும் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக ஆளுகை செய்கிறார். கர்த்தர் மனுஷருடைய ஆவியை ஏவுகிறார். மனுஷர்கள் செய்யும் நற்காரியங்களெல்லாம், கர்த்தர் அவர்களுடைய ஆவியை ஏவுவதினால் நடைபெறுகிறது. கர்த்தரே அவர்களுடைய மனதில் நல்ல சிந்தனைகளை வைக்கிறார்.

கர்த்தர் மனுஷருக்கு நீதியைப்பற்றிய தாகத்தைக் கொடுக்கிறார். அவர்கள் நன்மையையும் தீமையையும் வித்தியாசம் காணத்தக்கதாக, கர்த்தர் அவர்களுக்கு ஞானத்தையும், புத்தியையும், தெளிந்த சிந்தனையையும் கொடுக்கிறார். கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக மனுஷரை இயக்குகிறார்.

கர்த்தர் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் ஆவியை ஏவின சம்பவம், எரேமியாவின் வாயினாலே கர்த்தர் சொன்ன வார்த்தையோடு தொடர்புபடுத்தி சொல்லப்பட்டிருக்கிறது. பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போன யூதர்கள் தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வருவார்கள் என்று எரேமியா தீர்க்கதரிசனமாய்ச் சொன்னார். அது மாத்திரமல்ல, யூதர்கள் அந்நிய தேசத்திலே எழுபது வருஷங்களாக சிறையிருப்பிலிருப்பார்கள் என்றும், எரேமியா அவர்களுடைய சிறையிருப்பின் காலத்தைப்பற்றியும் தீர்க்கதரிசனமாகச் சொன்னார்.

பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசு, சிறையிருப்பிலிருக்கிற யூதர்களை விடுதலைபண்ணியது, கர்த்தர் எரேமியாவின் வாயினாலே ஏற்கெனவே சொன்ன வார்த்தையின் நிறைவேற்றமாயிருக்கிறது. கர்த்தர் தம்முடைய ஊழியக்காரரின் வார்த்தையை நிலைப்படுத்துகிறார்.

"நான் என் ஊழியக்காரரின் வார்த்தையை நிலைப்படுத்தி, என் ஸ்தானாபதிகளின் ஆலோசனையை நிறைவேற்றி: குடியேறுவாய் என்று எருசலேமுக்கும், கட்டப்படுவீர்கள் என்று யூதாவின் பட்டணங்களுக்கும் சொல்லி, அவைகளின் பாழானஸ்தலங்களை எடுப்பிப்பவர்" (ஏசா 44:26).

எரேமியா உயிரோடிருந்த காலத்தில், யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் அவரை வெறுத்தார்கள். அவருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. அவர்கள் எரேமியாவை நிந்தித்தார்கள். கர்த்தரோ எரேமியாவின் வார்த்தைகளை நிலைப்படுத்துகிறார். யூதாவின் மனுஷர் எரேமியாவின் வார்த்தைக்கு செவிகொடுக்காவிட்டாலும், எழுபது வருஷங்களுக்கு பின்பு பெர்சியா தேசத்திற்கு ராஜாவாயிருக்கிற கோரேசு, எரேமியாவின் வார்த்தைக்கு கீழ்ப்படிகிறான்.

கர்த்தருடைய வார்த்தை ஒருபோதும் வீணாய்ப்போவதில்லை. கர்த்தருடைய சித்தம், ஏற்ற காலத்தில் நிறைவேறும். கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைப்பட்டுப்போகாது.

பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசு, பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களை விடுதலை செய்கிறான். அவன் யூதர்களை விடுதலை செய்த காலமும் இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. "பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் முதலாம் வருஷத்திலே" சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் விடுவிக்கப்படுகிறார்கள்.

"கோரேசுடைய முதலாம் வருஷத்திலே" என்னும் வாக்கியம், அவன் பெர்சியா தேசத்தின்மீது ராஜாவாக ஆளுகை செய்கிற முதலாவது வருஷத்தைக் குறிக்கவில்லை. பெர்சியா தேசத்தார் பாபிலோன் தேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அந்த தேசத்தை பெர்சியா தேசத்தோடு இணைத்துக்கொள்கிறார்கள். பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசு, இந்த வெற்றியின் மூலமாக, பாபிலோன் தேசத்திற்கும் ராஜாவாயிருக்கிறான்.

"கோரேசுடைய முதலாம் வருஷத்திலே" என்னும் வாக்கியம், "கோரேசு பாபிலோன் தேசத்தை ராஜ்யபாரம்பண்ணுகிற முதலாம் வருஷத்திலே" என்று பொருள்படும்.

பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசு, பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களை விடுவிப்பதற்கு ஆணையிடுகிறான். கோரேசு தன்னுடைய அரசாணையை வாயினாலும் சொல்லுகிறான். எழுத்தின் மூலமாகவும் பிரகடனம்பண்ணுகிறான். அரசாணை எழுத்தின் மூலமாக அறிவிக்கப்படும்போது, அதிலே அரசமுத்திரை போடப்பட்டு உறுதிபண்ணப்படும்.

பெர்சியா தேசம் மிகவும் பரந்து விரிந்திருக்கிற தேசம். பெர்சியா தேசத்தில், அசீரியா தேசம், மேதிய தேசம் என்று இரண்டு பகுதிகள் இருக்கிறது. இஸ்ரவேலின் பத்துக்கோத்தித்தாரும் இவ்விரண்டு தேசங்களிலும் சிதறடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

"ஒசெயாவின் ஒன்பதாம் வருஷத்தில் அசீரியா ராஜா சமாரியாவைப் பிடித்து, இஸ்ரவேலை அசீரியாவுக்குச் சிறையாகக்கொண்டுபோய், அவர்களைக் கோசோன் நதி ஓரமான ஆலாகிலும் ஆபோரிலும் மேதியரின் பட்டணங்களிலும் குடியேற்றினான்" (2இராஜா 17:6).

பெர்சியா தேசம் முழுவதும் சிதறடிக்கப்பட்டிருக்கிற யூதர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் கோரேசு ராஜாவின் அரசாணை தெரியவேண்டும். இதற்காக கோரேசு தன்னுடைய கட்டளையை அரசாணையாக எழுதி, தன்னுடைய ராஜ்யம் முழுவதற்கும் அனுப்புகிறான்.

கோரேசு சிறையிருப்பிலிருக்கிற யூதர்களை விடுதலை செய்வதற்கு கர்த்தரே காரணமாகயிருக்கிறார். தம்முடைய சர்வவல்லமையையும், சர்வஆளுகையையும் கர்த்தர் கோரேசின் இருதயத்திலே வெளிப்படுத்துகிறார். கோரேசு ராஜாவின் மனதும் இருதயமும் கர்த்தரை அறியும் அறிவினாலே நிரம்பியிருக்கிறது.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் மாத்திரமே ஜீவனுள்ளவர் என்பதையும், அவர் ஒருவர் மாத்திரமே மெய்யான தேவன் என்பதையும் கோரேசு அறிந்துகொள்கிறான். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் பரலோகத்தின் தேவனாகயிருக்கிறார் என்னும் சத்தியம் கோரேசுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

கோரேசு பெர்சியா தேசத்திற்கு ராஜாவாகயிருந்தாலும், பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர், சர்வபூமிக்கும், ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கிறார் என்பதை கோரேசு அறிந்து கொள்கிறான். கர்த்தரே தம்மை அறிந்துகொள்ளும் அறிவை கோரேசுக்கு கொடுக்கிறார்.

பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசு, கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது, "பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் பூமியின் ராஜ்யங்களையெல்லாம் எனக்குத் தந்தருளி, யூதாவிலுள்ள எருசலேமிலே தமக்கு ஆலயத்தைக் கட்டும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்" (எஸ்றா 1:2) என்று சொல்லுகிறான்.

கர்த்தரைப் பற்றிய அறிவு கோரேசு ராஜாவுக்கு இருக்கிறது. இவனுடைய தாய் எஸ்தர் மூலமாகவும், மொர்தெகாய், நெகேமியா ஆகியோர் மூலமாகவும் கோரேசு ராஜாவுக்குக் கர்த்தரைப் பற்றிய அறிவு வந்திருக்க வேண்டும். கோரேசு ராஜா யூதா மார்க்கத்து முறைமையின் பிரகாரமாக வளர்க்கப்பட்டான். கர்த்தரைக் குறித்தும், கர்த்தருடைய வார்த்தையைக் குறித்தும் கோரேசு ராஜாவிற்கு விரிவாக உபதேசம் பண்ணப்பட்டிருக்கிறது.

"யூதாவிலுள்ள எருசலேமிலே தமக்கு ஆலயத்தைக் கட்டும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்" என்று கோரேசு சொல்லுவது, கர்த்தருடைய தீர்க்கதரிசனக் கட்டளை. (ஏசா 44:28-45:4,13; ஏசா 46:11). ஆலயம் கட்டப்படுவதற்கு 200 வருஷங்களுக்கு முன்பாகவே கர்த்தர் கோரேசின் பெயரையும், தேவாலயத்தின் கட்டுமானப் பணியையும் குறித்து, முன்னறிவித்திருக்கிறார். இதைக் குறித்து கோரேசிற்கும், கர்த்தர் தனிப்பட்ட பிரகாரமாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசு கர்த்தருடைய தெய்வத்துவத்தைக் குறித்து சாட்சியாய் அறிவிக்கிறான். "எருசலேமில் வாசம்பண்ணுகிற தேவனே தேவன்" (எஸ்றா 1:3) என்று கோரேசு தன்னுடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து சொல்லுகிறான்.

கோரேசு இப்பொழுது பெர்சியா தேசத்திற்கு ராஜாவாயிருக்கிறான். இந்த ராஜாசனம் அவனுடைய சுயபலத்தினாலோ, சுயபராக்கிரமத்தினாலோ, சுயமுயற்சியினாலோ வரவில்லை, "பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் பூமியின் ராஜ்யங்களையெல்லாம் எனக்கு தந்தருளினார்" என்று கோரேசு சாட்சியாக அறிவிக்கிறான்.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்கு கொடுக்கப்பட்ட ராஜ்யங்களெல்லாமே கர்த்தரால் கொடுக்கப்பட்டது என்பதை கோரேசு அங்கீகரிக்கிறான். தானியேல் தீர்க்கதரிசி நேபுகாத்நேச்சாரின் ராஜ்யத்தைப்பற்றிச் சொல்லும்போது, அது பூமியின் கடையாந்தர மட்டும் இருப்பதாகச் சொல்லுகிறார்.

"அது பெரியவரும் பலத்தவருமாயிருக்கிற ராஜாவாகிய நீர்தாமே; உமது மகத்துவம் பெருகி வானபரியந்தமும், உமது கர்த்தத்துவம் பூமியின் எல்லைபரியந்தமும் எட்டியிருக்கிறது" (தானி 4:22).

"அவருக்குக் கொடுக்கப்பட்ட மகத்துவத்தினாலே சகல ஜனங்களும் ஜாதியாரும் பாஷைக்காரரும் அவருக்கு முன்பாக நடுங்கிப் பயந்திருந்தார்கள்; அவர் தமக்குச் சித்தமானவனைக் கொன்றுபோடுவார், தமக்குச் சித்தமானவனை உயிரோடே வைப்பார்; தமக்குச் சித்தமானவனை உயர்த்துவார், தமக்குச் சித்தமானவனைத் தாழ்த்துவார்" (தானி 5:19).

பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசு சிறையிருப்பிலிருக்கிற யூதர்களுக்கு விடுதலையை அறிவிக்கிறான். அவர்கள் யூதாவிலுள்ள எருசலேமுக்குப்போய், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய ஆலயத்தை கட்டக்கடவர்கள் என்றும் கோரேசு கட்டளையிடுகிறான்.

"அவருடைய ஜனங்கள் எல்லாரிலும் எவன் உங்களுக்குள் இருக்கிறானோ, அவனோடே அவனுடைய தேவன் இருப்பாராக; அவன் யூதாவிலுள்ள எருசலேமுக்குப்போய், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டக்கடவன்; எருசலேமில் வாசம்பண்ணுகிற தேவனே தேவன்" (எஸ்றா 1:3) என்று கோரேசு சொல்லுகிறான்.

சிறையிருப்பிலிருக்கிற யூதர்களில் சிலரால் எருசலேமுக்கு திரும்பிப்போக முடியவில்லை. ஒருவேளை அவர்கள் அந்நியதேசத்திலே தரித்திரராகயிருப்பதினால், எருசலேமுக்குப்போக அவர்களுக்கு வசதிகளும், வாய்ப்புக்களும் இல்லாமலிருக்கலாம்.

சிறையிருப்பிலிருக்கிற யூதர்களில் சிலர் வசதி மிகுந்தவர்களாகயிருக்கிறார்கள். அவர்கள் அந்நிய தேசத்திலேயே தங்களுக்கு வீடு வாசல்களைக்கட்டி, தோட்டம் துரவுகளை ஏற்படுத்தி அங்கேயே தங்கிவிடுகிறார்கள்.

எருசலேமுக்குப் போகாமல், தன்னுடைய தேசத்திலேயே தங்கியிருக்கிறவர்கள், எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்திற்கு தங்கள் காணிக்கைகளை உற்சாகமாகக் கொடுத்து அனுப்பவேண்டும் என்றும் கோரேசு ஆணையிடுகிறான்.

"அந்த ஜனங்களில் மீதியாயிருக்கிறவன் எவ்விடத்தில் தங்கியிருக்கிறானோ, அவ்விடத்து ஜனங்கள் எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்துக்கென்று அவனிடத்தில் உற்சாகமாய்க் காணிக்கை கொடுத்து அனுப்புகிறதுமன்றி, அவனுக்குப் பொன் வெள்ளி முதலிய திரவியங்களையும், மிருகஜீவன்களையும் கொடுத்து, உதவிசெய்யவேண்டும்" என்று பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் அறிவிக்கிறார் என்று தன்ராஜ்யமெங்கும் எழுதியனுப்பி விளம்பரம்பண்ணுவிக்கிறான் (எஸ்றா 1:4).

"தேவன் அவர்களோடிருப்பாராக" என்று கோரேசு தங்கள் தேசத்திற்கு திரும்பிப்போகிற யூதர்களை வாழ்த்துகிறான். அது மாத்திரமல்ல அவர்கள் தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பிப்போக, அவர்களுக்குத் தேவையான உதவிகளும் செய்கிறான்.

எருசலேமுக்குப் போகிறவர்கள் எஸ்றா 1:5,6

எஸ்றா 1:5. அப்பொழுது எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்குப் போகும்படி, யூதா பென்யமீன் வம்சங்களின் தலைவரும் ஆசாரியரும் லேவியருமன்றி, எவர்கள் ஆவியை தேவன் ஏவினாரோ அவர்கள் எல்லாரும் எழும்பினார்கள்.

எஸ்றா 1:6. அவர்களைச் சுற்றிலும் குடியிருக்கிற யாவரும் மனஉற்சாகமாய்க் காணிக்கை கொடுத்ததுமன்றி, வெள்ளிப் பணிமுட்டுகளையும் பொன்னையும் மற்ற வஸ்துக்களையும் மிருகஜீவன்களையும் உச்சிதமான பொருள்களையும் கொடுத்து, அவர்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள்.

கோரேசின் ஆணை யூதர்களுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கிறது. பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களில் அநேகர், கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்காக எருசலேமுக்குப் புறப்பட்டுப்போகிறார்கள். பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் ஆவியை ஏவின அதே கர்த்தர், பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களுடைய ஆவிகளையும் ஏவுகிறார். அவர்கள் கர்த்தருடைய ஆலயத்தைக்கட்ட எருசலேமுக்குப் புறப்பட்டுப்போகிறார்கள்.

எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்குப் போகும்படி யூதா பென்யமீன் வம்சங்களின் தலைவரும் ஆசாரியரும் லேவியருமன்றி, எவர்கள் ஆவியை தேவன் ஏவினாரோ அவர்கள் எல்லாரும் எழும்புகிறார்கள் (எஸ்றா 1:5).

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களில் சிலர் அந்த தேசத்திலேயே தங்கிவிடவேண்டுமென்று விரும்புகிறார்கள். யூதாதேசத்தைப்பற்றி நினைக்கும்போதே அவர்களுடைய மனதிலே சோர்வுகளும், அசதிகளும், அவிசுவாசங்களும் உண்டாகிறது.

பாபிலோன் தேசத்திலிருந்து நீண்டதூரம் பிரயாணம்பண்ணினால்தான் எருசலேமுக்குப் போய் சேரமுடியும். அவர்களுடைய மனைவிமார்களும் பிள்ளைகளும் பிரயாணம்பண்ண முடியாத சூழ்நிலையிலிருக்கிறார்கள். யூதாதேசம் யூதர்களின் சொந்த தேசமாகயிருந்தாலும், எழுபது வருஷங்களாக அவர்கள் பாபிலோன் தேசத்திலிருப்பதினால், பாபிலோன் தேசம் அவர்களுடைய சொந்த தேசம் போலவும், யூதாதேசம் அவர்களுடைய அந்நிய தேசம் போலவும் ஆயிற்று.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறவர்களில் அநேகர், பாபிலோன் தேசத்திலே பிறந்தவர்கள். அவர்களுக்கு எருசலேமுக்கு எப்படி போகவேண்டுமென்று வழியும் தெரியாது. அவர்கள் எருசலேமுக்குப் போகவேண்டுமென்றால், இதுவரையிலும் போய் பழக்கப்பட்டிராத புதிய பாதையிலே, புதிய ஊருக்குப் போவது போல போகவேண்டும்.

எருசலேமிலே இப்போது ஒன்றுமே இல்லை. எல்லாம் பாழடைந்து, அழிந்துபோய்க் கிடக்கிறது. யூதாதேசத்தைச் சுற்றிலும் சத்துருக்கள் இருக்கிறார்கள். சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்குப் போகும்போது, யூதர்களால் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண முடியாது. யூதர்கள் எழுபது வருஷங்களாக சிறையிருப்பிலிருந்தவர்கள். இவர்களுக்கு யுத்த பயிற்சி இல்லை.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறவர்களில் அநேகர், தங்களுடைய நிலமையையும், சூழ்நிலைகளையும் யோசித்துப் பார்த்து, பாபிலோன் தேசத்திலேயே தங்கிவிட வேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார்கள். ஒரு சிலர் பாபிலோன் தேசத்தில் தங்கினாலும், யூதர்களில் அநேகர் எருசலேமுக்குப் போக எழும்புகிறார்கள்.

எருசலேமுக்குப் போகிற யூதர்கள் தங்களுடைய சொந்த முயற்சியினாலோ, தங்களுடைய மாம்சத்தின் பலத்தினாலோ எருசலேமுக்குப்போகவில்லை. "எவர்கள் ஆவியை தேவன் ஏவினாரோ அவர்கள் எல்லாரும் எருசலேமுக்குப்போக எழும்புகிறார்கள்". அவர்கள் கர்த்தருடைய ஆவியினால் வழிநடத்தப்பட்டு எருசலேமுக்குப் புறப்பட்டுப்போகிறார்கள்.

"அப்பொழுது அவர்: செருபாபேலுக்குச் சொல்லப்படுகிற கர்த்தருடைய வார்த்தை என்னவென்றால், பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" *(சக 4:6)*.

பாபிலோன் தேசத்திலே தங்கியிருக்கிறவர்களில் பலர், முதலாவது பிரயாணத்தின்போது எருசலேமுக்குத் திரும்பிப்போகாவிட்டாலும், அவர்கள் இரண்டாவது பிரயாணத்தின்போது எருசலேமுக்கு திரும்பிப்போகிறார்கள். கர்த்தர் அவர்களுடைய ஆவியை ஏவும்போது, அவர்கள் கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்து எருசலேமுக்கு திரும்பிப்போகிறார்கள்.

எருசலேமுக்குப் போகாமல் பாபிலோன் தேசத்திலே குடியிருக்கிற யூதர்கள், கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு உதாரத்துவமான காணிக்கைகளைக் கொடுக்கிறார்கள். கர்த்தருடைய ஆவியானவர் அவர்களுடைய இருதயத்தில் ஏவுகிறார்.

அவர்களைச் சுற்றிலும் குடியிருக்கிற யாவரும் மனஉற்சாகமாய்க் காணிக்கை கொடுத்ததுமன்றி, வெள்ளிப் பணிமுட்டுகளையும் பொன்னையும் மற்ற வஸ்துக்களையும் மிருகஜீவன்களையும் உச்சிதமான பொருள்களையும் கொடுத்து, அவர்கள் கைகளைத் திடப்படுத்துகிறார்கள் *(எஸ்றா 1:6)*.

பாபிலோன் தேசத்திலே குடியிருக்கிற யூதர்கள், தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பிப்போகாவிட்டாலும், அவர்களுக்கும் தங்கள் தேசத்தின்மீது பிரியமும், கர்த்தர்மீது அன்பும் இருக்கிறது. கோரேசு ராஜா சிறையிருப்பிலிருக்கிறவர்களை விடுதலை செய்து ஆணையிட்டதுபோல, இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையை அறிவிக்கிறது.

"கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார்" *(லூக் 4:18,19)*.

மனுஷரில் அநேகர் தங்களுடைய பாவங்களுக்கும், அநீதிக்கும், அக்கிரமங்களுக்கும் அடிமைகளாயிருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்புக்கு கட்டப்பட்டவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் இயேசுகிறிஸ்துவினாலே விடுதலையைப் பெற்றுக்கொள்ள முடியும். தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, விசுவாசத்தினாலே கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் வருகிறவர்கள் எல்லோருக்கும் ஆத்தும விடுதலை வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது.

தங்கள் பாவங்களுக்கு உண்மையாய் மனந்திரும்புகிற பாவிகளுக்கு, கர்த்தர் இரட்சிப்பின் கதவுகளைத் திறந்துகொடுக்கிறார். அவர்கள் பாவத்தின் விடுதலையிலிருந்து வெளியேறி, தேவனுடைய பிள்ளைகளுக்கு வாக்குப்பண்ணப்பட்டிருக்கிற மகிமையான சுதந்தரத்திலே பிரவேசிக்கலாம். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷ அழைப்பு மனுக்குலத்தார் எல்லோருக்கும் பொதுவானது.

கோரேசு ராஜா சிறையிருப்பிலிருக்கிற யூதர்களுக்கு விடுதலையை அறிவிக்கிறான். யூதர்கள் விடுதலையின் செய்தியைக் கேட்டு சந்தோஷப்படுகிறார்கள். ஆனாலும் சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் எல்லோரும் பாபிலோன் தேசத்தை விட்டு எருசலேமுக்குப் புறப்பட்டுப்போகவில்லை. யூதர்களில் அநேகர் பாபிலோன் தேசத்திலேயே தங்கிவிட வேண்டுமென்று தீர்மானிக்கிறார்கள்.

இதுபோலவே இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷ செய்தி அறிவிக்கப்படும்போது, எல்லோரும் அதை சந்தோஷமாகக் கேட்கிறார்கள். ஆனாலும் ஒரு சிலர் மாத்திரமே சுவிசேஷத்தின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுகிறார்கள். மற்றவர்களோ தங்களுடைய பாவங்களை நேசித்து, அந்தப் பாவங்களுக்கு அடிமையாகயிருக்கிறார்கள்.

பாவத்தை விட்டு விலகி வந்தால் பரிசுத்தமாக ஜீவிக்கலாம். மனந்திரும்பாத பாவிகளோ பாவத்திலே பிரியமாயிருக்கிறார்கள். பரிசுத்தமாய் ஜீவிப்பது மிகவும் கடினமானது என்று நினைத்து, பரிசுத்தத்தை வெறுக்கிறார்கள்.

பாபிலோன் தேசத்திலே தங்கியிருக்கிற யூதர்கள் எருசலேமிலே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு காணிக்கைகளைக் கொடுக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் எருசலேமுக்குப்போகாமல் பாபிலோன் தேசத்திலேயே தங்கிவிடுகிறார்கள்.

இவர்களைப்போலவே ஜனங்களில் அநேகர், கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு பொருளாதார உதவிகளை செய்கிறார்கள். ஆனால் அவர்களோ தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பாமல், தங்களுடைய பாவங்களுக்கு அடிமைகளாகவேயிருக்கிறார்கள்.

பாவத்திற்கு மனந்திரும்பினால் மாத்திரமே ஆத்துமா இரட்சிக்கப்படும். ஆலயத்தைக் கட்டுவதற்கு காணிக்கை கொடுப்பது நல்ல காரியமாகயிருந்தாலும், அதினால் ஆத்துமா இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப்பில்லை. புதிய ஏற்பாட்டுக்காலத்திலே, இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு செவிகொடுக்காதவர்கள், பாவமான பாபிலோனிலே தங்கியிருக்கிறார்கள். பாபிலோன் அழியும்போது பாபிலோனிலே வாசம்பண்ணுகிற பாவிகளும் அழிந்துபோவார்கள்.

கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு, எருசலேமுக்குப்போகிற யூதர்களுக்கு, பாபிலோன் தேசத்திலே தங்கியிருக்கிறவர்கள் காணிக்கைகளைக் கொடுத்து உதவிசெய்யவேண்டும் என்று கோரேசு ராஜா ஆணையிடுகிறான். அவர்கள் ராஜாவின் ஆணைக்கு கீழ்ப்படிந்து அவர்களுக்கு பொன்னையும், வெள்ளியையும், மிருகஜீவன்களையும் கொடுத்து அவர்களுடைய கைகளை திடப்படுத்துகிறார்கள். அவர்களுடைய பிரயாணத்திற்குத் தேவையான உதவிகளை செய்கிறார்கள். கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு பொருளாதார உதவிகளையும் செய்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோது, எகிப்தின் கொள்ளைப்பொருட்களால் கர்த்தருக்கு ஆசரிப்புக்கூடாரத்தைப் போட்டார்கள். சாலொமோன் ராஜா முதலாவது தேவாலயத்தைக் கட்டினபோது, புறஜாதி ஜனங்களை ஆலயக்கட்டுமான வேலைகளில் பயன்படுத்தினான். இப்போது கர்த்தருடைய ஆலயம் இரண்டாம் முறையாக கட்டப்படுகிறது. கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்குத் தேவையான பொருட்களை கல்தேயர்கள் கொடுக்கிறார்கள்.

கர்த்தருடைய கூடாரம் போடப்படும்போதும், அவருடைய ஆலயம் கட்டப்படும்போதும் புறஜாதியாரின் பங்கையும் கர்த்தர் அனுமதிக்கிறார். புதிய ஏற்பாட்டு சுவிசேஷ சபையிலே புறஜாதியாரும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்பதற்கு அடையாளமாக, பழைய ஏற்பாட்டுக்காலத்திலே இந்த சம்பவங்கள் நடைபெறுகிறது.

ஆலயத்துப் பணிமுட்டுகள் எஸ்றா 1:7-11

எஸ்றா 1:7. நேபுகாத்நேச்சார் எருசலேமிலிருந்து கொண்டுவந்து, தன் தேவனுடைய கோவிலிலே வைத்திருந்த கர்த்தருடைய ஆலயத்துப் பணிமுட்டுகளையும் கோரேஸ் ராஜா எடுத்துக்கொடுத்தான்.

எஸ்றா 1:8. அவைகளைப் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் பொக்கிஷக்காரனாகிய மித்திரேதாத்தின் கையினால் எடுக்கச்செய்து, யூதாவின் அதிபதியாகிய சேஸ்பாத்சாரிடத்தில் எண்ணிக்கொடுத்தான்.

எஸ்றா 1:9. அவைகளின் தொகையாவது: பொன் தட்டுகள் முப்பது, வெள்ளித்தாலங்கள் ஆயிரம், கத்திகள் இருபத்தொன்பது.

எஸ்றா 1:10. பொற்கிண்ணங்கள் முப்பது, வெள்ளிக்கிண்ணங்கள் நானூற்றுப்பத்து, மற்றப் பணிமுட்டுகள் ஆயிரம்.

எஸ்றா 1:11. பொன் வெள்ளிப் பணிமுட்டுகளெல்லாம் ஐயாயிரத்து நானூறு, இவைகளையெல்லாம் சேஸ்பாத்சார், சிறையிருப்பினின்று விடுதலைபெற்றவர்கள் பாபிலோனிலிருந்து எருசலேமுக்குப் போகையில், எடுத்துக்கொண்டு போனான்.

எருசலேமிலே கர்த்தருடைய ஆலயம் கட்டப்படவேண்டுமென்று கோரேசு ராஜாவும் விரும்புகிறான். அவன் சிறையிருப்பிலிருக்கிற யூதர்களை விடுதலை பண்ணியதோடு, பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், கர்த்தருடைய ஆலயத்திலிருந்து கொண்டு வந்த பணிமுட்டுகளை, யூதர்களிடமே திருப்பி கொடுக்கிறான்.

நேபுகாத்நேச்சார் எருசலேமிலிருந்து கொண்டுவந்து, தன் தேவனுடைய கோவிலிலே வைத்திருந்த கர்த்தருடைய ஆலயத்துப் பணிமுட்டுகளையும் கோரேஸ் ராஜா எடுத்துக்கொடுக்கிறான் (எஸ்றா 1:7).

கர்த்தருடைய ஆலயத்துப் பணிமுட்டுகளையும் கோரேஸ் ராஜா எடுத்துக்கொடுக்கிறான். கோரேஸ் ராஜா இஸ்ரவேல் புத்திரரை விடுவிக்கிறான். எருசலேமும், தேவாலயமும் கட்டப்பட வேண்டுமென்று ஆணையிடுகிறான். அத்துடன் நேபுகாத்நேச்சார் தேவாலயத்திலிருந்து கொள்ளையிட்டு வந்த கர்த்தருடைய ஆலயத்துப் பணிமுட்டுகளையெல்லாம் இஸ்ரவேல் புத்திரரிடம் திருப்பிக் கொடுத்து விடுகிறான். (எஸ்றா 1:7-11; 2இராஜா 24:13; 2இராஜா 25:14; 2நாளா 36:7; எரே 27:18-22; எரே 28:6; எரே 52:18-19; தானி 1:2; தானி 5:2).

அவைகளைப் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் பொக்கிஷக்காரனாகிய மித்திரேதாத்தின் கையினால் எடுக்கச்செய்து, யூதாவின் அதிபதியாகிய சேஸ்பாத்சாரிடத்தில் எண்ணிக்கொடுக்கிறான் (எஸ்றா 1:8).

யூதர்கள் சிறையிருப்பிலிருந்தாலும், அவர்களுக்கு அதிபதியாக சேஸ்பாத்சார் என்பவன் நியமிக்கப்பட்டிருக்கிறான். இவனுடைய மறுபெயர் செருபாபேல். இவன் "யூதாவின் அதிபதி" என்று அழைக்கப்படுகிறான். கல்தேயர்கள் செருபாபேலை "சேஸ்பாத்சார்" என்று அழைக்கிறார்கள். இந்தப் பெயருக்கு, "உபத்திரவத்தில் சந்தோஷம்" என்று பொருள்.

சேஸ்பாத்சார் என்னும் பெயருக்கு "சூரிய தேவனே, குமாரனைப் பாதுகாத்து அருளும்" என்றும் பொருள் சொல்லலாம். இது கல்தேயருடைய பாஷையில் வழங்கப்பட்ட பெயர். செருபாபேலுக்கு இந்தப் பெயர் கொடுக்கப்பட்டிருந்தது. பெர்சியாவிலிருந்து யூதர்கள் யூதா தேசத்திற்குத் திரும்பி வந்தபோது, செருபாபேல் யூதா தேசத்தின் அதிபதியாக கோரேஸ் ராஜாவால் நியமிக்கப்பட்டான். (எஸ்றா 1:8,11; எஸ்றா 5:14-16; எஸ்றா 6:7).

செருபாபேல் தேவாலயத்திற்கு அஸ்திபாரமிடுகிறான். (எஸ்றா 5:16). சேஸ்பாத்சாரின் மறுபெயர் செருபாபேல் (எஸ்றா 2:2; எஸ்றா 3:2,8; எஸ்றா 4:2-3; எஸ்றா 5:2; நெகே 7:7; நெகே 12:1,47; ஆகாய் 1:1,12-14; ஆகாய் 2:2-4, 21-23; சக 4:6-10).

சேஸ்பாத்சார் யூதர்கள் மத்தியிலே "செருபாபேல்" என்றே அழைக்கப்படுகிறான். அவன் பாபிலோன் தேசத்திலே தன்னை அந்நியனாகவே பாவிக்கிறான். எருசலேமே தன்னுடைய சொந்த ஊர் என்பது செருபாபேலின் தீர்மானம். இவன் பாபிலோன் ராஜாவுக்கு மெய்க்காப்பாளனாகவும், ராஜாவை காக்கிறவர்களுக்கு தலைவனாகவும் இருந்தான் என்று சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள்.

சேஸ்பாத்சார் யூதாவின் அதிபதியாக நியமிக்கப்பட்டபடியினால், அவன் யூதர்களின் காரியங்களை விசாரிக்கிறான். கர்த்தருடைய ஆலயத்து பணிமுட்டுகளை கோரேசு ராஜா சேஸ்பாத்சாரிடத்தில் கொடுக்க சொல்லுகிறான்.

பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசு ராஜா, யூதாவின் அதிபதியாகிய சேஸ்பாத்சாரிடத்தில் எண்ணிக்கொடுத்த பணிமுட்டுகளின் விவரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

அவைகளின் தொகையாவது: பொன் தட்டுகள் முப்பது, வெள்ளித்தாலங்கள் ஆயிரம், கத்திகள் இருபத்தொன்பது, பொற்கிண்ணங்கள் முப்பது, வெள்ளிக்கிண்ணங்கள் நானூற்றுப்பத்து, மற்றப் பணிமுட்டுகள் ஆயிரம். பொன் வெள்ளிப் பணிமுட்டுகளெல்லாம் ஐயாயிரத்து நானூறு (எஸ்றா 1:9-11).

பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசு எடுத்துக்கொடுத்த கர்த்தருடைய ஆலயத்து பணிமுட்டுகளின் விவரம் வருமாறு:

1. பொன் தட்டுகள் - 30
2. வெள்ளித்தாலங்கள் - 1000
3. பொற்கின்னங்கள் - 30
4. வெள்ளிக்கிண்ணங்கள் - 410
5. இதர பணிமுட்டுகள் - 2930

மொத்த பொன் வெள்ளிப் பணிமுட்டுகள் (எஸ்றா 1:9-11) - 5400. இவைதவிர, 29 கத்திகளையும் கொடுத்தான்.

இவைகளையெல்லாம் சேஸ்பாத்சார், சிறையிருப்பினின்று விடுதலைபெற்றவர்கள் பாபிலோனிலிருந்து எருசலேமுக்குப் போகையில், எடுத்துக்கொண்டுபோகிறான்.

2 அதிகாரம்

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து திரும்பிய பல்வேறு குடும்பங்களைப்பற்றிய அட்டவணை இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது (எஸ்றா 2:1). தலைவர்கள் (எஸ்றா 2:2). பொதுஜனங்கள் (எஸ்றா 2:3-35). ஆசாரியர், லேவியர், நிதனீமியர் ஆகியோர் (எஸ்றா 2:36-63).

சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்கு திரும்பி வந்தவர்களின் மொத்த எண்ணிக்கை (எஸ்றா 2:64-67). அவர்கள் தேவாலயத்திற்கு கொடுத்த காணிக்கைகள் (எஸ்றா 2:68-70).

திரும்பி வந்தவர்களின் தொகை எஸ்றா 2:1-35

எஸ்றா 2:1. பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் பாபிலோனுக்குக் கொண்டுபோனவர்களுக்குள்ளே, சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்கும் யூதாவிலுள்ள தங்கள் தங்கள் பட்டணங்களுக்கும்,

எஸ்றா 2:2. செருபாபேல், யெசுவா, நெகேமியா, செராயா, ரெலாயா, மொர்தெகாய், பில்சான், மிஸ்பார், பிக்வாய், ரேகூம், பானா என்பவர்களோடேகூட திரும்பிவந்த தேசத்துப் புத்திரராகிய இஸ்ரவேல் ஜனமான மனிதரின் தொகையாவது:

எஸ்றா 2:3. பாரோஷின் புத்திரர் இரண்டாயிரத்து நூற்று எழுபத்திரண்டுபேர்.

எஸ்றா 2:4. செபத்தியாவின் புத்திரர் முந்நூற்று எழுபத்திரண்டுபேர்.

எஸ்றா 2:5. ஆராகின் புத்திரர் எழுநூற்று எழுபத்தைந்துபேர்.

எஸ்றா 2:6. யெசுவா யோவாப் என்பவர்களுடைய சந்ததிக்குள்ளிருந்த பாகாத் மோவாபின் புத்திரர் இரண்டாயிரத்து எண்ணூற்றுப் பன்னிரண்டுபேர்.

எஸ்றா 2:7. ஏலாமின் புத்திரர் ஆயிரத்து இருநூற்று ஐம்பத்து நான்குபேர்.

எஸ்றா 2:8. சத்தூவின் புத்திரர் தொளாயிரத்து நாற்பத்தைந்துபேர்.

எஸ்றா 2:9. சக்காயின் புத்திரர் எழுநூற்று அறுபதுபேர்.

எஸ்றா 2:10. பானியின் புத்திரர் அறுநூற்று நாற்பத்திரண்டுபேர்.

எஸ்றா 2:11. பெபாயின் புத்திரர் அறுநூற்று இருபத்துமூன்றுபேர்.

எஸ்றா 2:12. அஸ்காதின் புத்திரர் ஆயிரத்து இருநூற்று இருபத்திரண்டுபேர்.

எஸ்றா 2:13. அதொனிகாமின் புத்திரர் அறுநூற்று அறுபத்தாறுபேர்.

எஸ்றா 2:14. பிக்வாயின் புத்திரர் இரண்டாயிரத்து ஐம்பத்தாறுபேர்.

எஸ்றா 2:15. ஆதீனின் புத்திரர் நானூற்று ஐம்பத்து நான்குபேர்.

எஸ்றா 2:16. எசேக்கியாவின் சந்ததியான அதேரின் புத்திரர் தொண்ணூற்றெட்டுப்பேர்.

எஸ்றா 2:17. பேசாயின் புத்திரர் முந்நூற்று இருபத்துமூன்றுபேர்.

எஸ்றா 2:18. யோராகின் புத்திரர் நூற்றுப்பன்னிரண்டுபேர்.

எஸ்றா 2:19. ஆசூமின் புத்திரர் இருநூற்று இருபத்துமூன்றுபேர்.

எஸ்றா 2:20. கிபாரின் புத்திரர் தொண்ணூற்றைந்துபேர்.

எஸ்றா 2:21. பெத்லகேமின் புத்திரர் நூற்றிருபத்துமூன்றுபேர்.

எஸ்றா 2:22. நெத்தோபாவின் மனிதர் ஐம்பத்தாறுபேர்.

எஸ்றா 2:23. ஆனதோத்தின் மனிதர் நூற்றிருபத்தெட்டுப்பேர்.

எஸ்றா 2:24. அஸ்மாவேத்தின் புத்திரர் நாற்பத்திரண்டுபேர்.

எஸ்றா 2:25. கீரியாத்யாரீம், கெபிரா, பேரோத் என்பவைகளின் புத்திரர் எழுநூற்று நாற்பத்துமூன்றுபேர்.

எஸ்றா 2:26. ராமா, காபா என்பவைகளின் புத்திரர் அறுநூற்று இருபத்தொருபேர்.

எஸ்றா 2:27. மிக்மாசின் மனிதர் நூற்றிருபத்திரண்டுபேர்.

எஸ்றா 2:28. பெத்தேல் ஆயி என்பவைகளின் மனிதர் இருநூற்று இருபத்துமூன்றுபேர்.

எஸ்றா 2:29. நேபோவின் புத்திரர் ஐம்பத்திரண்டுபேர்.

எஸ்றா 2:30. மக்பீஷின் புத்திரர் நூற்றைம்பத்தாறுபேர்.

எஸ்றா 2:31. மற்ற ஏலாமின் புத்திரர் ஆயிரத்து இருநூற்று ஐம்பத்து நான்குபேர்.

எஸ்றா 2:32. ஆரீமின் புத்திரர் முந்நூற்று இருபதுபேர்.

எஸ்றா 2:33. லோத், ஆதீத், ஓனோ என்பவைகளின் புத்திரர் எழுநூற்று இருபத்தைந்துபேர்.

எஸ்றா 2:34. எரிகோவின் புத்திரர் முந்நூற்று நாற்பத்தைந்துபேர்.

எஸ்றா 2:35. சேனாகின் புத்திரர் மூவாயிரத்து அறுநூற்று முப்பதுபேர்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த குடும்பத்தார், ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் திரும்பி வந்தவர்களின் எண்ணிக்கை ஆகிய விவரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களை உற்சாகப்படுத்துவதற்காகவும், அவர்களுடைய விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணுவதற்காகவும், அவர்களைப்பற்றிய விவரங்கள் ஆவணங்களில் பதிவுபண்ணப்பட்டிருக்கிறது. இவர்களெல்லோரும் தங்கள் சொந்த தேசமாகிய கானான் தேசத்தின்மீது பிரியமாயிருக்கிறவர்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பிப்போக பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசு அனுமதி கொடுக்கிறான். இந்த வாய்ப்பை பயன்படுத்தி, யூதர்களில் அநேகர் எருசலேமுக்கு திரும்பி வருகிறார்கள். ஆனாலும் அவர்களில் சிலர் பாபிலோன் தேசத்தில் தங்கிவிடுகிறார்கள். அவர்களும் எருசலேமுக்கு திரும்பி வரவேண்டுமென்று, இவர்கள் முன்மாதிரிகளாயிருக்கிறார்கள்.

எருசலேமுக்கு திரும்பி வந்தவர்களின் பெயர் அட்டவணையில் தங்களுடைய பெயர்களும் இடம் பெறவேண்டும் என்று, யூதர்கள் எல்லோருமே விரும்புகிறார்கள். அட்டவணையில் தங்களுடைய பெயர் இடம் பெறுவது அவர்களுக்கு பெருமையாகயிருக்கிறது.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நம்முடைய பெயர்கள் ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவப்புஸ்தகத்திலே எழுதப்பட்டிருக்கிறது. இது ஒவ்வொரு விசுவாசிக்கும் கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களின் பெயர்கள் அட்டவணையில் எழுதப்பட்டிருப்பதினால், அது அவர்களுடைய பின்சந்ததியாருக்கும் பிரயோஜனமாயிருக்கிறது. தாங்கள் எந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதையும், தங்களுடைய பூர்வோத்திரம் என்ன என்பதையும் அறிந்துகொள்வதற்கு இந்த அட்டவணை பிரயோஜனமாயிருக்கும்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்கள், "தேசத்து புத்திரர்" (எஸ்றா 2:2) என்று அழைக்கப்படுகிறார்கள். சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களுக்கு யூதாதேசம் தனிதேசமாகயிருக்கிறது. யூதாதேசத்தார் இனிமேல் பெர்சியா தேசத்து ராஜாவின் நேரடி ஆளுகையின் கீழிருப்பார்கள். இவர்கள் பெர்சியாவின் ராஜாவுக்கு மாத்திரம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் பாபிலோனுக்குக் கொண்டுபோனவர்கள், சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்கும் யூதாவிலுள்ள தங்கள் தங்கள் பட்டணங்களுக்கும் திரும்பி வருகிறார்கள் (எஸ்றா 2:1).

செருபாபேல், யெசுவா, நெகேமியா, செராயா, ரெலாயா, மொர்தெகாய், பில்சான், மிஸ்பார், பிக்வாய், ரேகூம், பானா என்பவர்களோடேகூட திரும்பிவந்த தேசத்துப் புத்திரராகிய இஸ்ரவேல் ஜனமான மனிதரின் தொகையைப்பற்றிய விவரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது (எஸ்றா 2:2).

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் பாபிலோனுக்குக் கொண்டுபோனவர்களுக்குள்ளே, சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்கும் யூதாவிலுள்ள தங்கள் தங்கள் பட்டணங்களுக்கும் செருபாபேலின் கீழ் ஏராளமான இஸ்ரவேல் புத்திரர் திரும்பி வந்தார்கள். இந்த செருபாபேலைக் கோரேஸ் ராஜா யூதாவின் தேசாதிபதியாக்கினான். (எஸ்றா 1:8=நெகே 7).

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்கள் எருசலேமுக்கும் யூதாவிலுள்ள தங்கள் தங்கள் பட்டணங்களுக்கும் வருகிறார்கள். பூர்வகாலத்தில் யோசுவா இஸ்ரவேலின் கோத்திரத்தாருக்கு கானான் தேசத்தை பங்குவீதமாக பிரித்து கொடுத்தார். அதன் பிரகாரம், சிறையிருப்பிலிருந்து திரும்பி வருகிறவர்கள், தங்கள் தங்கள் பட்டணங்களுக்கு வந்து அங்கே குடியேறுகிறார்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்கு திரும்பி வந்தவர்களில் முதலாவதாக, யூதர்களுடைய தலைவர்களின் பெயர்கள் சொல்லப்பட்டிருக்கிறது.

இவர்களில் செருபாபேல், யெசுவா ஆகியோர் பிரதான தலைவர்கள். இவர்கள் இருவரும் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களுக்கு, மோசேயைப்போலவும், ஆரோனைப்போலவும் முக்கியமானவர்கள். செருபாபேல் அவர்களுக்கு பிரதான அதிபதி. யெசுவா அவர்களுக்கு பிரதான ஆசாரியன்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த பல்வேறு குடும்பங்களின் பெயர்களும் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுடைய முன்னோர்களின் பெயர்களும், அவர்கள் இதற்கு முன்பு கானான் தேசத்தில் வாசம்பண்ணின இடங்களின் பெயர்களும் இந்த அட்டவணையில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஏலாமின் புத்திரர் 1,254 பேர். அது போலவே மற்ற ஏலாமின் புத்திரர் 1,254 பேர் (எஸ்றா 2:7,31). இவ்விரண்டு குடும்பத்தாரின் எண்ணிக்கையும் ஒன்றுபோலிருப்பது ஆச்சரியமாயிருக்கிறது. பெத்லகேமின் புத்திரர் 123 பேர். பெத்லகேம் தாவீதின் நகரம். ஆனாலும் இந்த நகரம் யூதாவின் ஆயிரங்களுக்குள்ளே சிறியதாகயிருக்கிறது. மேசியா பெத்லகேமிலே பிறந்தவர்.

"எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது" (மீகா 5:2).

பென்யமீன் கோத்திரத்தில் ஆனதோத் என்பது மிகவும் பிரதான பட்டணம். ஆனால் ஆனதோத்தின் மனிதர் 128பேர் மாத்திரமே சிறையிருப்பிலிருந்து திரும்பி வருகிறார்கள் (எஸ்றா 2:23). தேவனுடைய சாபம் இந்தப் பட்டணத்தின்மீது வந்திருக்கிறது. எரேமியா ஆனதோத் ஊரைச் சேர்ந்தவர். ஆனதோத்தின் மனுஷர் எரேமியாவின் வார்த்தைக்கு செவிகொடுக்காமல் அவரை நிந்தித்தார்கள். இதனால் கர்த்தருடைய கோபம் அந்தப் பட்டணத்தார்மீது வந்தது. அவர்களில் ஏராளமானோர் அழிந்துபோனார்கள். இப்போது ஆனதோத்தின் மனிதர் 128பேர் மாத்திரமே இருக்கிறார்கள்.

"ஆதலால் நீ எங்கள் கையினாலே சாகாதபடிக்குக் கர்த்தருடைய நாமத்தினாலே தீர்க்கதரிசனம் சொல்லவேண்டாம் என்று சொல்லி, உன் பிராணனை வாங்கத்தேடுகிற ஆனதோத்தின் மனுஷரைக்குறித்துக் கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 11:21)

"இதோ, இதினிமித்தம் உங்களை விசாரிப்பேன்; இளவயதுள்ளவர்கள் பட்டயத்தாலே சாவார்கள்; அவர்கள் குமாரரும் அவர்கள் குமாரத்திகளும் பஞ்சத்தாலே சாவார்கள்" (எரே 11:22).

"அவர்களில் மீதியாய் இருப்பவர்களில்லை; நான் ஆனதோத்தின் மனுஷரை விசாரிக்கும் வருஷத்திலே அவர்கள்மேல் ஆபத்தை வரப்பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 11:23).

"மொர்தெகாய்" என்னும் பெயருக்கு "மொர்தெக்கை ஆராதிக்கிறவன்" என்று பொருள். சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களில் இவன் ஒரு தலைவன். (நெகே 7:7) எஸ்தரின் உறவினன். எஸ்தரின் புஸ்தகத்தில் மொர்தெகாயின் பெயர் 38 தடவைகள் கூறப்பட்டிருக்கிறது (எஸ்றா 2:5-10:3). ஏற்கெனவே இருந்த தேவாலயத்தைப் பார்த்திருக்கிறவர்களில் மொர்தெகாயும் ஒருவன். (எஸ்றா 3:12) யோயாக்கீனோடு மொர்தெகாயும் சிறைப்பிடித்துச் செல்லப்பட்டான். 70 வருஷங்களாக மொர்தெகாய் அந்நிய தேசத்து சிறையிருப்பில் இருக்கிறான் (எஸ் 2:5-7).

சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்கும், யூதாவின் பட்டணங்களுக்கும் திரும்பி வந்தவர்களின் தொகையைப்பற்றிய விவரம் வருமாறு:

1. பாரோஷின் புத்திரர் (எஸ்றா 2:3) - 2,172 பேர்
2. செபத்தியாவின் புத்திரர் (எஸ்றா 2:4) - 372 பேர்
3. ஆராகின் புத்திரர் (எஸ்றா 2:5) - 775 பேர்.
4. பாகாத் மோவாபின் புத்திரர் (எஸ்றா 2:6) - 2,812 பேர்
5. ஏலாமின் புத்திரர் (எஸ்றா 2:7) - 1,254 பேர்
6. சத்தூவின் புத்திரர் (எஸ்றா 2:8) - 945 பேர்
7. சக்காயின் புத்திரர் (எஸ்றா 2:9) - 760 பேர்
8. பானியின் புத்திரர் (எஸ்றா 2:10) - 642 பேர்
9. பெபாயின் புத்திரர் (எஸ்றா 2:11) - 623 பேர்
10. அஸ்காதின் புத்திரர் (எஸ்றா 2:12) - 1,222 பேர்
11. அதொனிகாமின் புத்திரர் (எஸ்றா 2:13) - 666 பேர்
12. பிக்வாயின் புத்திரர் (எஸ்றா 2:14) - 2,056
13. ஆதீனின் புத்திரர் (எஸ்றா 2:15) - 254 பேர்
14. அதேரின் புத்திரர் (எஸ்றா 2:16) - 98 பேர்
15. பேசாயின் புத்திரர் (எஸ்றா 2:17) - 323 பேர்
16. யோராகின் புத்திரர் (எஸ்றா 2:18) - 112 பேர்
17. ஆசூமின் புத்திரர் (எஸ்றா 2:19) - 223 பேர்
18. கிபாரின் புத்திரர் (எஸ்றா 2:20) - 95 பேர்
19. பெத்லகேமின் புத்திரர் (எஸ்றா 2:21) - 123 பேர்
20. நெத்தோபாவின் மனிதர் (எஸ்றா 2:22) - 56 பேர்
21. ஆனதோத்தின் மனிதர் (எஸ்றா 2:23) - 128 பேர்
22. அஸ்மாவேத்தின் புத்திரர் (எஸ்றா 2:24) - 42 பேர்

23. கீரியாத்யாரீம், கெபிரா, பேரோத் என்பவைகளின் புத்திரர் (எஸ்றா 2:25) - 743 பேர்

24. ராமா, காபா என்பவைகளின் புத்திரர் (எஸ்றா 2:26) - 621 பேர்

25. மிக்மாசின் மனிதர் (எஸ்றா 2:27) - 122 பேர்

26. பெத்தேல் ஆயி என்பவைகளின் மனிதர் (எஸ்றா 2:28) - 223பேர்

27. நேபோவின் புத்திரர் (எஸ்றா 2:29) - 52 பேர்

28. மக்பீஷின் புத்திரர் (எஸ்றா 2:30) - 156 பேர்

29. மற்ற ஏலாமின் புத்திரர் (எஸ்றா 2:31) - 1,254 பேர்

30. ஆரீமின் புத்திரர் (எஸ்றா 2:32) - 320 பேர்

31. லோத், ஆதீத், ஓனோ என்பவைகளின் புத்திரர் (எஸ்றா 2:33) - 725 பேர்

32. எரிகோவின் புத்திரர் (எஸ்றா 2:34) - 345 பேர்

33. சேனாகின் புத்திரர் (எஸ்றா 2:35) - 3,630பேர்

34. யெதாயாவின் புத்திரர் (எஸ்றா 2:36) - 973 பேர்

35. இம்மேரின் புத்திரர் (எஸ்றா 2:37) - 1,052 பேர்

36. பஸ்கூரின் புத்திரர் (எஸ்றா 2:38) - 1,247 பேர்

37. ஆரீமின் புத்திரர் (எஸ்றா 2:39) - 1,017 பேர்

38. யெசுவா கத்மியேல் என்பவர்களின் புத்திரர் (எஸ்றா 2:40) - 74 பேர்

39. ஆசாபின் புத்திரர் (எஸ்றா 2:41) - 128பேர்

40. வாசல் காவலாளரின் புத்திரரானவர்கள் (எஸ்றா 2:42) - 139 பேர்.

41. நிதனீமியரானவர்களும், சாலொமோனுடைய வேலையாட்களின் புத்திரரானவர்கள் (எஸ்றா 2:43-58) - 392 பேர்.

42. தாங்கள் இஸ்ரவேலர் என்று தங்கள் பிதாக்களின் வம்சத்தையும், தங்கள் பூர்வோத்தரத்தையும் சொல்லமாட்டாமல் இருந்தவர்கள் (எஸ்றா 2:59-60) - 652பேர்

குறிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை - 29,818பேர்

குறிக்கப்படாதவர்களின் மொத்த எண்ணிக்கை - 12,542பேர்

மொத்தம் (எஸ்றா 2:64) - 42,360பேர்

43. வேலைக்காரரும், வேலைக்காரிகளும் (எஸ்றா 2:65) - 7337பேர்

44. பாடகரும், பாடகிகளும் (எஸ்றா 2:65) - 200பேர்

மொத்த எண்ணிக்கை - 49,897பேர்

ஆசாரியர், லேவியர், முதலானோர் எஸ்றா 2:36-63

எஸ்றா 2:36. ஆசாரியரானவர்கள்: யெசுவாவின் குடும்பத்தானாகிய யெதாயாவின் புத்திரர் தொளாயிரத்து எழுபத்துமூன்றுபேர்.

எஸ்றா 2:37. இம்மேரின் புத்திரர் ஆயிரத்து ஐம்பத்திரண்டுபேர்.

எஸ்றா 2:38. பஸ்கூரின் புத்திரர் ஆயிரத்து இருநூற்று நாற்பத்தேழுபேர்.

எஸ்றா 2:39. ஆரீமின் புத்திரர் ஆயிரத்துப்பதினேழுபேர்.

எஸ்றா 2:40. லேவியரானவர்கள்: ஓதாயாவின் சந்ததியான யெசுவா கத்மியேல் என்பவர்களின் புத்திரர் எழுபத்து நான்குபேர்.

எஸ்றா 2:41. பாடகர்களானவர்கள்: ஆசாபின் புத்திரர் நூற்றிருபத்தெட்டுப்பேர்.

எஸ்றா 2:42. வாசல் காவலாளரின் புத்திரரானவர்கள்: சல்லூமின் புத்திரரும், அதேரின் புத்திரரும், தல்மோனின் புத்திரரும், அக்கூபின் புத்திரரும், அதிதாவின் புத்திரரும், சோபாயின் புத்திரருமானவர்களெல்லாரும் நூற்றுமுப்பத்தொன்பதுபேர்.

எஸ்றா 2:43. நிதனீமியரானவர்கள்: சீகாவின் புத்திரர், அசுபாவின் புத்திரர், தபாகோத்தின் புத்திரர்,

எஸ்றா 2:44. கோரோசின் புத்திரர், சீயாகாவின் புத்திரர், பாதோனின் புத்திரர்,

எஸ்றா 2:45. லெபானாகின் புத்திரர், அகாபாவின் புத்திரர், அக்கூபின் புத்திரர்,

எஸ்றா 2:46. ஆகாபின் புத்திரர், சல்மாயின் புத்திரர், ஆனானின் புத்திரர்,

எஸ்றா 2:47. கித்தேலின் புத்திரர், காகாரின் புத்திரர், ராயாகின் புத்திரர்,

எஸ்றா 2:48. ரேத்சீனின் புத்திரர், நெகோதாவின் புத்திரர், காசாமின் புத்திரர்,

எஸ்றா 2:49. ஊசாவின் புத்திரர், பாசெயாகின் புத்திரர், பேசாயின் புத்திரர்,

எஸ்றா 2:50. அஸ்னாவின் புத்திரர், மெயூனீமின் புத்திரர், நெபுசீமின் புத்திரர்,

எஸ்றா 2:51. பக்பூக்கின் புத்திரர், அகுபாவின் புத்திரர், அர்கூரின் புத்திரர்,

எஸ்றா 2:52. பஸ்லூதின் புத்திரர், மெகிதாவின் புத்திரர், அர்ஷாவின் புத்திரர்,

எஸ்றா 2:53. பர்கோசின் புத்திரர், சிசெராவின் புத்திரர், தாமாவின் புத்திரர்,

எஸ்றா 2:54. நெத்சியாவின் புத்திரர், அதிபாவின் புத்திரருமே.

எஸ்றா 2:55. சாலொமோனுடைய வேலையாட்களின் புத்திரரானவர்கள்: சோதாயின் புத்திரர், சொபெரேத்தின் புத்திரர், பெருதாவின் புத்திரர்,

எஸ்றா 2:56. யாலாகின் புத்திரர், தர்கோனின் புத்திரர், கித்தேலின் புத்திரர்,

எஸ்றா 2:57. செபத்தியாவின் புத்திரர், அத்தீலின் புத்திரர், செபாயீமிலுள்ள பொகெரேத்தின் புத்திரர், ஆமியின் புத்திரருமே.

எஸ்றா 2:58. நிதனீமியரும் சாலொமோனுடைய வேலையாட்களின் புத்திரரும் எல்லோரும் முந்நூற்றுத்தொண்ணூற்றிரண்டுபேர்.

எஸ்றா 2:59. தெல்மெலாகிலும், தெல்அர்சாவிலும், கேருபிலும், ஆதோனிலும், இம்மேரிலுமிருந்து வந்து, தாங்கள் இஸ்ரவேலர் என்று தங்கள் பிதாக்களின் வம்சத்தையும், தங்கள் பூர்வோத்தரத்தையும் சொல்லமாட்டாமல் இருந்தவர்கள்:

எஸ்றா 2:60. தெலாயாவின் புத்திரர், தொபியாவின் புத்திரர், நெகோதாவின் புத்திரர், ஆக அறுநூற்று ஐம்பத்திரண்டுபேர்.

எஸ்றா 2:61. ஆசாரியரின் புத்திரரில் அபாயாவின் புத்திரர், கோசின் புத்திரர், கீலேயாத்தியனான பர்சிலாயின் குமாரத்திகளில் ஒருத்தியை விவாகம்பண்ணி, அவர்கள் வம்ச நாமம் தரிக்கப்பட்ட பர்சில்லாயின் புத்திரரே,

எஸ்றா 2:62. இவர்கள் தங்கள் வம்ச அட்டவணையைத் தேடி, அதைக் காணாமற்போய், ஆசாரிய ஊழியத்திற்கு விலக்கமானவர்கள் என்று எண்ணப்பட்டார்கள்.

எஸ்றா 2:63. ஊரீம் தும்மீம் என்பவைகளுள்ள ஒரு ஆசாரியன் எழும்புமட்டும், இவர்கள் மகா பரிசுத்தமானதிலே புசிக்கத்தகாதென்று திர்ஷாதா அவர்களுக்குச் சொன்னான்.

சிறையிருப்பிலிருந்து ஏராளமான ஆசாரியர்கள் எருசலேமுக்கு திரும்பி வருகிறார்கள். சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களின் மொத்த தொகை 42,000க்கும் மேலாகும் (எஸ்றா 2:64). இவர்களில் பத்தில் ஒரு பங்கு ஆசாரியராயிருக்கிறார்கள். சிறையிருப்பிலிருந்து ஆசாரியரின் நான்கு குடும்பத்தார் திரும்பி வருகிறார்கள். அவர்களின் தொகை 4,200க்கும் மேலாகும் (எஸ்றா 2:36-39).

சிறையிருப்பிலிருந்து லேவியர்கள் குறைந்த எண்ணிக்கையில் திரும்பி வருகிறார்கள். இவர்களில் பாடகர்களும், சுமை சுமக்கிறவர்களும் இருக்கிறார்கள் (எஸ்றா 2:40-42). இவர்களின் மொத்த தொகை 350 கூடயில்லை.

சிறையிருப்பிலிருந்து நிதனீமியர்களும் திரும்பி வருகிறார்கள். இவர்கள் கிபியோனியர்கள். யோசுவாவின் காலத்தில், கிபியோனியருக்கு முதன் முதலாக தண்ணீர் எடுக்கிற வேலையும், கர்த்தருடைய பலிபீடத்திற்கு விறகு வெட்டுகிற வேலையும் கொடுக்கப்பட்டது.

"இந்நாள்மட்டும் இருக்கிறபடியே, அந்நாளில் அவர்களைச் சபைக்கும், கர்த்தர் தெரிந்துகொள்ளும் இடத்திலிருக்கும் அவருடைய பலிபீடத்துக்கும் விறகு வெட்டுகிறவர்களாகவும் தண்ணீர் எடுக்கிறவர்களாகவுமாக்கினான்" (யோசு 9:27).

சவுலின் காலத்தில் கிபியோனியருக்கு வேலைகள் கொடுக்கப்படவில்லை. தாவீதின் காலத்தில் கிபியோனியர்கள் மறுபடியுமாக நிதனீமியர்களாக வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள்.

"தாவீதும் பிரபுக்களும் லேவியருக்குப் பணிவிடைக்காரராக வைத்த நிதனீமியரில் இருநூற்று இருபது பேரையும் எங்களிடத்தில் அழைத்துக் கொண்டுவந்தார்கள்; அவர்கள் எல்லாருடைய பேர்களும் குறிக்கப்பட்டன" (எஸ்றா 8:20).

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களில் சிலர் பிறப்பினால் இஸ்ரவேலராயிருக்கிறார்கள். அவர்களில் சிலர் ஆசாரியருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனாலும் அவர்களால் தங்களுடைய பூர்வோத்திரத்தை திட்டமாகவும், தெளிவாகவும் சொல்ல முடியவில்லை (எஸ்றா 2:59,60).

தங்களுடைய பூர்வோத்திரத்தை சொல்ல முடியாதவர்களும், தங்களை யாக்கோபின் சந்ததியார் என்று சொல்லிக்கொள்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு தங்கள் முன்னோர்களைப்பற்றி சரியாகத் தெரியவில்லை. இப்பேற்பட்டவர்களில் சிலரும் சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்கு திரும்பி வருகிறார்கள். இவர்கள் கர்த்தருடைய ஆலயத்தின்மீதும், கர்த்தருடைய ஜனங்கள் மீதுமுள்ள அன்பினால் எருசலேமுக்கு திரும்பி வருகிறார்கள்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களில் சிலர் தங்களை ஆரோனின் சந்ததியார் என்று சொல்லிக்கொள்கிறார்கள். ஆனாலும் அவர்களால் தங்களுடைய ஆசாரிய வம்சத்தின் பூர்வோத்திரத்தை திட்டமாய்ச் சொல்ல முடியவில்லை.

மொத்த தொகை
எஸ்றா 2:64-70

எஸ்றா 2:64. சபையார் எல்லாரும் ஏகத்திற்கு நாற்பத்தீராயிரத்து முந்நூற்று அறுபதுபேராயிருந்தார்கள்.

எஸ்றா 2:65. அவர்களைத்தவிர ஏழாயிரத்து முந்நூற்று முப்பத்தேழுபேரான அவர்களுடைய வேலைக்காரரும் வேலைக்காரிகளும், இருநூறு பாடகரும் பாடகிகளும் அவர்களுக்கு இருந்தார்கள்.

எஸ்றா 2:66. அவர்களுடைய குதிரைகள் எழுநூற்று முப்பத்தாறு, அவர்களுடைய கோவேறு கழுதைகள் இருநூற்று நாற்பத்தைந்து,

எஸ்றா 2:67. அவர்களுடைய ஒட்டகங்கள் நானூற்று முப்பத்தைந்து, கழுதைகள் ஆறாயிரத்து எழுநூற்று இருபது.

எஸ்றா 2:68. வம்சங்களின் தலைவரில் சிலர் எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்துக்கு வந்தபோது, தேவனுடைய ஆலயத்தை அதின் ஸ்தானத்திலே எடுப்பிக்கும்படிக்கு, அதற்காக மன உற்சாகமாய்க் காணிக்கைகளைக் கொடுத்தார்கள்.

எஸ்றா 2:69. அவர்கள் தங்கள் சக்திக்குத்தக்கதாக திருப்பணிப் பொக்கிஷத்திற்கு அறுபத்தோராயிரம் தங்கக்காசையும், ஐயாயிரம் இராத்தல் வெள்ளியையும், நூறு ஆசாரிய வஸ்திரங்களையும் கொடுத்தார்கள்.

எஸ்றா 2:70. ஆசாரியரும், லேவியரும், ஜனங்களில் சிலரும், பாடகரும், வாசல்காவலாளரும், நிதனீமியரும், தங்கள் தங்கள் பட்டணங்களிலும், இஸ்ரவேலர் எல்லாரும் தங்கள் தங்கள் பட்டணங்களிலும் குடியேறினார்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களின் தொகை 30,000 கூடயில்லை. இவர்களின் தொகை 29,818 பேர் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. யூதா, பென்யமீன் ஆகிய கோத்திரத்தாரை தவிர, இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்திலிருந்து எருசலேமுக்கு திரும்பி வந்தவர்கள் 12,000 பேருக்கு மேலானவர்கள்.

நேபுகாத்நேச்சார் யூதர்களை சிறைப்பிடித்து பாபிலோன் தேசத்திற்கு கொண்டுபோனான். அவன் சிறைப்பிடித்து கொண்டுபோன யூதர்களின் மொத்த தொகையைப்போல, இப்போது இரண்டு மடங்கு யூதர்கள் எருசலேமுக்கு திரும்பி வருகிறார்கள். யூதர்கள் பாபிலோன் தேசத்திலே பாடுகளையும் வேதனைகளையும் அனுபவித்தாலும், அவர்களுடைய எண்ணிக்கை பலுகிப்பெருகியிருக்கிறது. இதைப்போலவே பூர்வகாலத்தில், இஸ்ரவேலர் எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்தபோது, அவர்களும் திரளாய்ப் பலுகிப்பெருகினார்கள்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்களோடு அவர்களுடைய வேலைக்காரரும், வேலைக்காரிகளும், பாடகரும், பாடகிகளும் எருசலேமுக்கு திரும்பி வருகிறார்கள் (எஸ்றா 2:66,67). இந்தப் பாடகரும் பாடகிகளும், புலம்பல் பாடல்களை பாடுகிறவர்கள்.

"எரேமியா யோசியாவின்மேல் புலம்பல் பாடினான்; சகல பாடகரும் பாடகிகளும் இந்நாள் வரைக்கும் தங்கள் புலம்பல்களில் யோசியாவின்மேல் பாடுகிறார்கள்; அவைகள் இந்நாள்வரைக்கும் இஸ்ரவேலிலே வழங்கிவருகிறது; அவைகள் புலம்பலின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது" (2நாளா 35:25).

சிறையிருப்பிலிருந்து திரும்பி வருகிறவர்கள் எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்திற்கு வருகிறார்கள். கர்த்தருடைய ஆலயம் பாழடைந்து கிடக்கிறது. அது அக்கினியினால் சுட்டெரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு காலத்தில் மகிமையாயிருந்த ஆலயம் இப்போது இடிந்து கிடக்கிறது.

தேவனுடைய ஆலயத்தை அதின் ஸ்தானத்திலே மறுபடியும் எடுப்பித்து கட்டுவதற்காக, சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்கள் உற்சாகமாய்க் காணிக்கைகளைக் கொடுக்கிறார்கள் (எஸ்றா 2:68,69).

இவர்கள் கொடுக்கிற காணிக்கையை, தாவீதின் காலத்தில், இஸ்ரவேலின் பிரபுக்கள், தேவாலயத்தைக் கட்டுவதற்காக கொடுத்த காணிக்கையோடு ஒப்பிடக்கூடாது. தாவீதின் காலத்தில் அவர்கள் தாலந்து கணக்கில் கொடுத்தார்கள். ஆனால் சிறையிருப்பிலிருந்து வந்தவர்களோ இப்போது இராத்தல் கணக்கில் கொடுக்கிறார்கள்.

"தேவனுடைய ஆலயத்து வேலைக்கு ஐயாயிரம் தாலந்து பொன்னையும், பதினாயிரம் தங்கக்காசையும், பதினாயிரம் தாலந்து வெள்ளியையும், பதினெண்ணாயிரம் தாலந்து வெண்கலத்தையும், லட்சம் தாலந்து இரும்பையும் கொடுத்தார்கள்" (1நாளா 29:7).

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்கள் கர்த்தருடைய ஆலயத்தை அதன் ஸ்தானத்தில் திரும்பவும் எடுப்பித்து கட்டுவதற்கு இராத்தல் கணக்கில் கொடுத்தாலும், அவர்கள் தங்கள் காணிக்கையை மனஉற்சாகமாய்க் கொடுக்கிறார்கள். ஏழை விதவை காணிக்கைப்பெட்டியிலே இரண்டு காசுகளைப் போட்டதுபோல, சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்கள் சொற்ப தொகையில் காணிக்கை கொடுக்கிறார்கள்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்கள் தங்கள் தங்கள் பட்டணங்களில் குடியேறுகிறார்கள் (எஸ்றா *2:70*). யூதாவின் பட்டீங்களெல்லாமே பாழாய்க்கிடக்கிறது. அவையெல்லாமே பழுதடைந்து கிடந்தாலும் அவையே அவர்களுடைய பட்டணங்கள். சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்கள் பாழாய்க் கிடக்கிற பட்டணங்களில் மனதிருப்தியோடு குடியேறுகிறார்கள்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்கள் ஏழைகளாகயிருந்தாலும், அவர்களுடைய மனதில் போதும் என்கிற திருப்தியும், சந்தோஷமும், சமாதானமும், சகோதர சிநேகமும் நிரம்பியிருக்கிறது. அந்நிய தேசத்து சிறையிருப்பு அவர்களை வெகுவாக மாற்றியிருக்கிறது. அவர்கள் கர்த்தருடைய சித்தத்திற்கு ஏற்ற பிரகாரம் உருவாக்கப்பட்டிருக்கிறார்கள்.

3 அதிகாரம்

யூதாவின் பட்டணங்களெல்லாம் பாழாய்க்கிடக்கிறது. நிலம் பண்படுத்தப்படாமல் தரிசாய்க் கிடக்கிறது. சிறையிருப்பிலிருந்து யூதர்கள் எருசலேமுக்கும், யூதாவின் பட்டணங்களுக்கும் திரும்பி வந்தபோது, அவர்களுக்கு அங்கே ஜீவாதார வசதிகள் எதுவுமில்லை.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்கள், யூதாதேசத்திற்கு திரும்பி வந்தவுடன், தங்களுடைய வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்கு பதிலாக, கர்த்தருடைய ஆராதனையில் கவனம் செலுத்துகிறார்கள். தங்களுடைய சொந்த தேவைகளைவிட, கர்த்தரை ஆராதிப்பதே மிகவும் முக்கியமானது என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள், தங்களுடைய வாழ்க்கையை மறுபடியும் ஆரம்பிக்கும்போது, கர்த்தருடைய ஆராதனைக்கு முதலாவதாக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். கற்பாறையின்மீது கட்டப்பட்ட வீட்டைப்போல, அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியம் பெலமுள்ளதாயிருக்கிறது. ஆரம்பம் சரியாகயிருக்கும்போது, அதன் முடிவும் சரியாகயிருக்கும்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்கள் முதலாவதாக பலிபீடத்தைக் கட்டுகிறார்கள். அந்தப் பலிபீடத்தின்மேல் சர்வாங்க தகனபலிகளை செலுத்துகிறார்கள். பண்டிகைகளை ஆசரிக்கிறார்கள். கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு காணிக்கைகளைக் கொடுக்கிறார்கள் (எஸ்றா 3:1-7). கர்த்தருடைய ஆலயத்திற்கு அஸ்திபாரம் போடுகிறார்கள். அப்போது இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே சந்தோஷமும் துக்கமும் கலந்திருக்கிறது (எஸ்றா 3:8-13).

பலிபீடம்
எஸ்றா 3:1-7

எஸ்றா 3:1. இஸ்ரவேல் புத்திரர் பட்டணங்களிலே குடியேறி, ஏழாம் மாதமானபோது, ஜனங்கள் ஏகோபித்து எருசலேமிலே கூடினார்கள்.

எஸ்றா 3:2. அப்பொழுது யோசதாக்கின் குமாரனாகிய யெசுவாவும், அவன் சகோதரராகிய ஆசாரியரும், செயல்தியேலின் குமாரனாகிய செருபாபேலும், அவன் சகோதரரும் எழும்பி, தேவனுடைய மனிதனாகிய மோசேயின் நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி சர்வாங்க தகனங்களைப் பலியிடும்படிக்கு, இஸ்ரவேலுடைய தேவனின் பலி பீடத்தைக் கட்டினார்கள்.

எஸ்றா 3:3. அவர்கள் அத்தேசத்தின் ஜனங்களுக்குப் பயந்ததினால், பலி பீடத்தை அதின் ஆதாரங்களின்மேல் ஸ்தாபித்து, அதின்மேல் அவர்கள் கர்த்தருக்கு அந்திசந்தி சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தினார்கள்.

எஸ்றா 3:4. எழுதியிருக்கிறபடியே அவர்கள் கூடாரப்பண்டிகையை ஆசரித்து, நித்திய நியமத்தின்படியும் அன்றாடகக் கணக்கின்படியும் ஒவ்வொருநாளிலும் பலியிட்டார்கள்.

எஸ்றா 3:5. அதற்குப்பின்பு நித்தமும், மாதப்பிறப்புகளிலும், கர்த்தருடைய சகல பரிசுத்த பண்டிகைகளிலும் செலுத்தும் சர்வாங்க தகனபலியையும், கர்த்தருக்கு அவரவர் செலுத்தும் உற்சாக பலியையும் செலுத்தினார்கள்.

எஸ்றா 3:6. ஏழாம் மாதம் முதல்தேதியில் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தத்தொடங்கினார்கள்; ஆனாலும் கர்த்தருடைய ஆலயத்தின் அஸ்திபாரம் இன்னும் போடப்படவில்லை.

எஸ்றா 3:7. அப்பொழுது பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் தங்களுக்குப் பிறப்பித்த உத்தரவின்படியே அவர்கள் கல்தச்சருக்கும் தச்சருக்கும் பணத்தையும், லீபனோனிலிருந்து கேதுருமரங்களைச் சமுத்திரவழியாய் யோப்பாமட்டும் கொண்டுவரச் சீதோனியருக்கும் தீரியருக்கும் போஜனபானத்தையும் எண்ணெயையும் கொடுத்தார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் பட்டணங்களிலே குடியேறி, ஏழாம் மாதமானபோது, ஜனங்கள் ஏகோபித்து எருசலேமிலே கூடுகிறார்கள் (எஸ்றா 3:1). இஸ்ரவேல் புத்திரர் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து வசந்தகாலத்தில் வெளியேறி வருகிறார்கள். ஏழாவது மாதம் என்பது சீக்கிரத்தில் வந்துவிடுகிறது.

யூதர்கள் ஏழாவது மாதத்தில் கர்த்தருக்கு பல பண்டிகைகளை ஆசரிப்பது வழக்கம். சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்கள் யூதாவின் பல பட்டணங்களில் குடியேறியிருந்தாலும், அவர்கள் தங்களுடைய சொந்த வேலைகளையெல்லாம் நிறுத்தி வைத்துவிட்டு, எருசலேமிலே ஏகோபித்து கூடிவருகிறார்கள். கர்த்தருடைய பலிபீடத்தைக் கட்டவேண்டும் என்பது மாத்திரமே அவர்களுடைய நோக்கம். அவர்களிடத்தில் ஒருமனமும், ஒற்றுமையும், ஏகோபித்த முயற்சியும் காணப்படுகிறது.

நமக்கு உலகப்பிரகாரமான வேலைகள் பல இருந்தாலும், கர்த்தருடைய வேலைக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். அப்போது கர்த்தர் நம்முடைய கைகளின் பிரயாசங்களை ஆசீர்வதிப்பார்.

யோசதாக்கின் குமாரனாகிய யெசுவாவும், அவன் சகோதரராகிய ஆசாரியரும், செயல்தியேலின் குமாரனாகிய செருபாபேலும், அவன் சகோதரரும் எழும்பி, தேவனுடைய மனிதனாகிய மோசேயின் நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி சர்வாங்க தகனங்களைப் பலியிடும்படிக்கு, இஸ்ரவேலுடைய தேவனின் பலிபீடத்தைக் கட்டுகிறார்கள் (எஸ்றா 3:2).

"யோசதாக்" என்பவன் செராயாவின் குமாரன். (1நாளா 6:14-15) இவன் சகோதரன் எஸ்றா. (எஸ்றா 7:1) இந்த சகோதரர்கள் பிரதான ஆசாரியனாகிய யெசுவாவின் உறவினர்கள்.

செருபாபேல் பெதாயாவின் குமாரன். பெதாயா செயல்தியேலின் இளைய சகோதரன். செயல்தியேலுக்குக் குமாரர்கள் இல்லை. இதனால் இவனுடைய வம்சவழி செருபாபேல் மூலமாக வருகிறது. செருபாபேல் செயல்தியேலின் குமாரனாகக் கருதப்படுகிறான். (1நாளா 3:19).

சிறையிருப்பிலிருந்து திரும்பி வரும் இஸ்ரவேல் புத்திரரிடம் மோசேயின் நியாயப்பிரமாணமும் இருக்கிறது. (உபா 12:5-7).

இஸ்ரவேல் புத்திரர் ஏழாம் மாதத்தில் கூடாரங்களின் பண்டிகையை ஆசரிப்பது வழக்கம் (எஸ்றா 3:1,4).

யெசுவாவும் அவனுடைய சகோதரர்களும் ஆசாரியர்களாயிருக்கிறார்கள். செருபாபேலும் அவனுடைய சகோதரர்களும் அதிபதிகளாயிருக்கிறார்கள். அவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து இஸ்ரவேலுடைய தேவனின் பலிபீடத்தைக் கட்டுகிறார்கள். இந்தப் பலிபீடம் இதற்கு முன்பு எந்த ஸ்தானத்திலிருந்ததோ, அந்த ஸ்தானத்திலேயே அதை மறுபடியும் கட்டுகிறார்கள்.

அவர்கள் அத்தேசத்தின் ஜனங்களுக்குப் பயந்ததினால், பலிபீடத்தை அதின் ஆதாரங்களின்மேல் ஸ்தாபிக்கிறார்கள். அதின்மேல் அவர்கள் கர்த்தருக்கு அந்திசந்தி சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துகிறார்கள் (எஸ்றா 3:3).

எருசலேமில் கர்த்தரை ஆராதிப்பது மறுபடியும் ஆரம்பமாயிற்று. ஒரு பலிபீடத்தை அதின் ஆதாரங்களின்மேல் ஸ்தாபிக்கிறார்கள். அதின்மேல் கர்த்தருடைய பிரமாணத்தின்படி அவர்கள் கர்த்தருக்கு அந்திசந்தி சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துகிறார்கள் (எஸ்றா 3:1-3). இதைத் தொடர்ந்து மாதப்பிறப்புக்களிலும், கர்த்தருடைய சகல பரிசுத்த பண்டிகைகளிலும் பலிகளைச் செலுத்துகிறார்கள். (எஸ்றா 3:4-5).

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களால் கர்த்தருடைய ஆலயத்தை உடனே கட்ட முடியவில்லை. ஆலயம் கட்டப்படாவிட்டாலும், கர்த்தருக்கு பலியிட பலிபீடத்தை உடனே கட்டவேண்டுமென்று இஸ்ரவேல் புத்திரர் விரும்புகிறார்கள். ஆபிரகாம் எங்குபோனாலும், அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டுவது வழக்கம்.

ஆபிரகாமைப்போல நாமும் கர்த்தருடைய பலிபீடத்தைக் கட்டவேண்டும். நாம் செல்லும் இடமெங்கும் கர்த்தருடைய பலிபீடத்தைக் கட்டியெழுப்பவேண்டும். அந்தப் பலிபீடத்திலே கர்த்தருக்கு துதியின் பலிகளையும், ஜெபத்தின் பலிகளையும் செலுத்தவேண்டும்.

நாம் எங்குபோனாலும் கர்த்தரைத் துதிக்கவேண்டும். எல்லா இடங்களிலும் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவேண்டும். கர்த்தர் தம்முடைய பலிபீடத்தில் நம்மை சந்திக்கிறார். அங்கே நம்மோடு பேசுகிறார். அங்கே நம்முடைய விண்ணப்பங்களை செவிகொடுத்து கேட்கிறார்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பலிபீடத்தை சீக்கிரமாய்க் கட்டவேண்டுமென்று விரும்புகிறார்கள். அவர்கள் அத்தேசத்தின் ஜனங்களுக்குப் பயந்ததினால், கர்த்தருடைய பலிபீடம் சீக்கிரத்தில் கட்டப்படவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் சிறையிருப்பிலிருந்து தங்கள் தேசத்திற்கு திரும்பி வந்தபோது, அவர்களுடைய தேசத்தைச் சுற்றிலும் சத்துருக்கள் இருக்கிறார்கள்.

இஸ்ரவேலின் சத்துருக்கள், இஸ்ரவேல் புத்திரருக்கும், அவர்களுடைய மார்க்க ஆராதனைகளுக்கும் இடையூறு செய்வார்கள். சத்துருக்கள் எழும்பி வரும்போது, இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய சமுகத்திலே பாதுகாப்பு தேவைப்படுகிறது. அதற்காகவே அவர்கள் கர்த்தருடைய பலிபீடத்தை சீக்கிரமாய்க் கட்டவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார்கள்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும், நமக்கு ஆபத்துக்கள் சூழ்ந்திருக்கும்போது, நாமும் கர்த்தருக்கு பலிபீடத்தைக் கட்டி எழுப்பி, அங்கே கர்த்தருடைய சமுகத்திலே முழங்கால் படியிட்டு ஜெபிக்கவேண்டும்.

சத்துருக்கள் நமக்கு விரோதமாக தங்கள் கைகளையும், புயங்களையும் ஓங்கும்போது, நாமும் அவர்களைப்போல நம்முடைய கைகளையும் புயங்களையும், அவர்களுக்கு விரோதமாக ஓங்கவேண்டியதில்லை. அதற்கு பதிலாக கர்த்தருடைய சமுகத்திலே, நம்முடைய முழங்கால்களை முடக்கவேண்டும். கர்த்தர் நம்முடைய சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்.

நமக்கு ஆபத்துக்கள் நெருங்கி வருவதை நாம் காணும்போது, நாம் அதைப் பார்த்து பயந்து நடுங்கக்கூடாது. சத்துருவைப் பார்த்து பயப்படுவதற்கு பதிலாக, கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கும் ஊழியங்களை நினைவுகூரவேண்டும். நம்மைச் சுற்றிலும் ஆபத்துக்கள் அதிகரிக்கும்போது, கர்த்தருக்காக நாம் செய்யும் ஊழியங்களும் அதிகரிக்கவேண்டும். நம்முடைய துதிகளும், ஜெபங்களும், ஸ்தோத்திரங்களும் அதிகரிக்கவேண்டும். நாம் கர்த்தரை துதிக்கும் ஸ்தலமே அவருடைய பலிபீடம்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு பலிபீடத்தைக் கட்டி அதின்மேல் அவர்கள் கர்த்தருக்கு அந்திசந்தி சர்வாங்க தகனபலிகளை செலுத்துகிறார்கள். ஏழாம் மாதம் முதல்தேதியில் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தத்தொடங்குகிறார்கள்; ஆனாலும் கர்த்தருடைய ஆலயத்தின் அஸ்திபாரம் இன்னும் போடப்படவில்லை (எஸ்றா 3:6).

அஸ்திபாரம் போடப்படுவதற்கு முன்பாகக் கர்த்தரை ஆராதிப்பதும், கர்த்தருக்குப் பலி செலுத்துவதும் முதலாவதாக நடைபெறுகிறது. எழுதியிருக்கிறபடியே அவர்கள் கூடாரப்பண்டிகையை ஆசரித்து, நித்திய நியமத்தின்படியும் அன்றாடகக் கணக்கின்படியும் ஒவ்வொருநாளிலும் பலியிடுகிறார்கள் (எஸ்றா 3:4).

எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரர் வெளியேறிய போது தங்களுடைய விடுதலையைக் கொண்டாடுவதற்காக அவர்கள் கூடாரங்களில் தங்கினார்கள். அதுவே கூடாரப்பண்டிகையாயிற்று.

அதற்குப்பின்பு நித்தமும், மாதப்பிறப்புகளிலும், கர்த்தருடைய சகல பரிசுத்த பண்டிகைகளிலும் செலுத்தும் சர்வாங்க தகனபலியையும், கர்த்தருக்கு அவரவர் செலுத்தும் உற்சாக பலியையும் செலுத்துகிறார்கள் (எஸ்றா 3:5).

கர்த்தருக்கு ஒவ்வொரு நாளும் அந்திசந்தி சர்வாங்க தகனபலிகளை செலுத்தவில்லையென்றால் தங்களுக்கு என்ன நேரிடும் என்பது இஸ்ரவேல் புத்திரருக்கு தெரிந்திருக்கிறது. அவர்கள் தங்களுடைய சிறையிருப்பின் வேதனையான அனுபவங்களை இன்னும் மறக்கவில்லை. அந்திசந்தி வேளையிலே பலியிடும்போதுதான், அவர்களால் கர்த்தருடைய சமுகத்தில் அன்றாடம் ஜெபம்பண்ண முடியும்.

அவர்கள் பலிகளைச் செலுத்தும்போது, பண்டிகைகளையும் ஆசரிக்கிறார்கள். கூடாரப்பண்டிகை இஸ்ரவேல் புத்திரருடைய விசேஷித்த பண்டிகையாகும். சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்கள் யூதாவின் பட்டணங்களில் மறுபடியும் குடியேற ஆரம்பித்திருக்கிறார்கள். இக்காலத்தில் அவர்கள் கூடாரப்பண்டிகையை ஆசரிப்பது மிகவும் பொருத்தமாகயிருக்கிறது. தங்களுடைய முற்பிதாக்கள் வனாந்தரத்திலே கூடாரங்களில் குடியிருந்ததை நினைவுகூர்ந்து, இஸ்ரவேல் புத்திரர் இப்போது கூடாரப்பண்டிகையை ஆசரிக்கிறார்கள்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு அவரவர் செலுத்தும் உற்சாக பலியை செலுத்துகிறார்கள் (எஸ்றா 3:5). கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில், இஸ்ரவேல் புத்திரர் ஒவ்வொருவரும் செலுத்த வேண்டிய உற்சாக பலியைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்திருக்கிற இஸ்ரவேல் புத்திரரிடம் பலிசெலுத்துவதற்குத் தேவையான பணவசதி அதிகமாயில்லை. ஆனாலும் பலிசெலுத்தவேண்டும் என்னும் உற்சாகம் அவர்களிடத்தில் அதிகமாய்க் காணப்படுகிறது.

கர்த்தருடைய பலிபீடத்திலே, நித்தமும், மாதப்பிறப்புகளிலும், கர்த்தருடைய சகல பரிசுத்த பண்டிகைகளிலும் செலுத்தும் சர்வாங்க தகனபலியையும், கர்த்தருக்கு அவரவர் செலுத்தும் உற்சாக பலியையும் செலுத்துகிறார்கள் (எஸ்றா 3:5).

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த இஸ்ரவேல் புத்திரர், கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கான ஆயத்த வேலைகளை செய்ய ஆரம்பிக்கிறார்கள். அப்பொழுது பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் தங்களுக்குப் பிறப்பித்த உத்தரவின்படியே அவர்கள் கல்தச்சருக்கும் தச்சருக்கும் பணத்தையும், லீபனோனிலிருந்து கேதுருமரங்களைச் சமுத்திரவழியாய் யோபாமட்டும் கொண்டுவரச் சீதோனியருக்கும் தீரியருக்கும் போஜனபானத்தையும் எண்ணெயையும் கொடுக்கிறார்கள் (எஸ்றா 3:7).

ஆலயம் கட்டுவதற்கு தேவையான மரங்களும், வேலையாட்களும் கிடைப்பதற்கு பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசு இஸ்ரவேல் புத்திரருக்கு உதவி செய்கிறான். ஏற்கெனவே தீருவும் சீதோனும் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு வேலையாட்களை கொடுத்து உதவியதுபோல, இப்போதும் உதவிசெய்கிறார்கள். லீபனோனிலிருந்து எப்போதும் போல இப்போதும் கேதுரு மரங்கள் சமுத்திர வழியாய் அனுப்பப்படுகிறது.

தேவாலயத்தைக் கட்டுவதற்குத் தேவையான கேதுரு மரங்களை லீபனோனிலிருந்து எருசலேமுக்கு எடுத்து வரவேண்டும். இதற்கு சிறிது காலமாகலாம். இந்தப் பொருட்களையெல்லாம் கொண்டுவருவதற்குக் கோரேசு ராஜா இஸ்ரவேல் புத்திரருக்குச் செருபாபேல் மூலமாகத் தேவையான பண உதவி செய்திருக்கிறான்.

தேவனுடைய ஆலயம்
எஸ்றா 3:8-13

எஸ்றா 3:8. அவர்கள் எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்திற்கு வந்த இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதத்திலே, செயல்தியேலின் குமாரனாகிய செருபாபேலும், யோசதாக்கின் குமாரனாகிய யெசுவாவும், மற்றுமுள்ள அவர்கள் சகோதரராகிய ஆசாரியரும் லேவியரும், சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்கு வந்த அனைவரும், ஆரம்பஞ்செய்து, இருபதுவயதுமுதல் அதற்கு மேற்பட்ட லேவியரைக் கர்த்தருடைய ஆலயத்தின் வேலையை நடத்தும்படி வைத்தார்கள்.

எஸ்றா 3:9. அப்படியே தேவனுடைய ஆலயத்தின் வேலையைச் செய்கிறவர்களை நடத்தும்படி யெசுவாவும் அவன் குமாரரும் சகோதரரும், கத்மியேலும் அவன் குமாரரும், யூதாவின் குமாரரும், எனாதாத்தின் குமாரரும், அவர்கள் சகோதரராகிய லேவியரும் ஒருமனப்பட்டு நின்றார்கள்

எஸ்றா 3:10. சிற்பாசாரிகள் கர்த்தருடைய ஆலயத்திற்கு அஸ்திபாரம் போடுகிறபோது, இஸ்ரவேல் ராஜாவாகிய தாவீதுடைய கட்டளையின்படியே, கர்த்தரைத் துதிக்கும்படிக்கு, வஸ்திரங்கள் தரிக்கப்பட்டு, பூரிகைகளை ஊதுகிற ஆசாரியரையும், தாளங்களைக்கொட்டுகிற ஆசாபின் குமாரராகிய லேவியரையும் நிறுத்தினார்கள்.

எஸ்றா 3:11. கர்த்தர் நல்லவர், இஸ்ரவேலின்மேல் அவருடைய கிருபை என்றுமுள்ளது என்று அவரைப் புகழ்ந்து துதிக்கையில், மாறிமாறிப் பாடினார்கள்; கர்த்தரைத் துதிக்கையில், ஜனங்கள் எல்லாரும் கர்த்தருடைய ஆலயத்தின் அஸ்திபாரம் போடப்படுகிறதினிமித்தம் மகா கெம்பீரமாய் ஆரவாரித்தார்கள்.

எஸ்றா 3:12. முந்தின ஆலயத்தைக் கண்டிருந்த முதிர்வயதான ஆசாரியரிலும், லேவியரிலும், பிதாக்கள் வம்சங்களின் தலைவரிலும் அநேகர் இந்த ஆலயத்துக்குத் தங்கள் கண்களுக்கு முன்பாக அஸ்திபாரம் போடப்படுகிறதைக் கண்டபோது, மகா சத்தமிட்டு அழுதார்கள்; வேறே அநேகம்பேரோ கெம்பீர சந்தோஷமாய் ஆர்ப்பரித்தார்கள்.

எஸ்றா 3:13. ஜனங்கள் மகா கெம்பீரமாய் ஆர்ப்பரிக்கிறதினால் அவர்கள் சத்தம் வெகுதூரம் கேட்கப்பட்டது; ஆனாலும் சந்தோஷ ஆரவாரத்தின் சத்தம் இன்னதென்றும், ஜனங்களுடைய அழுகையின் சத்தம் இன்னதென்றும் பகுத்தறியக்கூடாதிருந்தது.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த இஸ்ரவேல் புத்திரர் முதலாவதாக தேவனின் பலிபீடத்தை கட்டுகிறார்கள். அதன் பின்பு தேவனுடைய ஆலயத்தைக் கட்ட ஆரம்பிக்கிறார்கள். ஆலயத்தைக் கட்டவேண்டுமா என்னும் விவாதம் அவர்கள் மத்தியில் எழும்பவில்லை. அவர்கள் எல்லோருமே ஏகோபித்து தேவனுடைய ஆலயத்தை கட்டுவதற்கு முன்வருகிறார்கள்.

அவர்கள் எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்திற்கு வந்த இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதத்திலே, செயல்தியேலின் குமாரனாகிய செருபாபேலும், யோசதாக்கின் குமாரனாகிய யெசுவாவும், மற்றுமுள்ள அவர்கள் சகோதரராகிய ஆசாரியரும் லேவியரும், சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்கு வந்த அனைவரும், ஆரம்பஞ்செய்து, இருபதுவயதுமுதல் அதற்கு மேற்பட்ட லேவியரைக் கர்த்தருடைய ஆலயத்தின் வேலையை நடத்தும்படி வைக்கிறார்கள் (எஸ்றா 3:8).

செருபாபேலும், எஸ்றா 2; நெகே 7:5-73 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறவர்களும், எருசலேமுக்கு வந்து இரண்டு வருஷமாயிற்று. கோரேஸ் ராஜா இஸ்ரவேல் புத்திரரை எருசலேமுக்குப் போகுமாறு ஆணையிட்டு இரண்டு வருஷங்களாயிற்று. (எஸ்றா 1:1-4).

இரண்டாம் வருஷத்தின் இரண்டாம் மாதம் என்பது பஸ்காவை ஆசரித்து முடிந்த காலமாயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் முதல் மாதத்தில் பஸ்காவை ஆசரிப்பது வழக்கம். அவர்கள் ஆறுமாதங்களுக்கு மேலாக ஆயத்த வேலைகளை செய்து, இப்போது கர்த்தருடைய ஆலயத்தைக் கட்ட ஆரம்பிக்கிறார்கள்.

செருபாபேலும், யெசுவாவும், அவர்களுடைய சகோதரரும் தேவனுடைய ஆலயத்தைக் கட்ட ஆரம்பிக்கிறார்கள். நியாயாதிபதிகளும், மந்திரிகளும், ஊழியக்காரரும் ஜனங்களும் ஒருமனதோடு தேவனுடைய ஊழியத்தை செய்யும்போது, அந்த ஊழியம் சிறப்பாக நடைபெறும். செருபாபேல் யூதாதேசத்தின் அதிபதி. யெசுவா அவர்களுக்கு பிரதான ஆசாரியன். அதிகாரத்தில் இருக்கிறவர்களும், ஊழியத்தில் இருக்கிறவர்களும் சேர்ந்து, ஏகோபித்து தேவனுடைய ஆலயத்தைக் கட்டுகிறார்கள்.

செருபாபேலும், யெசுவாவும், ஆசாரியரும் லேவியரும், சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்கு வந்த அனைவரும், தேவாலயத்தின் அஸ்திபார வேலைகளை ஆரம்பிக்கிறார்கள். இதனால் இஸ்ரவேலில் மிகப்பெரிய மகிழ்ச்சி உண்டாயிற்று. தேவாலயத்திற்கு அஸ்திபாரம் போடும் பணியைப் பற்றி எஸ்றா 3:8-13 ஆகிய வசனங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது. லேவியரில் 20 வயதும், அதற்கு மேற்பட்டவர்களும் தேவாலயத்தின் அஸ்திபார வேலையை ஆரம்பிக்கிறார்கள். லேவியரும், ஆசாரியரும் எக்காளங்களை ஊதி, கர்த்தரைத் துதித்துப் பாடியபோது, இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் தேவாலயத்தின் அஸ்திபார வேலைகளில் பங்குபெறுகிறார்கள் (எஸ்றா 3:9-11).

அவர்கள் இருபதுவயதுமுதல் அதற்கு மேற்பட்ட லேவியரைக் கர்த்தருடைய ஆலயத்தின் வேலையை நடத்தும்படி வைக்கிறார்கள். அப்படியே தேவனுடைய ஆலயத்தின் வேலையைச் செய்கிறவர்களை நடத்தும்படி யெசுவாவும் அவன் குமாரரும் சகோதரரும், கத்மியேலும் அவன் குமாரரும், யூதாவின் குமாரரும், எனாதாத்தின் குமாரரும், அவர்கள் சகோதரராகிய லேவியரும் ஒருமனப்பட்டு நிற்கிறார்கள் (எஸ்றா 3:8,9).

தேவனுடைய ஆலயத்தைக் கட்டுகிறவர்கள் எல்லோரும் ஒருமனப்பட்டு நிற்கிறார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர், கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டும் நல்ல வேலைக்கு தங்களுடைய கைகளைப் பலப்படுத்திக்கொள்கிறார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லி தங்களை உற்சாகப்படுத்திக்கொள்கிறார்கள்.

கர்த்தருடைய ஆலயத்திற்கு அஸ்திபாரம் போடுகிறபோது, இஸ்ரவேல் சபையார் எல்லோரும் கர்த்தரைத் துதிக்கிறார்கள்.

சிற்பாசாரிகள் கர்த்தருடைய ஆலயத்திற்கு அஸ்திபாரம் போடுகிறபோது, இஸ்ரவேல் ராஜாவாகிய தாவீதுடைய கட்டளையின்படியே, கர்த்தரைத் துதிக்கும்படிக்கு, வஸ்திரங்கள் தரிக்கப்பட்டு, பூரிகைகளை ஊதுகிற ஆசாரியரையும், தாளங்களைக்கொட்டுகிற ஆசாபின் குமாரராகிய லேவியரையும் நிறுத்துகிறார்கள் (எஸ்றா 3:10).

"கர்த்தர் நல்லவர், இஸ்ரவேலின்மேல் அவருடைய கிருபை என்றுமுள்ளது" என்று அவரைப் புகழ்ந்து துதிக்கையில், மாறிமாறிப் பாடுகிறார்கள்; கர்த்தரைத் துதிக்கையில், ஜனங்கள் எல்லாரும் கர்த்தருடைய ஆலயத்தின் அஸ்திபாரம் போடப்படுகிறதினிமித்தம் மகா கெம்பீரமாய் ஆரவாரிக்கிறார்கள் (எஸ்றா 3:11).

கர்த்தரைத் துதிக்கும் துதியின் கீதங்கள் பூர்வகாலங்களில் இயற்றப்பட்டதாகயிருந்தாலும், அவை ஒருபோதும் பழையதாய்ப் போவதில்லை. கர்த்தர் நல்லவர் இஸ்ரவேலின்மேல் அவருடைய கிருபை என்றுமுள்ளது என்னும் சத்தியம் மாறாத நித்திய சத்தியமாயிருக்கிறது.

"சுத்த இருதயமுள்ளவர்களாகிய இஸ்ரவேலருக்கு தேவன் நல்லவராகவே இருக்கிறார்" (சங் 73:1).

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், நாம் சோர்ந்துபோயிருக்கும் வேளைகளில், கர்த்தரைத் துதிக்கும் துதியின் கீதங்களை பயபக்தியோடு பாடவேண்டும். கர்த்தருடைய கிருபைகளையும், இரக்கங்களையும் பெற்றுக்கொள்ளவேண்டும். அவருடைய கிருபை நம்மேல் என்றுமுள்ளது என்பதை நினைவுகூர்ந்து, கர்த்தருக்குள் சந்தோஷமாயும், உற்சாகமாயும் இருக்கவேண்டும்.

சிற்பாசாரிகள் கர்த்தருடைய ஆலயத்திற்கு அஸ்திபாரம் போடுகிறபோது ஆசாரியர்களும் லேவியர்களும் பூரிகைகளை ஊதி, கர்த்தரைப் புகழ்ந்து துதிக்கிறார்கள். அந்தப் பரிசுத்த ஸ்தலத்தில், சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த இஸ்ரவேல் புத்திரர் கூடியிருக்கிறார்கள். அவர்களில் பலர் கெம்பீர சத்தத்தோடே ஆர்ப்பரிக்கிறார்கள். வேறு சிலரோ மகாசத்தமிட்டு அழுகிறார்கள். அங்கே கூடியிருக்கிற ஜனங்களின் உணர்வுகள் வித்தியாசமாயிருக்கிறது.

முந்தின ஆலயத்தைக் கண்டிருந்த முதிர்வயதான ஆசாரியரிலும், லேவியரிலும், பிதாக்கள் வம்சங்களின் தலைவரிலும் அநேகர் இந்த ஆலயத்துக்குத் தங்கள் கண்களுக்கு முன்பாக அஸ்திபாரம் போடப்படுகிறதைக் கண்டபோது, மகா சத்தமிட்டு அழுகிறார்கள்; வேறே அநேகம்பேரோ கெம்பீர சந்தோஷமாய் ஆர்ப்பரிக்கிறார்கள் (எஸ்றா 3:12).

தேவனுடைய ஆலயத்திற்கு அஸ்திபாரம் போடுவதைப் பார்த்தபோது ஜனங்களுடைய உணர்வுகள் வித்தியாசமாயிருக்கிறது. ஆனாலும் அவர்கள் எல்லோருமே ஒருமனப்பட்டு கர்த்தரைத் துதிக்கிறார்கள். அவர்களிடத்தில் வேற்றுமையின் ஆவியோ, வித்தியாசத்தின் ஆவியோ காணப்படவில்லை. கர்த்தர் தங்களை ஏவுகிற பிரகாரம், அவர்கள் தங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்துகிறார்கள்.

தேவனுடைய ஆலயத்திற்கு அஸ்திபாரம் போடப்படும்போது, அங்கே கூடியிருக்கிற இஸ்ரவேல் புத்திரர் இரண்டுவிதமாக இருக்கிறார்கள். அவர்களில் ஒரு பிரிவார் அந்த ஸ்தலத்தில் ஏற்கெனவே இருந்த தேவனுடைய ஆலயத்தைப் பார்த்தவர்கள். மற்றொரு பிரிவார் அந்த ஸ்தலத்திலிருந்த ஆலயத்தைப் பார்க்காதவர்கள். அவர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பில் பிறந்தவர்கள்.

சிறையிருப்பிலே பிறந்தவர்களுக்கு பழைய ஆலயத்தைப்பற்றி ஒன்றும் தெரியாது. அவர்கள் இதுவரையிலும் கர்த்தருடைய ஆலயத்தைப் பார்த்ததே இல்லை. ஆகையினால் தங்கள் கண்களுக்கு முன்பாக இந்த ஆலயத்திற்கு அஸ்திபாரம் போடப்படுவதை அவர்கள் கண்டபோது, கெம்பீர சந்தோஷமாய் ஆர்ப்பரிக்கிறார்கள். அவர்களுக்கு இந்த அஸ்திபாரமே மிகப்பெரிய அற்புதமாகயிருக்கிறது. மரித்தவன் உயிர்பெற்று எழுந்ததுபோல அவர்களுக்கு தெரிகிறது.

ஆலயத்திற்கு அஸ்திபாரம் போடப்படும்போது, அங்கே கூடியிருக்கிறவர்களில் சிலர், சாலொமோன் கட்டின மகிமையான தேவாலயத்தைப் பார்த்தவர்கள். அவர்கள் சிறையிருப்புக்குப் போவதற்கு முன்பாக சாலொமோன் கட்டின மகிமையான ஆலயத்தைப் பார்த்திருக்கிறார்கள். அந்த ஆலயத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இப்போது அஸ்திபாரம் போடப்படுகிற ஆலயம் அளவில் சிறியதாகவும், ஆடம்பரமில்லாமல் சாதாரணமானதாகவும் இருக்கிறது. அவர்கள் முந்தின ஆலயத்தை கண்டிருந்ததினால், இப்போது தங்கள் கண்களுக்கு முன்பாக ஆடம்பரமில்லாமல், சிறிய அளவில் அஸ்திபாரம் போடப்படுகிறதைப் பார்த்து மகாசத்தமிட்டு அழுகிறார்கள்.

முந்தின ஆலயம் கி.மு. 586-ல் அழிக்கப்பட்டது. இஸ்ரவேல் புத்திரர் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து கி.மு. 537-ல் திரும்பி வருகிறார்கள். புதிய ஆலயத்திற்கு கி.மு. 536-ல் அஸ்திபாரம் போடப்படுகிறது. முந்தின ஆலயம் அக்கினியினால் எரிக்கப்பட்டு 50 வருஷங்களாயிற்று.

இப்போது ஆலயத்திற்கு அஸ்திபாரம் போடப்படுவதைப் பார்க்கிறவர்களில் அநேகர், ஐம்பதுவயதிற்கு மேற்பட்டவராயிருக்கிறார்கள். அவர்கள் பழைய சம்பவங்களை நினைவுகூருகிறார்கள். சாலொமோன் கட்டின முந்தின ஆலயம் மகிமையோடிருந்ததையும், நேபுகாத்நேச்சார் அந்த ஆலயத்தை அக்கினியினால் சுட்டெரித்துப்போட்டதையும், இப்போது அந்த ஆலயமும் எருசலேம் நகரமும் மண்மேடாய் பாழாய்க்கிடப்பதையும் பார்த்து முதிர்வயதான ஆசாரியரும், லேவியரும் பிதாக்களின் வம்சங்களின் தலைவர்களும் மகாசத்தமிட்டு அழுகிறார்கள்.

மகாசத்தமிட்டு அழுகிறவர்கள், முந்தின ஆலயம் அழிந்துபோனதற்காக அழக்கூடாது. அந்த அழிவுக்கு தங்கள் பாவங்களே காரணம் என்பதை உணர்ந்து, அவர்கள் தங்கள் பாவங்களுக்காக அழவேண்டும். அவர்களுடைய துக்கம் மனந்திரும்புதலுக்கேற்ற துக்கமாயிருக்கவேண்டும்.

முதிர்வயதான ஆசாரியரும், லேவியரும், பிதாக்கள் வம்சங்களின் தலைவரும், தங்கள் துக்கத்தைத் தாங்கமுடியாமல் மகாசத்தமிட்டு அழுகிறார்கள். ஆனாலும் அங்கே கூடியிருக்கிற அநேகம் பேர் கெம்பீர சந்தோஷமாய் ஆர்ப்பரிக்கிறார்கள். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும் இதுபோல துக்கமும் சந்தோஷமும் கலந்திருக்கும்.

மற்றவர்கள் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கும்போது, நாம் அவர்களுடைய சந்தோஷத்தைக் கெடுத்துப்போடக்கூடாது. கர்த்தருடைய பராமரிப்புக்கள் ஒவ்வொரு சூழ்நிலையிலும் வித்தியாசமாயிருக்கும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் பழைய வேதனைகளும், பழைய துக்கங்களும் இருந்தாலும், நாம் பழையதையே நினைத்து எப்போதும் துக்கத்தோடிருக்கக்கூடாது. கர்த்தருடைய புதிய கிருபைகளை நாம் பெற்றுக்கொள்வதற்கு, நம்முடைய பழைய துக்கங்கள் தடையாயிருக்கக்கூடாது. கர்த்தருடைய கிருபை நமக்கு என்றுமுள்ளது என்பதை நினைவுகூர்ந்து, நாம் எல்லா சூழ்நிலைகளிலும் கர்த்தருக்குள் சந்தோஷமாக இருக்க கற்றுக்கொள்ளவேண்டும்.

ஜனங்கள் மகா கெம்பீரமாய் ஆர்ப்பரிக்கிறதினால் அவர்கள் சத்தம் வெகுதூரம் கேட்கப்படுகிறது; ஆனாலும் சந்தோஷ ஆரவாரத்தின் சத்தம் இன்னதென்றும், ஜனங்களுடைய அழுகையின் சத்தம் இன்னதென்றும் பகுத்தறியக்கூடாதிருக்கிறது (எஸ்றா 3:13). இந்த உலகத்திலும் இதுபோலவே சந்தோஷ ஆரவாரத்தின் சத்தமும், அழுகையின் சத்தமும் கலந்திருக்கிறது.

4 அதிகாரம்

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள் தேவனுடைய ஆலயத்தை மறுபடியும் கட்ட ஆரம்பிக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு சமாரியர்கள் மூலமாக பிரச்சனைகள் வருகிறது. அவர்கள் யூதர்களுக்கும், யூதர்களுடைய மார்க்கத்திற்கும் சத்துருக்களாயிருக்கிறார்கள். சமாரியர்கள் கர்த்தருடைய ஆலயம் கட்டப்படுவதை தடைபண்ணுகிறார்கள்.

தேவனுடைய ஆலயத்தை யூதர்களோடுகூட தாங்களும் கட்டவேண்டுமென்று சமாரியர்கள் சொல்லுகிறார்கள். ஆலயத்தைக் கட்டுகிற வேலையில் சமாரியர்களும் பங்குபெற்றால், அவர்கள் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஆலயக்கட்டுவதை நிறுத்திவிடலாம் என்று நினைக்கிறார்கள் (எஸ்றா 4:1-3).

சமாரியர்கள் யூதாஜனத்தின் கைகளை தளரப்பண்ணுகிறார்கள். சமாரியர்கள் ஆலயத்தைக் கட்டாதபடிக்கு யூதர்களை சங்கடப்படுத்துகிறார்கள் (எஸ்றா 4:4,5).

சமாரியர்கள் பெர்சியாவின் ராஜாவாகிய அகாஸ்வேருவினிடத்திற்கு யூதர்களுக்கு விரோதமாக பிரியாது எழுதியனுப்புகிறார்கள் இந்தப் பிரியாதில், சமாரியர்கள் யூதர்களைக்குறித்தும், அவர்கள் ஆலயத்தைக்கட்டுவதைக் குறித்தும் தவறான செய்தியை எழுதியனுப்புகிறார்கள் (எஸ்றா 4:6-16).

பெர்சியாவின் ராஜாவாகிய அர்த்தசஷ்டா கட்டுமான வேலைகளை நிறுத்துமாறு யூதர்களுக்கு கட்டளையிடுகிறான் (எஸ்றா 4:17-22). ராஜாவின் நகல் தங்களுக்கு கிடைத்தவுடன், சமாரியர்கள் தீவிரத்துடனே எருசலேமுக்குப்போய், யூதர்கள் வேலை செய்யாதபடிக்கு அவர்களை பலவந்தத்தோடும் கட்டாயத்தோடும் நிறுத்திப்போடுகிறார்கள் (எஸ்றா 4:23,24).

ஆலயம் கட்டுவதற்கு எதிர்ப்பு
எஸ்றா 4:1-5

எஸ்றா 4:1. சிறையிருப்பிலிருந்து வந்த ஜனங்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டுகிறார்கள் என்று யூதாவுக்கும் பென்யமீனுக்கும் இருந்த சத்துருக்கள் கேள்விப்பட்டபோது,

எஸ்றா 4:2. அவர்கள் செருபாபேலிடத்துக்கும் தலைவரான பிதாக்களிடத்துக்கும் வந்து: உங்களோடேகூட நாங்களும் கட்டுவோம்; உங்களைப்போல நாங்களும் உங்கள் தேவனை நாடுவோம்; இவ்விடத்துக்கு எங்களை வரப்பண்ணின அசீரியாவின் ராஜாவாகிய எசரத்தோன் நாட்கள் முதற்கொண்டு அவருக்கு நாங்களும் பலியிட்டு வருகிறோம் என்று அவர்களோடே சொன்னார்கள்.

எஸ்றா 4:3. அதற்குச் செருபாபேலும், யெசுவாவும், இஸ்ரவேலில் மற்றுமுள்ள தலைவரான பிதாக்களும் அவர்களை நோக்கி: எங்கள் தேவனுக்கு ஆலயத்தைக் கட்டுகிறதற்கு உங்களுக்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை; பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் ராஜா எங்களுக்குக் கட்டளையிட்டபடி, நாங்களே இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு அதைக் கட்டுவோம் என்றார்கள்.

எஸ்றா 4:4. அதினால் அந்த தேசத்து ஜனங்கள் யூதா ஜனத்தின் கைகளைத் தளரப்பண்ணி, கட்டாதபடிக்கு அவர்களைச் சங்கடப்படுத்தி,

எஸ்றா 4:5. பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் காலமுழுவதும், தரியு என்னும் பெர்சியா ராஜா அரசாண்டகாலமட்டும், அவர்கள் யோசனையை அவத்தமாக்கும்படி, அவர்களுக்கு விரோதமாய் ஆலோசனைக்காரருக்குக் கைக்கூலி கட்டினார்கள்.

ஸ்திரீயின் வித்திற்கும் சர்ப்பத்தின் வித்திற்கும் பழைய பகை இருக்கிறது. தேவனுடைய ஆலயத்தை கட்டக்கூடாது என்பது சாத்தானுடைய திட்டம். தேவனுடைய ஆலயம் கட்டப்படும்போது, அதை தடுத்து நிறுத்துவதற்கு, சாத்தான் கெர்ச்சிக்கிற சிங்கம்போல சுற்றி அலைகிறான். பாதாளத்தின் வாசல்கள் கர்த்தருடைய ஆலயத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறது. இதனால் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதிலே தடை ஏற்படுகிறது.

சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்கு திரும்பி வந்தவர்கள் தேவனுடைய ஆலயத்தைக் கட்ட ஆரம்பிக்கிறார்கள். அப்போது அவர்களுக்கு ஏராளமான பிரச்சனைகளும், தொல்லைகளும், தொந்தரவுகளும் உண்டாயிற்று. அதுபோலவே நாம் இயேசுகிறிஸ்துவின் ராஜ்யமாகிய சுவிசேஷ ராஜ்யத்தைக் கட்டி எழுப்பும்போது, நமக்கும் அநேக பிரச்சனைகளும், போராட்டங்களும் வரும்.

யூதர்களைப்பற்றி இந்த அதிகாரத்தின் முதலாவது வசனத்தில் சொல்லப்படும்போது, அவர்கள் "சிறையிருப்பிலிருந்து வந்த ஜனங்கள்" (எஸ்றா 4:1) என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் இப்போதுதான் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்குத் திரும்பி வந்திருக்கிறார்கள். அவர்களில் அநேகர் சிறையிருப்பில் பிறந்தவர்கள். அவர்களிடத்தில் சிறையிருப்பின் அடையாளங்கள் இன்னும் இருக்கிறது.

சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்கு வந்த ஜனங்கள் இப்போது அடிமைகளல்ல. பாபிலோன் தேசத்தார் அவர்களை சிறைப்பிடித்திருந்தார்கள். பாபிலோன் தேசம் இப்பொழுது பெர்சியருடைய வசமாயிற்று. பெர்சியர்கள் யூதர்களை விடுதலை பண்ணினார்கள். விடுதலை பண்ணப்பட்டவர்கள் அடிமைகளல்ல. ஆனாலும் சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்கு திரும்பி வந்திருக்கிற யூதர்கள், பெர்சிய தேசத்தின் ஆளுகைக்கு கட்டுப்பட்டவர்களாயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் தேவனுக்கு பிரியமான ஜனங்களாயிருந்தவர்கள். இஸ்ரவேல் தேவனுடைய சேஷ்டபுத்திரன். ஆனால் இஸ்ரவேல் புத்திரருடைய அக்கிரமங்கள் அதிகரித்தபோது, கர்த்தர் அவர்களை அந்நிய தேசத்தாருக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுத்துவிடுகிறார். சுயாதீன ஜனமாயிருந்த இஸ்ரவேலர்கள், தங்களுடைய பாவங்களினிமித்தமாக, சிறையிருப்பின் ஜனங்களாக ஆனார்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்கு திரும்பி வந்த யூதர்கள் தேவனுடைய ஆலயத்தை திரும்பவும் கட்ட ஆரம்பிக்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டுகிறார்கள் என்னும் செய்தியை அவர்களுடைய சத்துருக்கள் கேள்விப்படுகிறார்கள். அவர்கள் யூதாவுக்கும் பென்யமீனுக்கும் சத்துருக்களாயிருக்கிறார்கள்.

இந்த சத்துருக்கள் கல்தேயரோ அல்லது பெர்சியரோ அல்ல. இவர்கள் இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தாரோடு தொடர்புடையவர்கள். இவர்கள் சமாரியர்கள். கர்த்தருடைய ஆலயம் கட்டப்படுவதை சமாரியர்கள் எதிர்க்கிறார்கள்.

சமாரியர்கள் கர்த்தரையும் சேவிக்கிறார்கள். புறஜாதி தெய்வங்களையும் சேவிக்கிறார்கள்.

"அப்படியே கர்த்தருக்குப் பயந்தும், தாங்கள் விட்டுவந்த ஜாதிகளுடைய முறைமையின்படியே தங்கள் தேவர்களைச் சேவித்தும் வந்தார்கள்" *(2இராஜா 17:33)*

அவர்களோடு மேலும் சில அந்நிய ஜாதியாரும் சேர்ந்துகொண்டு, கர்த்தருடைய ஆலயம் கட்டப்படுவதற்கு தடைபண்ணுகிறார்கள். அந்நிய ஜாதியார் இந்த வசனப்பகுதியில், "அந்த தேசத்து ஜனங்கள்" (எஸ்றா 4:4) என்று அழைக்கப்படுகிறார்கள்.

சமாரியர்களும், அந்நிய ஜாதியாரும் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஆலயம் கட்டப்படுவதை விரும்பவில்லை. அவர்கள் அதைத் தடுத்து நிறுத்தவேண்டுமென்று விரும்புகிறார்கள். இதற்காக அவர்கள் தந்திரமாய் யோசனைபண்ணி, கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாய் எழும்புகிறார்கள். பழைய பிசாசின் தந்திரம் இந்த சத்துருக்களிடமும் காணப்படுகிறது.

சிறையிருப்பிலிருந்து வந்த ஜனங்கள் கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டுகிறார்கள் என்னும் செய்தியைக் கேள்விப்பட்ட உடனேயே, சத்துரு தனக்கு வரும் ஆபத்தை உணருகிறான். கர்த்தருக்கு ஆலயம் கட்டப்பட்டால் சாத்தானுடைய கோட்டை இடிந்து விழும். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு எருசலேமிலே ஆலயம் கட்டப்படும்போது, அங்கே கர்த்தருக்கு ஆராதனைகள் நடைபெறும். இதனால் அந்நிய தெய்வங்களின் ஆராதனைகள் அழிந்துபோகும்.

சமாரியரும், அந்நிய ஜாதியாரும் தங்களுடைய மார்க்க ஆராதனைகளுக்கும், தங்களுடைய தெய்வங்களுக்கும், கர்த்தருக்கு ஆலயம் கட்டப்படுவதினால் ஆபத்து வரும் என்பதை அறிந்து, அவர்கள் கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டுகிறவர்களை எதிர்க்க வருகிறார்கள்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை ஆசீர்வதிக்க ஆரம்பிக்கிறார். இது சாத்தானுக்கு விசனமாக இருக்கிறது. ஆகையினால், கர்த்தருடைய பிள்ளைகளுக்கு விரோதமாகச் சாத்தான் சத்துருக்களை ஏவுகிறான். இந்த அதிகாரத்தில் தேவாலயத்தைக் கட்டும் இஸ்ரவேல் புத்திரருக்கு எதிராக வந்த சத்துருக்களைப் பற்றிக் கூறப் பட்டிருக்கிறது. இவர்கள் இஸ்ரவேல் புத்திரரின் நண்பர்களைப் போலவும், கர்த்தரை ஆராதிக்கிறவர்கள்போலவும், அவர்களோடு சேர்ந்து தேவாலயத்தைக் கட்ட விரும்புகிறவர்களைப் போலவும் வருகிறார்கள்.

அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிப்பின் குமாரனாகிய எசரத்தோனின் காலத்திலிருந்தே இவர்கள் கர்த்தரை ஆராதிப்பதாகக் கூறுகிறார்கள். (எஸ்றா 4:1-20). பல வருஷங்களுக்கு முன்பு, இவர்களுக்குக் கர்த்தரைப் பற்றி அறிவிக்க ஒரு ஆசாரியன் அனுப்பப்பட்டான். ஆனால் சமாரியரோ கர்த்தரை அறிந்துகொள்ளவில்லை. அவர்கள் கர்ததருக்குப் பயந்தும், தங்கள் விக்கிரகங்களைச் சேவித்தும் வந்தார்கள். (2இராஜா 17:28-41).

சத்துருக்கள் செருபாபேலிடத்துக்கும் தலைவரான பிதாக்களிடத்துக்கும் வந்து: "உங்களோடேகூட நாங்களும் கட்டுவோம்; உங்களைப்போல நாங்களும் உங்கள் தேவனை நாடுவோம்; இவ்விடத்துக்கு எங்களை வரப்பண்ணின அசீரியாவின் ராஜாவாகிய எசரத்தோன் நாட்கள் முதற்கொண்டு அவருக்கு நாங்களும் பலியிட்டுவருகிறோம்" (எஸ்றா 4:2) என்று அவர்களோடே சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாரோடு சேர்ந்து, தாங்களும் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு உதவிசெய்ய விரும்புவதாக சத்துருக்கள் சொல்லுகிறார்கள். உதவி செய்யவேண்டும் என்பது அவர்களுடைய விருப்பமல்ல. கர்த்தருடைய ஜனத்தை உபத்திரவப்படுத்த வேண்டும் என்பதே அவர்களுடைய விருப்பம். கர்த்தருடைய ஆலயம் சீக்கிரத்தில் கட்டி முடிக்கப்படவேண்டும் என்பது சத்துருக்களின் விருப்பமல்ல. கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிற வேலைகள் நிறுத்தப்படவேண்டும் என்பதே சத்துருக்களின் விருப்பம்.

சத்துருக்களிடத்தில் பழைய பாம்பாகிய பிசாசானவனின் தந்திரம் காணப்படுகிறது. ஏதேன் தோட்டத்திலே பிசாசாகிய சர்ப்பம், தந்திரமாகப் பேசி, ஏவாளை வஞ்சித்தது. அதுபோலவே சத்துருக்கள் கர்த்தருடைய பிள்ளைகளிடத்தில் வந்து, "உங்களோடேகூட நாங்களும் கட்டுவோம்" என்று தந்திரமாகச் சொல்லுகிறார்கள். மேலும், "நாங்களும் உங்கள் தேவனை நாடுவோம்" என்றும் சொல்லுகிறார்கள்.

சத்துருக்கள் உண்மை பேசமாட்டார்கள். அவர்கள் சத்தியத்தின் பிள்ளைகளல்ல. அவர்கள் பொய்யின் பிள்ளைகள். அவர்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை நாடினாலும், அவர்கள் கர்த்தரை மாத்திரம் நாடமாட்டார்கள். அவர்கள் கர்த்தரையும் சேவிப்பார்கள். அந்நிய ஜாதியாரின் தெய்வங்களையும் சேவிப்பார்கள்.

கர்த்தரைத் தேடுகிறவர்கள், கர்த்தர் நியமித்திருக்கிற வழியில் அவரைத் தேடவேண்டும். "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்" என்று இயேசுகிறிஸ்து சொல்லியிருக்கிறார். யூதர்களுக்கு விரோதமாக வந்த சத்துருக்கள், "தேவனுக்கு நாங்களும் பலியிட்டு வருகிறோம்" என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவர்களோ தேவனுக்கு மாத்திரம் பலியிடவில்லை. அவர்கள் தேவனுக்கும் பலியிடுகிறார்கள். புறஜாதியாரின் விக்கிரகங்களுக்கும் பலியிடுகிறார்கள்.

சத்துருக்கள் செருபாபேலிடத்திலும், யூதர்களில் தலைவரான பிதாக்களிடத்திலும் சாதுரியமான வார்த்தைகளை நயவஞ்சகமாகப் பேசுகிறார்கள். அவர்களுடைய மனதில் தேவனுடைய ஆலயத்தைக் கட்டவேண்டும் என்னும் உண்மையான விருப்பமில்லை என்பதை யூதர்களின் தலைவரான பிதாக்கள் அறிந்துகொள்கிறார்கள்.

சத்துருக்களிடத்தில் கர்த்தருக்குப் பயப்படும் பயமுமில்லை. கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும் என்னும் வாஞ்சையுமில்லை. அவர்கள் பக்தியின் வேஷத்தைத் தரித்து மாய்மாலமாகப் பேசுகிறார்கள். கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு உதவிசெய்வதுபோல மாய்மாலம் பண்ணுகிறார்கள். ஆனால் கர்த்தருடைய ஆலயத்தை கட்டாதபடிக்கு அதை நிறுத்திப்போடவேண்டும் என்பதே அவர்களுடைய உண்மையான நோக்கம்.

சத்துருக்களின் மனதிலுள்ள வஞ்சக யோசனையை செருபாபேலும், அவனோடு கூடயிருக்கிற யூதர்களின் தலைவர்களும் அறிந்துகொள்கிறார்கள். அவர்கள் சத்துருக்களோடு விவாதம்பண்ணாமல், ஆரம்பத்திலேயே அவர்களுடைய உதவியை ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகிறார்கள்.

செருபாபேலும், யெசுவாவும், இஸ்ரவேலில் மற்றுமுள்ள தலைவரான பிதாக்களும் அவர்களை நோக்கி: "எங்கள் தேவனுக்கு ஆலயத்தைக் கட்டுகிறதற்கு உங்களுக்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை; பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் ராஜா எங்களுக்குக் கட்டளையிட்டபடி, நாங்களே இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு அதைக் கட்டுவோம்" *(எஸ்றா 4:3)* என்று சொல்லுகிறார்கள்.

"உங்களுக்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை" என்பது மிகவும் தெளிவான வார்த்தை. இது ஞானமுள்ள வார்த்தை. யூதர்கள் அந்நிய நுகத்திலே பிணைக்கப்பட விரும்பவில்லை. சத்துருக்கள் இஸ்ரவேல் புத்திரருமல்ல, அவர்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை உண்மையாய் ஆராதிக்கிறவர்களுமல்ல.

இஸ்ரவேலின் மூப்பர்கள் சமாரியரின் கோரிக்கையை அங்கிகரிக்கவில்லை. தாங்கள் கர்த்தருக்கென்று வேறு பிரிக்கப்பட்டவர்களாக இருக்கவேண்டுமென்று இஸ்ரவேல் புத்திரர் விரும்புகிறார்கள். கர்த்தர் ஆரம்பத்திலிருந்தே தம்முடைய ஜனத்தாரிடம் இதைத்தான் எதிர்பார்க்கிறார். எல்லா தேசங்களுக்கும் மத்தியில் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்குச் சாட்சியாக ஒரு விசேஷ ஜனமாக இருக்கவேண்டும்.

அவர்கள் புறஜாதியார் மத்தியில் விவாகம் பண்ணக்கூடாது. சில சமயங்களில் புறஜாதி விவாகத்தைக் கர்த்தர் அங்கிகரித்து, ஆசீர்வதித்திருந்தாலும், கர்த்தருடைய பொதுவான பிரமாணத்தின் பிரகாரம், இஸ்ரவேல் புத்திரர் மற்ற ஜாதிகளைவிட்டு, வேறுபிரிந்தே ஜீவிக்க வேண்டும். *(உபா 7:3)*.

"நீங்கள் அறியாததைத் தொழுது கொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது" *(யோவா 4:22)*.

இஸ்ரவேல் புத்திரர் சத்துருக்களோடு சம்பந்தம்பண்ண விரும்பவில்லை. ஆகையினால் யூதர்கள், "நாங்களே இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு அதைக் கட்டுவோம்" என்று தீர்மானமாகச் சொல்லுகிறார்கள்.

கர்த்தருடைய ஆலயம் கட்டப்படுவதை நிறுத்துவதற்கு சத்துருக்கள் மேற்கொண்ட முதலாவது முயற்சி தோல்வியடைகிறது. ஆகையினால் சத்துருக்கள் வேறு வழிகளில் முயற்சி பண்ணி, ஆலயம் கட்டுவதை தடைபண்ண எத்தனிக்கிறார்கள்.

அந்த தேசத்து ஜனங்கள் யூதா ஜனத்தின் கைகளைத் தளரப்பண்ணி, கட்டாதபடிக்கு அவர்களைச் சங்கடப்படுத்து கிறார்கள் (எஸ்றா 4:4). ஆரம்பத்தில் "உங்களைப்போல நாங்களும் உங்கள் தேவனை நாடுவோம்" என்றும் "உங்களோடேகூட நாங்களும் கட்டுவோம்" என்றும் சொன்ன சத்துருக்கள், இப்போது யூதாஜனத்தின் கைகளை தளரப்பண்ணுகிறார்கள். கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டாதபடிக்கு சத்துருக்கள் யூதர்களை சங்கடப்படுத்துகிறார்கள்.

சமாரியரின் கோரிக்கையை இஸ்ரவேலின் மூப்பர்கள் அங்கீகரிக்கவில்லை. அதினால் அந்த தேசத்து ஜனங்கள் யூதா ஜனத்தின் கைகளைத் தளரப்பண்ணுகிறார்கள். ஆலயத்தைக் கட்டாதபடிக்கு அவர்களைச் சங்கடப்படுத்துகிறார்கள். பெர்சியாவின் ராஜாக்களாகிய கோரேசு, தரியு ஆகியோர் இஸ்ரவேல் புத்திரருக்கு எதிராகத் திரும்புமாறு அந்த ராஜாக்களின் ஆலோசனைக்காரருக்குக் கைக்கூலி கட்டுகிறார்கள்.

இவர்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு எதிராக ராஜாக்களிடம் பொய்யான ஆலாசனைகளைக் கூறுகிறார்கள். (எஸ்றா 4:4-5). பெர்சிய ராஜாவுக்கு எதிராகக் கலகம் பண்ணுவதற்காகவே யூதர்கள் தேவாலயத்தைக் கட்டுகிறார்கள் என்று இவர்கள்மீது பிராது கூறுகிறார்கள். அவர்கள் ராஜாக்களுக்கு எதிராகக் கலகம் பண்ணி அழிந்துபோனதையும் பெர்சியாவின் ராஜாக்களுக்குத் தெரியப்படுத்துகிறார்கள். (எஸ்றா 4:6-16).

நாம் கர்த்தருடைய சபையை கட்டியெழுப்பும்போது, சத்துரு தன்னுடைய வேலையை சபைக்கு விரோதமாகத் தொடர்ந்து செய்துகொண்டேயிருப்பான். சபையைக் கட்டாதபடிக்கு விசுவாசிகளை சங்கடப்படுத்துவான்.

சமாரியரும், அந்த தேசத்து ஜனங்களும் யூதர்களுக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். கர்த்தருடைய ஆலயம் கட்டப்படுவதைத் தடைபண்ணுவதற்கு தங்களால் முடிந்த எல்லா பிரச்சனைகளையும் கொடுக்கிறார்கள். தங்களுடைய துன்மார்க்கமான யோசனையை நிறைவேற்றுவதற்கு, சத்துருக்கள் மற்றவர்களுக்கும் கைக்கூலி கட்டி, அவர்களையும் தங்களோடு சேர்த்துக்கொள்கிறார்கள்.

சத்துருக்கள் சாத்தானின் பிள்ளைகளாயிருக்கிறார்கள். சாத்தான் யாரை விழுங்கலாம் என்று கெர்ச்சிக்கிற சிங்கம்போல இந்தப் பூமியெங்கும் சுற்றி அலைகிறான். அவனைப்போலவே, யூதாஜனத்திற்கு சத்துருவாகயிருக்கிறவர்களும், கர்த்தருடைய ஆலயம் கட்டப்படுவதை தடைபண்ணுவதற்காக, இந்தப் பூமியெங்கும் சுற்றி அலைகிறார்கள். தங்களுடைய துன்மார்க்கமான செய்கைக்கு ஆதரவு தேடுகிறார்கள்.

பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் காலமுழுவதும், தரியு என்னும் பெர்சியா ராஜா அரசாண்டகாலமட்டும், அவர்கள் யோசனையை அவத்தமாக்கும்படி அவர்களுக்கு விரோதமாய் ஆலோசனைக்காரருக்குக் கைக்கூலி கட்டுகிறார்கள் (எஸ்றா 4:5).

"கோரேசின் காலமுழுவதும்" என்னும் வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிற கோரேசு என்பவன் எஸ்றா 1:1-4 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் கோரேசாகவோ, அல்லது இரண்டாம் கோரேசாகவோ இருக்கலாம்.

"தரியு என்னும் பெர்சியா ராஜா" என்பவன் தானியேல் 5 ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் தரியு அல்ல. அவன் கோரேசின் தகப்பன். எஸ்தரின் கணவன். இங்கு கூறப்பட்டிருக்கும் தரியு, பெர்சியா தேசத்தின் ஒன்பதாவது ராஜா. இவனுடைய பெயர் ஹிஸ்டாஸ்பிஸ் தரியு.

பெர்சியா ராஜாவிற்கு அவனுடைய அரண்மனையில் ஆலோசனைக்காரர்கள் இருக்கிறார்கள். சமாரியர் அவர்களுக்குக் கைக்கூலி கட்டுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் தேவாலயத்தின் வேலையைக் கட்டக்கூடாதவாறு இந்த ஆலோசனைக்காரரும் தடையாக இருக்கிறார்கள்.

சத்துருக்கள் எழுதின பிரியாது எஸ்றா 4:6-16

எஸ்றா 4:6. அகாஸ்வேரு அரசாளுகிறபோது, அவனுடைய ராஜ்யபாரத்தின் துவக்கத்திலே, யூதாவிலும் எருசலேமிலும் குடியிருக்கிறவர்களுக்கு விரோதமாகப் பிரியாது எழுதினார்கள்.

எஸ்றா 4:7. அர்தசஷ்டாவின் நாட்களிலும், பிஸ்லாமும் மித்திரேதாத்தும், தாபெயேலும், மற்றுமுள்ள அவர்கள் வகையராவும், பெர்சியா ராஜாவான அர்தசஷ்டாவுக்கு ஒரு மனு எழுதினார்கள்; அந்த மனு சீரிய எழுத்திலும் சீரிய பாஷையிலும் எழுதியிருந்தது.

எஸ்றா 4:8. ஆலோசனைத் தலைவனாகிய ரெகூமும் கணக்கனாகிய சிம்சாவும் எருசலேமுக்கு விரோதமாக அர்தசஷ்டா என்னும் ராஜாவுக்கு எழுதின மனுவிலே கையொப்பம் போட்டவர்கள் யாரென்றால்:

எஸ்றா 4:9. ஆலோசனைத் தலைவனாகிய ரெகூமும், கணக்கனாகிய சிம்சாயும், மற்றுமுள்ள அவர்கள் வகையராவாகிய தீனாவியர், அபற்சாத்தியர், தர்பேலியர், அப்பார்சியர், அற்கேவியர், பாபிலோனியர், சூஷங்கியர், தெகாவியர், ஏலாமியரானவர்களும்,

எஸ்றா 4:10. பெரியவரும் பேர்பெற்றவருமான அஸ்னாப்பார் அவ்விடங்களிலிருந்து அழைத்துக் கொண்டுவந்து சமாரியாவின் பட்டணத்திலே குடியேற்றப்பண்ணின மற்ற ஜனங்களும், நதிக்கு இப்பாலே இருக்கிற மற்ற ஜனங்களுமே.

எஸ்றா 4:11. அவர்கள் அர்தசஷ்டா என்னும் ராஜாவுக்கு அனுப்பின மனுவின் நகலாவது: நதிக்கு இப்புறத்தில் இருக்கிற உமது அடியார் முதலானவர்கள் அறிவிக்கிறது என்னவென்றால்,

எஸ்றா 4:12. உம்மிடத்திலிருந்து எங்களிடத்திற்கு வந்த யூதர் எருசலேமிலே கூடி, கலகமும் பொல்லாப்புமான அந்தப் பட்டணத்திற்கு அஸ்திபாரங்களை இணைத்து, அதின் மதில்களை எழுப்பிக் கட்டுகிறார்கள் என்பது ராஜாவுக்கு அறியலாவதாக.

எஸ்றா 4:13. இப்போதும் இந்தப் பட்டணம் கட்டப்பட்டு, அலங்கங்கள் எடுப்பிக்கப்பட்டுத் தீர்ந்தால், அவர்கள் பகுதியையும் தீர்வையையும் ஆயத்தையும் கொடுக்கமாட்டார்கள்; அதினால் ராஜாக்களின் வருமானத்திற்கு நஷ்டம் வரும் என்று ராஜாவுக்கு அறியலாவதாக.

எஸ்றா 4:14. இப்போதும் நாங்கள் அரமனை உப்புத் தின்கிறபடியினால், ராஜாவுக்குக் குறைவுவரப் பார்த்திருக்கிறது எங்களுக்கு அடாதகாரியம்; ஆகையால் நாங்கள் இதை அனுப்பி, ராஜாவுக்குத் தெரியப்படுத்துகிறோம்.

எஸ்றா 4:15. உம்முடைய பிதாக்களின் நடபடிபுஸ்தகங்களில் சோதித்துப்பார்க்க உத்தரவாகவேண்டும்; அப்பொழுது இந்தப் பட்டணம் கலகமும், ராஜாக்களுக்கும் சீமைகளுக்கும் நஷ்டமும் உண்டாக்குகிற பட்டணம் என்றும், பூர்வகால முதல் கலாதி உள்ளதாயிருந்தபடியினால் இந்தப் பட்டணம் பாழ்க்கடிக்கப்பட்டது என்றும், அந்த நடபடி புஸ்தகங்களில் கண்டறியலாம்.

எஸ்றா 4:16. ஆகையால் இந்தப் பட்டணம் கட்டப்பட்டு, இதின் அலங்கங்கள் எடுப்பிக்கப்பட்டுத் தீர்ந்தால், நதிக்கு இப்புறத்திலே உமக்கு ஒன்றும் இராதேபோம் என்பதை ராஜாவுக்கு அறியப்படுத்துகிறோம் என்று எழுதி அனுப்பினார்கள்.

கோரேசு ராஜா யூதர்களுக்கு ஆதரவாகயிருந்தான். சிறையிருப்பிலிருந்த யூதர்களை, தங்கள் சொந்த தேசத்திற்கு போக விடுதலை கொடுத்தான். கர்த்தருடைய ஆலயத்தை எருசலேமிலே கட்டுவதற்கும் கோரேசு ஆதரவாயிருந்தான்.

பெர்சியா தேசத்து கோரேசுக்கு பிறகு இப்போது அகாஸ்வேரு என்பவன் அரசாட்சி செய்கிறான் (எஸ்றா 4:6). இவன் அர்தசஷ்டா (எஸ்றா 4:7) என்றும் அழைக்கப்படுகிறான். சரித்திர ஆசிரியர்கள் அர்தசஷ்டாவை "கம்பைசஸ்" என்று அழைக்கிறார்கள். இவனுக்கு யூதர்கள்மேல் பிரியமில்லை. எருசலேமிலே தேவனுடைய ஆலயத்தைத் திரும்பவும் கட்டவேண்டும் என்னும் ஆர்வமும் அர்தசஷ்டாவிடத்தில் காணப்படவில்லை. இவன் யூதர்களுடைய நலனிலே அக்கரை காண்பிக்கவில்லை.

"அகாஸ்வேரு" என்பவன் எஸ் 1:1 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் அகாஸ்வேரு அவனல்ல. அந்த அகாஸ்வேரு கோரேசின் தகப்பன். அகாஸ்வேரு என்பது "வல்லவன்" என்று பொருள்படும் பட்டத்தைக் குறிக்கும். பெர்சியா ராஜாக்களில் பலர் தங்களை அகாஸ்வேரு என்று அழைத்துக் கொண்டார்கள்.

இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் அகாஸ்வேரு கோரேசின் குமாரனாகிய கம்பஸிஸாக இருக்கலாம். அல்லது அகாஸ்வேரு என்பது கோரேசையும் குறிக்கலாம். ஏனெனில் இந்த ஆவணத்தில் கோரேசைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (எஸ்றா 4:5).

கோரேஸ் தன்னுடைய ஆட்சிக்காலத்தின் முதலாம் வருஷத்தில் இஸ்ரவேல் புத்திரரை விடுதலை செய்ய ஆணையிட்டான். (எஸ்றா 1:1-4). கோரேசு ஒன்பது வருஷம் ஆட்சி புரிந்தான். அதன் பின்பு, அவனுடைய குமாரன் கம்பஸிஸ் ஏழு வருஷம் ஆட்சி புரிந்தான். செருபாபேல் எருசலேமில் ஆலயம் கட்டிய திருப்பணி இவ்விருவருடைய ஆட்சிக்காலத்திலும் நடைபெற்றிருக்கிறது. (எஸ்றா 6:15).

"அர்தசஷ்டா" என்பவன் ஹிஸ்டாஸ்பிஸைக் குறிக்கும். இவன் கம்பஸிஸிற்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவன். ஆறுமாதங்கள் ஆட்சி புரிந்தான். கம்பஸிஸிற்கும், தரியு ஹிஸ்டாஸ்பிஸிற்கும் இடைப்பட்ட காலத்தில் ஆட்சி புரிந்தவன்.

எஸ்றா 4:24 ஆவது வசனத்தில் இவனைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. தேவாலயத்தின் கட்டுமான வேலையை இவன் தன் ஆணையின் மூலமாக நிறுத்திப்போட்டான். அப்பொழுது எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்தின் வேலை தடைபட்டு, பெர்சியாவின் ராஜாவாகிய தரியு ராஜ்யபாரம்பண்ணின இரண்டாம் வருஷமட்டும் நிறுத்தப்பட்டிருந்தது (எஸ்றா 4:17-24).

கோரேசு ராஜா தேவாலயத்தைக் குறித்து பிறப்பித்த உத்தரவு மறுபடியும் கண்டுபிடிக்கப்படும் வரையிலும் தேவாலயத்தின் கட்டுமான வேலைகள் இரண்டு வருஷக்காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. (எஸ்றா 4:24; எஸ்றா 5:1-6:18).

தரியு, அகாஸ்வேரு, அர்தசஷ்டா ஆகியவை பெர்சியா ராஜாக்களுக்குக் கொடுக்கப்படும் பட்டப் பெயர்களாகும். இந்தப் பட்டங்களை எந்த ராஜாவிற்கு வேண்டுமானாலும் பயன் படுத்தலாம். இந்தப் பட்டப் பெயர்களை வைத்துக் கொண்டு, அது எந்த ராஜாவைக் குறிப்பிடுகிறது என்று தீர்மானம் பண்ணுவது கடினமான காரியம். ஆகையினால் சரித்திர ஆதாரங்களைக் கொண்டும், காலவித்தியாசங்களைக் கொண்டுமே இராஜாக்களின் பெயர்கள் நிர்ணயம் பண்ணப்படுகிறது.

"சீரிய பாஷை" என்பது அரமாயிக் பாஷையைக் குறிக்கும். இது தமஸ்குவில் பேசப்பட்ட கிளைமொழி. எபிரெய பாஷையைப் போல இதுவும் சிமிட்டிக் மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது. ஆனாலும் பொதுவான யூதருக்குச் சீரிய பாஷை புரியாது (2இராஜா 18:26).

"ஆலோசனைத் தலைவன்" என்பது சமாரியா தேசத்தின் பெர்சிய அதிபதிக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பட்டப் பெயர். ஒவ்வொரு பெர்சிய அதிபதிக்கும் சம்பிரதிகளும், கணக்கர்களும், அதிகாரிகளும் இருக்கிறார்கள். இவர்களுக்கென்று தனிப்பட்ட அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

எஸ்றா 4:8-6:18 ஆகிய வசனங்கள் அரமாயிக் (சீரிய பாஷை) பாஷையில் எழுதப்பட்டிருக்கிறது. எஸ்றா 6:19-7:11 ஆகிய வசனங்கள் எபிரெய பாஷையில் எழுதப்பட்டிருக்கிறது. எஸ்றா 7:12-26 ஆகிய வசனங்கள் அரமாயிக் (சீரிய பாஷை) பாஷையில் எழுதப்பட்டிருக்கிறது.

அகாஸ்வேரு பெர்சியா தேசத்திற்கு ராஜாவாகும் வரைக்கும், யூதர்களின் சத்துருக்களாகிய சமாரியர்கள் காத்திருக்கிறார்கள். அதுவரையிலும் யூதர்களுடைய யோசனையை அபத்தமாக்கும்படி, அவர்களுக்கு விரோதமாக சமாரியர்கள் ஆலோசனைக்காரருக்கு கைக்கூலி கட்டிவருகிறார்கள். இப்போதோ யூதருடைய நலனில் அக்கரையில்லாத அகாஸ்வேரு என்னும் அர்தசஷ்டா பெர்சியா தேசத்திலே ராஜாவாக ஆளுகை செய்கிறான்.

சமாரியர்கள் காலதாமதம்பண்ணாமல், அகாஸ்வேருவினுடைய ராஜ்யபாரத்தின் துவக்கத்திலே, யூதர்களுக்கு விரோதமான தங்களுடைய சதிவேலைகளை செய்ய ஆரம்பிக்கிறார்கள். பெர்சியாவின் ராஜா யூதருக்கு விரோதமாகவும், தங்களுக்கு ஆதரவாகவும் இருப்பது சமாரியருக்கு சாதகமாயிருக்கிறது.

சபையின் சத்துருக்களும், சபையின் ஊழியங்களை அழிப்பதற்கு, தங்களுக்கு சாதகமான சூழ்நிலைக்காக காத்திருப்பார்கள். தங்களுக்கு கிடைக்கும் வாய்ப்புக்களை தவறவிடமாட்டார்கள். சத்துருக்கள் காலதாமதமும் பண்ணமாட்டார்கள். விசுவாசிகளாகிய நாம் சத்துருக்களுடைய விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

அகாஸ்வேரு அரசாளுகிறபோது, அவனுடைய ராஜ்யபாரத்தின் துவக்கத்திலே, யூதாவிலும் எருசலேமிலும் குடியிருக்கிறவர்களுக்கு விரோதமாகப் பிரியாது எழுதுகிறார்கள் (எஸ்றா 4:6).

யூதர்களுக்கு விரோதமாக பிரியாது எழுதுகிறவர்களின் பெயர்களும், அந்த மனுவிலே கையொப்பம் போட்டவர்களின் விவரமும் இந்த வசனப்பகுதியில் சொல்லப் பட்டிருக்கிறது. துன்மார்க்கர் ஒன்றுகூடுகிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமான காரியங்களை கூட்டு சேர்ந்து செய்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகவும், கர்த்தருடைய ஆலயத்திற்கு விரோதமாகவும் சதிஆலோசனைபண்ணுகிறார்கள்.

அர்தசஷ்டாவின் நாட்களிலும், பிஸ்லாமும் மித்திரேதாத்தும், தாபெயேலும், மற்றுமுள்ள அவர்கள் வகையராவும், பெர்சியா ராஜாவான அர்தசஷ்டாவுக்கு ஒரு மனு எழுதுகிறார்கள்; அந்த மனு சீரிய எழுத்திலும் சீரிய பாஷையிலும் எழுதியிருக்கிறது (எஸ்றா 4:7).

ஆலோசனைத் தலைவனாகிய ரெகூமும் கணக்கனாகிய சிம்சாவும் எருசலேமுக்கு விரோதமாக அர்தசஷ்டா என்னும் ராஜாவுக்கு எழுதின மனுவிலே கையொப்பம் போட்டவர்கள் யாரென்றால்:

ஆலோசனைத் தலைவனாகிய ரெகூமும், கணக்கனாகிய சிம்சாயும், மற்றுமுள்ள அவர்கள் வகையராவாகிய தீனாவியர், அபற்சாத்தியர், தர்பேலியர், அப்பார்சியர், அற்கேவியர், பாபிலோனியர், சூஷங்கியர், தெகாவியர், ஏலாமியரானவர்களும்,

பெரியவரும் பேர்பெற்றவருமான அஸ்னாப்பர் அவ்விடங்களிலிருந்து அழைத்துக்கொண்டுவந்து சமாரியாவின் பட்டணத்திலே குடியேற்றப்பண்ணின மற்ற ஜனங்களும், நதிக்கு இப்பாலே இருக்கிற மற்ற ஜனங்களுமே (எஸ்றா 4:8-10).

கர்த்தருடைய ஆலயக்கட்டிடம் சமாரியருக்கு எந்த ஒரு தீங்கும் செய்யப்போவதில்லை. ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய ஆலயத்திற்கு விரோதமாக எழும்பியிருக்கிறார்கள். கர்த்தருடைய ஆலயம் கட்டியெழுப்பட்டால், புறஜாதியாரின் தெய்வங்கள் அழிந்துபோகும் என்று ஒருவேளை சத்துருக்கள் பயந்திருக்கலாம்.

"கர்த்தர் அவர்கள்மேல் கெடியாயிருப்பார்; பூமியிலுள்ள தேவர்களையெல்லாம் மெலிந்து போகப்பண்ணுவார்; அப்பொழுது தீவுகளிலுள்ள சகல புறஜாதிகளும் அவரவர் தங்கள் தங்கள் ஸ்தானத்திலிருந்து அவரைப் பணிந்துகொள்வார்கள்" (செப் 2:11).

"வானத்தையும் பூமியையும் உண்டாக்காத தெய்வங்கள், பூமியிலும் இந்த வானத்தின் கீழும் இராதபடிக்கு அழிந்துபோகும் என்பதை அவர்களுக்குச் சொல்லுங்கள்" (எரே 10:11).

சமாரியரோடு கூட்டு சேர்ந்திருக்கிற புறஜாதி தேசத்தார் வீணான காரியங்களை யோசிக்கிறார்கள். சமாரியரோடு அசீரியர்கள், கல்தேயர்கள், பெர்சியர்கள் போன்றவர்கள் சம்பந்தம் பண்ணியிருக்கிறார்கள். சமாரியர்கள் யூதர்களுக்கு விரோதமாக பிரியாது எழுதும்போது, அவர்களும் அந்த மனுவிலே கையொப்பமிடுகிறார்கள். சத்துருக்களின் சதிஆலோசனைகளுக்கும் அவர்களும் ஒத்துப்போகிறார்கள். அவர்கள் எல்லோருமே பாவத்திற்கு பங்காளிகளாயிருக்கிறார்கள்.

சமாரியர்கள் யூதாவின் மனுஷருக்கு விரோதமாக எழுதின பிரியாதின் நகல் பெர்சியா தேசத்து அரண்மனை பொக்கிஷத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கிறது. அந்த மனுவின் நகலை எஸ்றா இந்த வசனப்பகுதியில் இணைத்திருக்கிறார்.

சமாரியர்கள் தங்களை பெர்சியா தேசத்திற்கு உண்மையுள்ளவர்கள்போல காண்பித்துக்கொள்கிறார்கள். அந்த தேசத்தின் நன்மையிலும், மேன்மையிலும், பாதுகாப்பிலும் தங்களை அதிக கரிசனையுள்ளவர்கள்போல வெளிப்படுத்துகிறார்கள்.

சமாரியர்களும், யூதாவின் ஜனத்திற்கு விரோதமாக சமாரியரோடு கூட்டு சேர்ந்திருக்கிற சத்துருக்களும், தங்களைப்பற்றிச் சொல்லும்போது, "இப்போதும் நாங்கள் அரமனை உப்புத் தின்கிறபடியினால், ராஜாவுக்குக் குறைவுவரப் பார்த்திருக்கிறது எங்களுக்கு அடாதகாரியம்; ஆகையால் நாங்கள் இதை அனுப்பி, ராஜாவுக்குத் தெரியப்படுத்துகிறோம்" (எஸ்றா 4:14) என்று சொல்லுகிறார்கள்.

ஆகையினால் அர்தசஷ்டா ராஜாவானவர், யூதாஜனத்தார் கட்டிக்கொண்டிருக்கிற கர்த்தருடைய ஆலயத்தின் வேலைகளை நிறுத்திப்போடவேண்டும் என்பது அவர்களுடைய விண்ணப்பமாகும்.

சத்துருக்கள் யூதாவின் ஜனங்களைப்பற்றி ராஜாவுக்கு பிரியாது எழுதியனுப்பும்போது, அவர்கள் யூதர்களை கலகமுள்ள ஜனங்கள் என்றும், பொல்லாத குணமுள்ளவர்கள் என்றும் சொல்லுகிறார்கள்.

அவர்கள் அர்தசஷ்டா என்னும் ராஜாவுக்கு அனுப்பின மனுவின் நகலாவது: நதிக்கு இப்புறத்தில் இருக்கிற உமது அடியார் முதலானவர்கள் அறிவிக்கிறது என்னவென்றால்,

"உம்மிடத்திலிருந்து எங்களிடத்திற்கு வந்த யூதர் எருசலேமிலே கூடி, கலகமும் பொல்லாப்புமான அந்தப் பட்டணத்திற்கு அஸ்திபாரங்களை இணைத்து, அதின் மதில்களை எழுப்பிக் கட்டுகிறார்கள் என்பது ராஜாவுக்கு அறியலாவதாக" (எஸ்றா 4:11,12) என்று யூதாவின் ஜனத்திற்கு விரோதமாக பிரியாது எழுதுகிறார்கள்.

சமாரியர்கள் எருசலேம் பட்டணத்திற்கு விரோதமாகவும் பிரியாது சொல்லுகிறார்கள். எருசலேம் கலகம்பண்ணுகிற பட்டணமென்றும், அது மோசமான பட்டணம் என்றும், அதினால் பெர்சியாவின் ராஜாவுக்கும், பெர்சியா தேசத்திற்கும் தீங்கு வரும் என்று பிரியாது எழுதுகிறார்கள்.

இப்போதும் இந்தப் பட்டணம் கட்டப்பட்டு, அலங்கங்கள் எடுப்பிக்கப்பட்டுத் தீர்ந்தால், அவர்கள் பகுதியையும் தீர்வையையும் ஆயத்தையும் கொடுக்க மாட்டார்கள்; அதினால் ராஜாக்களின் வருமானத்திற்கு நஷ்டம் வரும் என்று ராஜாவுக்கு அறியலாவதாக (எஸ்றா 4:13).

சத்துருக்கள் யூதாவின் ஜனத்திற்கு விரோதமாகவும், எருசலேம் பட்டணத்திற்கு விரோதமாகவும் அகாஸ்வேரு ராஜாவுக்கு எழுதின பிரியாதில், "உம்முடைய பிதாக்களின் நடபடிபுஸ்தகங்களில் சோதித்துப்பார்க்க உத்தரவாகவேண்டும்; அப்பொழுது இந்தப் பட்டணம் கலகமும், ராஜாக்களுக்கும் சீமைகளுக்கும் நஷ்டமும் உண்டாக்குகிற பட்டணம் என்றும், பூர்வகால முதல் கலாதி உள்ளதாயிருந்தபடியினால் இந்தப் பட்டணம் பாழ்க்கடிக்கப்பட்டது என்றும், அந்த நடபடி புஸ்தகங்களில் கண்டறியலாம்" (எஸ்றா 4:15) என்றும்,

"இப்போதும் இந்தப் பட்டணம் கட்டப்பட்டு, அலங்கங்கள் எடுப்பிக்கப்பட்டுத் தீர்ந்தால், அவர்கள் பகுதியையும் தீர்வையையும் ஆயத்தையும் கொடுக்கமாட்டார்கள்; அதினால் ராஜாக்களின் வருமானத்திற்கு நஷ்டம் வரும் என்று ராஜாவுக்கு அறியலாவதாக" (எஸ்றா 4:16) என்றும் எழுதுகிறார்கள்.

பட்டணத்தின் அலங்கங்கள் இன்னும் கட்டி முடிக்கப்படவில்லை. எஸ்றாவின் இந்த நடபடிகளில் நெகே 1:1-7:4 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் காரியங்கள் இன்னும் நிறைவேறவில்லை. தேவாலயமும், அலங்கங்களும் கட்டப்பட்டு வருகின்றன. கட்டிட வேலைகள் இன்னும் நிறைவு பெறவில்லை. கட்டுமான வேலை ஆரம்பமானபோதே சத்துருக்களிடமிருந்து எதிர்ப்பு உண்டாயிற்று. அலங்கங்கள் கட்டி முடிக்கப்பட்டு இருந்தால், சத்துருக்களால் பட்டணத்திற்குள் நுழையவே முடியாது. (எஸ்றா 4:23).

யூதாவின் ராஜாக்களாகிய யோயாக்கீம், சிதேக்கியா ஆகியோர் பாபிலோன் ராஜாவுக்கு விரோதமாகக் கலகம்பண்ணினார்கள். அவர்கள் தாங்கள் இழந்த உரிமையைப் பெற்றுக்கொள்ள போராடினார்கள். யூதாவின் ராஜாக்கள் பாபிலோன் ராஜாவின் நுகத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து ஜீவித்தார்கள். யூதாவின் ராஜாக்கள் பாபிலோன் ராஜாவுக்கு விரோதமாகக் கலகம்பண்ணினாலும், அவர்கள் கர்த்தரோடு சமாதானமாயிருந்தார்கள்.

யூதர்கள் சிறையிருப்புக்குப்போவதற்கு முன்பாக, யூதாவின் ஜனங்களும், எருசலேமின் குடிகளும் பாபிலோன் ராஜாவுக்கு விரோதமாக கலகம்பண்ணினார்கள் என்பது மெய்யான செய்தியாகயிருந்தாலும், இந்தக் கலகத்தை எருசலேம் பட்டணத்தோடு சம்பந்தப்படுத்தி பேசுவது நியாயமல்ல. எருசலேம் கலகம்பண்ணுகிற மோசமான பட்டணமல்ல. அது கர்த்தருடைய சமாதானமான பட்டணம்.

யூதர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்த எழுபது வருஷகாலமாக, தங்களுடைய நற்குணத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அவர்களுடைய நல்ல நடத்தையே அவர்களைக் குறித்து நல்ல சாட்சிகளைக் கொடுக்கும். ஒரு காலத்தில் யூதர்கள் கலகக்காரராகயிருந்தாலும், இப்போது அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தருக்குள் சமாதானமாயிருக்கிறார்கள். யூதர்களின் பழைய பாவங்களை இப்போது அவர்களோடு இணைத்துப்பேசுவது நியாயமானதல்ல.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள், எருசலேமிலே தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டுகிறார்கள். அவர்கள் எருசலேமின் பட்டணத்தைக் கட்டவில்லை. இடிந்துபோய்க்கிடக்கிற எருசலேமின் அலங்கங்களை எடுப்பித்துக் கட்டவில்லை.

ஆனால் சமாரியர்களோ யூதஜனங்களுக்கு விரோதமாக பிரியாது சொல்லும்போது, "உம்மிடத்திலிருந்து எங்களிடத்திற்கு வந்த யூதர் எருசலேமிலே கூடி, கலகமும் பொல்லாப்புமான அந்தப் பட்டணத்திற்கு அஸ்திபாரங்களை இணைத்து, அதின் மதில்களை எழுப்பிக் கட்டுகிறார்கள் என்பது ராஜாவுக்கு அறியலாவதாக" (எஸ்றா 4:12) என்று சொல்லுகிறார்கள். யூதர்கள் செய்யாத வேலைகளை, அவர்கள் செய்வதாக, அவர்கள்மீது தப்பான பிரியாது சொல்லுகிறார்கள்.

பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசு, எருசலேமிலே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு அனுமதி கொடுத்திருந்தான். ராஜா தங்களுக்கு அனுமதி கொடுத்ததின் பிரகாரம், யூதர்கள் எருசலேமிலே ஆலயத்தை மாத்திரமே கட்டுகிறார்கள். அவர்கள் எருசலேம் பட்டணத்திற்கு அஸ்திபாரங்களை இணைக்கவில்லை. அவர்கள் எருசலேமின் மதில்களையும் எழுப்பி கட்டவில்லை.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள், தேவனுடைய ஆலயத்திற்கு திரும்பவும் அஸ்திபாரம் போட்டு, பல வருஷங்களுக்கு பின்பே, எருசலேமின் அலங்கத்தை எடுப்பித்துக் கட்ட ஆரம்பிக்கிறார்கள். இப்போது எருசலேமின் அலங்கங்கள் இடிந்து, பாழடைந்து கிடக்கிறது.

"அதற்கு அவர்கள்: சிறையிருப்பில் மீந்திருக்கிறவர்கள் அந்தத் தேசத்திலே மகா தீங்கையும் நிந்தையையும் அநுபவிக்கிறார்கள்; எருசலேமின் அலங்கம் இடிபட்டதும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க் கிடக்கிறது என்றார்கள்" (நெகே 1:3).

சமாரியர்கள் யூதாவின் ஜனத்திற்கு விரோதமாக சொல்லுகிற குற்றச்சாட்டுகளில் உண்மையில்லை. அதற்கு ஆதாரமுமில்லை. எருசலேம் நகரம் மறுபடியும் கட்டப்பட்டால், யூதர்கள் பகுதியையும் தீர்வையையும் ஆயத்தையும் கொடுக்கமாட்டார்கள் என்பது சமாரியர்கள் சொல்லுகிற குற்றச்சாட்டு.

"இப்போதும் இந்தப் பட்டணம் கட்டப்பட்டு, அலங்கங்கள் எடுப்பிக்கப்பட்டுத் தீர்ந்தால், யூதர்கள் பகுதியையும் தீர்வையையும் ஆயத்தையும் கொடுக்கமாட்டார்கள்; அதினால் ராஜாக்களின் வருமானத்திற்கு நஷ்டம் வரும் என்று ராஜாவுக்கு அறியலாவதாக" (எஸ்றா 4:13) என்று சமாரியர்கள் யூதாஜனத்திற்கு விரோதமாக பிரியாது சொல்லுகிறார்கள்.

யூதாஜனங்களுக்கு விரோதமாக பெர்சியாவின் ராஜாவுக்கு பிரியாது எழுதியனுப்புகிற ஜனங்கள் நதிக்கு இப்பாலே இருக்கிறார்கள். நதிக்கு இப்பாலே இருக்கிற எல்லா தேசத்தாரும் பெர்சியா தேசத்திற்கு விரோதமாகக் கலகம்பண்ணுவார்கள். ஆனால் பெர்சியா தேசத்திற்கு விரோதமாகக் கலகம்பண்ணவேண்டும் என்னும் எண்ணம் யூதாஜனத்தாரிடம் இல்லை.

சமாரியர் மிகுந்த தந்திரத்தோடு யூதாஜனத்திற்கு விரோதமாக பிரியாது எழுதுகிறார்கள். பழைய பாம்பின் தந்திர குணம் சமாரியரிடம் காணப்படுகிறது. அவர்கள் தங்களுடைய சாதுரிய வார்த்தைகளினால், பெர்சியா ராஜாவை வஞ்சிக்கிறார்கள். எருசலேமிலே நடைபெறாத காரியங்களை நடைபெறுவதாக சொல்லுகிறார்கள்.

அர்தசஷ்டா எழுதி அனுப்பின பிரதியுத்தரம் எஸ்றா 4:17-24

எஸ்றா 4:17. அப்பொழுது ராஜா ஆலோசனைத்தலைவனாகிய ரெகூமுக்கும், கணக்கனாகிய சிம்சாயிக்கும், சமாரியாவில் குடியிருக்கிற மற்றுமுள்ள அவர்களுடைய வகையராவுக்கும், நதிக்கு அப்புறத்தில் இருக்கிற மற்றவர்களுக்கும் எழுதியனுப்பின பிரதியுத்தரமாவது: உங்களுக்குச் சமாதானம்,

எஸ்றா 4:18. நீங்கள் அனுப்பின மனு நமது சமுகத்தில் தீர்க்கமாய் வாசிக்கப்பட்டது.

எஸ்றா 4:19. நம்முடைய உத்தரவினால் சோதித்துப் பார்க்கும்போது, அந்தப் பட்டணம் பூர்வகாலமுதல் ராஜாக்களுக்கு விரோதமாய் எழும்பினது என்றும், அதிலே கலகமும் ராஜதுரோகமும் காணப்பட்டது என்றும்,

எஸ்றா 4:20. எருசலேமில் வல்லமையுள்ள ராஜாக்கள் இருந்தார்கள் என்றும், அவர்கள் நதிக்கு அப்புறத்தில் இருக்கிற சகல தேசங்களையும் ஆண்டுவந்தார்கள் என்றும், பகுதியும் தீர்வையும் ஆயமும் அவர்களுக்குச் செலுத்தப்பட்டது என்றும் தெரியவருகிறது.

எஸ்றா 4:21. இப்பொழுதும் நம்மிடத்திலிருந்து மறுஉத்தரவு பிறக்கும்வரையும் அந்த மனிதர் அந்தப் பட்டணத்தைக் கட்டாமல் நிறுத்திவிடும்படி, கட்டளையிடுங்கள்.

எஸ்றா 4:22. இதிலே நீங்கள் தவறாதபடி, எச்சரிக்கையாயிருங்கள்; ராஜாக்களுக்கு நஷ்டமும் சேதமும் வரவேண்டியது என்ன என்று எழுதி அனுப்பினான்.

எஸ்றா 4:23. ராஜாவாகிய அர்தசஷ்டாவுடைய உத்தரவின் நகல் ரெகூமுக்கும், கணக்கனாகிய சிம்சாயிக்கும், அவர்கள் வகையராவுக்கு முன்பாக வாசிக்கப்பட்டபோது, அவர்கள் தீவிரத்துடனே எருசலேமிலிருக்கிற யூதரிடத்திற்குப் போய், பலவந்தத்தோடும் கட்டாயத்தோடும் அவர்களை வேலைசெய்யாதபடிக்கு நிறுத்திப்போட்டார்கள்.

எஸ்றா 4:24. அப்பொழுது எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்தின் வேலை தடைபட்டு, பெர்சியாவின் ராஜாவாகிய தரியு ராஜ்யபாரம்பண்ணின இரண்டாம் வருஷமட்டும் நிறுத்தப்பட்டிருந்தது.

சமாரியர்கள் தனக்கு எழுதின பிரியாதுவை பெர்சியாவின் ராஜா கவனமாக ஆராய்ந்து பார்க்கிறான். சமாரியர்கள் யூதர்களுக்கு விரோதமாக தங்கள் பிரியாதுவில் குற்றச்சாட்டுக்களை சொல்லியிருக்கிறார்கள். அர்தசஷ்டா ராஜாவுக்கு யூதர்களைப்பற்றி ஒன்றும் தெரியாது. அவர்களுடைய பூர்வசரித்திரமும் அவனுக்கு தெரியாது. யூதாஜனங்களைப்பற்றி சமாரியர் சொல்லுகிற வார்த்தைகளை அர்தசஷ்டா அப்படியே நம்புகிறான்.

அப்பொழுது ராஜா ஆலோசனைத் தலைவனாகிய ரெகூமுக்கும், கணக்கனாகிய சிம்சாயிக்கும், சமாரியாவில் குடியிருக்கிற மற்றுமுள்ள அவர்களுடைய வகையராவுக்கும், நதிக்கு அப்புறத்தில் இருக்கிற மற்றவர்களுக்கும் எழுதியனுப்பின பிரதியுத்தரமாவது:

"உங்களுக்குச் சமாதானம். நீங்கள் அனுப்பின மனு நமது சமுகத்தில் தீர்க்கமாய் வாசிக்கப்பட்டது" (எஸ்றா 4:18) என்று சொல்லி தன்னுடைய பிரதியுத்தரத்தை ஆரம்பிக்கிறான்.

அர்தசஷ்டா ராஜா எழுதி அனுப்பின பிரதியுத்தரத்தின் விவரம் வருமாறு:

"நம்முடைய உத்தரவினால் சோதித்துப் பார்க்கும்போது, அந்தப் பட்டணம் பூர்வகாலமுதல் ராஜாக்களுக்கு விரோதமாய் எழும்பினது என்றும், அதிலே கலகமும் ராஜதுரோகமும் காணப்பட்டது"(எஸ்றா 4:19) என்றும்,

"எருசலேமில் வல்லமையுள்ள ராஜாக்கள் இருந்தார்கள் என்றும், அவர்கள் நதிக்கு அப்புறத்தில் இருக்கிற சகல தேசங்களையும் ஆண்டுவந்தார்கள் என்றும், பகுதியும் தீர்வையும் ஆயமும் அவர்களுக்குச் செலுத்தப்பட்டது" தெரியவருகிறது (எஸ்றா 4:20) என்றும் அர்தசஷ்டா ராஜா சமாரியரிருக்கு பிரதியுத்தரம் எழுதுகிறான்.

பெர்சியாவின் ராஜா சமாரியர் சொல்லுகிற பொய்யை நம்புகிறான். யூதர்கள் மூலமாக தனக்கும், தன்னுடைய தேசத்திற்கும் ஆபத்தும் நஷ்டமும் வரும் என்று அர்தசஷ்டா நினைக்கிறான்.

அர்தசஷ்டா ராஜா பெர்சியா தேசத்தின் கஜானாவை சோதித்துப் பார்த்தபோது, யூதாவின் ராஜாக்கள் பாபிலோன் ராஜாவுக்கு விரோதமாக கலகம்பண்ணியது தெரியவருகிறது. ஆகையினால் எருசலேம் பட்டணம் பூர்வகாலம் முதல் ராஜாக்களுக்கு விரோதமாய் எழும்பின பட்டணம் என்றும், எருசலேம் பட்டணத்திலே கலகமும் ராஜதுரோகமும் காணப்பட்டது என்றும் அர்தசஷ்டா ராஜா தீர்மானம்பண்ணுகிறான்.

அந்நிய தேசத்து ராஜாக்கள் யூதா தேசத்தாரின்மீது பல சமயங்களில் யுத்தம் பண்ணுவதற்கு வந்தார்கள். அப்போதெல்லாம் யூதா தேசம் அவர்களுக்கு எதிராகக் கலகம் பண்ணிற்று. அந்தத் தேசங்களின் ராஜாக்களுக்கு விரோதமாய் எழும்பிற்று. (2இராஜா 24-25; 2நாளா 35- 36).

எருசலேமில் வல்லமையுள்ள ராஜாக்கள் இருந்தார்கள். தாவீது, சாலொமோன், ஆசா, உசியா, எசேக்கியா போன்ற வல்லமையுள்ள ராஜாக்கள் எருசலேமில் ஆட்சி புரிந்திருக்கிறார்கள்.

யூதாஜனங்கள் கட்டிட வேலையை உடனே நிறுத்தவேண்டும் என்று சமாரியருக்கு பிரதியுத்தரம் சொல்லுகிறான். யூதர்கள் செய்கிற கட்டிட வேலைகளை நிறுத்தும் பொறுப்பை அர்தசஷ்டா ராஜா சமாரியரிடமே ஒப்படைக்கிறான்.

"இப்பொழுதும் நம்மிடத்திலிருந்து மறுஉத்தரவு பிறக்கும்வரையும் அந்த மனிதர் அந்தப் பட்டணத்தைக் கட்டாமல் நிறுத்திவிடும்படி கட்டளையிடுங்கள். இதிலே நீங்கள் தவறாதபடி எச்சரிக்கையாயிருங்கள்; ராஜாக்களுக்கு நஷ்டமும் சேதமும் வரவேண்டியது என்ன" (எஸ்றா 4:21,22) என்று அர்தசஷ்டா ராஜா சமாரியருக்கு எழுதி அனுப்புகிறான்.

ராஜா இன்னும் முடிவான உத்தரவைக் கூறவில்லை. முடிவு கூறுவதற்கு முன்பாக இன்னும் பல ஆவணங்களைச் சோதித்துப் பார்க்க விரும்புகிறான். இந்த ராஜாவின் பெயர் கோமேத்ஸ் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். இவனைத் தரியு ஹஸ்டாஸ்பிஸ் கொன்று போட்டான். தரியுவே நியாயமாய் ஆட்சிக்கு வரவேண்டியவன். கோமேத்ஸின் மரணத்திற்குப் பின்பு, தரியு ஆட்சிப் பொறுப்பேற்றான்.

தரியுவின் இரண்டாம் வருஷ ஆட்சிக்காலம் வரையிலும் எருசலேம் தேவாலயத்தைப் பற்றிய ஆவணங்களைக் கணக்கர்கள் தேடிப் பார்க்கிறார்கள். அப்பொழுது ராஜாவாகிய தரியு இட்ட கட்டளையின்படியே பாபிலோன் கஜானாவிலுள்ள தஸ்திர அறையைச் சோதித்தார்கள்.

மேதிய சீமையிலிருக்கிற அக்மேதா பட்டணத்தின் அரமனையிலே ஒரு சுருள் அகப்பட்டது; ராஜாவாகிய கோரேசின் முதலாம் வருஷத்தில், கோரேஸ் ராஜா எருசலேமிலிருந்த தேவாலயத்தைக் குறித்துப் பிறப்பித்த உத்தரவு அதிலே எழுதியிருந்தது. (எஸ்றா 4:24; எஸ்றா 5:1-6:18).

எருசலேம் பட்டணத்தைக் கட்டும் வேலைகளை நிறுத்திவிடுமாறு ராஜா கட்டளையிடுகிறான். (எஸ்றா 4:19) எருசலேமையும், தேவாலயத்தையும் கட்டுமாறு கோரேசு ராஜா ஆணையிட்டு 16 வருஷங்களாயிற்று. (எஸ்றா 1:1-4) பாலஸ்தீன தேசத்திற்கு இந்த இடைப்பட்ட காலத்தில் ஆயிரக்கணக்கான யூதர்கள் பெர்சிய தேசத்தின் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்திருக்கிறார்கள்.

தேவாலயத்தின் வேலையும், அலங்கங்களின் வேலையும் ஆரம்பிக்கப்பட்டு, பாதியில் நிற்கிறது. இந்த இடைப்பட்ட காலத்தில் கோரேஸ் ராஜா முதலாவது இட்ட ஆணை நிறுத்தி வைக்கப்படுகிறது. அதன்பின்பு, புதிய ராஜா ஆட்சிக்கு வருகிறான். அந்தப் புதிய ராஜாவின் ஆட்சிக் காலத்தில் பட்டணம் கட்டுவதற்கு தடைபண்ணப்படுகிறது (எஸ்றா 4:21-24).

சமாரியரின் பிரியாதிலும், ராஜாவின் பிரதியுத்தரத்திலும் கர்த்தருடைய ஆலயத்தைப்பற்றி ஒரு வார்த்தைகூட சொல்லப்படவில்லை. அர்தசஷ்டா ராஜா தன்னுடைய கஜானாவை சோதித்துப் பார்த்தபோது, கோரேசு ராஜா, கர்த்தருடைய ஆலயத்தை திரும்பக் கட்டுவதற்கு அனுமதி கொடுத்திருந்ததை கண்டுபிடித்திருந்திருப்பார்கள். ஆகையினால் அர்தசஷ்டா தன்னுடைய பிரதியுத்திரத்தில், கர்த்தருடைய ஆலயத்தைப்பற்றி ஒரு வார்த்தைகூட எழுதவில்லை.

ராஜாவின் பிரதியுத்தரத்தில், "அந்தப் பட்டணத்தைக் கட்டாமல் நிறுத்திவிடும்படி கட்டளையிடுங்கள்" என்று மாத்திரமே எழுதப்பட்டிருக்கிறது. எருசலேமிலே ஒருவரும் பட்டணத்தைக் கட்டவில்லை. கட்டப்படாத பட்டணத்தை நிறுத்திவிடுமாறு ராஜா கட்டளையிடுகிறான். சமாரியர்கள் ஒரு பொய்யை சொல்லும்போது, அதைப் பெரிதுபடுத்திசொல்லுகிறார்கள். அநேகர் ஒரே பொய்யை திரும்ப திரும்ப சொல்லும்போது, அந்தப் பொய்யே மெய்யான சம்பவம்போல ஜனங்களுக்கு தெரிகிறது.

சத்துருக்கள் வஞ்சகத்தினாலே, யூதர்களுக்கு விரோதமான பிரதியுத்தரத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். எருசலேம் பட்டணத்தை கட்டக்கூடாது என்பதே பெர்சியா ராஜாவின் ஆணை. ஆனால் சமாரியர்களோ கர்த்தருடைய ஆலயம் கட்டப்படுவதை தடுத்து நிறுத்திப்போடுகிறார்கள். சமாரியரிடத்தில் அதிகாரம் இருக்கிறது. அவர்களுக்கு ராஜாவின் ஆதரவு இருக்கிறது. ஆகையினால் அவர்கள் எருசலேமிலிருக்கிற யூதர்களிடத்திற்குப்போய், பலவந்தத்தோடும் கட்டாயத்தோடும், அவர்கள் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டாதபடிக்கு, அந்த வேலைகளை நிறுத்திப்போடுகிறார்கள்.

ராஜாவாகிய அர்தசஷ்டாவுடைய உத்தரவின் நகல் ரெகூமுக்கும், கணக்கனாகிய சிம்சாயிக்கும், அவர்கள் வகையராவுக்கு முன்பாக வாசிக்கப்பட்டபோது, அவர்கள் தீவிரத்துடனே எருசலேமிலிருக்கிற யூதரிடத்திற்குப் போய், பலவந்தத்தோடும் கட்டாயத்தோடும் அவர்களை வேலைசெய்யாதபடிக்கு நிறுத்திப்போடுகிறார்கள் (எஸ்றா 4:23).

அப்பொழுது எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்தின் வேலை தடைபட்டு, பெர்சியாவின் ராஜாவாகிய தரியு ராஜ்யபாரம்பண்ணின இரண்டாம் வருஷமட்டும் நிறுத்தப்படுகிறது (எஸ்றா 4:24).

கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிற வேலைகள் சிறிதுகாலம் தடைப்படுகிறது. ஆனாலும் கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைப்படுவதில்லை. கர்த்தர் தடைகளை நீக்கிப்போடுகிறார். ஆலயத்தைக் கட்டுவதற்கு கர்த்தர் தம்முடைய ஜனங்களை, தீர்க்கதரிசிகள் மூலமாக உற்சாகப்படுத்துகிறார். கர்த்தருடைய ஆலயம் அவருடைய நாமமகிமைக்காக மறுபடியும் கட்டப்படுகிறது.

அர்தசஷ்டா ராஜாவின் ஆணைக்கு எதிராக யூதர்கள் கலகம் பண்ண வில்லை. யூதர்களைப் பற்றிக் "கலகக்காரர்கள்" என்னும் குற்றச்சாட்டு, ஏற்கெனவே எழும்பியிருக்கிறது (எஸ்றா 4:15-16). ராஜாவிடமிருந்து மறுஉத்தரவு வரும் வரையிலும் தங்களுடைய கட்டுமான வேலைகளைத் தற்காலிகமாக யூதர்கள் நிறுத்தி வைக்கிறார்கள். (எஸ்றா 4:24).

இந்தக் காலத்தில் கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்காகக் கிரியை செய்கிறார். பெர்சிய தேசத்தின்மீது தரியு ஹஸ்டாஸ்பிஸை ராஜ்யபாரத்தில் அமர்த்துகிறார். கோரேசு ராஜாவின் ஆணையை மதித்து, இஸ்ரவேல் புத்திரர் எருசலேமில் கட்டிட வேலைகளைத் தொடர்வதற்கு ஆணையிடுமாறு கர்த்தர் தரியுவின் உள்ளத்தில் ஏவுகிறார். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் தேவனுடைய ஆலயத்தின் வேலை மறுபடியும் ஆரம்பமாயிற்று.

5 அதிகாரம்

எருசலேமிலே கர்த்தருடைய ஆலயத்தை திரும்பவும் கட்டுகிற வேலைகள் நிறுத்தப்படுகிறது. ஆலயம் கட்டுவது கர்த்தருடைய ஊழியம். மனுஷர் இந்த திருப்பணியை நிறுத்தினாலும், கர்த்தர் தம்முடைய ஊழியத்தை உயிர்பெறச் செய்கிறார். நிறுத்தப்பட்டிருந்த ஆலயத்தின் கட்டுமான வேலைகள், மறுபடியுமாக உயிப்பிக்கப்பட்டு, கட்டப்படுகிறது.

கர்த்தருடைய ஆவியானவர் தம்முடைய ஊழியக்காரரின் ஆவியை ஏவுகிறார். இதுவரையிலும் தங்கள் ஆவியில் குளிர்ந்துபோன நிலமையிலிருந்தவர்கள், இப்போது கர்த்தருக்குள் அனலாகயிருக்கிறார்கள். கர்த்தருடைய தீர்க்கதரிசிகள், ஆலயம் கட்டுகிறவர்களை உற்சாகப்படுத்துகிறார்கள். அவர்களுக்கு திடன்சொல்லுகிறார்கள் (எஸ்றா 5:1,2).

யூதாஜனத்தார் கர்த்தருக்கு ஆலயத்தைத் திரும்பக் கட்டுகிறபோது, அவர்களுடைய சத்துருக்கள் அவர்களுக்கு விரோதமாக பொங்கி எழும்பினார்கள். கர்த்தரோ சத்துருக்களின் கோபத்தை சாந்தப்படுத்துகிறார். கர்த்தருடைய ஆலயம் கட்டுகிற வேலைகள் நிறுத்தப்படவேண்டும் என்று சத்துருக்கள் தீர்மானமாயிருந்தார்கள். ஆனால் இப்போதோ அந்த சத்துருக்கள் சற்று பொறுமையாயும் அமைதியாயும் இருக்கிறார்கள் (எஸ்றா 5:3-5).

கர்த்தருக்கு ஆலயம் கட்டுகிறவர்களைப்பற்றி சத்துருக்கள் ராஜாவுக்கு கடிதம் எழுதுகிறார்கள். இந்த தடவை சத்துருக்களின் கடிதத்தில் உண்மையான வார்த்தைகள், மென்மையாக சொல்லப்படுகிறது. சத்துருக்கள் யூதஜனத்தாரின் யதார்த்த நிலமையை பெர்சியா ராஜாவுக்கு அறிவிக்கிறார்கள். சத்துருக்கள் ராஜாவின் முடிவுக்காக காத்திருக்கிறார்கள். கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறவர்களோ தங்கள் வேலையை நிறுத்தாமல், ஆலயத்தின் கட்டுமான வேலைகளை தொடர்ந்து செய்கிறார்கள் (எஸ்றா 5:6-17).

தேவனுடைய தீர்க்கதரிசிகள் எஸ்றா 5:1,2

எஸ்றா 5:1. அப்பொழுது ஆகாய் தீர்க்கதரிசியும், இத்தோவின் குமாரனாகிய சகரியா என்னும் தீர்க்கதரிசியும், யூதாவிலும் எருசலேமிலுள்ள யூதருக்கு இஸ்ரவேல் தேவனின் நாமத்திலே தீர்க்கதரிசனம் சொன்னார்கள்.

எஸ்றா 5:2. அப்பொழுது செயல்தியேலின் குமாரனாகிய செருபாபேலும் யோசதாக்கின் குமாரனாகிய யெசுவாவும் எழும்பி, எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்தைக் கட்டத்தொடங்கினார்கள்; அவர்களுக்குத் திடன்சொல்ல தேவனுடைய தீர்க்கதரிசிகளும் இருந்தார்கள்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்களுக்கு எருசலேமிலே இப்பொழுது ஒரு பலிபீடமும், ஒரு ஆசரிப்புக்கூடாரமும் இருக்கிறது. சமாரியரும், அவர்களோடு கூடசேர்ந்துகொண்ட அந்நிய தேசத்தாரும், கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு தடைபண்ணுகிறார்கள்.

அந்த சத்துருக்கள் எல்லோரும், பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் காலமுழுவதும், தரியு என்னும் பெர்சியா ராஜா அரசாண்டகாலமட்டும், அவர்கள் யோசனையை அவத்தமாக்கும்படி அவர்களுக்கு விரோதமாய் ஆலோசனைக்காரருக்குக் கைக்கூலி கட்டுகிறார்கள் (எஸ்றா 4:5).

கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு ஏற்ற காலம் இன்னும் வரவில்லை என்று ஆலோசனைக்காரர் சொல்லுகிறார்கள்.

"இந்த ஜனங்கள் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கு ஏற்றகாலம் இன்னும் வரவில்லை என்கிறார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (ஆகா 1:2).

கர்த்தருடைய ஆலயத்தைத் திரும்பக்கட்ட முடியுமா என்னும் சந்தேகம் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்களுடைய மனதிலே உண்டாயிற்று. ஆகையினால் அவர்கள் கர்த்தருடைய ஆலயத்தை திரும்பக் கட்டுவதை நிறுத்திவிட்டு, தங்களுக்கு மச்சுப்பாவப்பட்ட வீடுகளைக் கட்டுகிறார்கள். கர்த்தருடைய ஆலயம் பாழடைந்து இடிந்துபோன நிலமையிலிருக்கிறது. ஆனால் யூதர்களோ தங்களுக்கு நல்ல வசதியான பெரிய வீடுகளைக் கட்டிக்கொள்கிறார்கள்.

இக்காலத்தில் கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளில் இரண்டுபேரை யூதஜனத்தார் மத்தியிலே அனுப்புகிறார். அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே யூதஜனத்தாரைக் கடிந்துகொள்கிறார்கள். சிறையிருப்பிலிருந்த திரும்பி வந்த யூதர்கள் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதை நிறுத்திவிடுகிறார்கள். அவர்கள் மறுபடியும் ஆலயத்தைக் கட்டவேண்டுமென்று தீர்க்கதரிசிகள் அவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தையை அறிவிக்கிறார்கள்.

தரியு ராஜா ராஜ்யபாரம்பண்ணின இரண்டாம் வருஷத்திலே ஆகாய், சகரியா ஆகிய இரண்டு பேரும் யூதஜனத்தாருக்கு கர்த்தருடைய வார்த்தையை தீர்க்கதரிசனமாய்ச் சொல்ல ஆரம்பிக்கிறார்கள்.

ஆகாய் தீர்க்கதரிசியும், இத்தோவின் குமாரனாகிய சகரியா என்னும் தீர்க்கதரிசியும், யூதாவிலும் எருசலேமிலுள்ள யூதருக்கு இஸ்ரவேல் தேவனின் நாமத்திலே தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள் *(எஸ்றா 5:1).*

தேவாலயம் கட்டும் வேலையை அர்தசஷ்டா ராஜா தடைபண்ணிவிட்டான். அக்காலத்தில் எருசலேமிலிருந்த ஆகாய், சகரியா ஆகிய தீர்க்கதரிசிகள் மூலமாகக் கர்த்தர் தம்முடைய பிள்ளைகளோடு பேசுகிறார். ராஜாவினுடைய ஆணை உறுதிபண்ணப்படாத நிலையில் தேவாலயத்தின் கட்டிட வேலைகளைத் தொடர்ந்து செய்யுமாறு தீர்க்கதரிசிகள் இஸ்ரவேல் புத்திரரை உற்சாகப்படுத்துகிறார்கள்.

தேவனுடைய பிள்ளைகளுக்கு இறுதி ஆணை சாதகமாக வரும் என்றும், அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் எல்லாத் தடைகளும் நீங்குமென்றும் தீர்க்கதரிசிகள் முன்னறிவிக்கிறார்கள். அவர்கள் தீர்க்கதரிசனம் உரைக்கும் காலத்தில் யூதா தேசத்தின் தேசாதிபதியாகிய செருபாபேல் எழும்பி, கட்டிட வேலைகளை மறுபடியும் ஆரம்பிக்கிறான். அதைப் பார்த்த சத்துருக்கள் தரியு ராஜாவுக்கு ஒரு பிராதை அனுப்பி கட்டிடவேலைகளை நிறுத்துமாறு விண்ணப்பம் பண்ணுகிறார்கள்.

தரியு ராஜா கோரேசு ராஜாவின் முதல் ஆணையைத் தெரிந்து கொண்டு, தேவாலயம் கட்டும் வேலையைத் தொடரலாம் என்று ஆணையிடுகிறான். தரியு ராஜாவின் ஆறாம் வருஷ ஆட்சிக்காலத்தில் தேவாலயம் கட்டி முடிக்கப்படுகிறது. அலங்கங்கள் இன்னும் கட்டி முடிக்கப்படவில்லை. பல வருஷங்களுக்குப்பின்பு, நெகேமியாவின் காலத்தில் அலங்கம் கட்டி முடிக்கப்படுகிறது. *(நெகே 2-6; தானி 9:25).*

"ராஜாவாகிய தரியு அரசாண்ட இரண்டாம் வருஷம் ஆறாம் மாதம் முதலாந்தேதியிலே, கர்த்தருடைய வார்த்தை ஆகாய் என்னும் தீர்க்கதரிசியின் மூலமாய் செயல்த்தியேலின் குமாரனாகிய செருபாபேல் என்னும் யூதாவின் தலைவனுக்கும், யோத்சதாக்கின் குமாரனாகிய யோசுவா என்னும் பிரதான ஆசாரியனுக்கும் உண்டாயிற்று" *(ஆகா 1:1).*

"தரியு அரசாண்ட இரண்டாம் வருஷம் எட்டாம் மாதத்திலே இத்தோவின் மகனான பெரகியாவின் குமாரனாகிய சகரியாவுக்கு உண்டான கர்த்தருடைய வார்த்தை" *(சக 1:1).*

கர்த்தருடைய ஆலயத்தை உலகப்பிரகாரமான காரியங்களினாலோ, மாம்சப்பிரகாரமான வல்லமைகளினாலோ கட்டக்கூடாது. அதை கர்த்தருடைய வார்த்தையினால் கட்டவேண்டும். நாம் ஆவிக்குரிய ஆயுதங்களை ஏந்தி சத்துருவுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வேண்டியவர்கள். கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கும், நாம் மாம்சப்பிரகாரமான கருவிகளைப் பயன்படுத்தாமல், ஆவிக்குரிய கருவிகளையே பயன்படுத்தவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகள் எல்லோருமே, கர்த்தரை நம்பி நன்மை செய்யவேண்டும். நாம் நன்மையான காரியங்களை செய்யும் படியாக கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் நம்மை உற்சாகப்படுத்துகிறார்கள். அவர்கள் நமக்கு கர்த்தருடைய நாமத்தினாலே திடன்சொல்லுகிறார்கள். கர்த்தருக்காக நல்ல ஊழியங்களை செய்வதற்கு அவர்கள் நமக்கு ஆலோசனைகள் சொல்லுகிறார்கள். அவர்கள் நம்முடைய கரங்களை திடப்படுத்துகிறார்கள்.

நாம் சோர்ந்துபோயிருக்கும் வேளைகளில் கர்த்தருடைய வார்த்தைகளே நமக்கு ஆறுதலையும், தேறுதலையும் தருகிறது. கர்த்தருடைய ஊழியத்தை செய்யுமாறு அவை நம்மை உற்சாகப்படுத்துகிறது. நாம் சோர்ந்துபோகாமலும், அசதியாயிராமலும், கர்த்தருடைய ஊழியத்தை உற்சாகமாய்ச் செய்வதற்கு, அவருடைய வார்த்தைகள் நம்மைப் பெலப்படுத்துகிறது. நம்முடைய ஆத்துமாவை திடப்படுத்துகிறது.

ஆகாயும், சகரியாவும் கர்த்தருடைய நாமத்தினாலே தீர்க்கதரிசனம் சொன்னபோது, செருபாபேலும், யெசுவாவும் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்ட தொடங்குகிறார்கள். இவர்கள் இருவரும் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள் மத்தியிலே பிரதானமானவர்கள். செருபாபேல் என்பவன் யூதாதேசத்திற்கு அதிபதியாயிருக்கிறான். யெசுவா என்பவன் அவர்களுக்கு பிரதான ஆசாரியனாயிருக்கிறான்.

செயல்தியேலின் குமாரனாகிய செருபாபேலும் யோசதாக்கின் குமாரனாகிய யெசுவாவும் எழும்பி, எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்தைக் கட்டத்தொடங்குகிறார்கள்; அவர்களுக்குத் திடன்சொல்ல தேவனுடைய தீர்க்கதரிசிகளும் இருக்கிறார்கள் (எஸ்றா 5:2).

ஆகாய் தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தையினால் இஸ்ரவேல் ஜனங்களை உற்சாகப்படுத்துகிறார். கர்த்தர் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்களுடைய ஆவிகளை ஏவுகிறார். அப்போது அவர்கள் தங்கள் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் ஆலயத்திலே வேலை செய்கிறார்கள். ஆகாய் தீர்க்கதரிசி யூதருக்கு, இஸ்ரவேல் தேவனின் நாமத்திலே சொன்ன தீர்க்கதரிசன வார்த்தைகள் ஆகாய் 1-ஆவது அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

தரியுவுக்கு எழுதி அனுப்பின கடிதம் எஸ்றா 5:3-5

எஸ்றா 5:3. அக்காலத்திலே நதிக்கு இப்புறத்தில் இருக்கிற நாடுகளுக்கு அதிபதியாகிய தத்னாய் என்பவனும், சேத்தார் பொஸ்னாயும், அவர்கள் வகையராவும் அவர்களிடத்துக்கு வந்து, இந்த ஆலயத்தைக் கட்டவும், இந்த மதிலை எடுப்பிக்கவும் உங்களுக்குக் கட்டளையிட்டவன் யார் என்று அவர்களைக் கேட்டார்கள்.

எஸ்றா 5:4. அப்பொழுது அதற்கு ஏற்ற உத்தரவையும், இந்த மாளிகையைக் கட்டுகிற மனிதரின் நாமங்களையும் அவர்களுக்குச் சொன்னோம்.

எஸ்றா 5:5. ஆனாலும் இந்தச் செய்தி தரியுவினிடத்திற்குப்போய் எட்டுகிறவரைக்கும் இவர்கள் யூதருடைய மூப்பரின் வேலையைத் தடுக்காதபடிக்கு, அவர்களுடைய தேவனின் கண் அவர்கள், மேல் வைக்கப்பட்டிருந்தது; அப்பொழுது இதைக்குறித்து அவர்கள் சொன்ன மறுமொழியைக் கடிதத்தில் எழுதியனுப்பினார்கள்.

யூதாஜனத்தார் கர்த்தருடைய ஆலயத்தை மறுபடியும் கட்டத் தொடங்குகிறார்கள். அவர்கள் ஆரம்பித்த நல்ல வேலை மறுபடியுமாய் புதுப்பிக்கப்படுகிறது. கர்த்தருடைய ஆவியானவர் தம்முடைய ஜனத்தின் ஆவியை ஏவுகிறார். அப்போது கர்த்தருடைய ஜனம் அவருடைய ஆலயத்தை உற்சாகமாய்க் கட்டத்தொடங்குகிறார்கள்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள், கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டத்தொடங்கினபோது, பிசாசானவன் சத்துருக்களுடைய ஆவியை ஏவினான். அவர்கள் கர்த்தருடைய ஆலயக்கட்டுமான வேலைகளுக்கு விரோதமாக எழும்பி வந்தார்கள். சத்துருக்களோடு கூடயிருக்கும் பிசாசானவனைவிட, யூதஜனத்தாரோடு கூடயிருக்கும் கர்த்தர் பெரியவர். சத்துருக்களால் கர்த்தருடைய பிள்ளைகளை தடைபண்ண முடியவில்லை. தேவனுடைய ஆலயத்தைக் கட்டுகிற வேலை மறுபடியும் ஆரம்பமாயிற்று.

சமாரியரும், அவர்களோடுகூட அந்நிய தேசத்தாரும் ஒன்றாய்ச் சேர்ந்து, கர்த்தருடைய ஆலயக்கட்டுமான வேலைகளுக்கு விரோதமாக எழும்பினார்கள். அவர்கள் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டாதபடிக்கு நிறுத்திப்போட்டார்கள். இதுவரையிலும் ஆலயத்தைக்கட்டின யூதர்கள், இப்போது சோர்ந்துபோய், தங்களுடைய வீடுகளைக் கட்ட ஆரம்பிக்கிறார்கள். அவர்களில் அநேகர் தங்களுக்கு மச்சுப்பாவப்பட்ட வசதியான வீடுகளைக் கட்டுகிறார்கள். அப்போது சத்துருக்கள் எழும்பி, யூதர்கள் தங்களுக்கு வீடுகளைக் கட்டுவதை தடைபண்ண வரவில்லை.

"இந்த வீடு பாழாய்க் கிடக்கும் போது, நீங்கள் மச்சுப்பாவப்பட்ட உங்கள் வீடுகளில் குடியிருக்கும்படியான காலம் இதுவோ?" (ஆகா 1:4). சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள், எந்தவிதமான தடையுமில்லாமல், பிரச்சனைகளுமில்லாமல் தங்களுக்கு குடியிருக்கும் வீடுகளைக் கட்டுகிறார்கள்.

கர்த்தருடைய தீர்க்கதரிசிகள், கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு தீர்க்கதரிசனம் சொன்னபோது, சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள், எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்தை மறுபடியுமாகக் கட்டத்தொடங்குகிறார்கள். அவர்கள் தங்களுக்கு வீடுகளைக் கட்டியபோது, அவர்களுக்கு விரோதமாக வராத சத்துருக்கள், இப்போது அவர்கள் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டத் தொடங்கும்போது, அவர்களுக்கு விரோதமாக வருகிறார்கள். ஆலயக்கட்டுமான வேலைகளை தடைபண்ண வருகிறார்கள்.

அக்காலத்திலே நதிக்கு இப்புறத்தில் இருக்கிற நாடுகளுக்கு அதிபதியாகிய தத்னாய் என்பவனும், சேத்தார் பொஸ்னாயும், அவர்கள் வகையராவும் ஆலயத்தைக் கட்டுகிற யூதர்களிடத்துக்கு வருகிறார்கள். "இந்த ஆலயத்தைக் கட்டவும், இந்த மதிலை எடுப்பிக்கவும் உங்களுக்குக் கட்டளையிட்டவன் யார்" (எஸ்றா 5:3) என்று அவர்கள் யூதர்களைக் கேட்கிறார்கள்.

அர்தசஷ்டா ராஜா தேவாலய கட்டுமான வேலைகளைத் தற்காலிகமாகத் தடைபண்ணிவிட்டான். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ தேவாலயத்தைத் தொடர்ந்து கட்டுகிறார்கள். ஐபிராத்து நதிக்கு மேற்குப் பகுதியில் தத்னாய் என்பவன் தேசாதிபதியாக இருக்கிறான். அவன் எருசலேமுக்கு வந்து, இஸ்ரவேல் புத்திரர் கட்டுகிறவேலைகளைக் குறித்து விசாரிக்கிறான். இதற்குக் காரணமானவர்களின் பெயர்களையும் தத்னாய் தெரிந்து கொள்கிறான். (எஸ்றா 5:3-4).

செருபாபேல் யூதா தேசத்தின் தேசாதிபதியாக இருக்கிறான். தத்னாய் ஐபிராத்து நதியின் மேற்கு பகுதியிலுள்ள சீரிய தேசத்திற்கு அதிபதியாக இருக்கிறான். (எஸ்றா 5:6,14; எஸ்றா 6:6-13; எஸ்றா 8:36; ஆகாய் 1:1,14; ஆகாய் 2:2,21).

கர்த்தருடைய ஆலயத்திற்கு விரோதமாக வருகிற சத்துருக்களின் பெயர்கள் இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களில் தத்னாய் என்பவனும் சேத்தார்பொஸ்னா என்பவனும் பிரதானமானவர்கள்.

இவர்கள் இருவரும் கர்த்தருடைய ஆலயத்திற்கு சத்துருக்களாகயிருந்தாலும், அவர்களுடைய மனச்சாட்சி உண்மையைப் பேசுகிறது. சத்துருக்களிலும் ஒரு சிலர் நல்லவர்களாகயிருக்கிறார்கள். அவர்கள் உண்மைக்கு ஓரளவு மதிப்பு கொடுக்கிறார்கள்.

"துர்க்குணராகிய பொல்லாத மனுஷர் கையினின்று நாங்கள் விடுவிக்கப்படும்படிக்கும், எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்; விசுவாசம் எல்லாரிடத்திலுமில்லையே" *(2தெச 3:2).*

சபைக்கு விரோதமாக ஏராளமான சத்துருக்கள் எழும்பி வருகிறார்கள். அவர்களெல்லோருமே மோசமானவர்கள் என்று சொல்ல முடியாது. அவர்கள் எல்லோருமே பொய்யர்கள் என்றும் சொல்ல முடியாது. அவர்களிடத்தில்கூட ஓரளவு நல்ல சுபாவங்கள் காணப்படலாம். அவர்களிடத்தில் பரிபூரணமான உண்மையில்லாவிட்டாலும், ஓரளவு உண்மையிருப்பதற்கு வாய்ப்புள்ளது.

சத்துருக்கள் ஆலயத்தைக் கட்டுகிற யூதர்களிடத்தில் வந்து, "இந்த ஆலயத்தைக் கட்டவும், இந்த மதிலை எடுப்பிக்கவும் உங்களுக்குக் கட்டளையிட்டவன் யார்" என்று கேட்கிறார்கள். அப்பொழுது ஆலயத்தைக் கட்டுகிற யூதர்கள், அதற்கு ஏற்ற உத்தரவையும், இந்த மாளிகையைக் கட்டுகிற மனிதரின் நாமங்களையும் அவர்களுக்குச் சொல்லுகிறார்கள் *(எஸ்றா 5:4).*

ஆலயம் கட்டுவது கர்த்தருடைய ஊழியம். தேவனுடைய தெய்வீக பராமரிப்பானது கர்த்தருடைய ஊழியத்தை தொடர்ந்து நடைபெறச் செய்கிறது. யூதருடைய மூப்பரின் வேலையை தடுக்காதபடிக்கு அவர்களுடைய தேவனின் கண் அவர்கள்மேல் வைக்கப்பட்டிருக்கிறது *(எஸ்றா 5:5).*

யூதர்கள் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய சத்துருக்கள் ஆலயகட்டுமான வேலைகளை நிறுத்திப்போடக்கூடாது. யூதர்கள் ஆலயத்தைக் கட்டும்போது, சத்துருக்கள் அதுபற்றி அவர்களிடத்தில் விசாரிக்கிறார்கள். யூதர்களும் அவர்களுக்கேற்ற உத்தரவை சொல்லுகிறார்கள். சத்துருக்கள் உடனே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிற வேலையை நிறுத்திப்போட முயற்சி பண்ணவில்லை.

ஆலயத்தைக் கட்டுகிற யூதர்கள், அவர்களுடைய சத்துருக்களுக்கு சொன்ன செய்தி, தரியுவினிடத்திற்குப்போய் எட்டுகிறவரைக்கும் இவர்கள் யூதருடைய மூப்பரின் வேலையைத் தடுக்காதபடிக்கு, அவர்களுடைய தேவனின் கண் அவர்கள், மேல் வைக்கப்பட்டிருக்கிறது; அப்பொழுது இதைக்குறித்து யூதர்கள் சொன்ன மறுமொழியை சத்துருக்கள் கடிதத்தில் எழுதி தரியு ராஜாவுக்கு அனுப்புகிறார்கள் *(எஸ்றா 5:5).*

சத்துருக்கள் தங்களிடத்தில் பேசும்போது, யூதருடைய மூப்பர்கள், தங்கள் தேவனுடைய கண் தங்கள்மேல் வைக்கப்பட்டிருக்கிறதை அவர்கள் பார்க்கிறார்கள். யூதர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை கர்த்தருடைய கண்கள் நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறது. அவர்கள் கர்த்தருக்காக ஆலயத்தைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

கர்த்தர் தங்களோடு கூடயிருக்கிறார் என்பதை உணரும்போது, யூதர்கள் மிகவும் தைரியத்தோடே, கர்த்தருடைய ஆலயத்தை உற்சாகமாய்க் கட்டுகிறார்கள். கர்த்தர் நம் பக்கத்திலிருக்கும்போது நமக்கு விரோதமாக எந்த சத்துருவாலும் எழும்பி வரமுடியாது. கர்த்தருடைய கிருபையும், பெலமும், பாதுகாப்பும், பராமரிப்பும் தங்களோடு கூடயிருக்கிறது என்பதை யூதர்கள் புரிந்துகொள்கிறார்கள். கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிற வேலையை அவர்கள் நிறுத்தவில்லை.

யூதர்கள் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டும்போது, அவர்களுடைய சத்துருக்களால், ஆலயக்கட்டுமான வேலையை நிறுத்த முடியவில்லை. கர்த்தருடைய கண்கள் யூதருடைய மூப்பரின்மேல் வைக்கப்பட்டிருப்பதுபோலவே, அவர்களுக்கு விரோதமாக வந்திருக்கிற சத்துருக்களின் மேலும் வைக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் கர்த்தருக்கு மறைவாக சத்துருக்களால் எந்த இரகசிய யோசனையையும் பண்ண முடியவில்லை.

கர்த்தர் சத்துருக்களின் யோசனைகளையும் பார்க்கிறார். தம்முடைய பிள்ளைகள் தமக்காக ஆலயம் கட்டுகிற வேலையையும் பார்க்கிறார். தம்முடைய பிள்ளைகளுக்கு தேவையான உதவிகளை கர்த்தர் கொடுக்கிறார். தம்முடைய பிள்ளைகளுக்கு விரோதமாக சத்துருக்கள் யோசிக்கும்போதும், கிரியை செய்யும்போதும், கர்த்தர் அவர்களுடைய யோசனைகளையும் கிரியைகளையும் அதம்பண்ணிப்போடுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரின் சத்துருக்கள் கர்த்தருடைய ஆலயம் கட்டப் படுவதைத் தடைபண்ண முயற்சி பண்ணுகிறார்கள். ஆனால் யூதர்களோ ராஜாவிடமிருந்து முடிவான உத்தரவு வரும் வரையிலும் ஆலயத்தைக் கட்டுவது என தீர்மானம் பண்ணி, தொடர்ந்து கட்டிக் கொண்டிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களோடு இருக்கிறார். ஆகையினால் அவர்கள் கட்டுகிற வேலையை யாரும் தடுக்க முடியவில்லை.

கர்த்தர் தரியுவின் உள்ளத்திலும் பேசுகிறார். வரலாற்றில் இவன் முதலாம் தரியு என அழைக்கப்படுகிறான். மேதிய தேசத்திலும் ஒரு தரியு இருந்தான் (தானி 5). இவன் எஸ் 1:1 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் அகாஸ்வேரு ஆவான். இவன் எஸ்தருடைய கணவன். கோரேசின் தகப்பன்.

இந்த அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் முதலாம் தரியு கோரேசு, அர்தசஷ்டா ஆகியோரின் ஆணைகளைப் பரிசோதனை செய்து, தேவாலயம் கட்டுவதற்குக் கோரேசு ஏற்கெனவே இட்டிருந்த ஆணையை உறுதிபண்ணுகிறான்.

அர்தசஷ்டா ராஜா பெர்சியருடைய சிம்மாசனத்திற்கு முறையான வாரிசு அல்ல. இவன் தற்காலிகமாக வந்தவன். தன்னுடைய இடைப்பட்ட ஆட்சிக் காலத்தில் அர்தசஷ்டா தேவாலயத்தின் கட்டிட வேலைகளைத் தற்காலிகமாக நிறுத்திப் போட்டான். (எஸ்றா 6:1-18).

இவனுக்குப் பின்பு தரியு பெர்சியாவின் சிங்காசனத்தில் முறைப்படி அமர்கிறான். கர்த்தர் இவனுடைய உள்ளத்தில்பேசி, தேவாலயம் தொடர்ந்து கட்டப்படுவதற்கு அனுமதி கொடுக்கச் செய்கிறார். கர்த்தர் இந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் ஏற்கெனவே முன்னறிந்திருப்பதினால் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாக தேவாலயத்தைத் தொடர்ந்து கட்டுமாறு தம்முடைய பிள்ளைகளுக்கு அறிவிக்கிறார்.

யூதாஜனங்கள் கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டும்போது, அவர்களுக்கு விரோதமாக எழும்பி வந்த தத்னாயிம், சேத்தார்பொஸ்னாயும், அவர்களுடைய வகையறாக்களும், யூதர்களோடு அதிகமாக விவாதம்பண்ணவுமில்லை. அவர்கள் வாக்குவாதம் செய்யவுமில்லை. யூதர்கள் தங்களுக்கு சொன்ன மறுமொழியை, அவர்கள் அப்படியே தரியு ராஜாவுக்கு எழுதி அனுப்புகிறார்கள்.

கடிதத்தின் நகல்
எஸ்றா 5:6-17

எஸ்றா 5:6. நதிக்கு இப்புறத்திலிருக்கிற தத்னாய் என்னும் தேசாதிபதியும், சேத்தார் பொஸ்னாயும், நதிக்கு இப்புறத்திலிருக்கிற அப்பற்சாகியரான அவன் வகையராவும், ராஜாவாகிய தரியுவுக்கு எழுதியனுப்பின கடிதத்தின் நகலாவது:

எஸ்றா 5:7. ராஜாவாகிய தரியுவுக்குச் சகல சமாதானமும் உண்டாவதாக.

எஸ்றா 5:8. நாங்கள் யூதர் சீமையிலுள்ள மகா தேவனுடைய ஆலயத்துக்குப் போனோம்; அது பெருங்கற்களால் கட்டப்படுகிறது; மதில்களின்மேல் உத்திரங்கள் பாய்ச்சப்பட்டு, அந்த வேலைதுரிசாய் நடந்து, அவர்களுக்குக் கைகூடிவருகிறதென்பது ராஜாவுக்குத் தெரியலாவதாக.

எஸ்றா 5:9. அப்பொழுது நாங்கள் அவர்கள் மூப்பர்களை நோக்கி: இந்த ஆலயத்தைக் கட்டவும், இந்த மதிலை எடுப்பிக்கவும் உங்களுக்குக் கட்டளையிட்டது யார் என்று கேட்டோம்.

எஸ்றா 5:10. இதுவுமல்லாமல், அவர்களுக்குள்ளே தலைவரான மனிதர் இன்னாரென்று உமக்கு எழுதி அறியப்படுத்தும்படி, அவர்கள் நாமங்கள் என்னவென்றும் கேட்டோம்.

எஸ்றா 5:11. அவர்கள் எங்களுக்குப் பிரதியுத்தரமாக: நாங்கள் பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் தேவனாயிருக்கிறவருக்கு அடியாராயிருந்து, இஸ்ரவேலின் பெரிய ராஜா ஒருவன் அநேக வருஷங்களுக்கு முன்னே கட்டித்தீர்த்த இந்த ஆலயத்தை நாங்கள் மறுபடியும் கட்டுகிறோம்.

எஸ்றா 5:12. எங்கள் பிதாக்கள் பரலோகத்தின் தேவனுக்குக் கோபமூட்டினபடியினால், அவர் இவர்களைப் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் என்னும் கல்தேயன் கையில் ஒப்புக்கொடுத்தார்; அவன் இந்த ஆலயத்தை நிர்மூலமாக்கி, ஜனத்தைப் பாபிலோனுக்குக் கொண்டுபோனான்.

எஸ்றா 5:13. ஆனாலும் பாபிலோன் ராஜாவாகிய கோரேசின் முதலாம் வருஷத்திலே கோரேஸ் ராஜாவானவர் தேவனுடைய இந்த ஆலயத்தைக் கட்டும்படி கட்டளையிட்டார்.

எஸ்றா 5:14. நேபுகாத்நேச்சார் எருசலேமிலிருந்த தேவாலயத்திலிருந்து எடுத்து, பாபிலோன் கோவிலில் கொண்டுபோய் வைத்திருந்த தேவனுடைய ஆலயத்தின் பொன் வெள்ளிப் பணிமுட்டுகளையும் ராஜாவாகிய கோரேஸ் பாபிலோன் கோவிலிலிருந்து எடுத்து, அவர் தேசாதிபதியாக நியமித்த செஸ்பாத்சாரென்னும் நாமமுள்ளவனிடத்தில் அவைகளை ஒப்புவித்து,

எஸ்றா 5:15. அவனை நோக்கி: நீ இந்தப் பணிமுட்டுகளை எடுத்து, எருசலேமிலிருக்கும் தேவாலயத்துக்குக் கொண்டுபோ; தேவனுடைய ஆலயம் அதின் ஸ்தானத்திலே கட்டப்படவேண்டும் என்றார்.

எஸ்றா 5:16. அப்பொழுது அந்தச் செஸ்பாத்சார் வந்து, எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்தின் அஸ்திபாரத்தைப் போட்டான்; அந்நாள்முதல் இதுவரைக்கும் அது கட்டப்பட்டுவருகிறது; அது இன்னும் முடியவில்லை என்றார்கள்.

எஸ்றா 5:17. இப்பொழுதும் ராஜாவுக்குச் சித்தமாயிருந்தால், எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்தைக் கட்ட ராஜாவாகிய கோரேஸ் கட்டளையிட்டதுண்டோ என்று பாபிலோனில் இருக்கிற ராஜாவின் கஜானாவிலே ஆராய்ந்து பார்க்கவும், இந்த விஷயத்தில் ராஜாவினுடைய சித்தம் இன்னதென்று எங்களுக்கு எழுதியனுப்பவும் உத்தரவாகவேண்டும் என்று எழுதியனுப்பினார்கள்.

தத்தாய் என்பவன் நதிக்கு இப்புறத்திலிருக்கிற நாடுகளுக்கு அதிபதியாயிருக்கிறவன். இந்த நாடுகளிலிருக்கிறவர்கள் எல்லோரும் சமாரியர்கள். கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிற யூதர்களிடத்தில் சமாரியர் வந்து, அவர்களை நோக்கி, "இந்த ஆலயத்தைக் கட்டவும், இந்த மதிலை எடுப்பிக்கவும் உங்களுக்கு கட்டளையிட்டவன் யார்" (எஸ்றா 5:3) என்று கேட்கிறார்கள்.

நதிக்கு இப்புறத்திலிருக்கிற தத்னாய் என்னும் தேசாதிபதியும், சேத்தார் பொஸ்னாயும், நதிக்கு இப்புறத்திலிருக்கிற அப்பற்சாகியரான அவன் வகையராவும், ராஜாவாகிய தரியுவுக்கு எழுதியனுப்பின கடிதத்தின் நகலாவது (எஸ்றா 5:6).

முதலாவது கடிதம் சமாரியாவிலுள்ள ரெகூம் என்பவன் அனுப்பியது. இந்த இரண்டாவது கடிதத்தைச் சீரியாவின் தேசாதிபதியாகிய தத்னாய் அனுப்புகிறான். அர்தசஷ்டா ராஜா தேவாலயத்தைக் கட்டக் கூடாதென்று தற்காலிகமாகத் தடைசெய்திருந்தும், யூதர்கள் அதைக் கட்டுவதை விசாரிக்கப் போனவன் இந்தத் தத்னாய் என்பவனே. (எஸ்றா 5:3-5) ஐபிராத்து நதிக்கு அருகில் நடைபெறும் எல்லாச் சம்பவங்களையும் தரியு ராஜாவுக்குத் தெரியப்படுத்துவது தன்னுடைய கடமை என்று நினைத்து தத்னாய் தரியு ராஜாவுக்கு நிருபம் எழுதுகிறான்.

ராஜாவாகிய தரியுவுக்குச் சகல சமாதானமும் உண்டாவதாக. நாங்கள் யூதர் சீமையிலுள்ள மகா தேவனுடைய ஆலயத்துக்குப் போனோம்; அது பெருங்கற்களால் கட்டப்படுகிறது; மதில்களின்மேல் உத்திரங்கள் பாய்ச்சப்பட்டு, அந்த வேலைதுரிசாய் நடந்து, அவர்களுக்குக் கைகூடிவருகிறதென்பது ராஜாவுக்குத் தெரியலாவதாக (எஸ்றா 5:7,8).

"அப்பொழுது நாங்கள் அவர்கள் மூப்பர்களை நோக்கி: இந்த ஆலயத்தைக் கட்டவும், இந்த மதிலை எடுப்பிக்கவும் உங்களுக்குக் கட்டளையிட்டது யார் என்று கேட்டோம். இதுவுமல்லாமல், அவர்களுக்குள்ளே தலைவரான மனிதர் இன்னாரென்று உமக்கு எழுதி அறியப்படுத்தும்படி, அவர்கள் நாமங்கள் என்னவென்றும் கேட்டோம்" (எஸ்றா 5:9,10) என்று சமாரியர்கள் ராஜாவுக்கு எழுதின கடிதத்தின் நகலிலே எழுதியிருக்கிறார்கள்.

யூதருடைய மூப்பர்கள், சமாரியருக்கு பிரதியுத்தரம் சொல்லும்போது, "நாங்கள் பரலோகத்திற்கும் பூலோகத்திற்கும் தேவனாயிருக்கிறவருக்கு அடிமைகளாயிருக்கிறோம்" (எஸ்றா 5:11) என்று சொல்லுகிறார்கள். யூதருடைய மூப்பர்கள் சமாரியருக்கு மிகுந்த ஞானத்தோடும், கர்த்தரிடத்தில் பயபக்தியோடும் பிரதியுத்தரம் சொல்லுகிறார்கள்.

யூதர்கள் ஆராதிக்கிற தேவன், ஒரு குறிப்பிட்ட தேசத்திற்கு மாத்திரம் தேவனல்ல. அவர் ஒரு குறிப்பிட்ட எல்லை பகுதியில் மாத்திரம் தேவனாயிருக்கிறவரல்ல. அவர் பரலோகத்திற்கும் பூலோகத்திற்கும் தேவனாயிருக்கிறவர். யூதர்கள் கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டும்போது, ஜனங்கள் மத்தியிலே ஒரு பிரிவினை உண்டாக்கவேண்டும் என்பது அவர்களுடைய நோக்கமல்ல. அவர்கள் கர்த்தருடைய நாமமகிமைக்காகவே ஆலயத்தைக் கட்டுகிறார்கள்.

கர்த்தர் சர்வவல்லமையுள்ள தேவன். அவரே சர்வலோகத்திற்கும் அதிபதியாயிருக்கிறார். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சர்வசிருஷ்டிகராகவும் இருக்கிறார். சர்வசிருஷ்டியும் கர்த்தருக்கு கீழ்ப்படிந்திருக்கிறது. கர்த்தருடைய சித்தமில்லாமல், கர்த்தருடைய ஊழியத்தை யாராலும் தடைபண்ண முடியாது.

யூதாவின் மூப்பர் தாங்கள் கட்டுகிற ஆலயத்தைப்பற்றிச் சொல்லும்போது, "இஸ்ரவேலின் பெரிய ராஜா ஒருவன் அநேக வருஷங்களுக்கு முன்னே கட்டித்தீர்த்த இந்த ஆலயத்தை நாங்கள் மறுபடியும் கட்டுகிறோம்" (எஸ்றா 5:11) என்று சொல்லுகிறார்கள்.

யூதாவின் மூப்பர் தங்கள் தேவனாகிய கர்த்தரை மாத்திரமே உயர்த்துகிறார்கள். அதே வேளையில் அவர்கள் தங்களைப்பற்றிச் சொல்லும்போது, கர்த்தருக்கு முன்பாக தங்களை வெகுவாகத் தாழ்த்துகிறார்கள்.

எங்கள் பிதாக்கள் பரலோகத்தின் தேவனுக்குக் கோபமூட்டினபடியினால், அவர் இவர்களைப் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் என்னும் கல்தேயன் கையில் ஒப்புக்கொடுத்தார்; அவன் இந்த ஆலயத்தை நிர்மூலமாக்கி, ஜனத்தைப் பாபிலோனுக்குக் கொண்டுபோனான் (எஸ்றா 5:12) என்று யூதாவின் மூப்பர்கள் சொல்லுகிறார்கள்.

தங்களுடைய பாவத்தினிமித்தமாகவே கர்த்தர் தங்களைத் தண்டித்தார் என்றும், கர்த்தருடைய சர்வவல்லமை ஒருபோதும் மாறுவதில்லை என்றும் யூதாவின் மூப்பர்கள் சாட்சியாய்ச் சொல்லுகிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சர்வவல்லமையுள்ளவராகயிருப்பதினால், அவருக்கு விரோதமாக புறஜாதியாரின் தெய்வங்கள் யுத்தம்பண்ணவும் முடியாது. அந்த தெய்வங்களால் கர்த்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணி கர்த்தரை ஜெயிக்கவும் முடியாது.

தங்களுடைய பாவங்களினிமித்தமாக, தங்களுடைய தேவனுக்கு தாங்கள் கோபமூட்டியதாகவும், கர்த்தர் தம்முடைய கோபத்தினால் தங்களை கல்தேயருடைய கையிலே ஒப்புக்கொடுத்தார் என்றும், யூதாவின் மூப்பர் தாங்கள் அனுபவிக்கும் பாடுகளையும், வேதனைகளையும், அவமானங்களையும் எடுத்து சொல்லுகிறார்கள். தாங்கள் அனுபவிக்கும் துன்பங்களுக்கு, தங்களுடைய பாவங்களே காரணம் என்பதை யூதர்கள் தயங்காமல் அங்கீகரிக்கிறார்கள்.

தேவாலயத்தைக் கட்டும் யூதர்கள் தங்களுடைய கடந்த கால வரலாற்றை மிகவும் தாழ்மையாக எடுத்துக் கூறுகிறார்கள். (எஸ்றா 5:11) கர்த்தருக்குக் கோபம் மூட்டினபடியால், தாங்கள் அந்நிய தேசத்தாரின் சிறையிருப்புக்குப் போனதை அறிக்கை செய்கிறார்கள் (எஸ்றா 5:12) கோரேஸ் ராஜா தங்களைப் பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்பவும் அனுப்பியதையும், எருசலேமையும், தேவாலயத்தையும் கட்ட அனுமதி கொடுத்ததையும் விவரிக்கிறார்கள். (எஸ்றா 5:13-17).

யூதாவின் மூப்பர் இப்போது எருசலேமிலே கர்த்தருடைய ஆலயத்தை திரும்பவும் கட்டுகிறார்கள். சமாரியர்கள் யூதாவின் மூப்பரிடத்திலே வந்து, "இந்த ஆலயத்தைக் கட்டவும் இந்த மதிலை எடுப்பிக்கவும் உங்களுக்கு கட்டளையிட்டது யார்" என்று கேட்கிறார்கள்.

சமாரியரின் கேள்விக்கு யூதாவின் மூப்பர்கள் பதில் சொல்லும்போது, "பாபிலோன் ராஜாவாகிய கோரேசின் முதலாம் வருஷத்திலே கோரேஸ் ராஜாவானவர் தேவனுடைய இந்த ஆலயத்தைக் கட்டும்படி கட்டளையிட்டார்" (எஸ்றா 5:13) என்று பிரதியுத்தரம் சொல்லுகிறார்கள்.

யூதாவின் மூப்பர்கள் யதார்த்தமாய்ப் பேசுகிறார்கள். அவர்கள் தங்களிடத்தில் கேள்வி கேட்கும் சமாரியரைப்பார்த்து, "இந்தக் கேள்வியை எங்களிடத்தில் கேட்பதற்கு உங்களுக்கு கட்டளையிட்டது யார்" என்று தேவையில்லாத கேள்விகளைக் கேட்கவில்லை. யூதர்கள் தங்களுடைய வார்த்தைகளினால் குழப்பத்தை ஏற்படுத்தவில்லை. சத்துருக்களுக்கு கோபத்தையும் உண்டுபண்ணவில்லை.

யூதாவின் மூப்பர்கள் சமாரியரிடத்தில் பேசும்போது, அவர்களுடைய விக்கிரகங்களைப்பற்றியோ, அவர்களுடைய விக்கிரகாராதனையைப்பற்றியோ ஒன்றும் சொல்லவில்லை. அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரை உயர்த்துகிறார்கள். அவர்களுடைய இருதயத்தில் மனத்தாழ்மை இருக்கிறது. யூதாவின் மூப்பர்களைப்போல விசுவாசிகளாகிய நாமும் மெதுவான பிரதியுத்தரங்களை சொல்ல கற்றுக்கொள்ளவேண்டும்.

"கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வவ்க்கத் தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்" (1பேது 3:15).

சத்துருக்கள்நம்மிடத்தில் கேள்விகளைக் கேட்கும் பொழுது, அல்லது அவர்கள் நம்மிடத்தில் விவாதம்பண்ணும்போது, நாம் அவர்களுடைய கேள்விகளையும், அவர்களுடைய விவாத வார்த்தைகளையும் சரியாகப் புரிந்துகொள்ளவேண்டும். அதன்பின்பு கர்த்தருக்காக நாம் செய்யும் ஊழியங்களையும், அந்த ஊழியங்களை நாம் ஏன் செய்கிறோம் என்னும் காரணங்களையும் நிதானமாக எடுத்துச் சொல்லவேண்டும்.

யூதாவின் மூப்பர்கள் தங்களிடத்தில் கேள்வி கேட்கிற சமாரியரிடத்தில் மெதுவான பிரதியுத்தரம் சொல்லுகிறார்கள். அவர்கள் சமாரியருக்கு தாங்கள் செய்கிற ஆலயக்கட்டுமான வேலைகளைப்பற்றி இன்னும் விரிவாக எடுத்து சொல்லுகிறார்கள்.

"நேபுகாத்நேச்சார் எருசலேமிலிருந்த தேவாலயத்திலிருந்து எடுத்து, பாபிலோன் கோவிலில் கொண்டுபோய் வைத்திருந்த தேவனுடைய ஆலயத்தின் பொன் வெள்ளிப் பணிமுட்டுகளையும் ராஜாவாகிய கோரேஸ் பாபிலோன் கோவிலிலிருந்து எடுத்து, அவர் தேசாதிபதியாக நியமித்த செஸ்பாத்சாரென்னும் நாமமுள்ளவனிடத்தில் அவைகளை ஒப்புவித்து, அவனை நோக்கி: நீ இந்தப் பணிமுட்டுகளை எடுத்து, எருசலேமிலிருக்கும் தேவாலயத்துக்குக் கொண்டுபோ; தேவனுடைய ஆலயம் அதின் ஸ்தானத்திலே கட்டப்படவேண்டும் என்றார்" (எஸ்றா 5:14,15) என்று யூதாவின் மூப்பர் சமாரியருக்கு பிரதியுத்தரம் சொல்லுகிறார்கள்.

சமாரியர்கள் யூதாவின் மூப்பரிடத்தில் வந்து ஆலயம் கட்டுவது பற்றி விசாரிக்கிறார்கள். மூப்பர்கள் அவர்களுக்கு பிரதியுத்தரமாக, "அந்தச் செஸ்பாத்சார் வந்து, எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்தின் அஸ்திபாரத்தைப் போட்டான்; அந்நாள்முதல் இதுவரைக்கும் அது கட்டப்பட்டுவருகிறது; அது இன்னும் முடியவில்லை" (எஸ்றா 5:16) என்று சொல்லுகிறார்கள்.

யூதாவின் மூப்பர்கள் தங்களிடத்தில் சொல்லுகிற பிரதியுத்தரத்தின் யதார்த்ததை சமாரியர்கள் சரியாகப் புரிந்துகொள்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய ஆலயத்தைப்பற்றிச் சொல்லும்போது, "மகாதேவனுடைய ஆலயம்" (எஸ்றா 5:8) என்று சொல்லுகிறார்கள்.

சத்துருக்கள் சமாரியராயிருந்தாலும், அவர்களுக்கு பல தெய்வங்கள் இருந்தாலும், அவர்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை, "மகாதேவன்" என்று அங்கீகரிக்கிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே, கர்த்தாதி கர்த்தாவாகவும், ராஜாதி ராஜாவாகவும் இருக்கிறார் என்பதை சமாரியரும் அறிந்திருக்கிறார்கள்.

சமாரியர்கள் தரியு ராஜாவுக்கு கடிதத்தை எழுதும்போது, எருசலேமிலே தாங்கள் பார்த்த, தாங்கள் விசாரித்து அறிந்த உண்மையான நிலவரத்தை எழுதுகிறார்கள். இதற்கு முன்பு ராஜாவுக்கு பிரயாது எழுதியவர்கள், உண்மைக்கு புறம்பாக எழுதினார்கள். யூதர்கள் ஆலயத்தைக் கட்டினபோது, அவர்கள் எருசலேம் பட்டணத்தைக் கட்டுவதாகச் சொன்னார்கள். யூதர்கள் வரிகட்டமாட்டார்கள் என்றும், பெர்சியா தேசத்திற்கு விரோதமாகக் கலகம்பண்ணுவார்கள் என்றும் உண்மைக்கு புறம்பான செய்திகளை எழுதினார்கள்.

ஆனால் இப்போதோ, சமாரியர்கள் எருசலேமில் நடைபெறுகிற உண்மை நிலைமையை எழுதுகிறார்கள். அவர்கள் ராஜாவுக்கு எழுதின கடிதத்தின் நகலில் "இப்பொழுதும் ராஜாவுக்குச் சித்தமாயிருந்தால், எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்தைக் கட்ட ராஜாவாகிய கோரேஸ் கட்டளையிட்டதுண்டோ என்று பாபிலோனில் இருக்கிற ராஜாவின் கஜானாவிலே ஆராய்ந்து பார்க்கவும், இந்த விஷயத்தில் ராஜாவினுடைய சித்தம் இன்னதென்று எங்களுக்கு எழுதியனுப்பவும் உத்தரவாகவேண்டும்" (எஸ்றா 5:17) என்று எழுதியனுப்புகிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளை சாத்தான் வஞ்சிக்கவில்லையென்றால், அவர்களுக்கு உபத்திரவங்கள் வரப்போவதில்லை. சாத்தான் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு விரோதமாக மாய்மாலம்பண்ணி, வலைகளையும் கண்ணிகளையும் வஞ்சனையாக விரிக்கிறான். அந்த வலையிலே கர்த்தருடைய ஜனம் அறியாமல் விழுந்துவிடுகிறார்கள்.

விசுவாசிகளாகிய நாம் சத்துருவின் பொல்லாத காரியங்களிலிருந்தும், அவனுடைய அந்தகார கிரியைகளிலிருந்தும், அவனுடைய சதிஆலோசனைகளிலிருந்தும் விலகி பாதுகாப்பாக இருக்கவேண்டுமென்றால், நமக்கு கர்த்தருடைய பாதுகாப்பு வேண்டும். கர்த்தருடைய கண்கள் நம்மேல் நோக்கமாயிருக்கவேண்டுமென்று நாம் கருத்தோடு ஜெபம்பண்ணவேண்டும்.

யூதாஜனத்தார் கர்த்தருக்காக ஆலயத்தைக் கட்டும்போது, சமாரியர்கள் அதுபற்றிய உண்மையான வார்த்தைகளை தரியு ராஜாவுக்கு எழுதியனுப்பினார்கள். அதுபோலவே கர்த்தரைப்பற்றியும், அவருடைய சத்தியத்தைப்பற்றியும் நாம் உண்மையான வார்த்தைகளைச் சொல்லவேண்டும். நாமும் உண்மையான வார்த்தைகளையே கேள்விப்படவேண்டும். சத்தியம் இருக்குமிடத்தில் குழப்பம் இருக்காது. அங்கே வீண் பிரச்சனைகள் ஏற்படாது. சத்தியம் ஜெயிக்கும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சத்தியபரராக இருக்கிறார்.

BELLWETHER INTERNATIONAL

எஸ்றா - விரிவுரை
EZRA - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

செருபாபேல் எத்தனை வருஷமாக ஆலயத்தைக் கட்டினான் என்று சரியாகத் தெரியவில்லை. சுமார் 18 அல்லது 20 வருஷங்களாக இவன் ஆலயத்தைத் திரும்பக் கட்டியிருக்க வேண்டும். இஸ்ரவேல் புத்திரர் பாபிலோனிலிருந்து திரும்பி வந்த இரண்டாம் வருஷத்தில் தேவாலயத்தைக் கட்ட ஆரம்பிக்கிறார்கள். (எஸ்றா 3:8-13) தரியு ஹஸ்டாஸ்பிஸ் ராஜாவின் ஆறாம் வருஷ ராஜ்யபாரத்தில் தேவாலயம் கட்டி முடிக்கப்படுகிறது (எஸ்றா 6:15).

சாலொமோன் கர்த்தருடைய தேவாலயத்தை ஏழரை வருஷங்களில் கட்டி முடித்தார். செருபாபேலுக்கு இதைக் கட்டி முடிக்க 20 வருஷமாயிற்று. ஏரோது இந்த ஆலயத்தை 40 வருஷங்களில் கட்டினான். (யோவான் 2:20). சாலொமோன் தேவாலயத்தைக் கட்டியபோது, அங்கு 153,000 பேர் பணிபுரிந்தார்கள். செருபாபேலின் காலத்திலும், ஏரோதுவின் காலத்திலும் இத்தனை ஜனங்கள் தேவாலயத்தைக் கட்டவில்லை. ஆகையினால், தேவாலயத்தைக் கட்டுவதற்கு இவர்களுக்கு அநேக வருஷங்களாயிற்று.

6 அதிகாரம்

சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்கு திரும்பி வந்த யூதர்கள், கர்த்தருடைய ஆலயத்தை திரும்ப கட்டியெழுப்புவதற்கு, பயபக்தியோடு அஸ்திபாரம் போடுகிறார்கள் (எஸ்றா 3-ஆவது அதிகாரம்). கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிற வேலைகள் மெதுவாக நடைபெறுகிறது. ஆலயத்தைக் கட்டுகிறவர்களுக்கு எதிர்ப்புக்களும், தடைகளும் உண்டாகிறது (எஸ்றா 4,5- ஆகிய அதிகாரங்கள்).

கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிற வேலைகளின் ஆரம்பம் அற்பமானதாயிருந்தாலும், அதன் முடிவு மகிமையானதாயிருக்கிறது. எருசலேமிலே கர்த்தருடைய ஆலயத்தை திரும்பக் கட்டுகிறவர்கள் மிகுந்த சந்தோஷத்தோடு, கர்த்தரைத் துதித்து அதற்கு தலைக்கல்லை வைத்து, ஆலயத்தின் கட்டுமான வேலைகளை நிறைவுசெய்கிறார்கள்.

கர்த்தருடைய கிரியைகள் எப்போதுமே பரிபூரணமாயிருக்கும். சில சமயங்களில் கர்த்தருடைய கிரியை மெதுவாக நடைபெறலாம். ஆனாலும் கர்த்தருடைய கிரியை நிச்சயமாக நடைபெறும். கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக, தமக்கு ஏற்ற வேளையிலே, தம்முடைய கிரியைகளை பரிபூரணமாக செய்து முடிப்பார்.

கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு ஆரம்பத்தில் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசு கொடுத்த கட்டளை இந்த வசனப்பகுதியில் மறுபடியுமாகச் சொல்லப்பட்டிருக்கிறது (எஸ்றா 6:1-5).

கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டி முடிக்குமாறு ராஜாவாகிய தரியு புதிய ஆணையை பிறப்பிக்கிறான் (எஸ்றா 6:6-12). கர்த்தருடைய ஆலயம் கட்டி முடிக்கப்படுகிறது (எஸ்றா 6:13-15).

கட்டி முடிக்கப்பட்ட ஆலயத்தை கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணுகிறார்கள் (எஸ்றா 6:16-18). சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள் பஸ்காவை ஆசரிக்கிறார்கள். புளிப்பில்லாத அப்பப்பண்டிகையை ஏழுநாளாய் சந்தோஷத்தோடு ஆசரிக்கிறார்கள் (எஸ்றா 6:19-22).

கோரேசு பிறப்பித்த உத்தரவு எஸ்றா 6:1-5

எஸ்றா 6:1. அப்பொழுது ராஜாவாகிய தரியு இட்ட கட்டளையின்படியே பாபிலோன் கஜானாவிலுள்ள தஸ்திர அறையைச் சோதித்தார்கள்.

எஸ்றா 6:2. மேதிய சீமையிலிருக்கிற அக்மேதா பட்டணத்தின் அரமனையிலே ஒரு சுருள் அகப்பட்டது; அதிலே எழுதியிருந்த விபரமாவது:

எஸ்றா 6:3. ராஜாவாகிய கோரேசின் முதலாம் வருஷத்தில், கோரேஸ் ராஜா எருசலேமிலிருந்த தேவாலயத்தைக் குறித்துப் பிறப்பித்த உத்தரவு என்னவென்றால்: தேவாலயமானது பலிசெலுத்தப்பட்டுவந்த ஸ்தானத்திலே கட்டப்படக்கடவது; அதின் அஸ்திபாரங்கள் பலமாயிருப்பதாக; அது அறுபது முழ உயரமும், அறுபது முழ அகலமுமாயிருக்கவேண்டும்.

எஸ்றா 6:4. அது மூன்று வரிசை பெருங்கற்களாலும், ஒரு மச்சுவரிசை புது உத்திரங்களாலும் கட்டப்படக்கடவது; அதற்குச் செல்லும் செலவு ராஜாவின் அரமனையிலிருந்து கொடுக்கப்படுவதாக.

எஸ்றா 6:5. அன்றியும் நேபுகாத்நேச்சார் எருசலேமிலிருந்த ஆலயத்திலிருந்து எடுத்து, பாபிலோனுக்குக் கொண்டு வந்த தேவனுடைய ஆலயத்துக்கடுத்த பொன் வெள்ளிப் பணிமுட்டுகள் எருசலேமிலுள்ள தேவாலயமாகிய தங்கள் ஸ்தானத்திற்குப் போய்ச் சேரும்படிக்குத் திரும்பக் கொடுக்கப்படக்கடவது; அவைகளை தேவனுடைய ஆலயத்துக்குக் கொண்டுபோகக்கடவர்கள் என்று எழுதியிருந்தது.

பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசு, எருசலேமிலே கர்த்தருடைய ஆலயத்தைத் திரும்பக்கட்டுவதற்கு உத்தரவு பிறப்பித்திருந்தான். அவனுடைய உத்தரவைப்பற்றி இந்த வசனப்பகுதியில் மறுபடியும் சொல்லப்பட்டிருக்கிறது.

பெர்சியா தேசத்து அரமனையிலே, ராஜாவின் ஆவணங்களை பாதுகாப்பாக வைத்திருக்கிறார்கள். கோரேசு ராஜா எருசலேமில் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு பிறப்பித்த உத்தரவின் நகலை, தரியு ராஜாவின் கட்டளைப் பிரகாரம் தேடிப்பார்க்கிறார்கள்.

அப்பொழுது ராஜாவாகிய தரியு இட்ட கட்டளையின்படியே பாபிலோன் கஜானாவிலுள்ள தஸ்திர அறையைச் சோதிக்கிறார்கள். மேதிய சீமையிலிருக்கிற அக்மேதா பட்டணத்தின் அரமனையிலே ஒரு சுருள் அகப்படுகிறது (எஸ்றா 6:1,2).

தத்னாயின் பிராது கடிதத்தைத் தரியு ராஜா வாங்கி, பாபிலோன் கஜானாவிலுள்ள தஸ்திர அறையைச் சோதித்துப் பார்க்கிறான். அக்மேதா பட்டணத்தின் அரமனையிலே ஒரு சுருள் அகப்பட்டது. கோரேசு ராஜாவின் ஆணையும், தேவாலயத்தின் அளவும், அந்தச் சுருளில் குறிப்பிடப்பட்டிருக்கிறது (எஸ்றா 6:1-5).

கோரேசு ராஜாவின் ஆணைப் பிரகாரமாக எருசலேமில் தேவாலயம் கட்டும் பணி தடையில்லாமல் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று தரியு தீர்மானம் பண்ணுகிறான். (எஸ்றா 6:6-7).

தத்னாயும், ஐபிராத்து நதிக்கு மேற்குப் பகுதியிலுள்ள மற்றவர்களும் ராஜாவின் திரவியத்தினாலே யூதருக்கு உதவி புரிய வேண்டுமென்றும் கட்டளையிடுகிறான். அவர்கள் பலி செலுத்துவதற்குத் தேவையான மிருக ஜீவன்களையும் தாழ்ச்சியில்லாமல் கொடுத்து உதவி புரியுமாறு கட்டளையிடுகிறான். மேலும் தேவாலயம் கட்டும் வேலைக்கு யாராவது எதிர்த்து நின்றால், அவன் அழிக்கப்படுவான் என்றும் தரியு உத்தரவிடுகிறான் (எஸ்றா 6:8-12).

கோரேசு பிறப்பித்த உத்தரவின் நகல் பாபிலோன் கஜானாவிலுள்ள தஸ்திர அறையில் கிடக்கவில்லை. ஆனால் அந்த உத்தரவின் நகல் மேதிய சீமையிலிருக்கிற அக்மேதா பட்டணத்தின் அரமனையிலே கிடைக்கிறது. கோரேசு பிறப்பித்த உத்தரவு ஒரு சுருளிலே எழுதப்பட்டு மேதிய சீமையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கிறது.

கோரேசு ராஜா பிறப்பித்த உத்தரவின் நகலில் எழுதப்பட்டிருக்கிற விவரங்களை, எஸ்றா இந்த வசனப்பகுதியில் எடுத்துச் சொல்லுகிறான். அந்த சுருளில் எழுதியிருந்த விவரமாவது:

"ராஜாவாகிய கோரேசின் முதலாம் வருஷத்தில், கோரேஸ் ராஜா எருசலேமிலிருந்த தேவாலயத்தைக் குறித்துப் பிறப்பித்த உத்தரவு என்னவென்றால்: தேவாலயமானது பலிசெலுத்தப்பட்டுவந்த ஸ்தானத்திலே கட்டப்படக்கடவது; அதின் அஸ்திபாரங்கள் பலமாயிருப்பதாக; அது அறுபது முழ உயரமும், அறுபது முழ அகலமுமாயிருக்கவேண்டும்" (எஸ்றா 6:3) என்றும்,

"அது மூன்று வரிசை பெருங்கற்களாலும், ஒரு மச்சுவரிசை புது உத்திரங்களாலும் கட்டப்படக்கடவது; அதற்குச் செல்லும் செலவு ராஜாவின் அரமனையிலிருந்து கொடுக்கப்படுவதாக" (எஸ்றா 6:4) என்றும்,

"அன்றியும் நேபுகாத்நேச்சார் எருசலேமிலிருந்த ஆலயத்திலிருந்து எடுத்து, பாபிலோனுக்குக் கொண்டு வந்த தேவனுடைய ஆலயத்துக்கடுத்த பொன் வெள்ளிப் பணிமுட்டுகள் எருசலேமிலுள்ள தேவாலயமாகிய தங்கள் ஸ்தானத்திற்குப் போய்ச் சேரும்படிக்குத் திரும்பக் கொடுக்கப்படக்கடவது; அவைகளை தேவனுடைய ஆலயத்துக்குக் கொண்டுபோகக்கடவர்கள்" (எஸ்றா 6:5) என்றும் எழுதியிருக்கிறது.

தேவாலயம் எருசலேமிலே கட்டப்படவேண்டும். பலிசெலுத்தப்பட்டு வந்த ஸ்தானத்திலே ஆலயம் கட்டப்படவேண்டும். கோரேசு ராஜா அந்த ஆலயத்தின் அளவுகளையும் சொல்லியிருக்கிறான்.

தேவனுடைய ஆலயம் அறுபது முழ உயரமும், அறுபது முழ அகலமுமாயிருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆலயத்தின் உயரம் 90 அடி என்று இங்கு கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இது 45 அடி உயரம் என்று இருக்க வேண்டும். (2நாளா 3:3-4).

கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு பணம் தேவைப்படும். அதற்கு செல்லும் செலவு ராஜாவின் அரமனையிலிருந்து கொடுக்கப்படவேண்டும் என்று கோரேசு உத்தரவு பிறப்பித்திருக்கிறான். கோரேசு பிறப்பித்த உத்தரவின் பிரகாரம், சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்கு திரும்பிப்போன யூதர்களுக்கு, ஆலயத்தைக் கட்டுவதற்கான செலவு தொகை கொடுக்கப்படவில்லை.

கோரேசு கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவது சம்பந்தமாக உத்தரவு பிறப்பித்த பின்பு, பெர்சியா தேசத்திலே ஆட்சி மாற்றமுண்டாயிற்று. அந்த தேசத்தை கோரேசுக்கு பின்பு ஆட்சி செய்தவர்கள், கோரேசு பிறப்பித்த உத்தரவின் பிரகாரம், கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு செல்லும் செலவைக் கொடுக்கவில்லை.

நேபுகாத்நேச்சார் எருசலேமுக்கு வந்து, கர்த்தருடைய ஆலயத்திலுள்ள பரிசுத்த பணிமுட்டுகளையெல்லாம் பாபிலோனுக்கு கொண்டு வந்தான். அந்தப் பணிமுட்டுகளை எருசலேமில் கட்டப்படும் தேவாலயத்திற்கு திரும்பக் கொடுக்கவேண்டும் என்றும் கோரேசு உத்தரவு பிறப்பித்திருக்கிறான்.

தரியு பிறப்பித்த உத்தரவு எஸ்றா 6:6-12

எஸ்றா 6:6. அப்பொழுது தரியுராஜா எழுதியனுப்பினதாவது: இப்பொழுதும், நதிக்கு அப்புறத்திலிருக்கிற தேசாபதியாகிய தத்னாயும் சேத்தார்பொஸ்னாயுமாகிய நீங்களும், நதிக்கு அப்புறத்திலிருக்கிற அப்பற்சாகியரான உங்கள் வகையரா யாவரும் அவ்விடத்தைவிட்டு விலகியிருங்கள்.

எஸ்றா 6:7. தேவனுடைய ஆலயத்தின் வேலையை அவர்கள் செய்யட்டும், யூதருடைய அதிபதியும், யூதரின் மூப்பரும், தேவனுடைய ஆலயத்தை அதின் ஸ்தானத்திலே கட்டக்கடவர்கள்.

எஸ்றா 6:8. தேவனுடைய ஆலயத்தை யூதரின் மூப்பர் கட்டும் விஷயத்தில் நீங்கள் அவர்களுக்குச் செய்யத்தக்கதாய், நம்மால் உண்டான கட்டளை என்னவென்றால், அந்த மனிதருக்குத் தடை உண்டாகாதபடிக்கு, நதிக்கு அப்புறத்தில் வாங்கப்படும் பகுதியாகிய ராஜாவின் திரவியத்திலே அவர்களுக்குத் தாமதமில்லாமல் செல்லும் செல்வு கொடுக்கவேண்டும்.

எஸ்றா 6:9. பரலோகத்தின் தேவனுக்குச் சர்வாங்க தகனபலி களையிடத் தேவையான இளங்காளைகள், ஆட்டுக்கடாக்கள், ஆட்டுக்குட்டிகள், கோதுமை, உப்பு, திராட்சரசம், எண்ணெய் முதலானவை தினந்தினம் அவர்கள் சொற்படி தாழ்ச்சியில்லாமல் கொடுக்கப்படக்கடவது.

எஸ்றா 6:10. எருசலேமிலிருக்கிற ஆசாரியர்கள் பரலோகத்தின் தேவனுக்குச் சுகந்த வாசனையான பலிகளைச் செலுத்தி, ராஜாவுக்கும் அவர் குமாரருக்கும் தீர்க்காயுசுண்டாக மன்றாடும்படிக்கு இப்படிச் செய்யப்படுவதாக.

எஸ்றா 6:11. பின்னும் நம்மால் பிறக்கும் கட்டளை என்னவென்றால்: எந்த மனிதனாவது இந்தக் கட்டளையை மாற்றினால், அவன் வீட்டிலிருந்து ஒரு உத்திரம் பிடுங்கி நாட்டப்பட்டு, அவன் அதில் தூக்கிப்போடப்படவும், அதினிமித்தமாக அவனுடைய வீடு குப்பைமேடாக்கப்படவுங்கடவது.

எஸ்றா 6:12. ஆகையால் இதை மாற்றவும், எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்தைக் கெடுக்கவும், தங்கள் கையை நீட்டப்போகிற சகல ராஜாக்களையும் சகல ஜனங்களையும் தம்முடைய நாமத்தை அங்கே விளங்கப்பண்ணின தேவன் நிர்மூலமாக்கக்கடவர்; தரியுவாகிய நாம் இந்தக் கட்டளையைக் கொடுத்தோம்; இதின்படி ஜாக்கிரதையாய்ச் செய்யப்படக்கடவது என்று எழுதியனுப்பினான்.

கர்த்தருடைய ஆலயத்தை எருசலேமிலே திரும்பக் கட்டுவது சம்பந்தமாக, கோரேசு ராஜா பிறப்பித்த உத்தரவை தரியு ராஜா அங்கீகரிக்கிறான். கோரேசு ராஜா பிறப்பித்த உத்தரவு மிகவும் தெளிவாக இருக்கிறது. அதில் குழப்பம் எதுவுமில்லை. கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு தேவையான எல்லா உத்தரவுகளையும் கோரேசு பிறப்பித்திருக்கிறான்.

சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்கு திரும்பிப்போன யூதர்கள் கர்த்தருடைய ஆலயத்தை மறுபடியும் கட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு சத்துருக்கள் மூலமாக பிரச்சனைகளும் தடைகளும் உண்டாயிற்று. யூதர்கள் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டும்போது, அவர்களை யாரும் தடைபண்ணக்கூடாது என்று தரியு ராஜா உத்தரவு பிறப்பிக்கிறான்.

அப்பொழுது தரியுராஜா எழுதியனுப்பினதாவது: "இப்பொழுதும், நதிக்கு அப்புறத்திலிருக்கிற தேசாபதியாகிய தத்னாயும் சேத்தார்பொஸ்னாயுமாகிய நீங்களும், நதிக்கு அப்புறத்திலிருக்கிற அப்பற்சாகியரான உங்கள் வகையரா யாவரும் அவ்விடத்தைவிட்டு விலகியிருங்கள்" (எஸ்றா 6:6) என்றும்,

"தேவனுடைய ஆலயத்தின் வேலையை அவர்கள் செய்யட்டும், யூதருடைய அதிபதியும், யூதரின் மூப்பரும், தேவனுடைய ஆலயத்தை அதின் ஸ்தானத்திலே கட்டக்கடவர்கள்" (எஸ்றா 6:7) என்றும், தன்னுடைய உத்தரவை தரியு ராஜா எழுதியனுப்புகிறான்.

தரியு ராஜாவுக்கு யூதர்களுடைய சத்துருக்களின் உள்நோக்கம் தெரிந்திருக்கிறது. அவர்கள் கர்த்தருடைய ஆலயம் கட்டப்படுவதை தடுக்க வேண்டுமென்று நோக்கமாயிருக்கிறார்கள். ஆகையினால் நதிக்கு அப்புறத்திலிருக்கிற வகையரா யாரும், கர்த்தருடைய ஆலயம் கட்டப்படும் ஸ்தலத்திலிருந்து விலகியிருக்கவேண்டும் என்று தரியு ராஜா சொல்லுகிறான்.

கர்த்தருடைய ஆலயத்தை கட்டுவதற்கு செல்லும் செலவு ராஜாவின் அரமனையிலிருந்து கொடுக்கப்பட வேண்டுமென்று கோரேசு ராஜா உத்தரவு பிறப்பித்திருந்தான் (எஸ்றா 6:4). ஆனால் அந்த உத்தரவின் பிரகாரமாக, கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு இதுவரையிலும் செலவு தொகை கொடுக்கப்படவில்லை. இப்போதோ தரியு ராஜா ஆலயம் கட்டுவதற்கான செல்லும் செலவை ராஜாவின் திரவியத்திலிருந்து, யூதர்களுக்கு தாமதமில்லாமல் கொடுக்கவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கிறான்.

தரியு ராஜா தான் எழுதி அனுப்பின நிருபத்தில், "தேவனுடைய ஆலயத்தை யூதரின் மூப்பர் கட்டும் விஷயத்தில் நீங்கள் அவர்களுக்குச் செய்யத்தக்கதாய், நம்மால் உண்டான கட்டளை என்னவென்றால், அந்த மனிதருக்குத் தடை உண்டாகாதபடிக்கு, நதிக்கு அப்புறத்தில் வாங்கப்படும் பகுதியாகிய ராஜாவின் திரவியத்திலே அவர்களுக்குத் தாமதமில்லாமல் செல்லும் செலவு கொடுக்கவேண்டும்" (எஸ்றா 6:8) என்றும் எழுதுகிறான்.

கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டினால் மாத்திரம் போதாது. அங்கே கர்த்தருக்கு பலிகளையும் செலுத்தவேண்டும். அன்றாட பலிகளை செலுத்துவதற்குத் தேவையான ஆடுமாடுகளையும், கோதுமை, எண்ணெய் முதலானவற்றையும் கொடுக்குமாறு தரியு ராஜா கட்டளையிடுகிறான்.

தரியு ராஜா, தான் எழுதி அனுப்பின நிருபத்தில், "பரலோகத்தின் தேவனுக்குச் சர்வாங்க தகனபலிகளையிடத் தேவையான இளங்காளைகள், ஆட்டுக்கடாக்கள், ஆட்டுக்குட்டிகள், கோதுமை, உப்பு, திராட்சரசம், எண்ணெய் முதலானவை தினந்தினம் அவர்கள் சொற்படி தாழ்ச்சியில்லாமல் கொடுக்கப்படக்கடவது" (எஸ்றா 6:9) என்றும் எழுதியிருக்கிறான்.

தரியு ராஜா இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைக் கனம்பண்ணுகிறான். எருசலேமிலே யூதர்கள் கட்டும் ஆலயத்தைப்பற்றிச் சொல்லும்போது, "தேவனுடைய ஆலயம்" என்று சொல்லுகிறான். அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது, "பரலோகத்தின் தேவன்" என்று சொல்லி கர்த்தரைக் கனம்பண்ணுகிறான்.

கர்த்தருக்கு பலிசெலுத்த ஆட்டுக்குட்டிகளும், இளங்காளைகளும் தேவைப்படுகிறது. மேலும் கர்த்தருக்கு போஜனபலிகளை செலுத்த கோதுமை, திராட்சரசம், எண்ணெய் முதலானவை தேவைப்படுகிறது. தரியு ராஜா பலிசெலுத்துவதற்குத் தேவையான பொருட்களையும் தாழ்ச்சியில்லாமல் கொடுப்பதற்கு உத்தரவு பிறப்பிக்கிறான்.

ஆசாரியர்கள் கர்த்தருக்கு பலிசெலுத்தும்போது, தனக்கும் தன்னுடைய குமாரருக்கும் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுமாறும் தரியு ராஜா வேண்டிக்கொள்கிறான்.

"எருசலேமிலிருக்கிற ஆசாரியர்கள் பரலோகத்தின் தேவனுக்குச் சுகந்த வாசனையான பலிகளைச் செலுத்தி, ராஜாவுக்கும் அவர் குமாரருக்கும் தீர்க்காயுசுண்டாக மன்றாடும்படிக்கு இப்படிச் செய்யப்படுவதாக" (எஸ்றா 6:10) என்றும் தரியு தன்னுடைய கடிதத்தில் எழுதியனுப்புகிறான்.

தேவனுடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு யாராவது இடையூறு செய்தால், அவர்கள்மீது தேவனுடைய சாபம் வரும் என்றும், அவர்களுக்கு தண்டனை கொடுக்கப்படும் என்றும் தரியு ராஜா எச்சரிக்கிறான்.

"ஆகையால் இதை மாற்றவும், எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்தைக் கெடுக்கவும், தங்கள் கையை நீட்டப்போகிற சகல ராஜாக்களையும் சகல ஜனங்களையும் தம்முடைய நாமத்தை அங்கே விளங்கப்பண்ணின தேவன் நிர்மூலமாக்கக்கடவர்" (எஸ்றா 6:12) என்று எழுதி, தரியுவாகிய நாம் இந்தக் கட்டளையைக் கொடுத்தோம் என்றும், இதின்படி ஜாக்கிரதையாய்ச் செய்யப்படக்கடவது என்றும் எழுதியனுப்புகிறான்.

ராஜாக்களின் இருதயங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது. கர்த்தர் தம்முடைய விருப்பத்தின் பிரகாரமாக ராஜாக்களையும், அவர்களுடைய யோசனைகளையும் ஆளுகை செய்கிறார். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே ராஜாதி ராஜாவாயிருக்கிறார். கர்த்தர் தம்முடைய நோக்கத்தை நிறைவேற்றும் வேளை வரும்போது, கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அவருடைய கருவிகளாய்ப் பயன்படுத்தப்படுவதற்கு ஆயத்தமாயிருக்க வேண்டும். கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களுக்கு எதிர்பாராத இடங்களிலிருந்து உதவிகளை அனுப்புவார்.

சில சமயங்களில் பூமியானது ஸ்திரீக்கு உதவி செய்கிறது "பூமியானது ஸ்திரீக்கு உதவியாகத் தன் வாயைத் திறந்து, வலுசர்ப்பம் தன் வாயிலிருந்து ஊற்றின வெள்ளத்தை விழுங்கினது" (வெளி 12:16). கர்த்தரைப்பற்றி அறியாதவர்கள்கூட, அவருடைய வழிநடத்துதலினால், கர்த்தருடைய ஊழியத்திற்கு உதவி செய்வார்கள்.

யூதர்களின் சத்துருக்கள் தரியு ராஜாவிடத்தில், யூதர்களுக்கு விரோதமாக குற்றச்சாட்டுக்களைச் சொன்னார்கள். ராஜா உத்தரவு பிறப்பித்து, தேவனுடைய ஆலயத்தைக் கட்டுகிற வேலைகளை நிறுத்திப்போடுவான் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் தரியு ராஜாவோ, தேவனுடைய ஆலயம் கட்டப்படுவதை நிறுத்திப்போடாமல், அதை கட்டி முடிப்பதற்கு உதவி செய்கிறான்.

ஆலயம் கட்டி முடிந்தது
எஸ்றா 6:13-15

எஸ்றா 6:13. அப்பொழுது நதிக்கு இப்புறத்திலிருக்கிற தேசாதிபதியாகிய தத்னாயும், சேத்தார்பொஸ்னாயும், அவர்கள் வகையராவும், தரியுராஜா கட்டளையிட்ட பிரகாரம் ஜாக்கிரதையாய்ச் செய்தார்கள்.

எஸ்றா 6:14. அப்படியே யூதரின் மூப்பர் கட்டினார்கள்; தீர்க்கதரிசியாகிய ஆகாயும் இத்தோவின் குமாரனாகிய சகரியாவும் தீர்க்கதரிசனம் சொல்லிவந்தபடியினால் அவர்களுடைய காரியம் கைகூடிவந்தது; அவர்கள் இஸ்ரவேலின் தேவனுடைய கட்டளைப்படியேயும், கோரேஸ், தரியு, பெர்சியாவின் ராஜாவாகிய அர்தசஷ்டா என்பவர்களுடைய கட்டளைப்படியேயும் அதைக்கட்டி முடித்தார்கள்.

எஸ்றா 6:15. ராஜாவாகிய தரியு அரசாளுகிற ஆறாம் வருஷம் ஆதார் என்னும் மாதம் மூன்றாந்தேதியிலே அந்த ஆலயம் கட்டி முடிந்தது.

யூதர்களுக்கு சத்துருவாயிருந்தவர்கள் இப்போது அவர்களுக்கு சிநேகிதராயிருக்கிறார்கள். நதிக்கு இப்புறத்திலிருக்கிற தேசாதிபதியாகிய தத்னாயும், சேத்தார்பொஸ்னாயும், அவர்கள் வகையராவும், தரியுராஜா கட்டளையிட்ட பிரகாரம் ஜாக்கிரதையாய்ச் செய்கிறார்கள் (எஸ்றா 6:13).

தேசாதிபதியாகிய தத்னாயும், சேத்தார்பொஸ்னாயும், அவர்கள் வகையராவும் தரியுராஜாவின் கட்டளையைப் பெற்றுக் கொள்கிறார்கள். ராஜாவின் கட்டளைக்கு உடனடியாகவும், ஜாக்கிரதையாகவும் கீழ்ப்படிகிறார்கள். யூதர்கள் தேவாலயத்தை தடையில்லாமல் வேகமாகக் கட்டுகிறார்கள். இந்தக் கட்டுமான வேலைகளுக்கு மூன்று பேருடைய கட்டளைகள் உதவி புரிந்திருக்கிறது. அவையாவன:

1. இஸ்ரவேலின் தேவனுடைய கட்டளை (எஸ்றா 6:14)
2. பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸின் கட்டளை
3. பெர்சியாவின் ராஜாவாகிய தரியுவின் கட்டளை

இந்த சத்துருக்கள் ஆரம்பத்தில், தேவனுடைய ஆலயம் கட்டப்படுவதை தடைபண்ணுவதற்காக தீவிரமாய்ப் போனார்கள்.

ஆனால் இப்போதோ, அந்த சத்துருக்கள், தரியு ராஜா கட்டளையிட்ட பிரகாரம், யூதர்களுக்கு உதவி செய்ய விரைந்து போகிறார்கள்.

"ராஜாவாகிய அர்தசஷ்டாவுடைய உத்தரவின் நகல் ரெகூமுக்கும், கணக்கனாகிய சிம்சாயிக்கும், அவர்கள் வகையராவுக்கு முன்பாக வாசிக்கப்பட்டபோது, அவர்கள் தீவிரத்துடனே எருசலேமிலிருக்கிற யூதரிடத்திற்குப் போய், பலவந்தத்தோடும் கட்டாயத்தோடும் அவர்களை வேலைசெய்யாதபடிக்கு நிறுத்திப்போட்டார்கள்" (எஸ்றா 4:23).

யூதரின் மூப்பர் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறார்கள்; தீர்க்கதரிசியாகிய ஆகாயும் இத்தோவின் குமாரனாகிய சகரியாவும் தீர்க்கதரிசனம் சொல்லிவந்தபடியினால் அவர்களுடைய காரியம் கைகூடிவருகிறது; அவர்கள் இஸ்ரவேலின் தேவனுடைய கட்டளைப்படியேயும், கோரேஸ், தரியு, பெர்சியாவின் ராஜாவாகிய அர்தசஷ்டா என்பவர்களுடைய கட்டளைப்படியேயும் அதைக்கட்டி முடிக்கிறார்கள். ராஜாவாகிய தரியு அரசாளுகிற ஆறாம் வருஷம் ஆதார் என்னும் மாதம் மூன்றாந்தேதியிலே அந்த ஆலயம் கட்டி முடிக்கப்படுகிறது (எஸ்றா 6:14,15).

யூதரின் மூப்பர்கள் தேவனுடைய ஆலயத்தை உற்சாகமாய்க் கட்டுகிறார்கள். கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவது, இஸ்ரவேலின் தேவனுடைய கட்டளை என்பதை அறிந்து, யூதரின் மூப்பர்கள் தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிகிறார்கள்.

கர்த்தருடைய ஆலயத்தை எருசலேமிலே கட்டுமாறு கோரேசு யூதர்களுக்கு ஏற்கெனவே உத்தரவு பிறப்பித்திருந்தான். இப்போது தரியு ராஜாவும் அதே உத்தரவை மறுபடியும் பிறப்பிக்கிறான். கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டவேண்டும் என்னும் ஆர்வம் யூதருடைய மூப்பரின் மனதில் எப்போதும் இருக்கவேண்டும்.

ஆகாயும் சகரியாவும் யூதாவின் மூப்பருக்கு கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லி, அவர்களை உற்சாகப்படுத்துகிறார்கள். தேவனுடைய ஆலயம் விருவிருப்பாக கட்டப்படுகிறது. சுமார் நான்கு வருஷகாலத்தில் அவர்கள் ஆலயத்தைக் கட்டி முடிக்கிறார்கள்.

சுவிசேஷ சபையானது ஆவிக்குரிய ஆலயமாயிருக்கிறது. இது தொடர்ந்து கட்டப்பட்டு வருகிறது. கர்த்தருக்கு சித்தமான வேளையில், சுவிசேஷ சபை கட்டி முடிக்கப்படும். ஒவ்வொரு விசுவாசியும் ஜீவனுள்ள ஆலயமாகயிருக்கிறார்கள். பரிசுத்தமான விசுவாசத்தினால், ஒவ்வொரு விசுவாசியும் தன்னை, ஜீவனுள்ள ஆலயமாக கட்டி எழுப்புகிறார்கள்.

கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டும்போது, சாத்தான் எப்போதுமே எதிர்த்து நிற்பான். நம்முடைய பாவங்களும் அக்கிரமங்களும் நமக்கு தடையாயிருக்கும். இந்தப் பூமியிலே நமக்கு போராட்டங்களும், உபத்திரவங்களும் உண்டு. இவற்றிற்கு மத்தியில், கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற இலக்கை நோக்கி முன்னேறிச் செல்லவேண்டும்.

ஆலய பிரதிஷ்டை, எஸ்றா 6:16-18

எஸ்றா 6:16. அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரும், ஆசாரியரும், லேவியரும், சிறையிருப்பிலிருந்து வந்த மற்றவர்களும், தேவனுடைய ஆலயப் பிரதிஷ்டையைச் சந்தோஷமாய்க் கொண்டாடினார்கள்.

எஸ்றா 6:17. தேவனுடைய ஆலயத்தின் பிரதிஷ்டைக்காக நூறு காளைகளையும், இருநூறு ஆட்டுக்கடாக்களையும், நானூறு ஆட்டுக்குட்டிகளையும், இஸ்ரவேல் கோத்திரங்களுடைய இலக்கத்தின்படியே, இஸ்ரவேல் அனைத்தின் பாவநிவாரண பலிக்காகப் பன்னிரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையும் பலியிட்டு,

எஸ்றா 6:18. மோசேயின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடியே, அவர்கள் எருசலேமிலுள்ள தேவனுடைய ஆராதனைக்கென்று ஆசாரியரை அவர்கள் வகுப்புகளின்படியும், லேவியரை அவர்கள் முறைவரிசைகளின்படியும் நிறுத்தினார்கள்.

கர்த்தருடைய ஆலயம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்கு திரும்பி வந்த யூதர்கள், தாங்கள் கட்டின ஆலயத்தை கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணுகிறார்கள். கர்த்தரை ஆராதிப்பதற்காகவும், அவருடைய பரிசுத்தமான ஊழியங்களை நடத்துவதற்காகவும், கர்த்தருடைய ஆலயம் கட்டப்பட்டிருக்கிறது.

கட்டப்பட்டிருக்கிற கர்த்தருடைய ஆலயத்தை, அவருடைய நாமமகிமைக்காக பிரதிஷ்டைபண்ணவேண்டும். இந்த ஆலயம் எந்த நோக்கத்திற்காக கட்டப்பட்டிருக்கிறதோ, அந்த நோக்கத்திற்காக கர்த்தருடைய சமுகத்திலே ஒப்புக்கொடுக்கவேண்டும். கர்த்தருடைய ஆலயத்தில், கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தும் காரியங்கள் மாத்திரமே நடைபெறவேண்டும். ஆலயக்கட்டிடத்தில் உலகப்பிரகாரமான பயன்பாடுகளோ அல்லது கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தாத வேறு எந்தக் காரியங்களோ நடைபெறக்கூடாது.

கட்டப்பட்டிருக்கிற கர்த்தருடைய ஆலயத்தை, கர்த்தரைக் கனம்பண்ணுவதற்காக அர்ப்பணிக்க வேண்டும். கர்த்தரை ஆராதிக்கும் ஆராதனைகள் அவருடைய ஆலயத்தில் நடைபெறவேண்டும்.

அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரும், ஆசாரியரும், லேவியரும், சிறையிருப்பிலிருந்து வந்த மற்றவர்களும், தேவனுடைய ஆலயப் பிரதிஷ்டையைச் சந்தோஷமாய்க் கொண்டாடுகிறார்கள் (எஸ்றா 6:16). ஆலயத்தை பிரதிஷ்டைபண்ணும்போது, ஆசாரியரோடும் லேவியரோடும், இஸ்ரவேல் புத்திரரும் சேர்ந்து சந்தோஷமாய்க் கொண்டாடுகிறார்கள். யூதாகோத்திரத்தாரும், பென்யமீன் கோத்திரத்தாரும், அங்கே பிரதானமானவர்களாகயிருந்தாலும், சிறையிருப்பிலிருந்து வந்த இஸ்ரவேலின் எல்லா கோத்திரத்தாரும் ஆலயப்பிரதிஷ்டையை சந்தோஷமாய்க் கொண்டாடுகிறார்கள்.

தேவனுடைய ஆலயத்தின் பிரதிஷ்டைக்காக நூறு காளைகளையும், இருநூறு ஆட்டுக்கடாக்களையும், நானூறு ஆட்டுக்குட்டிகளையும், இஸ்ரவேல் கோத்திரங்களுடைய இலக்கத்தின்படியே, இஸ்ரவேல் அனைத்தின் பாவநிவாரண பலிக்காகப் பன்னிரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையும் பலியிடுகிறார்கள் (எஸ்றா 6:17).

சாலொமோன் கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டினார். அவர் தேவனுடைய ஆலயத்தைப் பிரதிஷ்டைபண்ணியபோது ஏராளமான ஆடுகளையும் மாடுகளையும் சர்வாங்க தகனபலியாக செலுத்தினார். சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள் தேவனுடைய ஆலயத்தைக் கட்டி முடித்திருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய ஆலயப்பிரதிஷ்டையை சந்தோஷமாய்க் கொண்டாடுகிறார்கள்.

இந்தப் பிரதிஷ்டை வைபவத்தில் பலியாக செலுத்தப்படுகிற ஆட்டுக்குட்டிகளின் எண்ணிக்கையை, சாலொமோன் பலியாக செலுத்தின ஆட்டுக்குட்டிகளின் எண்ணிக்கையோடு ஒப்பிடக்கூடாது. சாலொமோன் ஆயிரக்கணக்கான ஆடுகளை ஆலயப்பிரதிஷ்டையின்போது சர்வாங்க தகனபலியாக செலுத்தினார். சிறையிருப்பிலிருந்து வந்தவர்களிடத்தில் திரளான ஐசுவரியம் இல்லை. ஆனாலும் அவர்கள் தங்கள் திராணிக்குத்தக்கதாக பலிகளை செலுத்தி, ஆலயப்பிரதிஷ்டையை சந்தோஷமாய்க் கொண்டாடுகிறார்கள்.

தேவனுடைய ஆலயப்பிரதிஷ்டையை சந்தோஷமாய்க் கொண்டாடும்போது, அவர்கள் மோசேயின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடியே, அவர்கள் எருசலேமிலுள்ள தேவனுடைய ஆராதனைக்கென்று ஆசாரியரை அவர்கள் வகுப்புகளின்படியும், லேவியரை அவர்கள் முறைவரிசைகளின்படியும் நிறுத்துகிறார்கள் (எஸ்றா 6:18).

ஆசாரியர், லேவியர் ஆகியோரின் 24 வகுப்புக்கள் மறுபடியும் ஆரம்பிக்கப்படுகிறது. இந்த வகுப்புக்களைப் பற்றி மோசேயின் பிரமாணத்தில் கூறப்படவில்லை. ஆனால் 1நாளா 24-25 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கிறது. இவை தேவாலய ஆராதனையின் ஒரு பகுதியாயிற்று. தேவாலய ஆராதனையைப் பற்றி மோசேயின் பிரமாணத்தில் கூறப் பட்டிருக்கிறது.

சாலொமோனுடைய நாட்களிலே, ஆலயத்தில் ஆராதனைகள் ஆடம்பரமாக நடைபெற்றது. இப்போது அப்படிப்பட்ட ஆடம்பரமான ஆராதனைகள் நடைபெறவில்லை. ஆனாலும் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள் கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்கிறார்கள். பரிசுத்தமே கர்த்தருடைய ஆலயத்தின் மெய்யான அழகாகயிருக்கிறது.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள் மோசேயின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற பிரமாணங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். கர்த்தருடைய ஆராதனையை பரிசுத்தமாய் நடத்துகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய பரிசுத்த நாமத்தை மகிமைப்படுத்துகிறார்கள். தேவனுடைய ஆலயத்திலே, பரிசுத்தத்தின் அழகைப்போல, வேறு எந்த அழகும் இல்லை.

பஸ்கா
எஸ்றா 6:19-22

எஸ்றா 6:19. சிறையிருப்பிலிருந்து வந்தவர்கள் முதலாம் மாதம் பதினாலாந்தேதியிலே பஸ்காவையும் ஆசாரித்தார்கள்.

எஸ்றா 6:20. ஆசாரியரும் லேவியரும் ஒருமனப்பட்டுத் தங்களைச் சுத்தம்பண்ணிக்கொண்டதினால், எல்லாரும் சுத்தமாயிருந்து, சிறையிருப்பிலிருந்து வந்தவர்கள் எல்லாருக்காவும், ஆசாரியரான தங்கள் சகோதரருக்காகவும், தங்களுக்காகவும் பஸ்காவின் ஆட்டுக்குட்டிகளை அடித்தார்கள்.

எஸ்றா 6:21. அப்படியே சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்த இஸ்ரவேல் புத்திரரும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை நாடும்படி, பூலோக ஜாதிகளின் அசுத்தத்தை விட்டு, அவர்களண்டையிலே சேர்ந்த அனைவரும் அதைப் புசித்து,

எஸ்றா 6:22. புளிப்பில்லாத அப்பப்பண்டிகையை ஏழுநாளாகச் சந்தோஷத்துடனே ஆசரித்தார்கள்; கர்த்தர் அவர்களை மகிழ்ச்சியாக்கி, அவர்கள் கைகளை இஸ்ரவேலின் தேவன் என்னும் தேவனுடைய ஆலயத்தின் வேலையிலே பலப்படுத்தத்தக்கதாய் அசீரியருடைய ராஜாவின் இருதயத்தை அவர்கள் பட்சத்தில் சார்ந்திருக்கப்பண்ணினார்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்கள், புதிதாகக் கட்டப்பட்டு பிரதிஷ்டைபண்ணப்பட்டிருக்கிற தேவனுடைய ஆலயத்திலே பஸ்காவை ஆசரிக்கிறார்கள். இவர்கள் இப்போதுதான் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டதற்கு அடையாளமாகவும், அதை நினைவுகூரும் வண்ணமாகவும் பஸ்காவை புசிப்பது வழக்கம்.

எருசலேமிலிருக்கிற இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கிருபையினாலே சிறையிருப்பிலிருந்து சமீபத்தில் விடுவிக்கப்பட்டவர்கள். இஸ்ரவேல் புத்திரர், கர்த்தர் தங்களுடைய முன்னோர்களுக்கு காண்பித்த பழைய கிருபைகளை, தாங்கள் இப்போது அனுபவிக்கும் புதிய கிருபைகளோடு தியானித்துப் பார்த்து, பஸ்காவை சந்தோஷமாய்ப் புசிக்கிறார்கள்.

சிறையிருப்பிலிருந்து வந்தவர்கள் முதலாம் மாதம் பதினாலாந்தேதியிலே பஸ்காவையும் ஆசாரிக்கிறார்கள். ஆசாரியரும் லேவியரும் ஒருமனப்பட்டுத் தங்களைச் சுத்தம்பண்ணிக்கொண்டதினால், எல்லாரும் சுத்தமாயிருந்து, சிறையிருப்பிலிருந்து வந்தவர்கள் எல்லாருக்காவும், ஆசாரியரான தங்கள் சகோதரருக்காகவும், தங்களுக்காகவும் பஸ்காவின் ஆட்டுக்குட்டிகளை அடிக்கிறார்கள் (எஸ்றா 6:19,20).

இருபது வருஷக்காலத்திற்குப் பின்பு, பஸ்காவைப் பற்றி மறுபடியும் இங்கு கூறப்பட்டிருக்கிறது. சிறையிருப்பிலிருந்து வந்தவர்கள் மறுபடியும் பஸ்காவை ஆசரிக்கிறார்கள். இது அவர்கள் ஆசரித்த முதலாவது பஸ்காவா என்று தெரியவில்லை. ஆனாலும் செருபாபேல் கட்டிய புதிய தேவாலயத்தில் சிறையிருப்பிலிருந்து வந்தவர்கள் முதன் முறையாகப் பஸ்காவை ஆசரிக்கிறார்கள். (எஸ்றா 6:19-21).

பஸ்காவின் ஆட்டுக்குட்டிகளை அடிக்கிற ஆசாரியரும் லேவியரும் ஒருமனப்பட்டு தங்களை சுத்தம்பண்ணிக்கொள்கிறார்கள். பஸ்காவை புசிக்கும் முன்பாக ஆசாரியர்களும் தங்களை சுத்தம்பண்ணுகிறார்கள். அவர்கள் தங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொள்வதில், ஒருவருக்கொருவர் உதவியாயிருக்கிறார்கள். இதனால் எல்லாரும் சுத்தமாயிருந்து, சிறையிருப்பிலிருந்து வந்தவர்கள் எல்லாருக்காவும், ஆசாரியரான தங்கள் சகோதரருக்காகவும், தங்களுக்காகவும் பஸ்காவின் ஆட்டுக்குட்டிகளை அடிக்கிறார்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் பரிசுத்தமாயிருப்பதே ஊழியத்திற்கு அழகு. அதுபோலவே ஊழியக்காரர் மத்தியில் ஐக்கியமும், ஒருமனமும் இருப்பது, ஊழியத்திற்கு மிகுந்த அழகாகயிருக்கிறது.

அப்படியே சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்த இஸ்ரவேல் புத்திரரும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை நாடும்படி, பூலோக ஜாதிகளின் அசுத்தத்தை விட்டு, அவர்களண்டையிலே சேர்ந்த அனைவரும் அதைப் புசிக்கிறார்கள் (எஸ்றா 6:21).

புறஜாதி மார்க்கத்திலிருந்து யூதமார்க்கத்தை ஏற்றுக்கொண்டவர்களும், இந்தப் பஸ்காவை புசிக்கிறார்கள். அவர்கள் "பூலோக ஜாதிகள்" என்று இந்த வசனத்தில் அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை நாடும்படி வந்தவர்கள். இவர்களும் தங்கள் அசுத்தத்தை விட்டு பஸ்காவை புசிக்கிறார்கள்.

விக்கிரகாராதனையும், பில்லிசூனியங்களும் புறஜாதியாரின் அசுத்தங்களாகயிருக்கிறது. இவர்கள் விக்கிரகங்களையும், விக்கிரகாராதனையையும், அவற்றோடு தொடர்புடைய எல்லா அசுத்தங்களையும் விட்டுவிட்டு இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை நாடும்படி வந்திருக்கிறார்கள். அவர்களும் தங்களை சுத்திகரித்து பஸ்காவை புசிக்கிறார்கள்.

புளிப்பில்லாத அப்பப்பண்டிகையை ஏழுநாளாகச் சந்தோஷத்துடனே ஆசரிக்கிறார்கள்; கர்த்தர் அவர்களை மகிழ்ச்சியாக்கி, அவர்கள் கைகளை இஸ்ரவேலின் தேவன் என்னும் தேவனுடைய ஆலயத்தின் வேலையிலே பலப்படுத்தத்தக்கதாய் அசீரியருடைய ராஜாவின் இருதயத்தை அவர்கள் பட்சத்தில் சார்ந்திருக்கப்பண்ணுகிறார் (எஸ்றா 6:22).

பஸ்கா பண்டிகையைப் போலவே (எஸ்றா 6:19) புளிப்பில்லாத அப்பப் பண்டிகையைப் பற்றியும் 20 வருஷத்திற்குப் பின்பு இங்கு முதன் முறையாகக் கூறப்பட்டிருக்கிறது.

இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிற அசீரியருடைய ராஜா, முதலாம் தரியுவைக் குறிக்கும் (எஸ்றா 6:8-12) இவன் அசீரியருடைய ராஜா என்று ஏன் குறிப்பிடப்பட்டிருக்கிறான் என்பதற்கு பலவிதமான கருத்துக்கள் கூறப்படுகிறது. அக்காலத்தில் மேற்கு ஆசியாவில் அசீரியரே பலம் பொருந்தியவர்களாக இருந்தார்கள். பெர்சியர்கள் அசீரியருடைய ஆட்சியைக் கைப்பற்றிய பின்பும், பெர்சிய ராஜாக்கள் அசீரியருடைய ராஜாக்கள் என்றே அழைக்கப்பட்டிருக்கிறார்கள் (2இராஜா 23:29).

புளிப்பில்லாத அப்பப்பண்டிகையை ஆசரிக்கிறவர்களை கர்த்தர் மகிழ்ச்சியாக்குகிறார். அவர்கள் மகிழ்ந்திருப்பதற்கான காரணத்தையும், அவர்கள் மகிழ்ந்து களிகூருவதற்கான இருதயத்தையும், கர்த்தர் அவர்களுக்கு கிருபையாக கொடுக்கிறார். ஆகையினால் அவர்கள் எல்லோரும் புளிப்பில்லாத அப்பப்பண்டிகையை ஏழுநாளாய் சந்தோஷத்துடனே ஆசரிக்கிறார்கள்.

7 அதிகாரம்

எஸ்றாவைப்பற்றி இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இக்காலத்தில் செருபாபேல், யெசுவா ஆகியோர் வயது முதிர்ந்தோராயிருக்கிறார்கள். ஆகாய், சகரியா ஆகியோரும் கர்த்தருடைய தீர்க்கதரிசன வார்த்தைகளை சொல்லி முடித்துவிட்டார்கள்.

சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்கும், யூதாவின் பட்டணங்களுக்கும் திரும்பி வந்திருக்கிற யூதர்கள் மத்தியிலே கர்த்தருடைய ஊழியம் தொடர்ந்து நடைபெறவேண்டும். கர்த்தருடைய ஊழியத்தை செய்வதற்கு புதிய ஊழியக்காரர்கள் தேவைப்படுகிறார்கள். பழைய ஊழியக்காரர்களுக்கு வயதாகும்போது, கர்த்தர் புதிய ஊழியக்காரர்களை எழுப்புகிறார்.

எஸ்றா புஸ்தகத்தில், இந்த அதிகாரத்திலிருந்து எஸ்றாவைப்பற்றியும், இதற்கு அடுத்த புஸ்தகத்தில் நெகேமியாவைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் இருவரும் தங்கள் காலங்களில் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே கர்த்தருடைய ஊழியத்தை செய்தவர்கள்.

எஸ்றாவைப்பற்றிய விவரமும், அவர் எருசலேமுக்கு வருவதும் (எஸ்றா 7:1-10). அர்தசஷ்டா ராஜா எஸ்றாவின் கையில் கொடுத்த சன்னதின் நகல் (எஸ்றா 7:11-26). எஸ்றா தேவனாகிய கர்த்தரைத் துதிக்கிறார் (எஸ்றா 7:27,28).

எஸ்றாவின் பூர்வோத்திரம்
எஸ்றா 7:1-10

எஸ்றா 7:1. இந்த வர்த்தமானங்களுக்குப் பின்பு, செராயாவின் குமாரனாகிய எஸ்றா, பெர்சியாவின் ராஜாவாகிய அர்தசஷ்டா அரசாளுகிற காலத்திலே பாபிலோனிலிருந்து வந்தான்; இந்தச் செராயா அசரியாவின் குமாரன், இவன் இல்க்கியாவின் குமாரன்,

எஸ்றா 7:2. இவன் சல்லூமின் குமாரன், இவன் சாதோக்கின் குமாரன், இவன் அகிதூபின் குமாரன்,

எஸ்றா 7:3. இவன் அமரியாவின் குமாரன், இவன் அசரியாவின் குமாரன், இவன் மெராயோதின் குமாரன்,

எஸ்றா 7:4. இவன் சேராகியாவின் குமாரன், இவன் ஊசியின் குமாரன், இவன் புக்கியின் குமாரன்,

எஸ்றா 7:5. இவன் அபிசுவாவின் குமாரன், இவன் பினெகாசின் குமாரன், இவன் எலெயாசாரின் குமாரன், இவன் பிரதான ஆசாரியனான ஆரோனின் குமாரன்.

எஸ்றா 7:6. இந்த எஸ்றா இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அருளிய மோசேயின் நியாயப்பிரமாணத்திலே தேறின தேவபாரகனாயிருந்தான்; அவனுடைய தேவனாகிய கர்த்தருடைய கரம் அவன்மேல் இருந்ததினால், அவன் கேட்டவைகளையெல்லாம் ராஜா அவனுக்குக் கொடுத்தான்.

எஸ்றா 7:7. அவனோடேகூட இஸ்ரவேல் புத்திரரிலும், ஆசாரியரிலும், லேவியரிலும், பாடகரிலும், வாசல் காவலாளரிலும், நிதனீமியரிலும், சிலர் அர்தசஷ்டா ராஜாவின் ஏழாம் வருஷத்திலே எருசலேமுக்குப் போனார்கள்.

எஸ்றா 7:8. ஐந்தாம் மாதத்தில் அவன் எருசலேமுக்கு வந்தான்; அது அந்த ராஜாவின் ஏழாம் வருஷமானது.

எஸ்றா 7:9. முதலாம் மாதம் முதல்தேதியிலே அவன் பாபிலோனிலிருந்து பிரயாணமாகப் புறப்பட்டு, ஐந்தாம் மாதம் முதல்தேதியிலே தன் தேவனுடைய தயவுள்ள கரம் தன்மேலிருந்ததினால் எருசலேமுக்கு வந்தான்.

எஸ்றா 7:10. கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும் நீதிநியாயங்களையும் உபதேசிக்கவும், எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான்.

எஸ்றாவின் பூர்வோத்திரத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. எஸ்றா செராயாவின் குமாரன்.

இந்தச் செராயா அசரியாவின் குமாரன், இவன் இல்க்கியாவின் குமாரன், இவன் சல்லூமின் குமாரன், இவன் சாதோக்கின் குமாரன், இவன் அகிதூபின் குமாரன், இவன் அமரியாவின் குமாரன், இவன் அசரியாவின் குமாரன், இவன் மெராயோதின் குமாரன், இவன் சேராகியாவின் குமாரன், இவன் ஊசியின் குமாரன், இவன் புக்கியின் குமாரன், இவன் அபிசுவாவின் குமாரன், இவன் பினெகாசின் குமாரன், இவன் எலெயாசாரின் குமாரன், இவன் பிரதான ஆசாரியனான ஆரோனின் குமாரன் (எஸ்றா 7:1-5).

எஸ்றாவின் முன்னோர்களைப்பற்றிய விவரம் வருமாறு:

1. எஸ்றா (எஸ்றா 7:1)
2. செராயா
3. அசரியா
4. இல்க்கியா
5. சல்லூம் (எஸ்றா 7:2)
6. சாதோக்
7. அகிதூப்
8. அமரியா (எஸ்றா 7:3)
9. அசரியா
10. மெராயோத்
11. சேராகியா
12. ஊசி
13. புக்கி
14. அபிசுவா (எஸ்றா 7:5)
15. பினெகாஸ்
16. எலெயாசார்
17. ஆரோன் - முதலாம் பிரதான ஆசாரியன்

இந்த வம்ச வரலாறு முழுமையானதல்ல. ஆரோனின் காலத்திலிருந்து எஸ்றாவின் காலம் வரையிலும் இடையிலுள்ள காலம் சுமார் 1,130 வருஷங்களாகும். இந்த அதிகாரத்தில் 17 சந்ததியாரைப் பற்றி மட்டுமே கூறப்பட்டிருக்கிறது. 1நாளா 6:1-15 ஆகிய வசனங்களில் மேலும் பல பிரதான ஆசாரியர்களின் பெயர்கள் கொடுக்கப் பட்டிருக்கிறது. இவர்களுடைய பெயர்களும் இந்த அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேலுக்கு நன்மை செய்ய எஸ்றாவை தம்முடைய கருவியாகத் தெரிந்தெடுக்கிறார். கர்த்தருடைய ஆசாரிய ஊழியம் சிறப்பாக நடைபெறவேண்டும். அது கனமும் மகிமையுமுள்ள ஊழியம். சிறையிருப்பின் காலத்தில் ஆசாரிய ஊழியத்தின் மகிமை மங்கிப்போயிற்று.

எஸ்றா செராயாவின் குமாரன் என்று இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. பாபிலோன் ராஜா எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணியபோது செராயாவை கொன்றுபோட்டான்.

"காவல் சேனாபதி பிரதான ஆசாரியனாகிய செராயாவையும், இரண்டாம் ஆசாரியனாகிய செப்பனியாவையும், வாசல்காக்கும் மூன்று காவற்காரரையும் பிடித்தான்" (2இராஜா 25:18)

"அவர்களைப் பாபிலோன் ராஜா ஆமாத் தேசத்தின் பட்டணமான ரிப்லாவிலே வெட்டிக் கொன்றுபோட்டான்; இப்படியே யூதா ஜனங்கள் தங்கள் தேசத்திலிருந்து சிறையிருப்புக்குக் கொண்டுபோகப்பட்டார்கள்" (2இராஜா 25:21).

எஸ்றா எருசலேமுக்கு வருகிறபோது அவன் வாலிபனாகயிருக்கிறான். ஆகையினால் பாபிலோன் ராஜா கொன்றுபோட்ட செராயா, எஸ்றாவின் தகப்பனாராகயிருப்பதற்கு வாய்ப்பில்லை. அந்த செராயா ஒருவேளை எஸ்றாவின் தாத்தாவாகவோ அல்லது அவருடைய தாத்தாவின் தகப்பனாராகவோ இருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

யூதர்கள் எழுபத்தைந்து வருஷங்களாக பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். இதைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது, செராயா மரித்து எழுபத்தைந்து வருஷங்களோ அல்லது அதற்கு மேற்பட்ட வருஷங்களோ ஆகியிருக்கவேண்டுமென்று சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள்.

இந்த வர்த்தமானங்களுக்குப் பின்பு, செராயாவின் குமாரனாகிய எஸ்றா, பெர்சியாவின் ராஜாவாகிய அர்தசஷ்டா அரசாளுகிற காலத்திலே பாபிலோனிலிருந்து வருகிறான் (எஸ்றா 7:1).

இந்த வசனத்தின் ஆரம்பத்தில் "இந்த வர்த்தமானங்களுக்குப் பின்பு" என்று சொல்லப்பட்டிருக்கிறது. 42,360 பேர் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த பின்பு, (எஸ்றா 1:1-2:70) பலிபீடம் கட்டி முடிக்கப்பட்டு, ஆராதனை மறுபடியும் ஆரம்பிக்கப்பட்ட பின்பு. (எஸ்றா 3:1-7) தேவாலயம் மறுபடியும் கட்டி முடிக்கப்பட்ட பின்பு. (எஸ்றா 3:8-6:22). இந்த சம்பவங்களெல்லாம் நடைபெற்ற பின்பு, எஸ்றா பாபிலோனிலிருந்து யூதா தேசத்திற்குச் சிறையிருப்பிலிருந்து திரும்பி வருகிறவர்களை அழைத்து வருகிறான் (எஸ்றா 7:1-8:36).

பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து இரண்டு குழுவினர் மட்டுமே திரும்பி வந்தார்கள் என்று உறுதியாகக் கூறமுடியாது. பல குழுக்கள் வந்திருக்கலாம். ஆனாலும் எஸ்றாவின் புஸ்தகத்தில் இவ்விரண்டு குழுக்களைப் பற்றி மட்டுமே கூறப்பட்டிருக்கிறது. முதலாவது குழுவினர் செருபாபேலின் தலைமையின்கீழ் வந்தார்கள் (எஸ்றா 1:1-2:70).

"இந்த வர்த்தமானங்களுக்குப் பின்பு" என்று கூறப்பட்டிருப்பதினால் எஸ்றா 1-6 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் நடைபெறும்போது எஸ்றா எருசலேமில் இல்லை என்பது தெளிவாகிறது. எஸ்றா 6 ஆம் அதிகாரத்தில் தேவாலயம் மறுபடியும் கட்டி முடிக்கப்படுகிறது. அதன் பின்பு, எஸ்றா எருசலேமிற்கு வருகிறான்.

"பெர்சியாவின் ராஜாவாகிய அர்தசஷ்டா" என்பவன் முதலாம் தரியு அல்லது தரியு ஹிஸ்டாஸ்பிஸ் ஆவான். (எஸ்றா 4:24; எஸ்றா 5:1-6:22) இவன் எஸ்றா 4:7-23 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் அர்தசஷ்டா அல்ல. எஸ்றா 5-6 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் வரலாறு ஒரே ராஜாவின் காலத்தில் நடைபெறுகிறது.

அர்தசஷ்டா என்னும் பெயருக்கு "பேரரசன்" என்று பொருள். மேதிய-பெர்சிய தேசத்தின் இரண்டு ராஜாக்கள் அர்தசஷ்டா என்று அழைக்கப் பட்டிருக்கிறார்கள். முதலாம் தரியுவுக்குப் பின்பு ஆட்சி புரிந்த பெர்சிய தேசத்தின் மூன்று பேரரசர்களும் அர்தசஷ்டா என்னும் பெயரைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் அர்தசஷ்டா 35 வருஷம் ஆட்சி புரிந்தான். தேவாலயம் கட்டி முடிக்கப்பட்ட பின்பும், பெர்சியாவில் ஒரு வருஷம் ஆட்சி புரிந்தான். இவனுடைய ஆறாவது வருஷ ஆட்சிக் காலத்தில் எஸ்றா பாபிலோனிலிருந்து சிறையிருப்பிலிருந்து திரும்பிய யூதர்களை (எஸ்றா 7-8) எருசலேமுக்கு அழைத்துச் சென்றான் (எஸ்றா 7:7).

"அர்தசஷ்டா ராஜாவின் ஏழாம் வருஷத்திலே" என்பது தேவாலயம் கட்டி முடிக்கப்பட்டு, ஒரு வருஷத்திற்குப் பின்பு என்பது பொருளாகும். (எஸ்றா 7-9; எஸ்றா 6:15).

பாபிலோனிலிருந்து எருசலேமிற்குப் போய் சேர்வதற்கு எஸ்றாவிற்கும், அவனுடைய குழுவினருக்கும் ஐந்து மாதங்களாயிற்று.

எஸ்றா எருசலேமுக்கு வந்தபோது வாலிப வயதிலிருக்கிறான். தம்முடைய ஊழியத்தை செய்வதற்கு கர்த்தர் எஸ்றாவைத் தெரிந்தெடுத்திருக்கிறார். கர்த்தருடைய ஊழியத்தை செய்ய எஸ்றாவிடம் எல்லா தகுதிகளும் இருக்கிறது.

இந்த எஸ்றா இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அருளிய மோசேயின் நியாயப்பிரமாணத்திலே தேறின தேவபாரகனாயிருக்கிறான்; அவனுடைய தேவனாகிய கர்த்தருடைய கரம் அவன்மேல் இருக்கிறது (எஸ்றா 7:6).

கர்த்தர் எஸ்றாவிற்கு விசேஷித்த ஞானத்தைக் கொடுத்திருக்கிறார். அவன் மோசேயின் நியாயப்பிரமாணத்திலே தேறின தேவபாரகனாக இருக்கிறான். இவனுடைய காலத்திலிருந்து இஸ்ரவேலில் வேதபாரகர்கள் முக்கியத்துவம் பெறுகிறார்கள். மோசேயின் பிரமாணங்களைப் பிரதியெடுப்பது, உபதேசிப்பது, வியாக்கியானம் பண்ணுவது போன்ற முக்கியமான ஊழியங்களைச் செய்கிறார்கள். யூத மார்க்கத்தாரின் பழங்காலத்து பாஷை வழக்குகளையும் வேதபாரகர் நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

கர்த்தருடைய வல்லமையும், ஆசீர்வாதமும் ஒருவர்மீது இருக்கும்போது "கர்த்தருடைய கரம் அவன்மீது இருக்கிறது" என்னும் வாக்கியம் பயன்படுத்தப்படுகிறது. (எஸ்றா 7:6,9,28; எஸ்றா 8:18,22,31; நெகே 2:8, அப் 4:30; அப் 11:21) முதலாம் தரியு அல்லது அர்தசஷ்டாவின் ஆட்சிக் காலத்தில் எஸ்றா உயர்ந்த மதிப்புடையவனாக இருக்கிறான். ஆகையினால் அவன் கேட்டவைகளையெல்லாம் ராஜா அவனுக்குக் கொடுக்கிறான்.

எஸ்றாவுக்கு மோசேயின் பிரமாணத்திலே நல்ல ஞானம் இருக்கிறது. அவன் மோசேயின் நியாயப்பிரமாணத்திலே தேறின வேதபாரகன். எஸ்றா நியாயப்பிரமாணத்தின் வாக்கியங்களை மனப்பாடமாய்ச் சொல்லக்கூடியவன். அவன் வேதவசனங்களை நன்றாய் வியாக்கியானம் பண்ணுகிறவன்.

யூதர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்தபோது, அவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கற்றுக்கொள்வதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. மோசேயின் நியாயப்பிரமாணத்திலே தேறின வேதபாரகர்கள் அக்காலத்தில் ஒரு சிலரே இருக்கிறார்கள். அவர்களில் எஸ்றாவும் ஒருவன்.

பழைய ஏற்பாட்டு ஆகமங்களை எஸ்றா வரிசையாக தொகுத்தான் என்று யூதருடைய பாரம்பரிய வரலாறு சொல்லுகிறது. கர்த்தருடைய ஆவியானவர் எஸ்றாவின்மீது தங்கியிருக்கிறார். எஸ்றா ஆவியானவருடைய ஏவுதலினாலும், ஆளுகையினாலும் பழைய ஏற்பாட்டு வேதப்புஸ்தகங்களை வரிசையாக தொகுத்தான். எஸ்றா தன்னுடைய காலத்திலிருந்த தீர்க்கதரிசனங்களையும், சரித்திர ஆகமங்களையும் பழைய ஏற்பாட்டு புஸ்தகத்தில் தொகுத்தான்.

எஸ்றாவின் காலத்தில் தீர்க்கதரிசன வார்த்தைகள் குறைந்துபோயிற்று. ஜனங்கள் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கவேண்டிய அவசியமுண்டாயிற்று.

"ஓரேபிலே இஸ்ரவேலரெல்லாருக்காகவும் என் தாசனாகிய மோசேக்கு நான் கற்பித்த நியாயப்பிரமாணமாகிய கட்டளைகளையும், நியாயங்களையும் நினையுங்கள்" (மல் 4:4).

கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும் நீதிநியாயங்களையும் உபதேசிக்கவும், எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருக்கிறான். எஸ்றா கர்த்தருடைய கற்பனைகளின் வார்த்தைகளிலும், அவர் இஸ்ரவேலுக்குக் கொடுத்த கட்டளைகளிலும், படித்துத் தேறின வேதபாரகன். இவன் ஒரு ஆசாரியன் (எஸ்றா 7:10,11).

எஸ்றா பாபிலோன் தேசத்து சிறையிருப்பில் வளர்ந்தவன். அவன் அதிகமாய்க் கல்வி கற்றவன். பாடசாலையில் எஸ்றாவோடுகூட கல்தேய மாணவர்கள் கல்வி கற்றார்கள். அவர்கள் கல்தேயருடைய இலக்கியங்களையும், வானசாஸ்திரங்களையும் அதிகமாய்க் கற்றுக்கொள்வது வழக்கம். எஸ்றாவும் கல்தேயருடைய பாரம்பரியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தால், அவனும் வானசாஸ்திரத்தையும், ஜோசியத்தையும், கல்தேயரின் இலக்கியத்தையும் படித்திருப்பான்.

ஆனால் எஸ்றாவோ கல்தேயரின் இலக்கியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அவன் மோசேயின் நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கிற வாசகங்களை கற்றுக்கொள்வதிலே அதிகக் கவனம் செலுத்தினான். எஸ்றாவுக்கு கர்த்தருடைய பிரமாணமே முக்கியமானதாயிருக்கிறது. வானசாஸ்திரங்களையும், மந்திர ஆலோசனைகளையும், ஜோதிட சாஸ்திரங்களையும்விட, எஸ்றாவின் பார்வையில் மோசேயின் நியாயப்பிரமாணமே மிகவும் முக்கியமானதாய்த் தெரிகிறது.

எஸ்றா கர்த்தருடைய வேதத்தை ஆராய்ந்து பார்க்க தன்னுடைய இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருக்கிறான். அவன் வேதத்தை ஆராய்ந்து பார்த்து தேவனைப்பற்றிய சத்தியங்களையும், அறிவையும் பெற்றுக்கொள்கிறான். கர்த்தருடைய சிந்தையையும், அவருடைய விருப்பத்தையும் புரிந்துகொள்கிறான். மோசேயின் நியாயப்பிரமாணமே எஸ்றாவின் ஜீவியத்தில், அவனுக்கு முன்மாதிரியாயிருக்கிறது.

இஸ்ரவேலிலே கட்டளைகளையும் நீதிநியாயங்களையும் உபதேசிக்க எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருக்கிறான். அவன் கற்றுக்கொடுப்பதற்கு முன்பாக கற்றுக்கொள்கிறான். எஸ்றா கட்டளைகளையும் நீதி நியாயங்களையும் மற்றவர்களுக்கு உபதேசம்பண்ணுவதற்கு முன்பாக, அவற்றை தன்னுடைய சொந்த வாழ்க்கையில் பின்பற்றுகிறான்.

செராயாவின் குமாரனாகிய எஸ்றா, பெர்சியாவின் ராஜாவாகிய அர்தசஷ்டா அரசாளுகிற காலத்திலே பாபிலோனிலிருந்து வருகிறான்.

அவனுடைய தேவனாகிய கர்த்தருடைய கரம் அவன்மேல் இருந்ததினால், அவன் கேட்டவைகளையெல்லாம் ராஜா அவனுக்குக் கொடுக்கிறான்.

எஸ்றா ஐந்தாம் மாதத்தில் எருசலேமுக்கு வருகிறான்; அது அந்த ராஜாவின் ஏழாம் வருஷமானது. முதலாம் மாதம் முதல்தேதியிலே அவன் பாபிலோனிலிருந்து பிரயாணமாகப் புறப்பட்டு, ஐந்தாம் மாதம் முதல்தேதியிலே தன் தேவனுடைய தயவுள்ள கரம் தன்மேலிருந்ததினால் எருசலேமுக்கு வருகிறான் (எஸ்றா 7:8,9).

எஸ்றாவுக்கு கர்த்தருடைய உதவியும் ஒத்தாசையும், அநுக்கிரகமும் கிடைக்கிறது. தேவனுடைய தயவுள்ள கரம் எஸ்றாவின்மேல் இருக்கிறது. பெர்சியாவின் ராஜாவாகிய அர்தசஷ்டாவும், எஸ்றா கேட்டவைகளையெல்லாம் அவனுக்கு கொடுக்கிறான். எஸ்றாவுக்கு ராஜாவின் உதவியும் கிடைத்திருக்கிறது. சிறையிருப்பிலிருக்கிற இஸ்ரவேல் புத்திரரும் எஸ்றாமீது பிரியமாயிருக்கிறார்கள். அவர்கள் எஸ்றாமீது அன்பும், மரியாதையும் வைத்திருக்கிறார்கள்.

எஸ்றா பாபிலோன் தேசத்திலிருந்து எருசலேமுக்கு பிரயாணப்பட்டபோது, அவனோடேகூட இஸ்ரவேல் புத்திரரிலும், ஆசாரியரிலும், லேவியரிலும், பாடகரிலும், வாசல் காவலாளரிலும், நிதனீமியரிலும், சிலர் அர்தசஷ்டா ராஜாவின் ஏழாம் வருஷத்திலே எருசலேமுக்குப் போகிறார்கள் (எஸ்றா 7:7).

அர்தசஷ்டா
எஸ்றா 7:11-26

எஸ்றா 7:11. கர்த்தருடைய கற்பனைகளின் வார்த்தைகளிலும், அவர் இஸ்ரவேலுக்குக் கொடுத்த கட்டளைகளிலும், படித்துத் தேறின வேதபாரகனாகிய எஸ்றா என்னும் ஆசாரியனுக்கு, ராஜாவாகிய அர்தசஷ்டா கொடுத்த சன்னதின் நகலாவது:

எஸ்றா 7:12. ராஜாதிராஜாவாகிய அர்தசஷ்டா பரலோகத்தின் தேவனுடைய நியாயப்பிரமாணத்தைப் போதிக்கிற உத்தம வேதபாரகனாகிய எஸ்றா என்னும் ஆசாரியனுக்குப் பூரண சமாதானமுண்டாக வாழ்த்தி எழுதுகிறது என்னவென்றால்:

எஸ்றா 7:13. நம்முடைய ராஜ்யத்தில் இருக்கிற இஸ்ரவேல் ஜனத்திலும், அதின் ஆசாரியரிலும், லேவியரிலும், உன்னோடேகூட எருசலேமுக்குப் போக மனப்பூர்வமாயிருக்கிற யாவரும் போகலாம் என்று நம்மாலே உத்தரவாகிறது.

எஸ்றா 7:14. நீ உன் கையிலிருக்கிற உன் தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்படி, யூதாவையும் எருசலேமையும் விசாரித்து நடத்தவும்,

எஸ்றா 7:15. ராஜாவும் அவருடைய மந்திரிமாரும் எருசலேமில் வாசம்பண்ணுகிற இஸ்ரவேலின் தேவனுக்கு மனப்பூர்வமாய்க் கொடுத்த வெள்ளியையும் பொன்னையும்,

எஸ்றா 7:16. பாபிலோன் சீமையெங்கும் உனக்குக் கிடைக்கும் எல்லா வெள்ளியையும் பொன்னையும், உன்னுடைய ஜனமும் ஆசாரியரும் எருசலேமிலுள்ள தங்கள் தேவனுடைய ஆலயத்துக்கென்று மனஉற்சாகமாய்க் கொடுக்கும் காணிக்கைகளையும் நீ கொண்டு போகவும், நீ ராஜாவினாலும் அவருடைய ஏழு மந்திரிமாராலும் அனுப்பப்படுகிறாய்.

எஸ்றா 7:17. ஆகையால் அந்தத் திரவியத்தினால் நீ தாமதமின்றி காளைகளையும், ஆட்டுக்கடாக்களையும், ஆட்டுக்குட்டிகளையும், அவைகளுக்கடுத்த போஜனபலிகளையும், பானபலிகளையும் வாங்கி, அவைகளை எருசலேமிலுள்ள உங்கள் தேவனுடைய ஆலயத்துப் பலிபீடத்தின்மேல் செலுத்துவாயாக.

எஸ்றா 7:18. மீதியான வெள்ளியையும் பொன்னையும் கொண்டு செய்யவேண்டியதின்னதென்று உனக்கும் உன் சகோதரருக்கும் நலமாய்த் தோன்றுகிறபடி அதை உங்கள் தேவனுடைய சித்தத்தின்படியே செய்யுங்கள்.

எஸ்றா 7:19. உன் தேவனுடைய ஆலயத்தின் ஆராதனைக்காக உனக்குக் கொடுக்கப்பட்ட பணிமுட்டுகளையும், நீ எருசலேமின் தேவனுடைய சந்நிதியில் ஒப்புவிக்கக்கடவாய்.

எஸ்றா 7:20. பின்னும் உன் தேவனுடைய ஆலயத்துக்கு அவசியமாய்க் கொடுக்க வேண்டியிருப்பதை, நீ ராஜாவின் கஜானாவிலிருந்து வாங்கிக் கொடுப்பாயாக.

எஸ்றா 7:21. நதிக்கு அப்புறத்திலிருக்கிற எல்லா கஜான்சிகளுக்கும் அர்தசஷ்டா என்னும் ராஜாவாகிய நாம் இடுகிற கட்டளை என்னவென்றால், பரலோகத்தின் தேவனுடைய நியாயப்பிரமாணத்தைப் போதிக்கும் வேதபாரகனாகிய எஸ்றா என்னும் ஆசாரியன் நூறு தாலந்து வெள்ளி, நூற்றுக்கலக் கோதுமை, நூற்றுக்கலத் திராட்சரசம், நூற்றுக்கல எண்ணெய்மட்டும் உங்களைக் கேட்பவை எல்லாவற்றையும்,

எஸ்றா 7:22. வேண்டிய உப்பையும், தாமதமில்லாமல் கொடுக்கவும்,

எஸ்றா 7:23. பரலோகத்தின் தேவனுடைய கற்பனையின்படியே, எது தேவையாயிருக்குமோ அதுவெல்லாம் பரலோகத்தின் தேவனுடைய ஆலயத்திற்கு ஜாக்கிரதையாய்ச் செலுத்தப்படவும் வேண்டும்; ராஜாவும் அவர் குமாரரும் ஆளும் ராஜ்யத்தின்மேல் கடுங்கோபம் வருவானேன்.

எஸ்றா 7:24. பின்னும் ஆசாரியரும், லேவியரும், பாடகரும், வாசல் காவலாளரும், நிதனீமியரும், தேவனுடைய ஆலயத்தின் பணிவிடைக்காரருமான ஒருவன் மேலும் பகுதியாகிலும் தீர்வையாகிலும் ஆயமாகிலும் சுமத்தலாகாதென்று அவர்களைக்குறித்து உங்களுக்கு அறியப்படுத்துகிறோம்.

எஸ்றா 7:25. பின்னும் நதிக்கு அப்புறத்திலிருந்து உன் தேவனுடைய நியாயப்பிரமாணங்களை அறிந்த சகல ஜனங்களையும் நியாயம் விசாரிக்கத்தக்க துரைகளையும், நியாயாதிபதிகளையும், எஸ்றாவாகிய நீ உன்னிலுள்ள உன் தேவனுடைய ஞானத்தின்படியே ஏற்படுத்துவாயாக; அந்தப் பிரமாணங்களை அறியாதவர்களுக்கு அவைகளை உபதேசிக்கவுங்கடவாய்.

எஸ்றா 7:26. உன் தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்படியேயும், ராஜாவினுடைய நியாயப் பிரமாணத்தின்படியேயும் செய்யாதவனெவனும், உடனே மரணத்துக்காகிலும், தேசத்துக்குப் புறம்பாக்குதலுக்காகிலும், அபராதத்துக்காகிலும், காவலுக்காகிலும் தீர்க்கப்பட்டுத் தண்டிக்கப்படக்கடவன் என்று எழுதியிருந்தது.

பெர்சியாவின் ராஜாவாகிய அர்தசஷ்டா ஆசாரியனாகிய எஸ்றாவுக்கு ஒரு நிருபத்தைக் கொடுக்கிறான். அது ஒரு சன்னத நிருபம். அந்த சன்னதின் நகல் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. எஸ்றா படித்து தேறின வேதபாரகன். அவன் ஒரு ஆசாரியன். அவன் கர்த்தருடைய கற்பனைகளின் வார்த்தைகளிலும், கர்த்தர் இஸ்ரவேலுக்கு கொடுத்த கட்டளைகளிலும் எஸ்றா படித்து தேறின வேதபாரகனாயிருக்கிறான் (எஸ்றா 7:11).

எஸ்றா யூதர்களின் நன்மைக்காக பாடுபடவேண்டும். அதற்கான அதிகாரத்தை அர்தசஷ்டா ராஜா அவனுக்கு கொடுக்கிறான். அர்தசஷ்டா தன்னைப்பற்றிச் சொல்லும்போது, தன்னை "ராஜாதி ராஜாவாகிய அர்தசஷ்டா" என்று சொல்லுகிறான். அர்தசஷ்டா தன்னைப்பற்றி நினைக்கவேண்டியதற்கு அதிகமாக நினைக்கிறான். தன்னைப்பற்றி புகழவேண்டியதற்கு அதிகமாகப் புகழுகிறான்.

தேவனாகிய கர்த்தரே ராஜாதி ராஜாவாகயிருக்கிறார். அர்தசஷ்டா பெர்சியா தேசத்திற்கு ராஜா. அவன் தன்னை ராஜாதி ராஜா என்று சொன்னாலும், மெய்யாகவே, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் மாத்திரமே, ராஜாதி ராஜாவாயிருக்கிறார். அர்தசஷ்டாவுக்கு கீழே ஒரு சில ராஜாக்கள் இருக்கிறார்கள். ஆகையினால் இவன் தன்னை ஒரு மகாராஜா என்று சொல்லலாம். ஆனால் அர்தசஷ்டாவோ தன்னை ராஜாதி ராஜா என்று சொல்லுகிறான்.

அர்தசஷ்டா தனக்கு வானத்திலும் பூமியிலும் சர்வஅதிகாரமும் இருப்பதாக நினைக்கிறான். ஆனால் அவனுடைய அதிகாரம் குறைவுள்ளது. கர்த்தரே சர்வஅதிகாரமுள்ளவர். அவர் மாத்திரமே சர்வவல்லமையுள்ளவர். அர்தசஷ்டாவின் காலங்கள் கர்த்தருடைய கரத்திலுள்ளது.

அர்த்தசஷ்டா எஸ்றாவைப்பற்றிச் சொல்லும்போது, "தேவனுடைய நியாயப்பிரமாணத்தைப் போதிக்கிற உத்தம வேதபாரகனாகிய எஸ்றா என்னும் ஆசாரியன்" (எஸ்றா 7:12) என்று சொல்லுகிறான். அர்தசஷ்டா எஸ்றாவை வாழ்த்துகிறான். அர்தசஷ்டா எஸ்றாவுக்கு "பூரணசமாதானமுண்டாவதாக வாழ்த்தி" இந்த சன்னதை எழுதுகிறான்.

ஒரு தேசத்திற்கு அதிபதியாயிருப்பதைவிட, தேவனுடைய நியாயப்பிரமாணத்தைப் போதிக்கிற உத்தம வேதபாரகனே, அர்தசஷ்டாவின் பார்வையில் மேன்மையானவனாயிருக்கிறான். ராஜா எஸ்றாவுக்கு, எருசலேமுக்குப்போக அனுமதி கொடுக்கிறான்.

"நம்முடைய ராஜ்யத்தில் இருக்கிற இஸ்ரவேல் ஜனத்திலும், அதின் ஆசாரியரிலும், லேவியரிலும், உன்னோடேகூட எருசலேமுக்குப் போக மனப்பூர்வமாயிருக்கிற யாவரும் போகலாம் என்று நம்மாலே உத்தரவாகிறது" (எஸ்றா 7:13) என்று அர்தசஷ்டா ராஜா தன்னுடைய சன்னதின் நகலில் எழுதுகிறான்.

எருசலேமுக்குப் போக மனப் பூர்வமாயிருக்கிற யாவரும் போகலாம். எருசலேமிற்குத் திரும்பிப்போக வேண்டுமென்பது கட்டாயமல்ல. விருப்பப்பட்டவர்கள் போகலாம். எருசலேமிற்குத் திரும்பிப் போனவர்கள் மட்டுமே இஸ்ரவேல் தேசத்தில் அங்கம் பெறுகிறார்கள். இயேசு கிறிஸ்துவிற்கு முன்பாக உள்ள 500 வருஷ வரலாற்றுக் காலங்களில் கர்த்தர் இவர்களோடு கிரியை நடப்பித்தார். அதுமட்டுமல்லாமல், இயேசு கிறிஸ்து இவர்கள் மத்தியில் வந்தார் (மத் 10:6; யோவான் 1:11; ரோமர் 1:16).

எஸ்றா எருசலேமுக்குப்போய், அங்கே தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்படி யூதாவையும், எருசலேமையும் விசாரித்து நடத்தவேண்டும். எஸ்றாவின் கையிலே தேவனுடைய நியாயப்பிரமாணம் இருக்கிறது. யூதாவிலும் எருசலேமிலும் இருக்கிறவர்கள் தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்.

எருசலேமிலே தேவனுடைய ஆலயம் கட்டப்பட்டிருக்கிறது. ஆசாரிய வகுப்புக்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தேவனுடைய ஆலயத்திலுள்ள பலிபீடத்திலே பலிகள் செலுத்தப்படுகிறது. இவையெல்லாமே தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்படி நடைபெறுகிறதா என்பதை எஸ்றா விசாரிக்கவேண்டும். அதில் ஏதாவது குறைபாடுகளோ அல்லது குழப்பங்களோ காணப்படுமென்றால், எஸ்றா அவற்றை சீர்திருத்தம்பண்ணவேண்டும்.

அர்தசஷ்டா ராஜா எஸ்றாவை எருசலேமுக்கு அனுப்பும்போது, "நீ உன் கையிலிருக்கிற உன் தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்படி, யூதாவையும் எருசலேமையும் விசாரித்து நடத்தவும், ராஜாவும் அவருடைய மந்திரிமாரும் எருசலேமில் வாசம்பண்ணுகிற இஸ்ரவேலின் தேவனுக்கு மனப்பூர்வமாய்க் கொடுத்த வெள்ளியையும் பொன்னையும், பாபிலோன் சீமையெங்கும் உனக்குக் கிடைக்கும் எல்லா வெள்ளியையும் பொன்னையும், உன்னுடைய ஜனமும் ஆசாரியரும் எருசலேமிலுள்ள தங்கள் தேவனுடைய ஆலயத்துக்கென்று மனஉற்சாகமாய்க் கொடுக்கும் காணிக்கைகளையும் நீ கொண்டு போகவும், நீ ராஜாவினாலும் அவருடைய ஏழு மந்திரிமாராலும் அனுப்பப்படுகிறாய்" (எஸ்றா 7:14-16) என்று சொல்லியனுப்புகிறான்.

எஸ்றாவுக்கு எருசலேமிலே கர்த்தருடைய ஊழியம் காத்துக்கொண்டிருக்கிறது. அர்தசஷ்டா எஸ்றாவை ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக எருசலேமுக்கு அனுப்புகிறான். புதிய ஏற்பாட்டுக்காலத்தில், அப்போஸ்தலர் பவுல் தீத்துவை, ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக கிரேத்தா தீவுக்கு அனுப்பினார்.

"நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கும், நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, பட்டணங்கள்தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும், உன்னைக் கிரேத்தாதீவிலே விட்டுவந்தேனே" (தீத் 1:5).

யூதர்கள் எங்கே இருந்தாலும், அங்கே அவர்கள் தங்களை தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்படி ஆளுகை செய்து கொள்கிறார்கள். இதனால் யூதர்கள் மத்தியிலே பூர்வகாலத்து மேன்மைகள் மங்காமல் பிரகாசமாயிருக்கிறது.

எஸ்றா எருசலேமுக்குப் போகும்போது, தேவனுடைய ஆலயத்தை விசாரிப்பதற்கும், கர்த்தருடைய ஊழியத்தை விசாரிப்பதற்கும், அங்கே வாசம்பண்ணுகிற யூதர்களை விசாரிப்பதற்கும் பணம் தேவைப்படும். அர்தசஷ்டா ராஜா எஸ்றாவுக்கு தேவையான பணத்தைக் கொடுத்து அவனை எருசலேமுக்கு அனுப்புகிறான்.

எஸ்றா பணத்தைப் பெற்றுக்கொண்டு, அதை எருசலேமுக்குக் கொண்டு போகவேண்டும். அர்தசஷ்டா ராஜா எஸ்றாவுக்கு தேவையான வெள்ளியையும் பொன்னையும் கொடுத்து, "அந்தத் திரவியத்தினால் நீ தாமதமின்றி காளைகளையும், ஆட்டுக்கடாக்களையும், ஆட்டுக்குட்டிகளையும், அவைகளுக்கடுத்த போஜனபலிகளையும், பானபலிகளையும் வாங்கி, அவைகளை எருசலேமிலுள்ள உங்கள் தேவனுடைய ஆலயத்துப் பலிபீடத்தின்மேல் செலுத்துவாயாக" (எஸ்றா 7:17) என்று சொல்லுகிறான்.

மேலும் ராஜா எஸ்றாவிடத்திலும், அவனோடே கூடப்போகிறவர்களிடத்திலும், "மீதியான வெள்ளியையும் பொன்னையும் கொண்டு செய்யவேண்டியதின்னதென்று உனக்கும் உன் சகோதரருக்கும் நலமாய்த் தோன்றுகிறபடி அதை உங்கள் தேவனுடைய சித்தத்தின்படியே செய்யுங்கள்" (எஸ்றா 7:18) என்றும் சொல்லுகிறான்.

அர்தசஷ்டா ராஜா பரிசுத்த பணிமுட்டுகளையும் எஸ்றாவின் மூலமாக எருசலேமுக்கு கொடுத்தனுப்புகிறான். "உன் தேவனுடைய ஆலயத்தின் ஆராதனைக்காக உனக்குக் கொடுக்கப்பட்ட பணிமுட்டுகளையும், நீ எருசலேமின் தேவனுடைய சந்நிதியில் ஒப்புவிக்கக்கடவாய்" (எஸ்றா 7:19) என்று ராஜா எஸ்றாவுக்கு சொல்லுகிறான்.

தேவனுடைய ஆலயத்திற்கு அவசியமாய்க் கொடுக்கவேண்டியிருப்பதை, எஸ்றா ராஜாவின் கஜனாவிலிருந்து வாங்கிக்கொண்டு போகலாம் (எஸ்றா 7:20). மேலும் நதிக்கு அப்புறத்திலே இருக்கிற கஜான்சிகளிடத்தில், எஸ்றா தனக்கு தேவையானவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

அர்தசஷ்டா ராஜா நதிக்கு அப்புறத்திலிருக்கிற எல்லா கஜான்சிகளுக்கும் கட்டளை கொடுக்கிறான். அந்தக் கட்டளையின் விவரம் வருமாறு:

1. பரலோகத்தின் தேவனுடைய நியாயப்பிரமாணத்தைப் போதிக்கும் வேதபாரகனாகிய எஸ்றா என்னும் ஆசாரியன் நூறு தாலந்து வெள்ளி, நூற்றுக்கலக் கோதுமை, நூற்றுக்கலத் திராட்சரசம், நூற்றுக்கல எண்ணெய்மட்டும் உங்களைக் கேட்பவை எல்லாவற்றையும், வேண்டிய உப்பையும், தாமதமில்லாமல் கொடுக்க வேண்டும் (எஸ்றா 7:21,22).

2. பரலோகத்தின் தேவனுடைய கற்பனையின்படியே, எது தேவையாயிருக்குமோ அதுவெல்லாம் பரலோகத்தின் தேவனுடைய ஆலயத்திற்கு ஜாக்கிரதையாய்ச் செலுத்தப்படவும் வேண்டும் (எஸ்றா 7:23).

3. ஆசாரியரும், லேவியரும், பாடகரும், வாசல் காவலாளரும், நிதனீமியரும், தேவனுடைய ஆலயத்தின் பணிவிடைக்காரருமான ஒருவன் மேலும் பகுதியாகிலும் தீர்வையாகிலும் ஆயமாகிலும்சுமத்தலாகாதென்று அவர்களைக்குறித்து உங்களுக்கு அறியப்படுத்துகிறோம் (எஸ்றா 7:24).

தேவனுடைய ஆலயத்திற்கு செலுத்த வேண்டியதை செலுத்தவில்லையென்றால், கர்த்தருடைய கோபம் தன்மேலும் தன் குமாரர்மேலும், தான் ஆளும் ராஜ்யத்தின்மேலும் வரும் என்று பெர்சியாவின் ராஜாவாகிய அர்தசஷ்டா பயப்படுகிறான்.

பெர்சிய தேசத்தின் ராஜாக்கள் கர்த்தருக்குப் பயப்படுகிறார்கள். எஸ்தருடைய கணவனான அகாஸ்வேருவின் காலத்திலிருந்து கர்த்தரைப் பற்றிய பயம் ராஜவம்சத்தாருக்கு வருகிறது. எஸ்தரின் குமாரனாகிய கோரேஸ், அதன்பின்பு, அர்தசஷ்டா ஆகிய அனைவருமே கர்த்தருக்குப் பயப்படுகிறார்கள். தேவனுடைய கோபாக்கினையிலிருந்து விடுதலை பெறுவதற்காகத் தேவாலயத்திற்குத் தேவையான அனைத்தையும் தருவதற்குச் சம்மதிக்கிறார்கள்.

அர்தசஷ்டா இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைக் கனம்பண்ணுகிறான். அவன் ஆரம்பத்தில் தேவனைப்பற்றிச் சொன்னபோது, அவரை எருசலேமின் தேவன் என்று சொன்னான். ஆனால் இப்போதோ அவன், இஸ்ரவேலின் தேவனை, "பரலோகத்தின் தேவன்" என்று சொல்லுகிறான்.

அர்தசஷ்டாவின் ராஜ்யபாரத்தில், கர்த்தருடைய ஊழியத்தை செய்கிற எல்லோருக்கும் வரிவிலக்கு கொடுக்கப்படுகிறது அவர்கள்மீது பகுதியோ, தீர்வையோ, ஆயமோ சுமத்தப்படவில்லை.

எஸ்றா யூதாவையும் எருசலேமையும் தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்படி நியாயம் விசாரிக்கவேண்டும். அவன் தனக்கு உதவியாக துரைகளையும் நியாயாதிபதிகளையும் நியமித்துக்கொள்ளலாம். எஸ்றா தேவனுடைய நியாயப்பிரமாணங்களை அறியாதவர்களுக்கு, அவைகளை உபதேசிக்கவேண்டும். தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்படி செய்யாதவனை எஸ்றா தண்டிக்கலாம்.

ஐபிராத்து நதியின் மேற்குப் பகுதியில் சகல ஜனங்களையும் நியாயம் விசாரிக்கும் பொறுப்பு எஸ்றாவுக்குக் கொடுக்கப் படுகிறது. ஜனங்களை நியாயம் விசாரிக்க தேவனுடைய நியாயப்பிரமாணங்களை அறிந்த துரைகளையும், நியாயாதிபதிகளையும் எஸ்றா ஏற்படுத்துகிறான். தேவனுடைய நியாயப் பிரமாணத்தின்படியேயும், ராஜாவினுடைய நியாயப்பிரமாணத்தின்படியேயும் செய்யாதவனைத் தண்டிக்கும் அதிகாரமும் எஸ்றாவுக்குக் கொடுக்கப்படுகிறது. (எஸ்றா 7:26).

அர்தசஷ்டா ராஜா நதிக்கு அப்புறத்தில் இருக்கிற ஜனங்களைக் குறித்து எஸ்றாவுக்கு இரண்டு கட்டளைகளைக் கொடுக்கிறான். அவற்றின் விவரம் வருமாறு:

1. நதிக்கு அப்புறத்திலிருந்து உன் தேவனுடைய நியாயப்பிரமாணங்களை அறிந்த சகல ஜனங்களையும் நியாயம் விசாரிக்கத் தக்க துரைகளையும், நியாயாதிபதிகளையும், எஸ்றாவாகிய நீ உன்னிலுள்ள உன் தேவனுடைய ஞானத்தின்படியே ஏற்படுத்துவாயாக; அந்தப் பிரமாணங்களை அறியாதவர்களுக்கு அவைகளை உபதேசிக்கவுங்கடவாய் (எஸ்றா 7:25).

2. உன் தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்படியேயும், ராஜாவினுடைய நியாயப்பிரமாணத்தின் படியேயும் செய்யாதவனெவனும், உடனே மரணத்துக்காகிலும், தேசத்துக்குப் புறம்பாக்குதலுக்காகிலும், அபராதத்துக்காகிலும், காவலுக்காகிலும் தீர்க்கப்பட்டுத் தண்டிக்கப்படக்கடவன் (எஸ்றா 7:26).

தேவனுடைய நியாயப்பிரமாணத்தை அறிந்தவர்கள், புறஜாதியாரின் பிரமாணங்களுக்கு கீழ்ப்படிய வேண்டியதில்லை. எஸ்றாவோ அல்லது அவனோடுகூட நியாயம் விசாரிக்கிற நியாயாதிபதிகளோ, புதிய பிரமாணங்கள் எதையும் இயற்றக்கூடாது. தேவனுடைய நியாயப்பிரமாணங்களே ஜனங்களை நடத்துவதற்கு போதுமானது.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்கள் தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்படி செய்யவேண்டும். அதே சமயத்தில் அவர்கள் அர்தசஷ்டா ராஜாவினுடைய நியாயப்பிரமாணத்தின்படியும் செய்யவேண்டும். கர்த்தருக்கு கீழ்ப்படிகிறவர்கள். அவர்களுடைய தேசங்களின் சட்டங்களுக்கும் கீழ்ப்படிவார்கள். கர்த்தருக்கு கீழ்ப்படியாதவர்கள் தங்கள் தேசத்தின் சட்டங்களுக்கு கீழ்ப்படியாமல் கலகம்பண்ணுவார்கள்.

தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கும், ராஜாவினுடைய நியாயப்பிரமாணத்திற்கும் கீழ்ப்படியாதவர்களுக்கு நான்குவிதமான தண்டனைகள் கொடுக்கப்படுகிறது. அவற்றின் விவரம் வருமாறு:

1. மரணதண்டனை.

2. தேசத்திற்கு புறம்பாக்குதல்.

3. அபதாரம் விதிக்கப்படுதல்.

4. காவலில் அடைக்கப்படுதல்.

கீழ்ப்படியாதவர்களுக்கு கடுமையான தண்டனை விதிக்கப்படுவதால், ஜனங்கள் தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கும், ராஜாவின் நியாயப்பிரமாணத்திற்கும் கீழ்ப்படிந்து ஜீவிக்கிறார்கள். இதனால் எருசலேமிலே கலகமோ, குழப்பமோ இல்லை. அங்கே சந்தோஷமும் சமாதானமும் நிரம்பியிருக்கிறது.

அர்தசஷ்டா ராஜா எஸ்றாவை யூதாதேசத்திற்கு அனுப்பியதற்கான காரணங்களின் விவரம் வருமாறு:

1. தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்படி, யூதாவையும் எருசலேமையும் விசாரித்து நடத்த. (எஸ்றா 7:14)

2. ராஜாவும் அவருடைய மந்திரிமாரும் எருசலேமில் வாசம்பண்ணுகிற இஸ்ரவேலின் தேவனுக்கு மனப் பூர்வமாய்க் கொடுத்த வெள்ளியையும் பொன்னையும் எருசலேமுக்குக் கொண்டுபோக. (எஸ்றா 7:15)

3. பாபிலோன் சீமையெங்கும் கிடைக்கும் எல்லா வெள்ளியையும் பொன்னையும், எருசலேமிலுள்ள தங்கள் தேவனுடைய ஆலயத்துக்கென்று மனஉற்சாகமாய்க் கொடுக்கும் காணிக்கைகளையும் கொண்டுபோக (எஸ்றா 7:16)

4. அந்தத் திரவியத்தினால் காளைகளையும், ஆட்டுக்கடாக்களையும், ஆட்டுக் குட்டிகளையும், அவைகளுக்கடுத்த போஜனபலிகளையும், பானபலிகளையும் வாங்க. (எஸ்றா 7:17)

5. மீதியான வெள்ளியையும் பொன்னையும் கொண்டு செய்யவேண்டிய தின்னதென்று தீர்மானம் பண்ண. (எஸ்றா7:18)

6. தேவனுடைய ஆலயத்தின் ஆராதனைக்காக பணிமுட்டுகளை எருசலேமின் தேவனுடைய சந்நிதியில் ஒப்புவிக்க. (எஸ்றா 7:19)

7. தேவனுடைய ஆலயத்துக்கு அவசியமாய்க் கொடுக்க வேண்டியிருப்பதை, ராஜாவின் கஜானாவிலிருந்து வாங்கிக் கொடுக்க. (எஸ்றா 7:20)

8. நதிக்கு அப்புறத்திலிருக்கிற எல்லா கஜான்சிகளுக்கும் அர்தசஷ்டா என்னும் ராஜாவின் கட்டளையை அறிவிக்க. (எஸ்றா 7:21-26)

9. சகல ஜனங்களையும் நியாயம் விசாரிக்கத்தக்க துரைகளையும், நியாயாதிபதிகளையும் ஏற்படுத்த. (எஸ்றா 7:25)

10. கர்த்தருடைய பிரமாணங்களை அறியாதவர்களுக்கு அவைகளை உபதேசிக்க.

எஸ்றாவுக்கு கொடுக்கப்பட்ட திரவியத்தின் விவரம் வருமாறு:

1. நூறு தாலந்து வெள்ளி
2. நூற்றுக்கலக் கோதுமை
3. நூற்றுக்கலத் திராட்சரசம்
4. நூற்றுக்கல எண்ணெய்

எஸ்றா கர்த்தரைத் துதிக்கிறான்
எஸ்றா 7:27,28

எஸ்றா 7:27. எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்தை அலங்கரிக்க, இப்படிப்பட்ட யோசனையை ராஜாவின் இருதயத்தில் அருளி, ராஜாவுக்கும் அவருடைய மந்திரிமார்களுக்கும் ராஜாவின் கைக்குள்ளான பலத்த எல்லா மகாப்பிரபுக்களுக்கும் முன்பாக எனக்குத் தயவு கிடைக்கப்பண்ணின எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

எஸ்றா 7:28. அப்படியே என் தேவனாகிய கர்த்தருடைய கரம் என்மேல் இருந்ததினால் நான் திடன்கொண்டு, இஸ்ரவேலில் சில தலைவரை என்னோடேகூட வரும்படி சேர்த்துக்கொண்டேன்.

பெர்சியாவின் ராஜாவாகிய அர்தசஷ்டா எஸ்றாவுக்கு முக்கியமான பொறுப்புக்களைக் கொடுத்திருக்கிறான். இதற்காக எஸ்றா கர்த்தரைத் துதிக்கிறான். இப்படிப்பட்ட யோசனையை ராஜாவின் இருதயத்தில் அருளிய கர்த்தரை எஸ்றா நன்றியோடு துதிக்கிறான்.

மனுஷருடைய இருதயங்களில் யோசனைகள் தானாக உண்டாவதில்லை. கர்த்தரே தமக்கு சித்தமான யோசனைகளை மனுஷரின் இருதயத்தில் அருளுகிறார். தேவனுடைய தெய்வீக பராமரிப்பினாலும், அவருடைய கிருபையினாலும் மனுஷருடைய இருதயங்களில் யோசனைகள் உண்டாகிறது.

நம்முடைய இருதயங்களிலோ அல்லது மற்றவர்களுடைய இருதயங்களிலோ, நல்ல யோசனைகள் வெளிப்படும்போது, கர்த்தரே அந்த யோசனைகளை அவர்களுடைய இருதயங்களில் அருளினார் என்பதை அங்கீகரித்து, நாம் கர்த்தரைத் துதிக்கவேண்டும்.

ராஜாக்களும், மந்திரிகளும், அரசாங்க அதிகாரிகளும் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு விரோதமாக எதிர்த்து நிற்காமல், அவர்கள் சுவிசேஷ பிரபல்யத்திற்கு ஆதரவு கொடுக்கும்போது, இதுவும் கர்த்தருடைய பெரிதான கிருபை என்பதை நாம் நினைவுகூர்ந்து, கர்த்தரை நன்றியோடு துதிக்கவேண்டும்.

எஸ்றா தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் சொல்லுகிறான். "எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்தை அலங்கரிக்க, இப்படிப்பட்ட யோசனையை ராஜாவின் இருதயத்தில் அருளி, ராஜாவுக்கும் அவருடைய மந்திரிமார்களுக்கும் ராஜாவின் கைக்குள்ளான பலத்த எல்லா மகாப்பிரபுக்களுக்கும் முன்பாக எனக்குத் தயவு கிடைக்கப்பண்ணின எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" (எஸ்றா 7:27) என்று எஸ்றா சொல்லுகிறான்.

இந்த அதிகாரத்தில் தேவாலயத்தைப் பற்றி கூறப்பட்டிருக்கும் வாக்கியங்கள் எல்லாமே தேவாலயம் கட்டி முடிக்கப்பட்டு விட்டதை வெளிப்படுத்துகிறது. அந்த தேவாலயத்தில் இப்போது முறைப்படியான ஆராதனை மறுபடியும் ஆரம்பித்து வைக்கப்படுகிறது.

கர்த்தர் எஸ்றாவுக்கு தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறார். கர்த்தருடைய கரம் எஸ்றாவின் மேல் இருக்கிறது. எஸ்றா இயல்பாகவே பெலமுள்ளவன். இப்போது கர்த்தருடைய கரம் எஸ்றாவின்மேல் இருப்பதினால், அவன் இன்னும் அதிகமாய்த் திடன்கொள்கிறான். இஸ்ரவேலில் சில தலைவரை தன்னோடுகூட வரும்படி சேர்த்துக்கொள்கிறான் (எஸ்றா 7:28).

எஸ்றா தன்னுடைய சுயபலத்தை மேன்மைப்படுத்தவில்லை. அவன் கர்த்தருடைய கரத்தை மேன்மைப்படுத்துகிறான். எஸ்றா தன்னுடைய சொந்த இருதயத்தை புகழாமல், கர்த்தருடைய கரத்தைப் புகழுகிறான். கர்த்தருடைய கரம் எஸ்றாவுக்கு ஆதரவாயிருக்கிறது.

8 அதிகாரம்

எஸ்றா பாபிலோன் தேசத்திலிருந்து எருசலேமுக்கு பிரயாணம் பண்ணின சம்பவம் இந்த அதிகாரத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. எஸ்றாவோடுகூட எருசலேமுக்குப் போனவர்களின் வம்ச அட்டவணைகளும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது (எஸ்றா 8:1-20). தங்களுடைய பிரயாணத்தில் கர்த்தருடைய பிரசன்னம் தங்களோடு கூடயிருக்கவேண்டும் என்பதற்காக, எஸ்றாவும் அவனோடு கூடயிருக்கிறவர்களும் உபவாசம்பண்ணி ஜெபிக்கிறார்கள் (எஸ்றா 8:21-23).

எருசலேமில் கட்டப்பட்டிருக்கிற தேவனுடைய ஆலயத்திற்கு அர்தசஷ்டா ராஜாவும், பெர்சியா தேசத்திலுள்ள ஜனங்களும் திரளான காணிக்கைகளை எஸ்றா மூலமாக கொடுத்தனுப்புகிறார்கள். எஸ்றா தன்னிடத்திலுள்ள அந்த பொக்கிஷங்களை ஆசாரியர்களிடத்தில் பொறுப்பாய் ஒப்படைக்கிறான் (எஸ்றா 8:24-30).

எஸ்றாவும் அவனோடிருக்கிறவர்களும் எருசலேமுக்குப் பிரயாணமாய்ப் போகும்போது, கர்த்தருடைய கிருபையுள்ள கரம் அவர்களைப் பாதுகாப்பாய் வழிநடத்துகிறது (எஸ்றா 8:31). அவர்கள் எல்லோரும் எருசலேமுக்கு பாதுகாப்பாய் வந்து சேருக்கிறார்கள். தங்களிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிற தேவனுடைய ஆலயத்தின் பொக்கிஷங்களை அவர்கள் ஆசாரியரிடத்தில் பொறுப்பாய் ஒப்புவிக்கிறார்கள் (எஸ்றா 8:32-34). ராஜாவின் சன்னதிகளை, நதிக்கு இப்புறத்திலே இருக்கிற ராஜாவின் தேசாதிபதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் ஒப்புவிக்கிறார்கள் (எஸ்றா 8:36). அவர்கள் கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியை செலுத்துகிறார்கள் (எஸ்றா 8:35).

எஸ்றாவோடுகூட வந்தவர்கள்
எஸ்றா 8:1-20

எஸ்றா 8:1. அர்தசஷ்டா ராஜா அரசாளும் காலத்தில் பாபிலோனிலிருந்து என்னோடேகூட வந்த தங்கள் பிதாக்கள் வம்சங்களின் தலைவரும் அவர்கள் வம்ச அட்டவணைகளுமாவன:

எஸ்றா 8:2. பினெகாசின் புத்திரரில் கெர்சோம், இத்தாமாரின் புத்திரரில் தானியேல், தாவீதின் புத்திரரில் அத்தூஸ்,

எஸ்றா 8:3. பாரோஷின் புத்திரரில் ஒருவனான செக்கனியாவின் புத்திரரில் சகரியாவும், அவனோடேகூட வம்ச அட்டவணையில் எழுதியிருக்கிற நூற்றைம்பது ஆண்மக்களும்,

எஸ்றா 8:4. பாகாத்மோவாபின் புத்திரரில் செரகியாவின் குமாரனாகிய எலியோனாயும், அவனோடேகூட இருநூறு ஆண்மக்களும்,

எஸ்றா 8:5. செக்கனியாவின் புத்திரரில் யகசியேலின் குமாரனும், அவனோடேகூட முந்நூறு ஆண்மக்களும்,

எஸ்றா 8:6. ஆதினின் புத்திரரில் யோனத்தானின் குமாரனாகிய ஏபேதும், அவனோடேகூட ஐம்பது ஆண்மக்களும்,

எஸ்றா 8:7. ஏலாமின் புத்திரரில் அதலியாவின் குமாரனாகிய எஷாயாவும், அவனோடேகூட எழுபது ஆண்மக்களும்,

எஸ்றா 8:8. செப்பதியாவின் புத்திரரில் மிகவேலின் குமாரனாகிய செப்பதியாவும், அவனோடேகூட எண்பது ஆண்மக்களும்,

எஸ்றா 8:9. யோவாபின் புத்திரரில் யெகியேலின் குமாரனாகிய ஒபதியாவும், அவனோடேகூட இருநூற்றுப் பதினெட்டு ஆண்மக்களும்,

எஸ்றா 8:10. செலோமித்தின் புத்திரரில் யொசிபியாவின் குமாரனும், அவனோடேகூட நூற்றறுபது ஆண்மக்களும்,

எஸ்றா 8:11. பெயாயின் புத்திரரில் பெயாயின் குமாரனாகிய சகரியாவும், அவனோடேகூட இருபத்தெட்டு ஆண்மக்களும்,

எஸ்றா 8:12. அஸ்காதின் புத்திரரில் காத்தானின் குமாரனாகிய யோகனானும், அவனோடேகூட நூற்றுப்பத்து ஆண்மக்களும்,

எஸ்றா 8:13. அதோனிகாமின் கடைசிப்புத்திரரான எலிபேலேத், ஏயெல், செமாயா, என்னும் நாமங்களுள்ளவர்களும், அவர்களோடேகூட அறுபது ஆண்மக்களும்,

எஸ்றா 8:14. பிக்வாயின் புத்திரரில் ஊத்தாயும், சபூதும், அவர்களோடேகூட எழுபது ஆண்மக்களுமே.

எஸ்றா 8:15. இவர்களை நான் அகாவாவுக்கு ஓடுகிற நதியண்டையிலே கூட்டிக்கொண்டுபோனேன்; அங்கே மூன்றுநாள் தங்கியிருந்தோம்; நான் ஜனங்களையும் ஆசாரியரையும் பார்வையிடும்போது, லேவியின் புத்திரரில் ஒருவரையும் அங்கே காணவில்லை.

எஸ்றா 8:16. ஆகையால் நான் எலியேசர், அரியேல், செமாயா, எல்நாத்தான், யாரிப், எல்நாத்தான், நாத்தான், சகரியா, மிசுல்லாம் என்னும் தலைவரையும், யோயாரிப், எல்நாத்தான் என்னும் புத்திமான்களையும் அழைப்பித்து,

எஸ்றா 8:17. கசிப்பியா என்னும் ஸ்தலத்திலிருக்கிற தலைவனாகிய இத்தோவிடத்திற்குச் செய்தி கொண்டுபோக அவர்களுக்குக் கற்பித்து, நமது தேவனுடைய ஆலயத்துப் பணிவிடைக்காரரை எங்களிடத்திற்கு அழைத்துவரும்படி, அவர்கள் கசிப்பியா என்னும் ஸ்தலத்திலிருக்கிற தங்கள் சகோதரனாகிய இத்தோவுக்கும், நிதனீமியருக்கும் சொல்லவேண்டிய வார்த்தைகளைச் சொல்லிக்கொடுத்தேன்.

எஸ்றா 8:18. அவர்கள் எங்கள் மேலிருந்த எங்கள் தேவனுடைய தயையுள்ள கரத்தின்படியே, இஸ்ரவேலுக்குப் பிறந்த லேவியின் குமாரனாகிய மகேலியின் புத்திரரில் புத்தியுள்ள மனுஷனாகிய செரெபியாவும் அவன் குமாரரும் சகோதரருமான பதினெட்டுப்பேரையும்,

எஸ்றா 8:19. மெராரியரின் புத்திரரில் அஷபியாவும் அவனோடே எஷாயாவும் அவன் சகோதரரும் அவர்கள் குமாரருமான இருபதுபேரையும்,

எஸ்றா 8:20. தாவீதும் பிரபுக்களும் லேவியருக்குப் பணிவிடைக்காரராக வைத்த நிதனீமியரில் இருநூற்று இருபது பேரையும் எங்களிடத்தில் அழைத்துக் கொண்டுவந்தார்கள்; அவர்கள் எல்லாருடைய பேர்களும் குறிக்கப்பட்டன.

பெர்சியாவின் ராஜாவாகிய அர்தசஷ்டா எஸ்றாவை எருசலேமுக்கு அனுப்புகிறான். ராஜாவின் உத்தரவைப் பெற்றுக்கொண்ட பின்பு, எஸ்றா தன்னோடுகூட எருசலேமுக்குப் போக விரும்புகிறவர்களை கூட்டிச்சேர்க்கிறான்.

"ஜாதிகளுக்கு ஒரு கொடியை ஏற்றி, இஸ்ரவேலில் துரத்துண்டவர்களைச் சேர்த்து, யூதாவில் சிதறடிக்கப்பட்டவர்களை பூமியின் நான்கு திசைகளிலுமிருந்து கூட்டுவார்" *(ஏசா 11:12)*.

சீயோனின் குமாரர்கள், பாபிலோன் குமாரத்திகளோடு வாசம்பண்ணுகிறார்கள். சீயோனின் புத்திரர் பாபிலோன் தேசத்திலிருந்து எருசலேமுக்குப் புறப்பட்டுப்போகவேண்டும். அங்கே கர்த்தருடைய ஆலயம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. ஆலயத்தில் கர்த்தருக்கு ஆராதனைகளும் நடைபெறுகிறது. இப்போது சீயோன் குமாரர்கள் எருசலேமுக்கு திரும்பி வருவதற்கு ஏற்ற வேளையாயிருக்கிறது.

எருசலேமுக்கு திரும்பிப்போக விரும்புகிறவர்கள் தன்னோடுகூட வரலாம் என்று எஸ்றா அழைப்பு கொடுக்கிறான். எஸ்றாவின் அழைப்பை ஏற்று யூதர்களில் அநேகர், எஸ்றாவோடுகூட எருசலேமுக்குப்போக மனப்பூர்வமாய் சம்மதிக்கிறார்கள்.

அர்தசஷ்டா ராஜா அரசாளும் காலத்தில் பாபிலோனிலிருந்து எஸ்றாவோடுகூட வந்த தங்கள் பிதாக்கள் வம்சங்களின் தலைவரும் அவர்கள்வம்ச அட்டவணைகளும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது (எஸ்றா 8:1).

பாபிலோனிலிருந்து எஸ்றாவோடுகூட எருசலேமுக்கு வந்தவர்களின் விவரம் வருமாறு:

1. பினெகாஸ், இத்தாமார், தாவீது, செக்கனியா, பாரோஸ் ஆகியோரின் புத்திரர் (எஸ்றா 8:2-3) - 150 பேர்
2. பாகாத்மோவாபின் புத்திரர் (எஸ்றா 8:4) - 200பேர்
3. செக்கனியாவின் புத்திரர் (எஸ்றா 8:5) - 300பேர்
4. ஆதினின் புத்திரர் (எஸ்றா 8:6) - 50 பேர்
5. ஏலாமின் புத்திரர் (எஸ்றா 8:7) - 70 பேர்
6. செப்பதியாவின் புத்திரர் (எஸ்றா 8:8) - 80 பேர்
7. யோவாபின் புத்திரர் (எஸ்றா 8:9) - 218 பேர்
8. செலோமித்தின் புத்திரர் (எஸ்றா 8:10) - 160 பேர்
9. பெயாயின் புத்திரர் (எஸ்றா 8:11) - 28பேர்
10. அஸ்காதின் புத்திரர் (எஸ்றா 8:12) - 110பேர்
11. அதோனிகாமின் கடைசிப்புத்திரர் (எஸ்றா 8:13) - 60பேர்
12. பிக்வாயின் புத்திரர் (எஸ்றா 8:14) - 70பேர்
13. மகேலியின் புத்திரர் (எஸ்றா 8:15-18) - 18பேர்
14. மெராரியரின் புத்திரர் (எஸ்றா 8:19) - 20 பேர்
15. நிதனீமியர் (எஸ்றா 8:20) - 220 பேர்

வம்சங்களின் தலைவர்களுடைய பெயர்கள் அவர்களை மேன்மைப்படுத்துவதற்காக சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களோடுகூட எருசலேமுக்குப்போன ஆண்மக்களின் எண்ணிக்கையும் இந்த அட்டவணையில் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு சொல்லப்பட்டிருக்கிற குடும்பத்தாரில் சிலர் எஸ்றா 2-ஆவது அதிகாரத்தில் ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறார்கள்.

தன்னோடு எருசலேமுக்கு கூடவருகிறவர்களை எஸ்றா அகாவாவுக்கு ஓடுகிற நதியண்டையிலே கூட்டிக்கொண்டுபோகிறான். அங்கே அவர்கள் மூன்றுநாள் தங்கியிருக்கிறார்கள். எஸ்றா ஜனங்களையும் ஆசாரியரையும் பார்வையிடுகிறான். அப்போது, லேவியின் புத்திரரில் ஒருவரும் அங்கே காணப்படவில்லை (எஸ்றா 8:15). எஸ்றாவோடுகூட சில ஆசாரியர்கள் இருக்கிறார்கள். ஆனால் அங்கே லேவியர் ஒருவர்கூடயில்லை.

பாலஸ்தீன தேசத்திற்கு லேவியரில் அநேகர் திரும்பி வரவில்லை. செருபாபேலோடு ஒருசில லேவியர் மட்டுமே திரும்பி வந்தார்கள். (எஸ்றா 2:36). ஆனாலும் ஆசாரியரில் அநேகர் பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்பி வந்தார்கள் (எஸ்றா 2:36-39).

லேவியர் கர்த்தருக்கு பரிசுத்தமானவர்கள். பெர்சியா தேசத்து ராஜா. இஸ்ரவேல் புத்திரரை எருசலேமுக்குப் போகுமாறு விடுவித்தபோது, பக்தியுள்ள லேவியர்கள், முதலாவதாக புறப்பட்டுப்போகவேண்டும். அவர்கள் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிற வேலையிலும், ஆராதனையிலும் கவனம் செலுத்தவேண்டும். ஆனால் ஏற்கெனவே எருசலேமுக்குப்போனவர்களில் லேவியர்கள் குறைவான எண்ணிக்கையிலேயே போயிருக்கிறார்கள். இப்போது எஸ்றாவோடுகூட எருசலேமுக்குப் போகிறவர்களில் லேவியர் ஒருவர்கூடயில்லை.

எருசலேமில் கட்டப்பட்டிருக்கிற கர்த்தருடைய ஆலயத்தில், ஆராதனைகளை முறைப்படி நடத்துவதற்கு, எஸ்றாவின் கையில் ஏராளமான காணிக்கைகள் இருக்கிறது. ஆனால் ஆராதனை நடத்துவதற்கு லேவியர்கள் இல்லை. ஊழியத்திற்கு பணம் இருக்கிறது. ஆனால் ஊழியம் செய்ய ஊழியக்காரர் இல்லை.

எஸ்றா தன்னோடு கூடயிருக்கிறவர்களில் பதினொரு பேரைத் தெரிந்தெடுக்கிறான். எஸ்றாவோடுகூட லேவியர் யாருமில்லை. இந்தப் பதினொரு பேருக்கும் லேவியரைத் தேடி கண்டுபிடிக்கும் பொறுப்பு கொடுக்கப்படுகிறது.

எஸ்றா தன்னோடு கூடயிருக்கிற எலியேசர், அரியேல், செமாயா, எல்நாத்தான், யாரிப், எல்நாத்தான், நாத்தான், சகரியா, மிசுல்லாம் என்னும் தலைவரையும், யோயாரிப், எல்நாத்தான் என்னும் புத்திமான்களையும் அழைப்பித்து (எஸ்றா 8:16) அவர்களை, கசிப்பியா என்னும் ஸ்தலத்திலிருக்கிற இத்தோவினிடத்திற்கு அனுப்புகிறான்.

இந்த வசனத்தில் எல்நாத்தான் என்னும் பெயர் மூன்றுமுறை வந்திருக்கிறது. அக்காலத்தில் இதுஒரு பிரபல்யமான பெயராக இருந்திருக்க வேண்டும். இந்தப் பெயருக்கு "கர்த்தர் கொடுத்திருக்கிறார்" என்று பொருள். இந்த மூன்று பேர் தவிர, எல்நாத்தான் என்னும் பெயரில் வேறொரு நபரும் இருக்கிறான். (2இராஜா 24:8; எரே 26:22; எரே 36:12,25).

எஸ்றா தேர்த்தெடுத்த பதினொரு பேரையும் கசிப்பியா என்னும் ஸ்தலத்திற்கு அனுப்புகிறான். இங்கு லேவியருக்கு பயிற்சி கொடுக்கும் வேதபாடசாலை ஒன்று இருக்கிறது. இந்த ஸ்தலம் பாபிலோன் தேசத்திலிருக்கிறது. கசிப்பியா என்னும் பெயருக்கு "வெள்ளி" என்று பொருள். கசிப்பியாவில் வெள்ளி ஆபரணங்களை செய்கிற வேலைகள் அதிகமாய் நடைபெறுகிறது. அந்த இடத்திலே வேதாகம கல்லூரி ஒன்றும் இருக்கிறது.

கசிப்பியாவிலிருக்கிற வேதபாடசாலைக்கு இத்தோ என்பவன் தலைவனாகயிருக்கிறான். அவனிடத்தில் ஏராளமான மாணவர்கள் கர்த்தருடைய ஊழியத்தை செய்வதற்கு பயிற்சி பெறுகிறார்கள். அவர்களில் சிலரை தேவனுடைய ஆலயத்து பணிவிடைகளை செய்வதற்கு, தன்னோடுகூட அனுப்புமாறு, எஸ்றா இத்தோவிடம் கேட்டுக்கொள்கிறான்.

"கசிப்பியா என்னும் ஸ்தலத்திலிருக்கிற தலைவனாகிய இத்தோவிடத்திற்குச் செய்தி கொண்டுபோக அவர்களுக்குக் கற்பித்து, நமது தேவனுடைய ஆலயத்துப் பணிவிடைக்காரரை எங்களிடத்திற்கு அழைத்துவரும்படி, அவர்கள் கசிப்பியா என்னும் ஸ்தலத்திலிருக்கிற தங்கள் சகோதரனாகிய இத்தோவுக்கும், நிதனீமியருக்கும் சொல்லவேண்டிய வார்த்தைகளைச் சொல்லிக்கொடுத்தேன்" (எஸ்றா 8:17) என்றும் எஸ்றா சொல்லுகிறான்.

"தேவனுடைய ஆலயத்துப் பணிவிடைக்காரர்" என்பவர்கள் லேவியர்கள் ஆவார்கள். எஸ்றா இவர்களைத் தன்னோடு எருசலேமிற்கு அழைத்துச் செல்ல வேண்டுமென்று விரும்புகிறான். எஸ்றாவோடு பதினெட்டு லேவியர் எருசலேமிற்குத் திரும்பிப் போகிறார்கள். (எஸ்றா 8:15,17-18).

வேதபாடசாலையின் தலைவனாகிய இத்தோவும், எஸ்றாவின் விண்ணப்பத்தை ஏற்று தன்னுடைய மாணவர்களில் நாற்பது லேவியரை எஸ்றாவோடுகூட எருசலேமுக்கு அனுப்புகிறான். இவர்களின் பெயர்கள் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

தேவனுடைய தயையுள்ள கரம், எஸ்றாவின்மீதும், அவனோடுகூட எருசலேமுக்கு போகிறவர்கள்மீதும் இருக்கிறது. கசிப்பியா என்னும் ஸ்தலத்திலுள்ள வேதபாடசாலையின் தலைவன், "இஸ்ரவேலுக்குப் பிறந்த லேவியின் குமாரனாகிய மகேலியின் புத்திரரில் புத்தியுள்ள மனுஷனாகிய செரெபியாவும் அவன் குமாரரும் சகோதரருமான பதினெட்டுப்பேரையும், மெராரியரின் புத்திரரில் அஷபியாவும் அவனோடே எஷாயாவும் அவன் சகோதரரும் அவர்கள் குமாரருமான இருபதுபேரையும்" (எஸ்றா 8:18,19) எஸ்றாவோடுகூட அனுப்புகிறான்.

எஸ்றா அனுப்பின பதினொரு பேரும் தாவீதும் பிரபுக்களும் லேவியருக்குப் பணிவிடைக்காரராக வைத்த நிதனீமியரில் இருநூற்று இருபது பேரையும் எஸ்றாவிடத்தில் அழைத்துக் கொண்டுவருகிறார்கள்; அவர்கள் எல்லாருடைய பேர்களும் குறிக்கப்பட்டிருக்கிறது (எஸ்றா 8:20).

உபவாசம்
எஸ்றா 8:21-23

எஸ்றா 8:21. அப்பொழுது நாங்கள் எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களைத் தாழ்த்துகிறதற்கும், எங்களுக்காகவும், எங்கள் பிள்ளைகளுக்காகவும், எங்கள் சகல பொருள்களுக்காகவும், செவ்வையான வழியைத் தேடுகிறதற்கும், நான் அங்கே அந்த அகாவா நதியண்டையிலே உபவாசத்தைக் கூறினேன்.

எஸ்றா 8:22. வழியிலே சத்துருவை விலக்கி, எங்களுக்குத் துணைசெய்யும்படிக்கு, நான் ராஜாவினிடத்தில் சேவகரையும், குதிரைவீரரையும் கேட்க வெட்கப்பட்டிருந்தேன்; எங்கள் தேவனுடைய கரம் தம்மைத்தேடுகிறவர்கள் எல்லார்மேலும் அவர்களுக்கு நன்மையாக இருக்கிறதென்றும், அவருடைய வல்லமையும் அவருடைய கோபமும் அவரை விட்டு விலகுகிறவர்கள் எல்லார்மேலும் இருக்கிறதென்றும், நாங்கள் ராஜாவுக்குச் சொல்லியிருந்தோம்.

எஸ்றா 8:23. அப்படியே நாங்கள் உபவாசம் பண்ணி, எங்கள் தேவனிடத்திலே அதைத் தேடினோம்; எங்கள் விண்ணப்பத்தைத் கேட்டருளினார்.

எஸ்றாவோடுகூட இப்போது லேவியர்கள் இருக்கிறார்கள். லேவியர்கள் தன்னோடுகூட இருந்தாலும், கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் தன்னோடு கூடயிருக்கவேண்டுமென்று எஸ்றா விரும்புகிறான். ஊழியக்காரர்கள் நம்மோடு கூடயிருந்தாலும், கர்த்தர் நம்மோடு கூடயில்லையென்றால், நமக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகாது.

எஸ்றா கர்த்தர்மீதும், அவருடைய கிருபையுள்ள பாதுகாப்புகள்மீதும், பராமரிப்புகள்மீதும் உறுதியான நம்பிக்கை வைத்திருக்கிறான். கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு, கர்த்தருடைய பெலனே மெய்யான ஆதரவு. நமக்கு விரோதமாக ஏராளமான சத்துருக்கள் எழும்பி வந்தாலும், கர்த்தர் நம்மோடுகூடயிருக்கும்போது, நமக்கு ஒரு தீங்கும் நேரிடாது.

எஸ்றா கர்த்தர்மீது உறுதியான நம்பிக்கை வைத்திருக்கிறான். அவனுடைய இருதயத்தில் கர்த்தர்மீதுள்ள விசுவாசம் நிரம்பியிருக்கிறது. அவன் தன்னுடைய விசுவாசத்தை ராஜாவுக்கு முன்பாக வார்த்தைகளினாலும் சொல்லுகிறான்.

"எங்கள் தேவனுடைய கரம் தம்மைத்தேடுகிறவர்கள் எல்லார்மேலும் அவர்களுக்கு நன்மையாக இருக்கிறதென்றும், அவருடைய வல்லமையும் அவருடைய கோபமும் அவரை விட்டு விலகுகிறவர்கள் எல்லார்மேலும் இருக்கிறது" (எஸ்றா 8:22) என்று எஸ்றாவும் அவனோடுகூடயிருக்கிறவர்களும், பெர்சியாவின் ராஜாவிடத்தில் ஏற்கெனவே தங்கள் தேவனாகிய கர்த்தரைப்பற்றி சாட்சியாகச் சொல்லியிருக்கிறார்கள்.

ஆகையினால் இப்போது, வழியிலே சத்துருவை விலக்கி, எங்களுக்குத் துணைசெய்யும்படிக்கு, ராஜாவினிடத்தில் சேவகரையும், குதிரைவீரரையும் கேட்க எஸ்றா வெட்கப்படுகிறான் (எஸ்றா 8:22). ராஜா கொடுக்கும் பாதுகாப்பைவிட, கர்த்தர் கொடுக்கும் பாதுகாப்பே மெய்யான பாதுகாப்பு. எஸ்றா கர்த்தருடைய வல்லமையையும் அவருடைய பாதுகாப்பையும் சந்தேகப்படவில்லை.

எஸ்றா தன்னுடைய பாதுகாப்புக்கு போர்வீரர்களைத் தன்னோடு அழைத்துச் செல்லவில்லை. அவன் கர்த்தரையே நம்பியிருக்கிறான். எஸ்றா அர்தசஷ்டா ராஜாவினிடத்தில் கர்த்தரைப் பற்றி பல காரியங்களைப் புகழ்ந்து கூறியிருந்திருப்பான். இப்போது எஸ்றாவிற்கு தன்னுடைய உபதேசத்தின் பிரகாரமாக ஜீவிக்க வேண்டிய வேளை வந்திருக்கிறது. கர்த்தர் எஸ்றாவின் விசுவாசத்தைக் கனம் பண்ணுகிறார். பிரயாணத்தில் எஸ்றாவையும், அவனோடுகூட சென்றவர்களையும் கர்த்தர் பாதுகாத்துக் கொள்கிறார் (எஸ்றா 8:23-32).

கர்த்தரை நம்புகிறவர்கள் அவரை முழுமனதோடு, முழுஇருதயத்தோடு மெய்யாகவே நம்பவேண்டும். கர்த்தர்மீது தாங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை அறிக்கை செய்வதற்கு வெட்கப்படக்கூடாது. நம்முடைய விசுவாசத்திற்கு விரோதமான காரியங்களை பேசுவதற்கு நாம் வெட்கப்படவேண்டும்.

எஸ்றா ராஜாவின் பாதுகாப்பைவிட கர்த்தருடைய பாதுகாப்பை நம்புகிறான். கர்த்தருடைய பிரசன்னம் தங்களோடு கூடயிருக்கவேண்டும் என்று எஸ்றாவும் அவனோடுகூட எருசலேமுக்குப் பிரயாணப்போகிறவர்களும் விரும்புகிறார்கள்.

அதற்காக அவர்கள் தங்கள் தேவனுக்கு முன்பாக தங்களைத் தாழ்த்துகிறதற்கும், தங்களுக்காகவும், தங்கள் பிள்ளைகளுக்காகவும், தங்கள் சகல பொருள்களுக்காகவும், செவ்வையான வழியைத் தேடுகிறதற்கும், அவர்கள் அகாவா நதியண்டையிலே உபவாசம்பண்ணுகிறார்கள். எஸ்றா அங்கே அந்த அகாவா நதியண்டையிலே உபவாசத்தைக் கூறுகிறான் (எஸ்றா 8:21).

எருசலேமிற்குத் திரும்பிச் செல்கிறவர்களை எஸ்றா கூட்டிச் சேர்க்கிறான். பிரயாணத்தில் கர்த்தருடைய பாதுகாப்பு தங்களுக்கு வேண்டுமென்பதற்காக எல்லோரும் அகாவா நதியண்டையில் உபவாசம் பண்ணுகிறார்கள். பாபிலோனிலிருந்து பாலஸ்தீன தேசத்திற்கு போகும்வழியில் திருடர்களுடைய தொந்தரவு அதிகம். கர்த்தர் தங்களைப் பாதுகாத்து, தங்களுக்கு சுகமான பிரயாணத்தைக் கட்டளையிட வேண்டுமென்று எஸ்றாவும், அவனோடு எருசலேமுக்குத் திரும்பிச் செல்ல ஆயத்தமாக இருக்கிறவர்களும் ஜெபம் பண்ணுகிறார்கள் (எஸ்றா 8:21-22).

அப்படியே அவர்கள் உபவாசம் பண்ணி, தங்கள் தேவனிடத்திலே, அவருடைய பிரசன்னத்தையும், பாதுகாப்பையும் தேடுகிறார்கள். கர்த்தர் அவர்களுடைய விண்ணப்பத்தைக் கேட்டருளுகிறார் (எஸ்றா 8:23).

எல்லோரும் கர்த்தருடைய சமுகத்திலே உபவாசம்பண்ணவேண்டுமென்று, எஸ்றா உபவாசத்தை அறிவிக்கிறான். கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் எல்லோருக்கும் கிடைக்கவேண்டுமென்றால், அவர்கள் எல்லோருமே கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தி, கர்த்தரிடத்தில் உபவாசித்து ஜெபிக்கவேண்டும்.

எஸ்றாவும் அவனோடு கூடயிருக்கிறவர்களும் கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்துகிறார்கள். அவர்கள் தங்களுடைய பாவங்களுக்காக மனம்வருந்தி, கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் கெஞ்சுகிறார்கள். தேவனுடைய கரம் தம்மைத் தேடுகிறவர்கள் எல்லார் மேலும் நன்மையாயிருக்கிறது என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள்.

உபவாசம் நடைபெறும்போது ஜெபமும் கூடவே நடைபெறவேண்டும். ஜெபத்தையும் உபவாசத்தையும் தனித்தனியாகப் பிரிக்காமல், இரண்டையும் சேர்ந்தே செய்யவேண்டும். அவர்கள் கர்த்தருடைய சமுகத்திலே செவ்வையான வழியைத் தேடுவதற்காக உபவாசம்பண்ணுகிறார்கள். அவர்கள் எல்லோரும் பாபிலோன் தேசத்திலிருந்து எருசலேமுக்குப் போகிறார்கள். கர்த்தர் தாமே அவர்களுக்கு வழிகாட்டியாயிருந்து, அவர்களை செவ்வையான பாதையிலே வழிநடத்துகிறார்.

எருசலேமுக்கு பிரயாணமாய்ப்போகிற இவர்களுக்கு கர்த்தருடைய வழிநடத்துதலும், அவருடைய பாதுகாப்பும் தேவைப்படுகிறது. அவர்கள் கர்த்தரிடத்தில் ஏறெடுத்த விண்ணப்பங்களை, அவர் தமது கிருபையினால் கேட்டருளுகிறார்.

தேவாலயத்து திரவியங்கள் எஸ்றா 8:24-30

எஸ்றா 8:24. பின்பு நான் ஆசாரியரின் தலைவரிலே பன்னிரண்டுபேராகிய செரெபியாவையும், அஷ்பியாவையும், அவர்கள் சகோதரரிலே பத்துப்பேரையும் பிரித்தெடுத்து,

எஸ்றா 8:25. ராஜாவும், அவருடைய ஆலோசனைக்காரரும், அவருடைய பிரபுக்களும், அங்கேயிருந்த சகல இஸ்ரவேலரும், எங்கள் தேவனுடைய ஆலயத்துக்கென்று எடுத்துக்கொடுத்த காணிக்கையாகிய வெள்ளியையும், பொன்னையும், பணிமுட்டுகளையும் அவர்களிடத்தில் நிறுத்துக் கொடுத்தேன்.

எஸ்றா 8:26. அவர்கள் கையிலே நான் அறுநூற்று ஐம்பது தாலந்து வெள்ளியையும், நூறுதாலந்து நிறையான வெள்ளிப் பணிமுட்டுகளையும், நூறுதாலந்து பொன்னையும்,

எஸ்றா 8:27. ஆயிரம் தங்கக்காசு பெறுமான இருபது பொற்கிண்ணங்களையும், பொன்னைப்போல எண்ணப்பட்ட பளபளப்பான இரண்டு நல்ல வெண்கலப் பாத்திரங்களையும் நிறுத்துக்கொடுத்து,

எஸ்றா 8:28. அவர்களை நோக்கி: நீங்கள் கர்த்தருக்குப் பரிசுத்தமானவர்கள்; இந்தப் பணிமுட்டுகளும், உங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தருக்கு மனஉற்சாகமாய்ச் செலுத்தப்பட்ட இந்த வெள்ளியும், இந்தப் பொன்னும் பரிசுத்தமானவைகள்.

எஸ்றா 8:29. நீங்கள் அதை எருசலேமிலிருக்கிற தேவனுடைய ஆலயத்தின் அறைகளில் ஆசாரியர் லேவியருடைய பிரபுக்களுக்கும், இஸ்ரவேலுடைய வம்சத்தலைவர்களுக்கும் முன்பாக நிறுத்து ஒப்புவிக்குமட்டும் விழிப்பாயிருந்து, அதைக் காத்துக்கொள்ளுங்கள் என்றேன்.

எஸ்றா 8:30. அப்படியே அந்த ஆசாரியரும் லேவியரும், அந்த வெள்ளியையும் பொன்னையும் பணிமுட்டுகளையும் எருசலேமிலிருக்கிற எங்கள் தேவனுடைய ஆலயத்துக்குக் கொண்டுபோகும்படிக்கு, நிறுத்து வாங்கிக்கொண்டார்கள்.

எஸ்றாவிடத்தில் ஏராளமான பொன்னும் வெள்ளியும் இருக்கிறது. இவையெல்லாம் அவனுக்கு சொந்தமான சம்பத்து அல்ல. இது எருசலேமில் கட்டப்பட்டிருக்கிற தேவனுடைய ஆலயத்தின் திரவியம். தன்னிடத்தில் காணிக்கையாகக் கொடுக்கப்பட்டிருக்கிற திரவியங்களை, எஸ்றா பாதுகாப்பாக எருசலேமுக்கு எடுத்துச் செல்லவேண்டும். அங்கே கர்த்தருடைய ஆலயத்தில் ஊழியம் செய்கிற ஆசாரியரிடத்தில், அந்த திரவியங்களை பொறுப்பாய் ஒப்புக்கொடுக்கவேண்டும்.

எஸ்றா தன்னிடத்தில் பொறுப்பாக ஒப்படைக்கப்பட்டிருக்கிற திரவியங்களை, பொறுப்பான மனுஷர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களிடத்தில் பொறுப்பாக ஒப்புக்கொடுக்கிறான். அவர்கள் இந்த திரவியங்களை பாதுகாக்கவேண்டும். அவற்றை எருசலேமுக்கு பத்திரமாய்க் கொண்டு வந்து சேர்க்கவேண்டும். எருசலேமுக்கு வந்த பின்பு அவர்கள், தங்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிற திரவியங்களை எஸ்றாவிடத்தின் திரும்பவும் பொறுப்பாய் ஒப்புவிக்கவேண்டும்.

இதற்காக எஸ்றா ஆசாரியரின் தலைவரிலே பன்னிரண்டுபேராகிய செரெபியாவையும், அஷ்பியாவையும், அவர்கள் சகோதரரிலே பத்துப்பேரையும் பிரித்தெடுக்கிறான் (எஸ்றா 8:24).

ஆசாரியரின் தலைவரிலே பன்னிரண்டுபேரும் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களுக்குப் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். பாபிலோன் தேசத்திலிருந்து யூதாவும், பென்யமீனும் மட்டும் திரும்பி வந்தார்கள் என்று கூறமுடியாது. இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரும் திரும்பி வருகிறார்கள். அதற்கு அடையாளமாக எஸ்றா ஆசாரியரின் தலைவரிலே பன்னிரண்டுபேரைப் பிரித்தெடுக்கிறான்.

தேவனுடைய ஆலயத்திற்காக ராஜாவும், அவருடைய ஆலோசனைக் காரரும், அவருடைய பிரபுக்களும், பாபிலோனிலிருந்த சகல இஸ்ரவேலரும் வெள்ளியையும், பொன்னையும், பணிமுட்டுகளையும் காணிக்கையாகக் கொடுத்தார்கள். எஸ்றா இவற்றையெல்லாம் ஆசாரியரின் தலைவர்களாகிய பன்னிரண்டு பேரிடமும் பிரித்துக் கொடுக்கிறான். எருசலேமிற்குப் போய் சேரும் வரையிலும் இந்தப் 12 பேரும் இந்தக் காணிக்கைப் பொருட்களைப் பத்திரமாகப் பாதுகாத்து, எடுத்துச் செல்ல வேண்டும் (எஸ்றா 8:24-30).

பெர்சியா ராஜாவும், அவருடைய ஆலோசனைக்காரரும், அவருடைய பிரபுக்களும், அங்கேயிருந்த சகல இஸ்ரவேலரும், தேவனுடைய ஆலயத்துக்கென்று, வெள்ளியையும், பொன்னையும், பணிமுட்டுகளையும் காணிக்கையாக எடுத்துக் கொடுத்திருக்கிறார்கள் (எஸ்றா 8:25).

எஸ்றா அவர்கள் கையிலே அறுநூற்று ஐம்பது தாலந்து வெள்ளியையும், நூறுதாலந்து நிறையான வெள்ளிப் பணிமுட்டுகளையும், நூறுதாலந்து பொன்னையும், ஆயிரம் தங்கக்காசு பெறுமான இருபது பொற்கிண்ணங்களையும், பொன்னைப்போல எண்ணப்பட்ட பளபளப்பான இரண்டு நல்ல வெண்கலப் பாத்திரங்களையும் நிறுத்துக்கொடுக்கிறான் (எஸ்றா 8:26,27).

எஸ்றா தன்னிடத்திலுள்ள காணிக்கைகளை பாதுகாத்துக்கொள்ளுமாறு கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறான். கர்த்தரிடத்தில் ஜெபித்த பின்பு அந்தக் காணிக்கையை ஆசாரியரின் தலைவரிலே பன்னிரண்டு பேர்களிடத்தில் ஒப்புக்கொடுக்கிறான்.

அந்த ஆசாரியரும் லேவியரும், அந்த வெள்ளியையும் பொன்னையும் பணிமுட்டுகளையும் எருசலேமிலிருக்கிற தேவனுடைய ஆலயத்துக்குக் கொண்டுபோகும்படிக்கு, நிறுத்து வாங்கிக்கொள்கிறார்கள் (எஸ்றா 8:30).

ஆசாரியரின் தலைவர்கள் பன்னிரண்டுபேரும் இந்தப் பணிமுட்டுகளை மிகவும் பத்திரமாக எருசலேமுக்குக் கொண்டு செல்ல வேண்டும். இவை கர்த்தருக்கு மனஉற்சாகமாய்ச் செலுத்தப்பட்ட காணிக்கைகள். வழியில் யாரும் இவற்றைத் திருடிச் சென்றுவிடாதவாறு பாதுகாக்க வேண்டும்.

எஸ்றா ஆசாரியருக்கும் லேவியருக்கும் தன்னிடத்திலுள்ள தேவாலயத்தின் காணிக்கைகளை நிறுத்து கொடுத்த பின்பு, அவற்றை அவர்களிடத்தில் கொடுத்ததற்கான காரணத்தையும் எடுத்து சொல்லுகிறான்.

எஸ்றா அவர்களை நோக்கி, "நீங்கள் கர்த்தருக்குப் பரிசுத்தமானவர்கள்; இந்தப் பணிமுட்டுகளும், உங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தருக்கு மனஉற்சாகமாய்ச் செலுத்தப்பட்ட இந்த வெள்ளியும், இந்தப் பொன்னும் பரிசுத்தமானவைகள்" (எஸ்றா 8:28) என்றும்,

"நீங்கள் அதை எருசலேமிலிருக்கிற தேவனுடைய ஆலயத்தின் அறைகளில் ஆசாரியர் லேவியருடைய பிரபுக்களுக்கும், இஸ்ரவேலுடைய வம்சத்தலைவர்களுக்கும் முன்பாக நிறுத்து ஒப்புவிக்குமட்டும் விழிப்பாயிருந்து, அதைக் காத்துக்கொள்ளுங்கள்" (எஸ்றா 8:28) என்றும் சொல்லுகிறான்.

தாங்கள் பெற்றுக்கொண்ட திரவியத்தை, அவர்கள் எஸ்றாவினிடத்தில் திரும்ப கொடுக்கும்போது, அவர்களும் நிறுத்து கொடுக்கவேண்டும். ஆகையினால் தங்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட காணிக்கையை எல்லோருக்கும் முன்பாக நிறுத்து ஒப்புவிக்க மட்டும் விழிப்பாயிருந்து அதைக் காத்துக்கொள்ளவேண்டும்.

இந்த திரவியங்களெல்லாம் கர்த்தருக்கு பரிசுத்தமான காணிக்கைகள். கர்த்தருடைய காணிக்கையை தங்கள் வசத்தில் வைத்திருக்கிறவர்கள், இதை தங்களுடைய சொந்த பொருட்களோடு சேர்த்து வைக்கக்கூடாது. கர்த்தருக்கு பரிசுத்தமானதை தனியாக வேறுபிரித்து வைத்திருக்கவேண்டும். கர்த்தருடைய காரியங்களையும், நம்முடைய சொந்தக் காரியங்களையும் ஒன்றாய்ச் சேர்த்து குழப்பக்கூடாது.

சர்வாங்க தகனபலி
எஸ்றா 8:31-36

எஸ்றா 8:31. நாங்கள் எருசலேமுக்குப்போக, முதலாம் மாதம் பன்னிரண்டாந்தேதியிலே, அகாவா நதியைவிட்டுப் பயணம் புறப்பட்டோம்; எங்கள் தேவனுடைய கரம் எங்கள் மேலிருந்து வழியிலே சத்துருவின் கைக்கும், பதிவிருக்கிறவர்களின் கைக்கும் எங்களைத் தப்புவித்தது,

எஸ்றா 8:32. நாங்கள் எருசலேமுக்கு வந்து, அங்கே மூன்றுநாள் இருந்தபின்பு,

எஸ்றா 8:33. நாலாம் நாளிலே அந்த வெள்ளியும் பொன்னும் பணிமுட்டுகளும், எங்கள் தேவனுடைய ஆலயத்தில் ஆசாரியனாகிய உரியாவின் குமாரன் மெரேமோத்தின் கையிலும், பினெகாசின் குமாரன் எலெயாசாரின் கையிலும், எல்லாவற்றிற்கும் இருந்த நிறையின்படியேயும் நிறுத்து, ஒப்புவிக்கப்பட்டது; யெசுவாவின் குமாரன் யோசபாத்தும், பின்னூயின் குமாரன் நொவதியாவும் என்கிற லேவியரும் அவர்களோடேகூட இருந்தார்கள்.

எஸ்றா 8:34. அந்த நிறையெல்லாம் அக்காலத்தில் எழுதப்பட்டது.

எஸ்றா 8:35. சிறைப்பட்டு மீண்டவர்கள் இஸ்ரவேலின் தேவனுக்குச் சர்வாங்க தகனபலிகளாக இஸ்ரவேல் அனைத்தினிமித்தம் பன்னிரண்டு காளைகளையும், தொண்ணூற்றாறு ஆட்டுக்கடாக்களையும், எழுபத்தேழு ஆட்டுக்குட்டிகளையும், பாவநிவாரணத்துக்காகப் பன்னிரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையும் பலியிட்டு, அவையெல்லாம் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலியாகச் செலுத்தினார்கள்.

எஸ்றா 8:36. பின்பு ராஜாவின் சன்னதுகளை நதிக்கு இப்புறத்திலிருக்கிற ராஜாவின் தேசாபதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் ஒப்புவித்தார்கள்; அப்பொழுது அவர்கள் ஜனங்களுக்கும் தேவனுடைய ஆலயத்துக்கும் உதவியாயிருந்தார்கள்.

எஸ்றாவும் அவனோடு கூடயிருக்கிறவர்களும் பாபிலோன் தேசத்திலிருந்து, எருசலேமுக்கு வந்து சேருகிறார்கள். கர்த்தர் நல்லவர். கர்த்தரை நம்புகிறவர்களுக்கு அவருடைய கிருபை என்றுமுள்ளது. தங்களுடைய பிரயாணத்தில் கர்த்தருடைய வழிநடத்துதலும், பாதுகாப்பும், பராமரிப்பும் கிடைக்கவேண்டுமென்று, எஸ்றாவும் அவனோடுகூட பிரயாணம் பண்ணுகிறவர்களும், கர்த்தருடைய சமுகத்திலே உபவாசம்பண்ணி ஜெபம்பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடைய ஜெபத்தைக் கேட்டு, தமது கிருபையை அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார்.

அவர்கள் எருசலேமுக்குப்போக, முதலாம் மாதம் பன்னிரண்டாந்தேதியிலே, அகாவா நதியைவிட்டுப் பயணம் புறப்பட்டார்கள்; தேவனுடைய கரம் அவர்கள்மேலிருந்து வழியிலே சத்துருவின் கைக்கும், பதிவிருக்கிறவர்களின் கைக்கும் அவர்களைத் தப்புவித்தது (எஸ்றா 8:31).

பன்னிரண்டு ஆசாரியரின் தலைவர்கள் வேறுபிரிக்கப்பட்டு, அவர்களிடம் காணிக்கைப் பொருட்கள் ஒப்படைக்கப்பட்டு, உபவாசம் பண்ணிய பின்பு எஸ்றாவும், அவனோடுகூட இருந்த ஜனங்களும் எருசலேமுக்குப் போக ஆயத்தமாக இருக்கிறார்கள். இங்கிருந்து நாலரை மாதங்கள் பிரயாணம் செய்து, எருசலேமைச் சென்றடைகிறார்கள். (எஸ்றா 8:21-32; எஸ்றா 7:8-9).

பிரயாணத்திலே பல பிரச்சனைகள் ஏற்படலாம். பிரயாண தடைகள் உண்டாகலாம். கர்த்தருடைய கரம் நம்மோடு கூடயிருக்கவேண்டும். அப்போதுதான் நம்முடைய பிரயாணம் நல்ல முறையில் நடைபெறும். நாம் பிரயாணம்பண்ணுவதற்கு முன்பாக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணி, நம்மையும், நம்முடைய உடமைகளையும், நம்முடைய பிரயாணங்களையும் கர்த்தருடைய கிருபைக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும்.

கர்த்தருடைய கிருபையினால் நமக்கு நல்ல பிரயாணம் அமையும். நாம் பிரயாணத்தை முடித்த பின்பு, கர்த்தருடைய கிருபைக்காகவும், உதவிகளுக்காகவும், பாதுகாப்புக்களுக்காகவும், பராமரிப்புக்களுக்காகவும், அவருக்கு நன்றி சொல்லவேண்டும். கர்த்தருக்கு துதிகளையும் ஸ்தோத்திரங்களையும் ஏறெடுக்கவேண்டும்.

எஸ்றாவும், அவனோடுகூட பாபிலோன் தேசத்திலிருந்து எருசலேமுக்கு வந்தவர்களும் அங்கே மூன்றுநாள் இருக்கிறார்கள். அதன்பின்பு, நாலாம் நாளிலே அந்த வெள்ளியும் பொன்னும் பணிமுட்டுகளும், தேவனுடைய ஆலயத்தில் ஆசாரியனாகிய உரியாவின் குமாரன் மெரேமோத்தின் கையிலும், பினெகாசின் குமாரன் எலெயாசாரின் கையிலும், எல்லாவற்றிற்கும் இருந்த நிறையின்படியேயும் நிறுத்து, ஒப்புவிக்கப்படுகிறது; யெசுவாவின் குமாரன் யோசபாத்தும், பின்னூயின் குமாரன் நொவதியாவும் என்கிற லேவியரும் அவர்களோடேகூட இருக்கிறார்கள். அந்த நிறையெல்லாம் அக்காலத்தில் எழுதப்படுகிறது (எஸ்றா 8:33,34).

எஸ்றாவும் அவனோடுகூட பாபிலோன் தேசத்திலிருந்து புறப்பட்டவர்களும் சுகபலன் பத்திரத்தோடு எருசலேமுக்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய ஆலயத்தின் பலிபீடத்திற்கு அருகாமையில் வரும்போது, கர்த்தருக்கு பலிகளை செலுத்துகிறார்கள்.

சிறைப்பட்டு மீண்டவர்கள் இஸ்ரவேலின் தேவனுக்குச் சர்வாங்க தகனபலிகளாக இஸ்ரவேல் அனைத்தினிமித்தம் பன்னிரண்டு காளைகளையும், தொண்ணூற்றாறு ஆட்டுக்கடாக்களையும், எழுபத்தேழு ஆட்டுக்குட்டிகளையும், பாவநிவாரணத்துக்காகப் பன்னிரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையும்பலியிட்டு, அவையெல்லாம் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலியாகச் செலுத்துகிறார்கள் (எஸ்றா 8:35).

எஸ்றாவும் அவனோடுகூட எருசலேமுக்கு வந்திருக்கிறவர்களும் பாவநிவாரண பலியை செலுத்துகிறார்கள். கர்த்தருடைய கிருபையும், இரக்கமும் தங்களுக்கு கிடைக்கவேண்டும் என்பதற்காக, அவர்கள் பாவநிவாரணத்திற்காக பன்னிரண்டு வெள்ளாட்டுக்கடாக்களை பலியிடுகிறார்கள். அவர்கள் சர்வாங்க தகனபலியாக பன்னிரண்டு காளைகளையும் செலுத்துகிறார்கள்.

லேவி கோத்திரத்தாரைத் தவிர, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாருக்கும் ஒவ்வொரு வெள்ளாட்டுக் கடாவாக பன்னிரண்டு வெள்ளாட்டுக்கடாக்களைப் பலியிடுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் பன்னிரண்டு கோத்திரங்களாக இருக்கிறார்கள். அவர்கள் இதற்கு முன்பு வடக்கு இஸ்ரவேல் தேசம் என்றும், தெற்கு யூதாதேசம் என்றும் இரண்டு தேசங்களாகப் பிரிந்திருந்தார்கள். சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த பின்போ, இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்குள், பிரிவினையில்லாமல் ஒரே தேசமாயிருக்கிறார்கள். இரண்டாய்ப் பிரிந்திருந்த தேசம் இப்போது சமஸ்த இஸ்ரவேல் தேசமாயிருக்கிறது.

பன்னிரண்டு ஆசாரியரின் தலைவர்கள் வேறுபிரிக்கப்பட்டு, அவர்களிடம் காணிக்கைப் பொருட்கள் ஒப்படைக்கப்பட்டு, உபவாசம் பண்ணிய பின்பு எஸ்றாவும், அவனோடுகூட இருந்த ஜனங்களும் எருசலேமுக்குப் போக ஆயத்தமாக இருக்கிறார்கள். இங்கிருந்து நாலரை மாதங்கள் பிரயாணம் செய்து, எருசலேமைச் சென்றடைகிறார்கள். (எஸ்றா 8:21-32; எஸ்றா 7:8-9).

பிரயாணத்திலே பல பிரச்சனைகள் ஏற்படலாம். பிரயாண தடைகள் உண்டாகலாம். கர்த்தருடைய கரம் நம்மோடு கூடயிருக்கவேண்டும். அப்போதுதான் நம்முடைய பிரயாணம் நல்ல முறையில் நடைபெறும். நாம் பிரயாணம்பண்ணுவதற்கு முன்பாக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணி, நம்மையும், நம்முடைய உடமைகளையும், நம்முடைய பிரயாணங்களையும் கர்த்தருடைய கிருபைக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும்.

கர்த்தருடைய கிருபையினால் நமக்கு நல்ல பிரயாணம் அமையும். நாம் பிரயாணத்தை முடித்த பின்பு, கர்த்தருடைய கிருபைக்காகவும், உதவிகளுக்காகவும், பாதுகாப்புக்களுக்காகவும், பராமரிப்புக்களுக்காகவும், அவருக்கு நன்றி சொல்லவேண்டும். கர்த்தருக்கு துதிகளையும் ஸ்தோத்திரங்களையும் ஏறெடுக்கவேண்டும்.

எஸ்றாவும், அவனோடுகூட பாபிலோன் தேசத்திலிருந்து எருசலேமுக்கு வந்தவர்களும் அங்கே மூன்றுநாள் இருக்கிறார்கள். அதன்பின்பு, நாலாம் நாளிலே அந்த வெள்ளியும் பொன்னும் பணிமுட்டுகளும், தேவனுடைய ஆலயத்தில் ஆசாரியனாகிய உரியாவின் குமாரன் மெரேமோத்தின் கையிலும், பினெகாசின் குமாரன் எலெயாசாரின் கையிலும், எல்லாவற்றிற்கும் இருந்த நிறையின்படியேயும் நிறுத்து, ஒப்புவிக்கப்படுகிறது; யெசுவாவின் குமாரன் யோசபாத்தும், பின்னூயின் குமாரன் நொவதியாவும் என்கிற லேவியரும் அவர்களோடேகூட இருக்கிறார்கள். அந்த நிறையெல்லாம் அக்காலத்தில் எழுதப்படுகிறது (எஸ்றா 8:33,34).

எஸ்றாவும் அவனோடுகூட பாபிலோன் தேசத்திலிருந்து புறப்பட்டவர்களும் சுகபலன் பத்திரத்தோடு எருசலேமுக்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய ஆலயத்தின் பலிபீடத்திற்கு அருகாமையில் வரும்போது, கர்த்தருக்கு பலிகளை செலுத்துகிறார்கள்.

சிறைப்பட்டு மீண்டவர்கள் இஸ்ரவேலின் தேவனுக்குச் சர்வாங்க தகனபலிகளாக இஸ்ரவேல் அனைத்தினிமித்தம் பன்னிரண்டு காளைகளையும், தொண்ணூற்றாறு ஆட்டுக்கடாக்களையும், எழுபத்தேழு ஆட்டுக்குட்டிகளையும், பாவநிவாரணத்துக்காகப் பன்னிரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையும்பலியிட்டு, அவையெல்லாம் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலியாகச் செலுத்துகிறார்கள் (எஸ்றா 8:35).

எஸ்றாவும் அவனோடுகூட எருசலேமுக்கு வந்திருக்கிறவர்களும் பாவநிவாரண பலியை செலுத்துகிறார்கள். கர்த்தருடைய கிருபையும், இரக்கமும் தங்களுக்கு கிடைக்கவேண்டும் என்பதற்காக, அவர்கள் பாவநிவாரணத்திற்காக பன்னிரண்டு வெள்ளாட்டுக்கடாக்களை பலியிடுகிறார்கள். அவர்கள் சர்வாங்க தகனபலியாக பன்னிரண்டு காளைகளையும் செலுத்துகிறார்கள்.

லேவி கோத்திரத்தாரைத் தவிர, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாருக்கும் ஒவ்வொரு வெள்ளாட்டுக் கடாவாக பன்னிரண்டு வெள்ளாட்டுக்கடாக்களைப் பலியிடுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் பன்னிரண்டு கோத்திரங்களாக இருக்கிறார்கள். அவர்கள் இதற்கு முன்பு வடக்கு இஸ்ரவேல் தேசம் என்றும், தெற்கு யூதாதேசம் என்றும் இரண்டு தேசங்களாகப் பிரிந்திருந்தார்கள். சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த பின்போ, இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்குள், பிரிவினையில்லாமல் ஒரே தேசமாயிருக்கிறார்கள். இரண்டாய்ப் பிரிந்திருந்த தேசம் இப்போது சமஸ்த இஸ்ரவேல் தேசமாயிருக்கிறது.

"அவர்களை இஸ்ரவேலின் மலைகளாகிய தேசத்திலே ஒரே ஜாதியாக்குவேன்; ஒரே ராஜா அவர்கள் எல்லாருக்கும் ராஜாவாக இருப்பார்; அவர்கள் இனி இரண்டு ஜாதிகளாக இருப்பதில்லை; அவர்கள் இனி இரண்டு ராஜ்யங்களாகப் பிரிவதுமில்லை" (எசே 37:22).

சிறையிருப்பிலிருந்த திரும்பி வந்த இஸ்ரவேல் புத்திரர், இனிமேல் இரண்டு ராஜ்யங்களாக பிரியமாட்டார்கள். இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் ஒரு திசையிலும், மீதமுள்ள இரண்டு கோத்திரத்தார் வேறு திசையிலும் பிரிந்துபோகமாட்டார்கள். அவர்கள் ஒன்றாய்க் கூடி சேர்ந்து, கர்த்தருடைய ஒரே பலிபீடத்தில் பலிசெலுத்துவார்கள். அதற்கு அடையாளமாக இங்கே சர்வாங்க தகனமாக பன்னிரண்டு காளைகள் செலுத்தப்படுகிறது.

இஸ்ரவேல் புத்திரர் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்கு திரும்பி வந்தபோது, அந்நிய ஜாதியார் அவர்களுக்கு சத்துருக்களாகயிருந்தார்கள். அக்காலத்தில் சத்துருக்களாகயிருந்தவர்கள் கூட, இப்போது எஸ்றாவின் காலத்தில், இஸ்ரவேலருக்கு சிநேகிதர்களாயிருக்கிறார்கள்.

எஸ்றாவும் அவனோடுகூட எருசலேமுக்கு திரும்பி வந்தவர்களும், ராஜாவின் சன்னதுகளை நதிக்கு இப்புறத்திலிருக்கிற ராஜாவின் தேசாபதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் ஒப்புவிக்கிறார்கள்; அப்பொழுது அவர்கள் யூதா ஜனங்களுக்கும் தேவனுடைய ஆலயத்துக்கும் உதவியாயிருக்கிறார்கள் (எஸ்றா 8:36). சத்துருக்கள் தேவனுடைய ஜனத்திற்கு தடைபண்ணாமல், அவர்களுக்கு ஆதரவாயிருக்கிறார்கள்.

9 அதிகாரம்

எஸ்றா எருசலேமுக்கு திரும்பி வந்த காலத்தில், யூதர்களுக்கு விரோதமாக சத்துருக்கள் யாரும் வரவில்லை. சத்துருக்களின் இருதயங்களில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம். அல்லது அவர்களுடைய கைகள் சட்டத்தினால் கட்டப்பட்டிருக்கலாம்.

யூதாதேசத்தை சுற்றியிருக்கிற ஜனங்களும் தேவனுடைய ஆலயத்திற்கு உதவியாயிருக்கிறார்கள். யூதாதேசத்தில் யுத்தங்களைப்பற்றிய செய்தி எதுவும் கேட்கப்படவில்லை. தேசம் அந்நிய தேசத்தாரின் அச்சுறுத்தலில்லாமல் அமைதியாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரருக்கு அந்நிய தேசத்தார் மூலமாக பிரச்சனைகள் வரவில்லை. யூதாதேசத்தில் பாகாலின் விக்கிரகங்களோ, அஸ்தரோத்தின் விக்கிரகங்களோ மோளேகின் விக்கிரகங்களோ காணப்படவில்லை. அங்கே மேடைகளும் இல்லை. தோப்பு விக்கிரகங்களும் இல்லை. சமாரியாவில் வைக்கப்பட்டிருந்த பொன்கன்றுக்குட்டியும் இப்போது யூதாதேசத்தில் காணப்படவில்லை

யூதாதேசத்தில் யாரும் மேடைகளிலே பலிசெலுத்தவில்லை. தேவனுடைய ஆலயம் மறுபடியுமாய்க் கட்டப்பட்டிருக்கிறது. ஜனங்கள் கர்த்தருடைய ஆலயத்திற்கு மதிப்பு கொடுக்கிறார்கள். ஆலயத்திலே கர்த்தருடைய ஆராதனைகள் முறையாக நடைபெறுகிறது.

ஆனாலும் யூதாதேசத்திலே ஒரு சில பிரச்சனைகளும் இருக்கிறது. யூதரின் பிரபுக்களில் சிலர் எஸ்றாவிடம் வந்து, அந்நிய ஜாதி ஸ்திரீகளை விவாகம்பண்ணினவர்களைப்பற்றி முறையிடுகிறார்கள் (எஸ்றா 9:1,2).

எஸ்றா சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள் மத்தியிலே கர்த்தருக்கு சாட்சியாய் ஜீவிக்கிறான். அவன் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து நடக்கிறான். எஸ்றாவின் சாட்சியுள்ள ஜீவியம் இஸ்ரவேல் புத்திரருக்கு எடுத்துக்காட்டாயிருக்கிறது. ஆனாலும் அந்நிய ஜாதி ஸ்திரீகளை விவாகம்பண்ணினவர்களின் மோசமான முன்மாதிரிகளை, யூதர்களில் சிலர் பின்பற்றுகிறார்கள் (எஸ்றா 9:3,4).

இஸ்ரவேல் புத்திரர் அந்நிய ஜாதி ஸ்திரீகளை விவாகம்பண்ணுவது கர்த்தருடைய பிரமாணத்திற்கு விரோதமான செயல். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். எஸ்றா ஜனங்களுடைய பாவங்களை கர்த்தரிடத்தில் அறிக்கை செய்கிறான் (எஸ்றா 9:5-15).

அந்நிய ஜாதியான ஸ்திரீகள் எஸ்றா 9:1-4

எஸ்றா 9:1. இவைகள் செய்து முடிந்தபின்பு, பிரபுக்கள் என்னிடத்தில் சேர்ந்து: இஸ்ரவேல் ஜனங்களும், ஆசாரியரும் லேவியரும் ஆகிய இவர்கள், கானானியர், ஏத்தியர், பெரிசியர், எபூசியர், அம்மோனியர், மோவாபியர், எகிப்தியர், அம்மோரியர் என்னும் இந்த தேசங்களின் ஜனங்களுக்கும், அவர்களுடைய அருவருப்புகளுக்கும் விலகியிருக்கவில்லை.

எஸ்றா 9:2. எப்படியென்றால், அவர்களுடைய குமாரத்திகளிலே தங்களுக்கும் தங்கள் குமாரருக்கும் பெண்களைக் கொண்டார்கள்; இப்படியே பரிசுத்த வித்துத்தேசங்களின் ஜனங்களோடே கலந்து போயிற்று; பிரபுக்களின் கையும், அதிகாரிகளின் கையும், இந்தக் குற்றத்தில் முந்தினதாயிருக்கிறது என்றார்கள்.

எஸ்றா 9:3. இந்த வர்த்தமானத்தை நான் கேட்டபொழுது, என் வஸ்திரத்தையும் என் சால்வையையும் நான் கிழித்து, என் தலையிலும் என் தாடியிலுமுள்ள மயிரைப் பிடுங்கித் திகைத்தவனாய் உட்கார்ந்திருந்தேன்.

எஸ்றா 9:4. அப்பொழுது சிறையிருப்பிலிருந்து வந்தவர்களுடைய குற்றத்தினிமித்தம் இஸ்ரவேலுடைய தேவனின் வார்த்தைகளுக்கு நடுங்குகிற யாவரும் என்னோடே கூடிக் கொண்டார்கள்; நானோ அந்திப்பலி செலுத்தப்படுமட்டும் திகைத்தவனாய் உட்கார்ந்துகொண்டிருந்தேன்.

எஸ்றா பாபிலோன் தேசத்திலிருந்து எருசலேமுக்கு பாதுகாப்பாக வந்து சேர்ந்திருக்கிறான். அவனும் அவனோடுகூட எருசலேமுக்கு வந்தவர்களும், கர்த்தர் தங்களுக்கு கொடுத்த பாதுகாப்பையும், பராமரிப்பையும் நன்றியோடு நினைவுகூர்ந்து, கர்த்தரைத் துதிக்கிறார்கள். கர்த்தருக்கு பலிகளை செலுத்துகிறார்கள். எஸ்றாவின் ஊழியம் ஆசீர்வாதமாய் நடைபெறுகிறது.

எஸ்றா இவைகளை செய்து முடிந்த பின்பு, யூதர்களின் பிரபுக்களில் சிலர் அவனிடத்தில் வருகிறார்கள். அவர்கள் ஒரு சில பிரபுக்களைப்பற்றியும், யூதமார்க்கத்தின் தலைவர்களில் சிலரைப்பற்றியும் எஸ்றாவிடத்தில் வந்து குற்றம் சொல்லுகிறார்கள்.

யூதாவின் பிரபுக்களில் சிலர், எஸ்றாவினிடத்தில் வந்து சேர்ந்து, அவனை நோக்கி, "இஸ்ரவேல் ஜனங்களும், ஆசாரியரும் லேவியரும் ஆகிய இவர்கள், கானானியர், ஏத்தியர், பெரிசியர், எபூசியர், அம்மோனியர், மோவாபியர், எகிப்தியர், அம்மோரியர் என்னும் இந்த தேசங்களின் ஜனங்களுக்கும், அவர்களுடைய அருவருப்புகளுக்கும் விலகியிருக்கவில்லை" (எஸ்றா 9:1) என்றும்,

"எப்படியென்றால், அவர்களுடைய குமாரத்திகளிலே தங்களுக்கும் தங்கள் குமாரருக்கும் பெண்களைக் கொண்டார்கள்; இப்படியே பரிசுத்த வித்துத்தேசங்களின் ஜனங்களோடே கலந்து போயிற்று; பிரபுக்களின் கையும், அதிகாரிகளின் கையும், இந்தக் குற்றத்தில் முந்தினதாயிருக்கிறது" (எஸ்றா 9:2) என்றும் சொல்லுகிறார்கள்.

எல்லாப் பிரபுக்களும் எஸ்றாவிடத்தில் வரவில்லை. ஏனெனில் எஸ்றா 9:2 ஆவது வசனத்தின் பிரகாரம் பிரபுக்களில் அநேகர் குற்றம் செய்திருக்கிறார்கள்.

"அருவருப்புகள்" என்பது யூதர்களுடைய சிறையிருப்புக்குக் காரணமான பாவம். (எஸ்றா 1-2; யாத் 34:12-15; உபா 7:1-3). இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்ததினால் அந்நிய தேசத்தின் சிறையிருப்புக்கு உட்பட்டார்கள். ஆனாலும் அவர்களிடத்தில் உண்மையான மனந்திருந்துதல் இன்னும் காணப்படவில்லை. இந்த வசனத்திற்குப்பின்பு, கர்த்தருடைய நியாயப் பிரமாணத்தில் கூறப்பட்டுள்ளபடி ஜீவிப்பதாக உடன்படிக்கை பண்ணுகிறார்கள். அதற்கு அவர்கள் உண்மையாகவே கீழ்ப்படிகிறார்கள் (எஸ்றா 9:2 - 10:44).

இஸ்ரவேல் புத்திரர் பரிசுத்த வித்தாகயிருக்கிறார்கள். அவர்கள் புறஜாதி ஜனங்களை விவாகம் பண்ணக்கூடாது. தங்களைத் தனிஜனமாக வேறுபிரித்துக் காத்துக் கொள்ள வேண்டும் (யாத் 19:6; யாத் 22:31; உபா 7:6; உபா 14:2).

அந்நிய ஜாதியான ஸ்திரீகளைப் பிரபுக்களும், அதிகாரிகளும் விவாகம் பண்ணியிருக்கிறார்கள். சாதாரண பொதுஜனங்களைவிட இவர்கள் அந்நிய ஜாதியான ஸ்திரீகளை அதிகமாக விவாகம் பண்ணியிருக்கிறார்கள். தலைவர்கள் நேர்மையாக நடந்து கொண்டால்தான் பொதுஜனங்களும் அவர்களைப் பின்பற்றி, நேர்மையாக ஜீவிப்பார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் அந்நிய தேசத்தாரோடு வியாபாரம்பண்ணுகிறார்கள். அவர்கள் மத்தியிலே போக்கும் வரத்துமாயிருக்கிறார்கள். இதில் தப்பிதம் ஒன்றுமில்லை. ஆனால் அவர்களில் சிலர் தங்களுடைய குமாரருக்கு அந்நிய ஜாதிப்பெண்களை திருமணம் செய்து வைக்கிறார்கள். இந்தக் காரியம் கர்த்தருடைய பிரமாணத்திற்கு விரோதமானது.

"அவர்களோடே சம்பந்தம் கலவாயாக; உன் குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக் கொடாமலும், அவர்கள் குமாரத்திகளை உன் குமாரருக்குக் கொள்ளாமலும் இருப்பாயாக" (உபா 7:3).

அந்நிய ஜாதியார் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரரின் பிரபுக்கள், அந்நிய ஜாதியாரோடு திருமண சம்பந்தம் பண்ணுவதினால், அவர்களுடைய விக்கிரகாராதனைகளிலும் பங்குபெறுகிறார்கள். இஸ்ரவேல் தேசம் அழிந்துபோனதற்கு, அவர்கள் கர்த்தரை ஆராதியாமல், விக்கிரகங்களை ஆராதித்ததே பிரதான காரணம். இப்போது அவர்கள் அதே தப்பிதத்தை அவர்கள் மறுபடியுமாய்ச் செய்கிறார்கள்.

அந்நிய ஜாதி ஸ்திரீகளை தங்கள் குமாரருக்கு விவாகம்பண்ணிக் கொடுக்கிறவர்கள், இஸ்ரவேல் புத்திரரில் சாதாரண ஜனங்களல்ல. அவர்கள் கர்த்தரைப்பற்றியும், அவருடைய பிரமாணத்தைப்பற்றியும் அறிந்தவர்கள். அவர்களில் சிலர் ஆசாரியரும் லேவியருமாயிருக்கிறார்கள்.

ஆசாரியரும் லேவியரும் இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய கட்டளைகளை உபதேசம்பண்ணவேண்டும். இவர்கள் ஜனங்களுக்கு முன்பாக எடுத்துக்காட்டாய் ஜீவிக்கவேண்டும். நியாயப்பிரமாணத்தைக் குறித்து கற்றுக்கொடுக்க வேண்டியவர்களே, நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமல் பாவம் செய்கிறார்கள். இவர்களுடைய பாவம் மகாபாவமாகவும், மிகவும் கொடிய பாவமாகவும் இருக்கிறது. தலைவர்கள் பாவம் செய்யும்போது, சாதாரண ஜனங்கள், அவர்களைப் பின்பற்றி, பாவங்களில் விழுந்துவிடுவதற்கு ஏதுவாகும்.

இஸ்ரவேல் ஜனங்களும், ஆசாரியரும், லேவியரும் கர்த்தருக்கு விரோதமாக அருவருப்பான காரியங்களை செய்வதைக் கேள்விப்பட்டு, எஸ்றா அதிர்ச்சியடைகிறான். அவனுடைய மனது முறிந்துபோகிறது.

இந்த வர்த்தமானத்தை எஸ்றாகேட்டபொழுது, அவன் தன் வஸ்திரத்தையும் தன் சால்வையையும் கிழித்து, தன் தலையிலும் தன் தாடியிலுமுள்ள மயிரைப் பிடுங்கித் திகைத்தவனாய் உட்கார்ந்திருக்கிறான் (எஸ்றா 9:3).

வஸ்திரத்தைக் கிழிப்பது, சால்வையைக் கிழிப்பது, தலையிலும், தாடியிலுமுள்ள மயிரைப் பிடுங்குவது, திகைத்தவனாய் உட்கார்ந்திருப்பது ஆகியவை துக்கப்படுவதற்கு அடையாளங்களாகும். (எஸ்றா 9:3,5; யோசு 7:6; 1சாமு 4:12; 2சாமு 1:2; 2சாமு 13:31; 2இராஜா 18:37; யோபு 1:20).

இஸ்ரவேல் புத்திரர் தேவனுடைய நாமத்தினால் அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய ஜனங்கள். அவர்கள் தேவனுடைய இஸ்ரவேலர்கள். தேவனாகிய கர்த்தரும் இஸ்ரவேலின் தேவனாகயிருக்கிறார். கர்த்தர் இஸ்ரவேலரை அதிகமாய் நேசிக்கிறார். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தருக்கு அருவருப்பான காரியங்களை செய்கிறார்கள். தன்னுடைய ஒரே குமாரனாகிய மூத்த குமாரனை சாகக்கொடுக்கும்போது, அவனுடைய பெற்றோர் எவ்வளவு துக்கப்படுவார்களோ, அந்த அளவுக்கு எஸ்றா துக்கப்படுகிறான்.

எஸ்றா திகைத்துப்போய் துக்கத்தோடு உட்கார்ந்திருக்கிறான். இஸ்ரவேல் புத்திரர் அவனுடைய துக்கத்தைப் பார்த்து, அவனுடைய துக்கத்தை பகிர்ந்துகொள்கிறார்கள்.

அப்பொழுது சிறையிருப்பிலிருந்து வந்தவர்களுடைய குற்றத்தினிமித்தம் இஸ்ரவேலுடைய தேவனின் வார்த்தைகளுக்கு நடுங்குகிற யாவரும் எஸ்றாவோடே கூடிக்கொள்கிறார்கள்; எஸ்றா அந்திப்பலி செலுத்தப்படுமட்டும் திகைத்தவனாய் உட்கார்ந்துகொண்டிருக்கிறான் (எஸ்றா 9:4).

பக்தியுள்ள இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் எஸ்றாவோடு சேர்ந்துகொள்கிறார்கள். எஸ்றாவின் கரங்களை அவர்கள் பலப்படுத்துகிறார்கள்.

எஸ்றாவின் ஜெபம்
எஸ்றா 9:5-15

எஸ்றா 9:5. அந்திப்பலி நேரத்திலே நான் துக்கத்தோடே எழுந்து, கிழித்துக்கொண்ட வஸ்திரத்தோடும் சால்வையோடும் முழங்காற்படியிட்டு, என் கைகளை என் தேவனாகிய கர்த்தருக்கு நேராக விரித்து:

எஸ்றா 9:6. என் தேவனே, நான் என் முகத்தை என் தேவனாகிய உமக்கு முன்பாக ஏறெடுக்க வெட்கிக் கலங்குகிறேன்; எங்கள் அக்கிரமங்கள் எங்கள் தலைக்கு மேலாகப் பெருகிற்று; எங்கள் குற்றம் வானபரியந்தம் வளர்ந்துபோயிற்று.

எஸ்றா 9:7. எங்கள் பிதாக்களின் நாட்கள் முதல் இந்நாள்மட்டும் நாங்கள் பெரிய குற்றத்துக்கு உள்ளாயிருக்கிறோம்; எங்கள் அக்கிரமங்களினிமித்தம் நாங்களும், எங்கள் ராஜாக்களும், எங்கள் ஆசாரியர்களும், இந்நாளிலிருக்கிறது போல, அந்நியதேச ராஜாக்களின் கையிலே, பட்டயத்துக்கும், சிறையிருப்புக்கும், கொள்ளைக்கும், வெட்கத்துக்கும் ஒப்புக்கொடுக்கப்பட்டோம்.

எஸ்றா 9:8. இப்பொழுதும் எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களிலே தப்பின சில்லரை மீதியாக வைக்கவும், தம்முடைய பரிசுத்த ஸ்தலத்தில் எங்களுக்கு ஒரு குச்சைக் கொடுக்கவும், இப்படியே எங்கள் தேவன் எங்கள் கண்களைப் பிரகாசிப்பித்து, எங்கள் அடிமைத்தனத்திலே எங்களுக்குக் கொஞ்சம் உயிர் கொடுக்கவும், அவராலே கொஞ்சநேரமாவது கிருபைகிடைத்தது.

எஸ்றா 9:9. நாங்கள் அடிமைகளாயிருந்தோம்; ஆனாலும் எங்கள் அடிமைத்தனத்திலே எங்கள் தேவன் எங்களைக் கைவிடாமல், எங்களுக்கு உயிர்கொடுக்கவும், நாங்கள் எங்கள் தேவனுடைய ஆலயத்தை எடுப்பித்து, பாழாய்ப் போன அதைப் புதுப்பிக்கும்படிக்கும் எங்களுக்கு யூதாவிலும் எருசலேமிலும் ஒரு வேலியைக் கட்டளையிடும்படிக்கும், பெர்சியாவின் ராஜாக்கள் சமுகத்தில் எங்களுக்குத் தயைகிடைக்கச்செய்தார்.

எஸ்றா 9:10. இப்பொழுதும் எங்கள் தேவனே, நாங்கள் இனி என்னசொல்லுவோம்; தேவரீர் உமது ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளைக் கொண்டு கற்பித்த உமது கற்பனைகளை விட்டுவிட்டோம்.

எஸ்றா 9:11. நீங்கள் சுதந்தரிக்கிறதற்கு உட்பிரவேசிக்கும் தேசமானது, தேசாதேசங்களுடைய ஜனங்களின் அசங்கியத்தினாலும், அவர்கள் அதை ஒரு முனைதொடங்கி மறுமுனைமட்டும் நிறையப் பண்ணின அவர்களுடைய அருவருப்புகளினாலும் அவர்களுடைய அசுத்தத்தினாலும், தீட்டுப்பட்டதாயிருக்கிறது.

எஸ்றா 9:12. ஆதலால் நீங்கள் பலத்துக்கொண்டு, தேசத்தின் நன்மையைப் புசித்து, அதை நித்தியகாலமாக உங்கள் பிள்ளைகளுக்கு உம்பிளிக்கையாகப் பின்வைக்கும்படிக்கு, நீங்கள் உங்கள் குமாரத்திகளை அவர்களுடைய குமாரருக்குக் கொடாமலும், அவர்களுடைய குமாரத்திகளை உங்கள் குமாரருக்குக் கொள்ளாமலும், அவர்களுடைய சமாதானத்தையும் நன்மையையும் ஒருக்காலும் நாடாமலும் இருப்பீர்களாக என்றீரே.

எஸ்றா 9:13. இப்பொழுதும் எங்கள் தேவனே, எங்கள் பொல்லாத செய்கைகளினாலும், எங்கள் பெரிய குற்றத்தினாலும், இவைகளெல்லாம் எங்கள்மேல் வந்தும், தேவரீர் எங்கள் அக்கிரமத்துக்குத்தக்க ஆக்கினையை எங்களுக்கு இடாமல், எங்களை இப்படித் தப்பவிட்டிருக்கையில்,

எஸ்றா 9:14. நாங்கள் உமது கற்பனைகளை வீணாக்கவும், இந்த அருவருப்புகளுள்ள ஜனங்களோடே சம்பந்தங்கலக்கவும் தகுமோ? அப்படிச் செய்தால், எங்களில் ஒருவரும் மீந்து தப்பாதபடிக்கு, தேவரீர் எங்களை நிர்மூலமாக்குமட்டும் எங்கள்மேல் கோபமாயிருப்பீரல்லவோ?

எஸ்றா 9:15. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, நீர் நீதியுள்ளவர்; ஆகையால் இந்நாளில் இருக்கிறதுபோல, நாங்கள் தப்பிமீந்திருக்கிறோம்; இதோ, நாங்கள் உமக்கு முன்பாகக் குற்றத்திற்குள்ளானவர்கள்; இதினிமித்தம் நாங்கள் உமக்கு முன்பாக நிற்கத்தக்கவர்கள் அல்ல என்று பிரார்த்தித்தேன்.

யூதாவின் பிரபுக்களில் சிலரும், ஆசாரியரில் சிலரும், லேவியரில் சிலரும் கர்த்தருக்கு விரோதமாக அருவருப்பான காரியங்களை செய்கிறார்கள். எஸ்றா இந்த வர்த்தமானங்களைக் கேட்டு, மிகுந்த துக்கத்தோடு, திகைத்தவனாய் உட்கார்ந்திருக்கிறான். பக்தியுள்ள இஸ்ரவேல் புத்திரரில் அநேகர் அவனோடு கூடயிருக்கிறார்கள். ஆனால் எஸ்றாவோ தன்னோடு கூடயிருக்கிறவர்களைப் பார்க்காமல், பரலோகத்தின் தேவனை நோக்கிப் பார்க்கிறான். இஸ்ரவேல் புத்திரரில் அநேகர் எஸ்றாவோடு கூடிக்கொண்டாலும், அவனோ அவர்களிடத்தில் ஒன்றும் பேசாமல், தேவனாகிய கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணுகிறான்.

அந்திப்பலி நேரத்திலே எஸ்றா துக்கத்தோடே எழுந்து, கிழித்துக்கொண்ட வஸ்திரத்தோடும் சால்வையோடும் முழங்காற்படியிட்டு, தன் கைகளை தேவனாகிய கர்த்தருக்கு நேராக விரித்து, ஜெபம்பண்ணுகிறான் (எஸ்றா 9:5).

எஸ்றா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிற வேளை தேவனுடைய ஆலயத்திலே அந்திப்பலி செலுத்துகிற வேளையாயிருக்கிறது. அந்திப்பலி வேளையின் போது, பக்தியுள்ள யூதர்கள், தேவனுடைய ஆலயத்திற்கு வந்து, தங்களுடைய ஜெபங்களை ஏறெடுப்பது வழக்கம். அவர்கள் கர்த்தருக்கு முன்பாக தங்களுடைய பாவங்களை அறிக்கை செய்வார்கள்.

எஸ்றாவும் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவதற்கு அந்திப்பலி நேரத்தை தேர்வு செய்கிறான். இஸ்ரவேல் புத்திரரில் அநேகர் அருவருப்புக்களை செய்து, கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்திருக்கிறார்கள். எஸ்றா அவர்களுடைய பாவங்களை கர்த்தரிடத்தில் அறிக்கை செய்கிறான்.

கர்த்தருடைய ஆலயத்திலே, அந்திப்பலி நேரத்தில் செலுத்தப்படும் பலியானது, மனுஷருடைய பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கு அடையாளமாக செலுத்தப்படும், மகாபதிலீடாயிருக்கும்.

எஸ்றா கர்த்தரை நம்புகிறான். கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, கர்த்தர் தன்னுடைய ஜெபத்தைக் கேட்டு, அதற்கு பதில் கொடுப்பார் என்றும் எஸ்றா நம்புகிறான்.

எஸ்றா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது தன்னுடைய கைகளை கர்த்தருக்கு நேராக விரித்து ஜெபம்பண்ணுகிறான். அவன் தன்னுடைய கைகளை விரித்து, ஜனங்களுடைய பாவங்களை அறிக்கை செய்கிறான். எஸ்றாவின் விரிக்கப்பட்ட கைகள், பாவம் செய்த இஸ்ரவேல் புத்திரரின் தலைகள்மீது வைக்கப்பட்ட கைகளுக்கு அடையாளமாயிருக்கிறது.

கர்த்தருடைய ஆலயத்தில் பாவநிவாரண பலிகளை செலுத்தும்போது, ஆசாரியனும், பாவம் செய்தவனும், அந்த ஆட்டுக்குட்டியின்மீது தங்களுடைய கைகளை வைப்பது வழக்கம். அதற்கு அடையாளமாக, எஸ்றா தன்னுடைய கைகளை கர்த்தருக்கு நேராக விரிக்கிறான். பாவநிவாரண பலியின் மூலமாக, நம்முடைய பாவங்கள் நிவிர்த்திபண்ணப்படுகிறது.

எஸ்றா இதுவரையிலும் திகைத்தவனாய் உட்கார்ந்து கொண்டிருந்தான். ஆனால் இப்போதோ அவன் அந்திப்பலி நேரத்திலே துக்கத்தோடே எழுந்து, முழங்கால் படியிட்டிருக்கிறான். அவனுடைய இருதயத்தில் காணப்பட்ட துக்கத்தினால், அவனால் இதுவரையிலும் எழுந்திருக்க முடியவில்லை. அவன் உட்கார்ந்த நிலமையிலேயே இருந்தான். இப்போதோ எஸ்றா தன்னுடைய இருதயத்தை கர்த்தருக்கு நேராகத் திருப்புகிறான்.

எஸ்றா துக்கத்தோடே எழுந்து, கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக முழங்கால் படியிடுகிறான். மனந்திரும்புகிற பாவி கர்த்தருக்கு முன்பாக முழங்கால்படியிட்டு தன்னைத் தாழ்த்துவது வழக்கம். எஸ்றாவும் பாவம் செய்த இஸ்ரவேல் புத்திரருக்காக மனந்திரும்புகிறான். அதற்கு அடையாளமாக எஸ்றா முழங்கால் படியிட்டிருக்கிறான்.

எஸ்றா அந்நிய ஜாதி ஸ்திரீயை விவாகம்பண்ணவில்லை. இந்த விஷயத்தில் அவன் பாவம் செய்யவில்லை. யூதருடைய பிரபுக்களிலும், ஆசாரியர்களிலும், லேவியர்களிலும் சிலர் இந்தப் பாவத்தை செய்திருக்கிறார்கள். எஸ்றாவோ பாவம் செய்த அவர்களுக்காக கர்த்தருடைய சமுகத்திலே பரிந்து பேசுகிறான்.

எஸ்றா தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக தன் கைகளை விரித்து ஜெபிக்கிறான். இஸ்ரவேல் புத்திரரின் அருவருப்புக்களின் நிமித்தமாக அவனுடைய இருதயம் அதிகமாய்ப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அவனுக்குள்ளே மிகுந்த துக்கமுண்டாயிற்று. எஸ்றா தன் கைகளை கர்த்தருக்கு நேராக விரித்து, தன் இருதயத்திலுள்ள துக்கங்களையும், கவலைகளையும் கர்த்தரிடத்தில் சொல்லுகிறான்.

எஸ்றா கர்த்தரிடத்தில் ஏறெடுத்த ஜெபம் இந்த வசனப்பகுதியில் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது. நாம் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, முழுமனதோடும், முழுஇருதயத்தோடும் ஜெபம்பண்ணவேண்டும். நாம் கர்த்தரிடத்தில் கருத்தாய் ஜெபிக்கவேண்டும்.

எஸ்றா இஸ்ரவேல் ஜனத்தாரின் பாவங்களுக்காக, கர்த்தரிடத்தில் பாவஅறிக்கை செய்கிறான். அவர்களுடைய பாவத்திற்கும் எஸ்றாவுக்கும் சம்பந்தமில்லை. எஸ்றா அவர்களுடைய பாவத்திற்கு பங்காளியுமல்ல. அவன் பாவத்திற்கு விலகி ஜீவிக்கிறான். ஆனாலும் எஸ்றாவும், பாவிகளாகயிருக்கிற இஸ்ரவேல் புத்திரரோடு, தன்னையும் ஒருவனாக பாவிக்கிறான்.

ஆகையினால் எஸ்றா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "எங்கள் அக்கிரமங்கள்" என்றும் "எங்கள் குற்றம்" என்றும் தன்னையும் சேர்த்து சொல்லுகிறான்.

எஸ்றா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "என் தேவனே, நான் என் முகத்தை என் தேவனாகிய உமக்கு முன்பாக ஏறெடுக்க வெட்கிக் கலங்குகிறேன்; எங்கள் அக்கிரமங்கள் எங்கள் தலைக்கு மேலாகப் பெருகிற்று; எங்கள் குற்றம் வானபரியந்தம் வளர்ந்துபோயிற்று" (எஸ்றா 9:6) என்று சொல்லி ஜெபிக்கிறான்.

அக்கிரமங்களும் குற்றங்களும் பெருகும்போது, அவை நம்முடைய தலைக்கு மேலாக பெருகும். அது வானபரியந்தம் வளரும். தலைக்குமேலாக வெள்ளம் போகும்போது, நாம் தண்ணீரில் மூழ்கி அழிந்துபோவோம். அதுபோலவே அதிகமாய்ப் பாவம் செய்கிறவர்கள், தங்கள் பாவங்களில் மூழ்கி அழிந்துபோவார்கள்.

நம்முடைய பாவங்கள் பெரிதாயிருந்தாலும், நம்முடைய பாவங்களை மன்னிப்பதற்கு கர்த்தர் கிருபையும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களுக்கு நாம் உண்மையாய் மனந்திரும்பும்போது, கர்த்தர் நம்முடைய பாவங்களை மன்னிப்பதற்கு உண்மையுள்ளவராயிருக்கிறார்.

"கர்த்தாவே, உமது கிருபை வானங்களில் விளங்குகிறது; உமது சத்தியம் மேகமண்டலங்கள் பரியந்தம் எட்டுகிறது" (சங் 36:5).

எஸ்றா இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களை கர்த்தருடைய சமுகத்திலே அறிக்கை செய்கிறான். அவன் கர்த்தரை நோக்கி, "எங்கள் பிதாக்களின் நாட்கள் முதல் இந்நாள்மட்டும் நாங்கள் பெரிய குற்றத்துக்கு உள்ளாயிருக்கிறோம்; எங்கள் அக்கிரமங்களினிமித்தம் நாங்களும், எங்கள் ராஜாக்களும், எங்கள் ஆசாரியர்களும், இந்நாளிலிருக்கிறதுபோல, அந்நியதேச ராஜாக்களின் கையிலே, பட்டயத்துக்கும், சிறையிருப்புக்கும், கொள்ளைக்கும், வெட்கத்துக்கும் ஒப்புக்கொடுக்கப்பட்டோம்" (எஸ்றா 9:7) என்று ஜெபம்பண்ணுகிறான்.

இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தனத்திலிருந்தபோதும் கர்த்தர் அவர்களை மறக்கவுமில்லை. அவர் அவர்களைக் கைவிடவுமில்லை. இஸ்ரவேல் புத்திரர் பாபிலோன் தேசத்தில் அடிமைகளாகயிருந்த காலத்திலும், கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளங்கள், அவர்கள் மத்தியிலே காணப்பட்டது.

கர்த்தருக்கு மீதியானவர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலும் இருந்தார்கள். இவர்கள் தங்களுடைய சத்துருக்களின் கைகளுக்கும், பட்டயங்களுக்கும் தப்பித்துக்கொண்டார்கள். பெர்சியா ராஜாக்களின் கிருபைகளும் தயவுகளும் அவர்களுக்கு கிடைத்தது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு செய்த நன்மைகளையும், காண்பித்த கிருபைகளையும், எஸ்றா கர்த்தரிடத்தில் நன்றியுள்ள இருதயத்தோடு சொல்லுகிறான்.

எஸ்றா கர்த்தரை நோக்கி, "இப்பொழுதும் எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களிலே தப்பின சிலரை மீதியாக வைக்கவும், தம்முடைய பரிசுத்த ஸ்தலத்தில் எங்களுக்கு ஒரு குச்சைக் கொடுக்கவும், இப்படியே எங்கள் தேவன் எங்கள் கண்களைப் பிரகாசிப்பித்து, எங்கள் அடிமைத்தனத்திலே எங்களுக்குக் கொஞ்சம் உயிர் கொடுக்கவும், அவராலே கொஞ்சநேரமாவது கிருபை கிடைத்தது" (எஸ்றா 9:8) என்றும்,

'நாங்கள் அடிமைகளாயிருந்தோம்; ஆனாலும் எங்கள் அடிமைத்தனத்திலே எங்கள் தேவன் எங்களைக் கைவிடாமல், எங்களுக்கு உயிர்கொடுக்கவும், நாங்கள் எங்கள் தேவனுடைய ஆலயத்தை எடுப்பித்து, பாழாய்ப்போன அதைப் புதுப்பிக்கும்படிக்கும் எங்களுக்கு யூதாவிலும் எருசலேமிலும் ஒரு வேலியைக் கட்டளையிடும்படிக்கும், பெர்சியாவின் ராஜாக்கள் சமுகத்தில் எங்களுக்குத் தயைகிடைக்கச்செய்தார்" (எஸ்றா 9:9) என்றும், கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மைகளை நன்றியுள்ள இருதயத்தோடு சொல்லுகிறான்.

"தம்முடைய பரிசுத்த ஸ்தலத்தில் எங்களுக்கு ஒரு குச்சைக் கொடுக்கவும்" என்னும் வாக்கியம், பாதுகாப்பான ஸ்தலத்தைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் எபிரெய வழக்குச்சொல்லாகும்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த இஸ்ரவேல் புத்திரர், எருசலேமிலே கர்த்தருடைய ஆலயத்தை எடுப்பித்து கட்டியிருக்கிறார்கள். பாழாய்ப்போனதை புதுப்பித்திருக்கிறார்கள். யூதமார்க்கம் மறுபடியும் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. கர்த்தரை ஆராதிப்பதற்கு ஆசாரியரின் வகுப்புக்கள் மறுபடியும் நியமிக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய ஆலயத்திலே ஆராதனைகள் கிரமமாக நடைபெறுகிறது.

கர்த்தர் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த இஸ்ரவேலரின் கண்களை பிரகாசிப்பிக்க செய்திருக்கிறார். அவர்களுக்கு உயிர் கொடுத்திருக்கிறார். அவர்களுடைய இருதயங்களை புதுப்பித்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் இப்போது, மரித்துப்போனவர்கள் உயிர்பெற்றதுபோல இருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள், கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மைகளை மறந்துவிடுகிறார்கள்.

எஸ்றா கர்த்தரை நோக்கி, "இப்பொழுதும் எங்கள் தேவனே, நாங்கள் இனி என்ன சொல்லுவோம்; தேவரீர் உமது ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளைக்கொண்டு கற்பித்த உமது கற்பனைகளை விட்டுவிட்டோம்" (எஸ்றா 9:10) என்று மிகுந்த மனவேதனையோடும், இருதயத்தின் பாரத்தோடும் சொல்லுகிறான்.

"விருத்தசேதனமில்லாத புருஷனுக்கு நாங்கள் எங்கள் சகோதரியைக் கொடுக்கலாகாது; அது எங்களுக்கு நிந்தையாயிருக்கும்" (ஆதி 34:14).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கற்பித்த கற்பனைகளை, எஸ்றா இங்கு கர்த்தரிடத்தில் நினைவுபடுத்தி சொல்லுகிறான்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "நீங்கள் சுதந்தரிக்கிறதற்கு உட்பிரவேசிக்கும் தேசமானது, தேசாதேசங்களுடைய ஜனங்களின் அசங்கியத்தினாலும், அவர்கள் அதை ஒரு முனைதொடங்கி மறுமுனைமட்டும் நிறையப் பண்ணின அவர்களுடைய அருவருப்புகளினாலும் அவர்களுடைய அசுத்தத்தினாலும், தீட்டுப்பட்டதாயிருக்கிறது" (எஸ்றா 9:11) என்றும்,

"ஆதலால் நீங்கள் பலத்துக்கொண்டு, தேசத்தின் நன்மையைப் புசித்து, அதை நித்தியகாலமாக உங்கள் பிள்ளைகளுக்கு உம்பிளிக்கையாகப் பின்வைக்கும்படிக்கு, நீங்கள் உங்கள் குமாரத்திகளை அவர்களுடைய குமாரருக்குக் கொடாமலும், அவர்களுடைய குமாரத்திகளை உங்கள் குமாரருக்குக் கொள்ளாமலும், அவர்களுடைய சமாதானத்தையும் நன்மையையும் ஒருக்காலும் நாடாமலும் இருப்பீர்களாக" (எஸ்றா 9:12) என்றும் சொன்னார்.

கர்த்தர் கற்பித்த கற்பனைகள் மிகவும் தெளிவாகயிருக்கிறது. "நீங்கள் உங்கள் குமாரத்திகளை அவர்களுடைய குமாரருக்குக் கொடாமலும், அவர்களுடைய குமாரத்திகளை உங்கள் குமாரருக்குக் கொள்ளாமலும் இருப்பீர்களாக" என்று கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தெளிவாக சொல்லியிருக்கிறார். கர்த்தர் காரணமில்லாமல் தம்முடைய கற்பனைகளை சொல்லமாட்டார். இஸ்ரவேல் புத்திரர் அந்நிய தேசத்தாரோடு சம்பந்தங்கலந்தால், இஸ்ரவேல் புத்திரர் தங்களை அந்நிய தேசத்தாரின் விக்கிரகாராதனை பழக்க வழக்கங்களினால் தீட்டுப்படுத்திக்கொள்வார்கள்.

அந்நிய தேசங்கள் அசுத்தமான தேசங்கள். அவை கர்த்தருக்கு அருவருப்பாயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தருக்கு பரிசுத்தமானவர்கள். அசுத்தத்திற்கும் சுத்தத்திற்கும் சம்பந்தமில்லை. ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் அந்நிய தேசத்தாரைவிட்டு விலகி, பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக மிகப்பெரிய பாவங்களை செய்திருக்கிறார்கள். இந்தப் பாவங்களுக்காக அவர்களுக்கு அதிகமான தண்டனை கொடுக்கப்படவேண்டும். எஸ்றா தங்கள் திரளான பாவங்களைப்பற்றி கர்த்தரிடத்தில் சொல்லும்போது, "என் தேவனே, நான் என் முகத்தை என் தேவனாகிய உமக்கு முன்பாக ஏறெடுக்க வெட்கிக் கலங்குகிறேன்; எங்கள் அக்கிரமங்கள் எங்கள் தலைக்கு மேலாகப் பெருகிற்று; எங்கள் குற்றம் வானபரியந்தம் வளர்ந்துபோயிற்று" (எஸ்றா 9:6) என்று சொல்லுகிறான்.

பாவமானது வெட்கமான காரியம். பாவம் செய்கிறவர்கள் கர்த்தருடைய பரிசுத்தமான சமுகத்திற்கு முன்பாக வெட்கப்படவேண்டும். நம்முடைய மனதில் மனந்திரும்புதலுக்கேற்ற துக்கம் காணப்படவேண்டும். பாவத்தைக் குறித்த வெட்கமும் துக்கமும் நம்முடைய மனதில் காணப்படவில்லையென்றால், நாம் நம்முடைய பாவங்களுக்காக வருத்தப்படமாட்டோம். நம்முடைய பாவங்களுக்கு மனந்திரும்ப நமக்கு வாய்ப்பில்லாமல் போய்விடும்.

மற்றவர்களின் பாவங்களைக் குறித்தும் நாம் வெட்கப்படவேண்டும். துக்கப்படவேண்டும். மற்றவர்கள் பாவம் செய்தாலும், நாம் பாவம் செய்ததுபோல, நமக்குள் வெட்கமும், துக்கமும், வேதனையும் உண்டாகவேண்டும். அப்போதுதான் மற்றவர்களின் பாவங்களுக்காக நம்மால் உண்மையாய் ஜெபிக்க முடியும்.

"ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான்" (லூக் 18:13).

தங்களுடைய பாவங்களுக்கு உண்மையாய் மனந்திரும்புகிறவர்கள், கர்த்தருடைய சமுகத்திலே அதிகமான வார்த்தைகளை சொல்லுவதற்குகூட வெட்கப்படுவார்கள். கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவதற்கே பயப்படுவார்கள். அவர்களுடைய மனதில் வெட்கமும் வேதனையும், துக்கமும் நிரம்பியிருக்கும். பாவம் செய்கிறவர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொள்கிறார்கள். அவர்களிடத்தில் உண்மையிருக்காது.

கர்த்தருடைய மன்னிக்கும் கிருபையினாலேயே நமக்கு பாவமன்னிப்பு கிடைக்கிறது. நம்முடைய மீறுதல்களுக்காக நாம் எத்தனை ஆடுகளை பாவநிவாரண பலியாக செலுத்தினாலும், நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு வாய்ப்பில்லை. கர்த்தருடைய கிருபையும் இரக்கமுமே நம்முடைய பாவங்களை மன்னிக்கும். இயேசுகிறிஸ்துவின் இரத்தம் மாத்திரமே நம்முடைய பாவங்களை மன்னிக்கும்.

நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு, நம்மால் பாவநிவாரண கிரயம் எதையும் செலுத்த முடியாது என்பது கர்த்தருக்கு தெரியும். ஆகையினால் நம்முடைய சுயமுயற்சியினாலே, நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படும் என்னும் நம்பிக்கை நமக்கு இல்லை.

எஸ்றா இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களையும் அறிந்திருக்கிறான். அவன் கர்த்தருடைய நீதியையும், கிருபையையும் அறிந்திருக்கிறான்.

எஸ்றா கர்த்தரை நோக்கி, "இப்பொழுதும் எங்கள் தேவனே, எங்கள் பொல்லாத செய்கைகளினாலும், எங்கள் பெரிய குற்றத்தினாலும், இவைகளெல்லாம் எங்கள்மேல் வந்தும், தேவரீர் எங்கள் அக்கிரமத்துக்குத்தக்க ஆக்கினையை எங்களுக்கு இடாமல், எங்களை இப்படித் தப்பவிட்டிருக்கையில், நாங்கள் உமது கற்பனைகளை வீணாக்கவும், இந்த அருவருப்புகளுள்ள ஜனங்களோடே சம்பந்தங்கலக்கவும் தகுமோ? அப்படிச் செய்தால், எங்களில் ஒருவரும் மீந்து தப்பாதபடிக்கு, தேவரீர் எங்களை நிர்மூலமாக்குமட்டும் எங்கள்மேல் கோபமாயிருப்பீரல்லவோ?" (எஸ்றா 9:13,14) என்று ஜெபம்பண்ணுகிறான்.

"இஸ்ரவேலே, உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்பு; நீ உன் அக்கிரமத்தினால் விழுந்தாய். வார்த்தைகளைக்கொண்டு கர்த்தரிடத்தில் திரும்புங்கள்; அவரை நோக்கி: தேவரீர் எல்லா அக்கிரமத்தையும் நீக்கி, எங்களைத் தயவாய் அங்கீகரித்தருளும்; அப்பொழுது நாங்கள் எங்கள் உதடுகளின் காளைகளைச் செலுத்துவோம்" (ஓசி 14:1,2).

எஸ்றா இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களை இதுவரையிலும் கர்த்தரிடத்தில் சொன்னான். இப்போது கர்த்தருடைய நீதியைப்பற்றி அவர்களிடத்தில் சொல்லுகிறான்.

எஸ்றா கர்த்தரை நோக்கி, "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, நீர் நீதியுள்ளவர்; ஆகையால் இந்நாளில் இருக்கிறதுபோல, நாங்கள் தப்பிமீந்திருக்கிறோம்; இதோ, நாங்கள் உமக்கு முன்பாகக் குற்றத்திற்குள்ளானவர்கள்; இதினிமித்தம் நாங்கள் உமக்கு முன்பாக நிற்கத்தக்கவர்கள் அல்ல" (எஸ்றா 9:15) என்று சொல்லி பிரார்த்திக்கிறான்.

எஸ்றா கர்த்தரிடத்தில் பிரார்த்தித்த பிரார்த்தனையின் விவரம் வருமாறு :

1. நான் என் முகத்தை என் தேவனாகிய உமக்கு முன்பாக ஏறெடுக்க வெட்கிக் கலங்குகிறேன். (எஸ்றா 9:6)

2. எங்கள் பிதாக்களின் நாட்கள் முதல் இந்நாள்மட்டும் நாங்கள் பெரிய குற்றத்துக்கு உள்ளாயிருக்கிறோம் (எஸ்றா 9:7)

3. எங்கள் அக்கிரமங்களினிமித்தம் நாங்கள் சிறையிருப்புக்கும், கொள்ளைக்கும், வெட்கத்துக்கும் ஒப்புக்கொடுக்கப்பட்டோம் (எஸ்றா 9:7)

4. எங்கள் அடிமைத்தனத்திலே எங்களுக்குக் கொஞ்சம் உயிர் கொடுக்கவும், கர்த்தராலே கொஞ்சநேரமாவது கிருபை கிடைத்தது. (எஸ்றா 9:8)

5. நாங்கள் அடிமைகளாயிருந்தோம்; ஆனாலும் எங்கள் அடிமைத்தனத்திலே எங்கள் தேவன் எங்களைக் கைவிடாமல், எங்களுக்கு உயிர்கொடுக்கவும், நாங்கள் எங்கள் தேவனுடைய ஆலயத்தை எடுப்பித்து, பாழாய்ப்போன அதைப் புதுப்பிக்கும்படிக்கும் எங்களுக்கு யூதாவிலும் எருசலேமிலும் ஒரு வேலியைக் கட்டளையிடும்படிக்கும், பெர்சியாவின் ராஜாக்கள் சமுகத்தில் எங்களுக்குத் தயைகிடைக்கச்செய்தார். (எஸ்றா 9:9)

6. தேவரீர் உமது ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளைக்கொண்டு கற்பித்த உமது கற்பனைகளை விட்டுவிட்டோம். (எஸ்றா 9:10)

7. தேவரீர் எங்கள் அக்கிரமத்துக்குத்தக்க ஆக்கினையை எங்களுக்கு இடவில்லை. (எஸ்றா 9:13)

8. எங்களைத் தப்பவிட்டிருக்கிறீர்.

9. நாங்கள் உமது கற்பனைகளை வீணாக்கவும், இந்த அருவருப்புகளுள்ள ஜனங்களோடே சம்பந்தங்கலக்கவும் தகுமோ?

10. அப்படிச் செய்தால், எங்களில் ஒருவரும் மீந்து தப்பாதபடிக்கு, தேவரீர் எங்களை நிர்மூலமாக்குமட்டும் எங்கள்மேல் கோபமாயிருப்பீரல்லவோ? (எஸ்றா 9:14)

11. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, நீர் நீதியுள்ளவர் (எஸ்றா 9:15)

12. நாங்கள் உமக்கு முன்பாகக் குற்றத்திற்குள்ளானவர்கள்; இதினிமித்தம் நாங்கள் உமக்கு முன்பாக நிற்கத் தக்கவர்கள் அல்ல. (எஸ்றா 9:15)

நம்முடைய சொந்த நீதியைச் சொல்லி, நம்மால் தேவனுடைய நீதிக்கு முன்பாக பரிசுத்தவான்களாய் நிற்கமுடியாது. கர்த்தர் நீதியும் ஞானமுமுள்ளவர். அவர் நம்முடைய இருதயங்களின் நினைவுகளையெல்லாம் அறிந்து வைத்திருக்கிறவர். கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் நமக்கு காண்பிக்கப்படவில்லையென்றால், நீதியுள்ள கர்த்தருக்கு முன்பாக, நம்மால் நீதிமான்களாக நிற்கமுடியாது.

"இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி: பாவஞ்செய்தோம், தேவரீர் உம்முடைய பார்வைக்கு நலமானதை எங்களுக்குச் செய்யும்; இன்றைக்குமாத்திரம் எங்களை இரட்சித்தருளும் என்று சொல்லி, அந்நிய தேவர்களைத் தங்கள் நடுவிலிருந்து விலக்கிவிட்டு, கர்த்தருக்கு ஆராதனை செய்தார்கள்; அப்பொழுது அவர் இஸ்ரவேலின் வருத்தத்தைப் பார்த்து மனதுருகினார்" (நியா 10:15,16).

நீதியுள்ள கர்த்தருக்கு முன்பாக நம்மால் ஒன்றும் சொல்லவும் முடியாது. நம்மை நீதிமானாக்க நம்மால் ஒன்றும் செய்யவும் முடியாது. ஆகையினால் நாம் யோபுவைப்போல பேசக்கற்றுக்கொள்ள வேண்டும்.

"நான் நீதிமானாயிருந்தாலும் அவரோடே வழக்காடாமல், என் நியாயாபதியினிடத்தில் இரக்கத்துக்குக் கெஞ்சுவேன்" (யோபு 9:15) என்று யோபு சொன்னார்.

எஸ்றா தன்னுடைய மனதிலுள்ள வருத்தங்களையும், துக்கங்களையும், வேதனைகளையும் கர்த்தருடைய சமுகத்திலே ஒப்புவிக்கிறான். அதன் பின்பு எல்லாவற்றையும் கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்று, கர்த்தருடைய சமுகத்திலே அமைதலாயிருக்கிறான்.

10 அதிகாரம்

எஸ்றா கர்த்தருடைய சமுகத்திலே பிரார்த்தனை செய்கிறான். அவன் இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களை அறிக்கையிட்டு, அழுது தேவனுடைய ஆலயத்திற்கு முன்பாக தாழவிழுந்து கிடக்கிறான். அப்போது இஸ்ரவேலின் மகாபெரிய சபை அவனிடத்தில் வந்து கூடுகிறார்கள் (எஸ்றா 10:1).

செக்கனியா என்பவன் இஸ்ரவேல் புத்திரர் சார்பாக எஸ்றாவிடம் பேசுகிறான் (எஸ்றா 10:2-4). எஸ்றா ஆசாரியரிலும் லேவியரிலும் பிரதானமானவர்களை ஆணையிடச் சொல்லுகிறான் (எஸ்றா 10:5).

எஸ்றா சிறையிருப்பிலிருந்து வந்தவர்களுடைய குற்றத்தின் நிமித்தம் அப்பம் புசியாமலும், தண்ணீர் குடியாமலும், துக்கித்துக்கொண்டிருக்கிறான் (எஸ்றா 10:6).

சிறையிருப்பிலிருந்து வந்தவர்கள் எல்லோரும் எருசலேமிலே கூட்டிச் சேர்க்கப்படுகிறார்கள் (எஸ்றா 10:7-9). எஸ்றா இஸ்ரவேல் சபையாருக்கு கர்த்தருடைய பிரமாணங்களை உபதேசம்பண்ணுகிறான் (எஸ்றா 10:10-14).

மறுஜாதியான ஸ்திரீகளை விசாரிக்கும்படிக்கு விசாரணைக்காரர் நியமிக்கப்படுகிறார்கள் (எஸ்றா 10:15-17). மறுஜாதியான மனைவிகளை கொண்டவர்களாக காணப்பட்டவர்களின் விவரம் (எஸ்றா 10:18-44).

இஸ்ரவேலின் மகாபெரிய சபை எஸ்றா 10:1-5

எஸ்றா 10:1. எஸ்றா இப்படி விண்ணப்பம்பண்ணி, அறிக்கையிட்டு அழுது, தேவனுடைய ஆலயத்துக்கு முன்பாகத் தாழ விழுந்துகிடக்கையில், இஸ்ரவேலில் புருஷரும் ஸ்திரீகளும் பிள்ளைகளுமான மகா பெரிய சபை அவனிடத்தில் வந்து கூடிற்று; ஜனங்கள் மிகவும் அழுதார்கள்.

எஸ்றா 10:2. அப்பொழுது ஏலாமின் புத்திரரில் ஒருவனாகிய யெகியேலின் குமாரன் செக்கனியா எஸ்றாவை நோக்கி: நாங்கள்தேசத்து ஜனங்களிலுள்ள அந்நிய ஸ்திரீகளைச் சேர்த்துக்கொண்டதினால், எங்கள் தேவனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்தோம்; ஆகிலும் இப்பொழுது இந்தக் காரியத்திலே இன்னும் இஸ்ரவேலுக்காக நம்பிக்கை உண்டு.

எஸ்றா 10:3. இப்பொழுதும் அந்த ஸ்திரீகள் எல்லாரையும், அவர்களிடத்தில் பிறந்தவர்களையும், என் ஆண்டவனுடைய ஆலோசனைக்கும், நமது தேவனுடைய கற்பனைக்கு நடுங்குகிறவர்களின் ஆலோசனைக்கும் ஏற்றபிரகாரம் அகற்றிப்போடுவோம் என்று நம்முடைய தேவனோடே உடன்படிக்கைப்பண்ணக் கடவோம்; நியாயப்பிரமாணத்தின்படியே செய்யப்படுவதாக.

எஸ்றா 10:4. எழுந்திரும்; இந்தக் காரியத்தை நடப்பிக்கிறது உமக்கு அடுத்தது; நாங்களும் உம்மோடேகூட இருப்போம்; நீர் திடன்கொண்டு இதைச் செய்யும் என்றான்.

எஸ்றா 10:5. அப்பொழுது எஸ்றா எழுந்திருந்து, ஆசாரியரிலும் லேவியரிலும் பிரதானமானவர்களும் இஸ்ரவேல் அனைவரும் இந்த வார்த்தையின்படி, செய்யும்படிக்கு, அவர்களை ஆணையிடச்சொன்னான்; அவர்கள் ஆணையிட்டார்கள்.

எஸ்றா கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்துகிறான். அவன் இஸ்ரவேல் ஜனங்களுடைய பாவங்களை கர்த்தரிடத்தில் அறிக்கை செய்கிறான்.

எஸ்றா இப்படி விண்ணப்பம்பண்ணி, அறிக்கையிட்டு அழுது, தேவனுடைய ஆலயத்துக்கு முன்பாகத் தாழ விழுந்துகிடக்கையில், இஸ்ரவேலில் புருஷரும் ஸ்திரீகளும் பிள்ளைகளுமான மகா பெரிய சபை அவனிடத்தில் வந்து கூடிற்று; ஜனங்கள் மிகவும் அழுகிறார்கள் (எஸ்றா 10:1).

இஸ்ரவேல் புத்திரர் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து, எருசலேமுக்கு திரும்பி வந்தபோது, செருபாபேல் என்பவன் யூதாதேசத்திற்கு அதிபதியாயிருக்கிறான். இப்போது யூதாவுக்கு புதிய அதிபதியாக எஸ்றா நியமிக்கப்பட்டிருக்கிறான்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதாஜனத்தார் எல்லோரும், தங்களுடைய புதிய அதிபதியாகிய எஸ்றாவினிமித்தம் சந்தோஷமாயிருக்கிறார்கள். யூதாதேசம் சந்தோஷமாயிருக்கும்போது, எஸ்றா கர்த்தருடைய சமுகத்திலே அழுது தேவனுடைய ஆலயத்திற்கு முன்பாக தாழவிழுந்துகிடக்கிறான். எஸ்றாவினுடைய அழுகையின் சத்தம் அதிகமாயிருக்கிறது.

தேவனுடைய ஆலயத்திலே எஸ்றா விண்ணப்பம்பண்ணி, அறிக்கையிட்டு அழுது, தாழவிழுந்து கிடக்கையில் இஸ்ரவேலின் மகாபெரிய சபையும் அவனிடத்தில் கூடிவருகிறார்கள். அவர்களும் மிகவும் அழுகிறார்கள். யூதாதேசத்தின் சந்தோஷம் துக்கமாய் மாறிற்று.

எஸ்றா ஒரு வேதபாரகன். அவன் கர்த்தருடைய வேதப்பிரமாணங்களை கற்றுத் தேர்ந்தவன். அர்தசஷ்டா ராஜாவினுடைய சன்னதின் பிரகாரம், எஸ்றாவுக்கு விசேஷித்த அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. எஸ்றா ஜனங்களுடைய பாவங்களையும், அக்கிரமங்களையும் நினைத்து அழுகிறான். அவன் அழுவதைப் பார்த்து இஸ்ரவேல் சபையார் எல்லோரும் அழுகிறார்கள்.

இந்த சூழ்நிலையில் செக்கனியா என்பவன் தேவனுடைய ஆலயத்தில் தாழவிழுந்துகிடக்கிற எஸ்றாவைப் பார்க்க வருகிறான். இவன் எஸ்றாவோடுகூட பாபிலோன் தேசத்திலிருந்து எருசலேமுக்கு வந்தவர்களில் ஒருவன்.

"பாரோஷின் புத்திரரில் ஒருவனான செக்கனியாவின் புத்திரரில் சகரியாவும், அவனோடேகூட வம்ச அட்டவணையில் எழுதியிருக்கிற நூற்றைம்பது ஆண்மக்களும்.....செக்கனியாவின் புத்திரரில் யகசியேலின் குமாரனும், அவனோடேகூட முந்நூறு ஆண்மக்களும்" (எஸ்றா 8:3,5).

இஸ்ரவேலின் மகாபெரிய சபையார் மிகவும் அழுது புலம்புகிற ஸ்தலம் "போகிம்" என்று அழைக்கப்படுகிறது. இந்தப் பெயருக்கு "அழுது புலம்புகிறவர்கள்" என்று பொருள்.

செக்கனியா எஸ்றாவை நோக்கி, "நாங்கள் தேசத்து ஜனங்களிலுள்ள அந்நிய ஸ்திரீகளைச் சேர்த்துக்கொண்டதினால், எங்கள் தேவனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்தோம்; ஆகிலும் இப்பொழுது இந்தக் காரியத்திலே இன்னும் இஸ்ரவேலுக்காக நம்பிக்கை உண்டு" (எஸ்றா 10:2) என்று சொல்லுகிறான்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த இஸ்ரவேல் புத்திரரின் பாவங்கள் அனைத்தையும், "நாங்கள் எங்கள் தேவனுக்கு விரோதமாக பாவஞ்செய்தோம்" என்று செக்கனியா ஒரே வாக்கியத்தில் சொல்லுகிறான். இஸ்ரவேல் புத்திரர் தேசத்து ஜனங்களிலுள்ள அந்நிய ஸ்திரீகளை சேர்த்துக்கொண்டது தேவனுக்கு விரோதமான பாவம்.

செக்கனியா இந்தப் பாவத்தில் ஈடுபட்டிருக்கிறானா என்பது தெரியவில்லை. ஆனால் செக்கனியாவின் தகப்பனும், அவனுடைய தகப்பன் வீட்டிலுள்ள அனைவரும் அந்நிய ஸ்திரீகளை சேர்த்துக் கொண்டு பாவம் செய்திருக்கிறார்கள்.

"ஏலாமின் புத்திரரில் மத்தனியா, சகரியா, யெகியேல், அப்தி, யெரிமோத், எலியா என்பவர்களும்" (எஸ்றா 10:26).

ஆகையினால் செக்கனியா இஸ்ரவேல் புத்திரரின் பாவத்தைப்பற்றிச் சொல்லும்போது, "தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்தோம்" என்று தன்னையும் சேர்த்து சொல்லுகிறான்.

எஸ்றா இப்படி விண்ணப்பம்பண்ணி, அறிக்கையிட்டு அழுது, தேவனுடைய ஆலயத்துக்கு முன்பாகத் தாழ விழுந்துகிடக்கையில், இஸ்ரவேலில் புருஷரும் ஸ்திரீகளும் பிள்ளைகளுமான மகா பெரிய சபை அவனிடத்தில் வந்து கூடிற்று; ஜனங்கள் மிகவும் அழுகிறார்கள் (எஸ்றா 10:1).

இஸ்ரவேல் புத்திரர் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து, எருசலேமுக்கு திரும்பி வந்தபோது, செருபாபேல் என்பவன் யூதாதேசத்திற்கு அதிபதியாயிருக்கிறான். இப்போது யூதாவுக்கு புதிய அதிபதியாக எஸ்றா நியமிக்கப்பட்டிருக்கிறான்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதாஜனத்தார் எல்லோரும், தங்களுடைய புதிய அதிபதியாகிய எஸ்றாவினிமித்தம் சந்தோஷமாயிருக்கிறார்கள். யூதாதேசம் சந்தோஷமாயிருக்கும்போது, எஸ்றா கர்த்தருடைய சமுகத்திலே அழுது தேவனுடைய ஆலயத்திற்கு முன்பாக தாழவிழுந்துகிடக்கிறான். எஸ்றாவினுடைய அழுகையின் சத்தம் அதிகமாயிருக்கிறது.

தேவனுடைய ஆலயத்திலே எஸ்றா விண்ணப்பம்பண்ணி, அறிக்கையிட்டு அழுது, தாழவிழுந்து கிடக்கையில் இஸ்ரவேலின் மகாபெரிய சபையும் அவனிடத்தில் கூடிவருகிறார்கள். அவர்களும் மிகவும் அழுகிறார்கள். யூதாதேசத்தின் சந்தோஷம் துக்கமாய் மாறிற்று.

எஸ்றா ஒரு வேதபாரகன். அவன் கர்த்தருடைய வேதப்பிரமாணங்களை கற்றுத் தேர்ந்தவன். அர்தசஷ்டா ராஜாவினுடைய சன்னதின் பிரகாரம், எஸ்றாவுக்கு விசேஷித்த அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. எஸ்றா ஜனங்களுடைய பாவங்களையும், அக்கிரமங்களையும் நினைத்து அழுகிறான். அவன் அழுவதைப் பார்த்து இஸ்ரவேல் சபையார் எல்லோரும் அழுகிறார்கள்.

இந்த சூழ்நிலையில் செக்கனியா என்பவன் தேவனுடைய ஆலயத்தில் தாழவிழுந்துகிடக்கிற எஸ்றாவைப் பார்க்க வருகிறான். இவன் எஸ்றாவோடுகூட பாபிலோன் தேசத்திலிருந்து எருசலேமுக்கு வந்தவர்களில் ஒருவன்.

"பாரோஷின் புத்திரரில் ஒருவனான செக்கனியாவின் புத்திரரில் சகரியாவும், அவனோடேகூட வம்ச அட்டவணையில் எழுதியிருக்கிற நூற்றைம்பது ஆண்மக்களும்......செக்கனியாவின் புத்திரரில் யகசியேலின் குமாரனும், அவனோடேகூட முந்நூறு ஆண்மக்களும்" (எஸ்றா 8:3,5).

இஸ்ரவேலின் மகாபெரிய சபையார் மிகவும் அழுது புலம்புகிற ஸ்தலம் "போகிம்" என்று அழைக்கப்படுகிறது. இந்தப் பெயருக்கு "அழுது புலம்புகிறவர்கள்" என்று பொருள்.

செக்கனியா எஸ்றாவை நோக்கி, "நாங்கள் தேசத்து ஜனங்களிலுள்ள அந்நிய ஸ்திரீகளைச் சேர்த்துக்கொண்டதினால், எங்கள் தேவனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்தோம்; ஆகிலும் இப்பொழுது இந்தக் காரியத்திலே இன்னும் இஸ்ரவேலுக்காக நம்பிக்கை உண்டு" (எஸ்றா 10:2) என்று சொல்லுகிறான்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த இஸ்ரவேல் புத்திரரின் பாவங்கள் அனைத்தையும், "நாங்கள் எங்கள் தேவனுக்கு விரோதமாக பாவஞ்செய்தோம்" என்று செக்கனியா ஒரே வாக்கியத்தில் சொல்லுகிறான். இஸ்ரவேல் புத்திரர் தேசத்து ஜனங்களிலுள்ள அந்நிய ஸ்திரீகளை சேர்த்துக்கொண்டது தேவனுக்கு விரோதமான பாவம்.

செக்கனியா இந்தப் பாவத்தில் ஈடுபட்டிருக்கிறானா என்பது தெரியவில்லை. ஆனால் செக்கனியாவின் தகப்பனும், அவனுடைய தகப்பன் வீட்டிலுள்ள அனைவரும் அந்நிய ஸ்திரீகளை சேர்த்துக் கொண்டு பாவம் செய்திருக்கிறார்கள்.

"ஏலாமின் புத்திரரில் மத்தனியா, சகரியா, யெகியேல், அப்தி, யெரிமோத், எலியா என்பவர்களும்" (எஸ்றா 10:26).

ஆகையினால் செக்கனியா இஸ்ரவேல் புத்திரரின் பாவத்தைப்பற்றிச் சொல்லும்போது, "தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்தோம்" என்று தன்னையும் சேர்த்து சொல்லுகிறான்.

இஸ்ரவேல் புத்திரருடைய பாவம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. பாவத்தின் இந்த வியாதி இஸ்ரவேல் சபையார் மத்தியில் பரவக்கூடாது. இந்த வியாதியைக் குணப்படுத்தவேண்டும். பாவத்தினால் சாபமும், சாபத்தினால் வியாதியும், வியாதியினால் மரணமும் வரும். வியாதி கண்டுபிடிக்கப்பட்டிருப்பதினால், அதைக் குணப்படுத்துவதற்கு வாய்ப்புள்ளது.

செக்கனியா இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களைப்பற்றிச் சொல்லும்போது, "ஆகிலும் இப்பொழுது இந்தக் காரியத்திலே இன்னும் இஸ்ரவேலுக்காக நம்பிக்கை உண்டு" *(எஸ்றா 10:2)* என்று சொல்லுகிறான்.

செக்கனியா எஸ்றாவை நோக்கி, "இப்பொழுதும் அந்த ஸ்திரீகள் எல்லாரையும், அவர்களிடத்தில் பிறந்தவர்களையும், என் ஆண்டவனுடைய ஆலோசனைக்கும், நமது தேவனுடையகற்பனைக்கு நடுங்குகிறவர்களின் ஆலோசனைக்கும் ஏற்றபிரகாரம் அகற்றிப்போடுவோம் என்று நம்முடைய தேவனோடே உடன்படிக்கைப்பண்ணக் கடவோம்; நியாயப் பிரமாணத்தின்படியே செய்யப்படுவதாக. எழுந்திரும்; இந்தக் காரியத்தை நடப்பிக்கிறது உமக்கு அடுத்தது; நாங்களும் உம்மோடேகூட இருப்போம்; நீர் திடன்கொண்டு இதைச் செய்யும்" *(எஸ்றா10:3,4)* என்று சொல்லுகிறான்.

ஏற்கெனவே விவாகம் பண்ணிய மனைவிமார்களையும், அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகளையும் விட்டுபிரிவது மிகவும் கடினமான காரியம். இதனால் மனமடிவு உண்டாகும். பிரிவின் நிமித்தம் இருதய வேதனைகளும் உண்டாகும் *(எஸ்றா 10:3-5)*.

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே காணப்படுகிற பாவத்தையும் நீக்கவேண்டும். அந்தப் பாவத்திற்கு காரணமாகயிருக்கிற காரியங்களையும் அகற்றவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலிருந்து அந்நிய ஸ்திரீகள் எல்லோரையும் அகற்றிப்போடலாம் என்று செக்கனியா சொல்லுகிறான்.

எஸ்றாவின் காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே காணப்பட்ட அருவருப்புக்களை நீக்கிப்போடுவதற்கு, அந்நிய ஸ்திரீகளை தள்ளிவிடலாம் என்று தீர்மானம்பண்ணுகிறார்கள். ஆனால் புதிய ஏற்பாட்டு பிரமாணம், வித்தியாசமாயிருக்கிறது.

"மற்றவர்களைக் குறித்துக் கர்த்தர் அல்ல, நானே சொல்லுகிறதாவது: சகோதரனொருவனுடைய மனைவி அவிசுவாசியாயிருந்தும், அவனுடனே வாசமாயிருக்க அவளுக்குச் சம்மதமிருந்தால் அவன் அவளைத் தள்ளிவிடாதிருக்கக்கடவன். அப்படியே ஒரு ஸ்திரீயினுடைய புருஷன் அவிசுவாசியாயிருந்தும், அவளுடனே வாசமாயிருக்க அவனுக்குச் சம்மதமிருந்தால், அவள் அவனைத் தள்ளி விடாதிருக்கக்கடவள்" *(1கொரி 7:12,13)*.

அந்நிய ஸ்திரீகளை விவாகம்பண்ணினவர்கள் அவர்களைத் தள்ளி வைத்துவிடவேண்டும். அந்நிய ஸ்திரீகளை விவாதம்பண்ணாதவர்கள், மற்றவர்களை சுத்தப்படுத்துவதற்கு உதவி செய்யவேண்டும். அந்நிய ஸ்திரீகளை விவாகம்பண்ணினவர்கள் தங்கள் மனைவிமார்களை தள்ளிவிடுவதற்கு, இவர்கள் உதவி செய்ய முன்வரவேண்டும்.

அப்பொழுது எஸ்றா எழுந்திருந்து, ஆசாரியரிலும் லேவியரிலும் பிரதானமானவர்களும் இஸ்ரவேல் அனைவரும் இந்த வார்த்தையின்படி, செய்யும்படிக்கு, அவர்களை ஆணையிடச்சொல்லுகிறான்; அவர்கள் ஆணையிடுகிறார்கள் *(எஸ்றா 10:5)*.

இஸ்ரவேலர் எருசலேமிலே கூடுகிறார்கள் எஸ்றா 10:6-14

எஸ்றா 10:6. அதின்பின்பு எஸ்றா தேவனுடைய, ஆலயத்துக்கு முன்னிருந்து எழுந்து, எலியாசிபின் குமாரனாகிய யோகனானின் அறைக்குள் பிரவேசித்தான்; அங்கே வந்தபோது, அவன் சிறையிருப்பிலிருந்து வந்தவர்களுடைய குற்றத்தினிமித்தம் அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் துக்கித்துக்கொண்டிருந்தான்.

எஸ்றா 10:7. அப்பொழுது சிறையிருப்பிலிருந்து வந்தவர்கள் எல்லாரும் எருசலேமிலே வந்து கூடவேண்டும் என்றும்,

எஸ்றா 10:8. மூன்றுநாளைக்குள்ளே பிரபுக்கள் மூப்பர்களுடைய ஆலோசனையின்படியே எவனாகிலும் வராதேபோனால், அவனுடைய பொருளெல்லாம் ஜப்தி செய்யப்பட்டு, சிறையிருப்பிலிருந்து வந்த சபைக்கு அவன் புறம்பாக்கப்படுவான் என்றும், யூதாவிலும் எருசலேமிலும் விளம்பரம்பண்ணினார்கள்.

எஸ்றா 10:9. அப்படியே யூதா பென்யமீன் கோத்திரத்தார் எல்லாரும் மூன்று நாளைக்குள்ளே எருசலேமிலே கூடினார்கள்; அது ஒன்பதாம் மாதம் இருபதாந் தேதியாயிருந்தது; ஜனங்கள் எல்லாரும் தேவனுடைய ஆலயத்தின் வீதியிலே அந்தக் காரியத்தினாலும் அடைமழையினாலும் நடுங்கிக்கொண்டிருந்தார்கள்.

எஸ்றா 10:10. அப்பொழுது ஆசாரியனாகிய எஸ்றா எழுந்திருந்து அவர்களை நோக்கி: நீங்கள் இஸ்ரவேலின் மேலிருக்கிற குற்றத்தை அதிகரிக்கப்பண்ண, மறு ஜாதியான ஸ்திரீகளை விவாகம்பண்ணினதினால் பாவஞ்செய்தீர்கள்.

எஸ்றா 10:11. இப்பொழுதும் நீங்கள் உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரிடத்தில் அறிக்கையிட்டு, அவருடைய பிரியத்தின்படியே செய்து, தேசத்தின் ஜனங்களையும், மறுஜாதியான ஸ்திரீகளையும் விட்டு விலகுங்கள் என்றான்.

எஸ்றா 10:12. அப்பொழுது சபையார் யாவரும் மகா சத்தத்தோடே பிரதியுத்தரமாக: ஆம், நீர் சொன்ன வார்த்தைகளின்படியே செய்யவேண்டியதுதான்.

எஸ்றா 10:13. ஆனாலும் ஜனங்கள் திரளாயிருக்கிறார்கள், இது மாரிகாலமுமாயிருக்கிறது, இங்கே வெளியிலே நிற்க எங்களாலே கூடாது; இது ஒருநாள் இரண்டுநாள் வேலையல்ல; இந்தக் காரியத்திலே கட்டளை மீறினவர்களாகிய நாங்கள் அநேகர்.

எஸ்றா 10:14. ஆகையால் இதற்குச் சபையெங்கும் எங்கள் பிரபுக்கள் விசாரிப்புக்காரராக வைக்கப்பட வேண்டும்; இந்தக் காரியத்தினிமித்தம் நம்முடைய தேவனுக்கு இருக்கிற உக்கிரகோபம் எங்களை விட்டுத் திரும்பும்படி, எங்கள் பட்டணங்களில் மறுஜாதியான ஸ்திரீகளைக்கொண்ட அனைவரும் ஒவ்வொரு பட்டணத்தின் மூப்பரோடும் நியாயாதிபதிகளோடும் குறித்தகாலங்களில் வரக்கடவர்கள் என்றார்கள்.

அதின்பின்பு எஸ்றா தேவனுடைய ஆலயத்துக்கு முன்னிருந்து எழுந்து, எலியாசிபின் குமாரனாகிய யோகனானின் அறைக்குள் பிரவேசிக்கிறான்; அங்கே வந்தபோது, அவன் சிறையிருப்பிலிருந்து வந்தவர்களுடைய குற்றத்தினிமித்தம் அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் துக்கித்துக்கொண்டிருக்கிறான் (எஸ்றா 10:6).

அந்நிய ஜாதி ஸ்திரீகளை விலக்கி வைப்பது சம்பந்தமாக இஸ்ரவேல் புத்திரர் தேவனோடு உடன்படிக்கை பண்ணுகிறார்கள். அதன் பின்பு, எஸ்றா தனியாகத் தொடர்ந்து ஜெபிக்கிறான். அந்நிய ஜாதி ஸ்திரீகளைத் தள்ளிவிடுவதினால் உண்டாகும் மனவேதனைகளுக்காக எஸ்றா உபவாசித்து ஜெபிக்கிறான்.

அப்பொழுது சிறையிருப்பிலிருந்து வந்தவர்கள் எல்லாரும் எருசலேமிலே வந்து கூடவேண்டும் என்றும், மூன்றுநாளைக்குள்ளே பிரபுக்கள் மூப்பர்களுடைய ஆலோசனையின்படியே எவனாகிலும் வராதேபோனால், அவனுடைய பொருளெல்லாம் ஜப்தி செய்யப்பட்டு, சிறையிருப்பிலிருந்து வந்த சபைக்கு அவன் புறம்பாக்கப்படுவான் என்றும், யூதாவிலும் எருசலேமிலும் விளம்பரம்பண்ணுகிறார்கள். அப்படியே யூதா பென்யமீன் கோத்திரத்தார் எல்லாரும் மூன்று நாளைக்குள்ளே எருசலேமிலே கூடினார்கள் (எஸ்றா 10:7-9).

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் மூன்று நாளைக்குள்ளே எருசலேமுக்குக் கூடிவரவேண்டும். அவ்வாறு வராமற்போகிறவனுடைய பொருளெல்லாம் ஜப்தி செய்யப்படும். அவனும் சிறையிருப்பிலிருந்து வந்த சபைக்குப் புறம்பாக்கப்படுவான்.

இஸ்ரவேலர் எல்லோரும் எருசலேமிலே கூடிவந்திருக்கிற வேளை ஒன்பதாம் மாதம் இருபதாந் தேதியாயிருக்கிறது; ஜனங்கள் எல்லாரும் தேவனுடைய ஆலயத்தின் வீதியிலே அந்தக் காரியத்தினாலும் அடைமழையினாலும் நடுங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

தேவனுடைய ஆலயத்தின் வீதியிலே இஸ்ரவேலின் மகாசபையாரும் கூடியிருக்கிறார்கள். அப்பொழுது எஸ்றா அவர்களுக்கு பிரசங்கம்பண்ணுகிறான்.

அப்பொழுது ஆசாரியனாகிய எஸ்றா எழுந்திருந்து அவர்களை நோக்கி: "நீங்கள் இஸ்ரவேலின்மேலிருக்கிற குற்றத்தை அதிகரிக்கப்பண்ண, மறு ஜாதியான ஸ்திரீகளை விவாகம்பண்ணினதினால் பாவஞ்செய்தீர்கள்" (எஸ்றா 10:10) என்றும்,

"இப்பொழுதும் நீங்கள் உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரிடத்தில் அறிக்கையிட்டு, அவருடைய பிரியத்தின்படியே செய்து, தேசத்தின் ஜனங்களையும், மறுஜாதியான ஸ்திரீகளையும் விட்டு விலகுங்கள்" (எஸ்றா 10:11) என்றும் சொல்லுகிறான்.

ஜனங்களுடைய பாவங்களை எஸ்றா தெளிவாக உணர்த்துகிறான். தங்களுடைய பாவங்களுக்கு ஜனங்கள் பாவஅறிக்கை செய்ய வேண்டுமென்றும், அதற்காகச் செய்யவேண்டிய பிராயச்சித்தங்களையும் செய்ய வேண்டுமென்றும் எஸ்றா தாமதமில்லாமல் கட்டளையிடுகிறான் (எஸ்றா 10:10-11).

இஸ்ரவேல் சபையார் எஸ்றாவின் பிரசங்கச் செய்திக்கு கீழ்ப்படிகிறார்கள். எஸ்றா சொன்ன வார்த்தைகளின்படி செய்ய அவர்கள் சம்மதிக்கிறார்கள். அப்பொழுது சபையார் யாவரும் மகா சத்தத்தோடே பிரதியுத்தரமாக: "ஆம், நீர் சொன்ன வார்த்தைகளின்படியே செய்யவேண்டியதுதான்" (எஸ்றா 10:12) என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் சபையார் எஸ்றா சொன்ன வார்த்தைகளின்படி செய்ய சம்மதம் தெரிவித்தாலும், அதை அவர்களால் உடனே நிறைவேற்ற முடியவில்லை. அவர்கள் தங்களுடைய பிரச்சனைகளை எஸ்றாவிடத்தில் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் சபையார் எஸ்றாவை நோக்கி, "ஆனாலும் ஜனங்கள் திரளாயிருக்கிறார்கள், இது மாரிகாலமுமாயிருக்கிறது, இங்கே வெளியிலே நிற்க எங்களாலே கூடாது; இது ஒருநாள் இரண்டுநாள் வேலையல்ல; இந்தக் காரியத்திலே கட்டளை மீறினவர்களாகிய நாங்கள் அநேகர்" (எஸ்றா 10:13) என்றும்,

"ஆகையால் இதற்குச் சபையெங்கும் எங்கள் பிரபுக்கள் விசாரிப்புக்காரராக வைக்கப்படவேண்டும்; இந்தக் காரியத்தினிமித்தம் நம்முடைய தேவனுக்கு இருக்கிற உக்கிரகோபம் எங்களை விட்டுத் திரும்பும்படி, எங்கள் பட்டணங்களில் மறுஜாதியான ஸ்திரீகளைக்கொண்ட அனைவரும் ஒவ்வொரு பட்டணத்தின் மூப்பரோடும் நியாயாதிபதிகளோடும் குறித்தகாலங்களில் வரக்கடவர்கள்" (எஸ்றா 10:14) என்றும் சொல்லுகிறார்கள்.

எஸ்றாவின் உபதேசம் ஜனங்களுடைய உள்ளத்தில் போய் சேருகிறது. கர்த்தருடைய பிரமாணத்திற்கு ஜனங்கள் கீழ்ப்படிகிறார்கள். மறுஜாதியான ஸ்திரீகளை விலக்கி வைக்க சம்மதிக்கிறார்கள். ஆனாலும் எதேட்சையாக யாரும் தங்களுடைய மனைவிகளை விலக்கி வைத்துவிட முடியாது. நியாயாதிபதிகளிடம் அவர்களுடைய வழக்குகள் விசாரிக்கப்பட வேண்டும். ஜீவனாம்சம் போன்ற காரியங்களை ஒழுங்கு செய்யவேண்டும். இதற்கெல்லாம் சற்று கால அவகாசம் ஆகும். மேலும் மறுஜாதியான ஸ்திரீகளை விவாகம் பண்ணியோரும் அதிகமான பேராக இருக்கிறார்கள். கர்த்தருடைய உக்கிரக்கோபம் தங்கள்மீது வராதவாறு இஸ்ரவேல் புத்திரர் பிராயச்சித்தக் காரியங்களை எவ்வளவு சீக்கிரமாகச் செய்து முடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகச் செய்வதற்குச் சம்மதிக்கிறார்கள் (எஸ்றா 10:13-14).

அந்நிய ஜாதியான ஸ்திரீகள் எஸ்றா 10:15-44

எஸ்றா 10:15. ஆசகேலின் குமாரன் யோனத்தானும், திக்காவின் குமாரன் யக்சியாவுமாத்திரம் அதை விசாரிக்கும்படிக்கு வைக்கப்பட்டார்கள்; மெசுல்லாமும், சப்பேதா என்னும் லேவியனும் அவர்களுக்கு உதவியாயிருந்தார்கள்.

எஸ்றா 10:16. சிறையிருப்பிலிருந்து வந்தவர்கள் இந்தப்பிரகாரம் செய்தார்கள்; ஆசாரியனாகிய எஸ்றாவும், தங்கள் பிதாக்களுடைய குடும்பத்தின்படியே பேர்பேராக அழைக்கப்பட்ட பிதா வம்சங்களின் தலைவர் அனைவரும், இந்தக் காரியத்தை விசாரிக்கும்படி, பத்தாம் மாதம் முதல்தேதியிலே, தனித்து உட்கார்ந்து,

எஸ்றா 10:17. அந்நியஜாதியான ஸ்திரீகளைக் கொண்டவர்கள் எல்லாருடைய காரியத்தையும் முதலாம் மாதம் முதல் தேதியிலே விசாரித்து முடித்தார்கள்.

எஸ்றா 10:18. ஆசாரிய புத்திரரில் மறுஜாதியான மனைவிகளைக் கொண்டவர்களாகக் காணப்பட்டவர்கள் யாரென்றால்: யோசதாக்கின் குமாரனாகிய யெசுவாவின் குமாரரிலும் அவன் சகோதரரிலும், மாசெயா, எலியேசர், யாரீப், கெதலியா என்பவர்கள்.

எஸ்றா 10:19. இவர்கள் தங்கள் ஸ்திரீகளைத் தள்ளிவிடுவோம் என்று கையடித்துக் கொடுத்து; தாங்கள் குற்றவாளிகளானபடியினால் குற்றநிவாரணபலியாக ஒரு ஆட்டுக்கடாவைச் செலுத்தினார்கள்.

எஸ்றா 10:20. இம்மேரின் புத்திரரில் அனானியும், செபதியாவும்,

எஸ்றா 10:21. ஆரீமின் புத்திரரில் மாசெயா, எலியா, செமாயா, யெகியேல், உசியா என்பவர்களும்;

எஸ்றா 10:22. பஸ்கூரின் புத்திரரில் எலியோனாய், மாசெயா, இஸ்மவேல், நெதனெயேல், யோசபாத், எல்சா என்பவர்களும்;

எஸ்றா 10:23. லேவியரில் யோசபாத், சிமேயி, கெலிதா என்னும் பேருமுள்ள கெலாயா, பெத்தகீயா, யூதா, எலியேசர் என்பவர்களும்;

எஸ்றா 10:24. பாடகரில் எலியாசிபும், வாசல் காவலாளரில் சல்லூம், தேலெம், ஊரி என்பவர்களும்;

எஸ்றா 10:25. மற்ற இஸ்ரவேலருக்குள்ளே பாரோஷின் புத்திரரில் ரமீயா, யெசியா, மல்கியா, மியாமின், எலெயாசார், மல்கிஜா, பெனாயா என்பவர்களும்;

எஸ்றா 10:26. ஏலாமின் புத்திரரில் மத்தனியா, சகரியா, யெகியேல், அப்தி, யெரிமோத், எலியா என்பவர்களும்;

எஸ்றா 10:27. சத்தூவின் புத்திரரில் எலியோனாய், எலியாசிப், மத்தனியா, யெரிமோத், சாபாத், அசிசா என்பவர்களும்;

எஸ்றா 10:28. பெபாயின் புத்திரரில் யோகனான், அனனியா, சாபாயி, அத்லாயி, என்பவர்களும்;

எஸ்றா 10:29. பானியின் புத்திரரில் மெசுல்லாம், மல்லூக், அதாயா, யாசுப், செயால், ராமோத் என்பவர்களும்;

எஸ்றா 10:30. பாகாத்மோவாபின் புத்திரரில் அத்னா, கெலால், பெனாயா, மாசெயா, மத்தனியா, பெசலெயேல், பின்னூயி, மனாசே என்பவர்களும்,

எஸ்றா 10:31. ஆரீமின் புத்திரரில் எலியேசர், இஷியா, மல்கியா, செமாயா, ஷிமியோன்,

எஸ்றா 10:32. பென்யமீன், மல்லூக், செமரியா என்பவர்களும்;

எஸ்றா 10:33. ஆசூமின் புத்திரரில் மத்னாயி, மத்தத்தா, சாபாத், எலிபெலேத், எரெமாயி, மனாசே, சிமேயி என்பவர்களும்;

எஸ்றா 10:34. பானியின் புத்திரரில் மாதாயி, அம்ராம், ஊவேல்,

எஸ்றா 10:35. பெனாயா, பெதியா, கெல்லூ,

எஸ்றா 10:36. வனியா, மெரெமோத், எலெயாசீப்,

எஸ்றா 10:37. மத்தனியா மதனாய், யாசாய்,

எஸ்றா 10:38. பானி, பின்னூயி, சிமெயி,

எஸ்றா 10:39. செலேமியா, நாத்தான், அதாயா,

எஸ்றா 10:40. மக்நாத்பாயி, சாசாயி, சாராயி,

எஸ்றா 10:41. அசரெயேல், செலேமியா, செமரியா,

எஸ்றா 10:42. சல்லூம், அமரியா, யோசேப் என்பவர்களும்;

எஸ்றா 10:43. நேபோவின் புத்திரரில் ஏயெல், மத்தித்தியா, சாபாத், செபினா, யதாய், யோவேல், பெனாயா என்பவர்களுமே.

எஸ்றா 10:44. இவர்கள் எல்லாரும் மறுஜாதியான ஸ்திரீகளைக் கொண்டவர்கள்; இவர்களில் சிலர் கொண்டிருந்த ஸ்திரீகளிடத்தில் பிள்ளைகளைப் பெற்றிருந்தார்கள்.

அந்நிய ஜாதியான ஸ்திரீகளை இஸ்ரவேல் புத்திரர் விவாகம்பண்ணக்கூடாது. அவர்களை விவாகம்பண்ணுவது கர்த்தருடைய பிரமாணத்தை மீறுகிற செயல். இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே அந்நிய ஜாதியான ஸ்திரீகளை விவாகம்பண்ணியவர்களின் வழக்குகளை, எருசலேமில் மொத்தமாக விசாரியாமல், தங்கள் தங்கள் பட்டணங்களில் விசாரிக்கலாம் என்றும், இந்த வழக்கை விசாரிப்பதற்கு தங்கள் பிரபுக்களை விசாரிப்புக்காரராக வைக்கவேண்டும் என்றும் இஸ்ரவேல் சபையார் சொல்லுகிறார்கள்.

இந்த வழக்குகளை விசாரிப்பதற்கு ஒவ்வொரு பட்டணத்திலும் நியாயாதிபதிகளும், மூப்பர்களும் நியமிக்கப்படுகிறார்கள். வழக்குகளும் குறிப்பிட்ட காலங்களில் நடைபெறுகிறது. வழக்கு நடைபெறுகிற குறித்த காலத்திலே, இந்த வழக்கிலே சம்பந்தப்பட்டவர்கள், மூப்பருக்கு முன்பாகவும், நியாயாதிபதிகளுக்கு முன்பாகவும் வந்து நிற்கிறார்கள்.

அந்நிய ஜாதி ஸ்திரீகளை விவாகம்பண்ணியவர்களின் வழக்குகளை விசாரிப்பதற்காக விசாரிப்புக்காரர் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களைப்பற்றிய விவரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆசகேலின் குமாரன் யோனத்தானும், திக்காவின் குமாரன் யக்சியாவுமாத்திரம் அதை விசாரிக்கும்படிக்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள்; மெசுல்லாமும், சப்பேதா என்னும் லேவியனும் அவர்களுக்கு உதவியாயிருக்கிறார்கள் (எஸ்றா 10:15).

எஸ்றாவும், இஸ்ரவேல் சபையாரும் ஏற்கெனவே பேசி ஒப்புக்கொண்ட பிரகாரம் வழக்குகள் விசாரிக்கப்படுகிறது.

சிறையிருப்பிலிருந்து வந்தவர்கள் இந்தப்பிரகாரம் செய்கிறார்கள்; ஆசாரியனாகிய எஸ்றாவும், தங்கள் பிதாக்களுடைய குடும்பத்தின்படியே பேர்பேராக அழைக்கப்பட்ட பிதா வம்சங்களின் தலைவர் அனைவரும், இந்தக் காரியத்தை விசாரிக்கும்படி, பத்தாம் மாதம் முதல்தேதியிலே, தனித்து உட்கார்ந்து, அந்நியஜாதியான ஸ்திரீகளைக் கொண்டவர்கள் எல்லாருடைய காரியத்தையும் முதலாம் மாதம் முதல் தேதியிலே விசாரித்து முடிக்கிறார்கள் (எஸ்றா 10:16,17).

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் எருசலேமிலே ஒன்பதாம் மாதம் இருபதாம் தேதியிலே கூடிவந்தார்கள். இஸ்ரவேல் புத்திரருடைய வழக்கு விசாரணை பத்தாம் மாதம் முதல் தேதியிலே ஆரம்பமாகிறது. வழக்குகள் முதலாம் மாதம் முதல் தேதியிலே விசாரித்து முடிக்கப்படுகிறது.

அந்நிய ஜாதி ஸ்திரீகளை விவாகம்பண்ணின 113 பேர்களுடைய பெயர்கள் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்நியஜாதி ஸ்திரீகளை விவாகம்பண்ணியவர்களில் சிலருக்கு பிள்ளைகளும் இருக்கிறது. அந்நியஜாதி ஸ்திரீகளோடு அவர்களுடைய பிள்ளைகளும் அகற்றப்படவேண்டுமென்று செக்கனியா ஆலோசனை சொன்னான் (எஸ்றா 10:3). ஆனால் அவனுடைய ஆலோசனையின்படி, அந்நியஜாதி ஸ்திரீகளோடு, அவர்களுடைய பிள்ளைகள் அகற்றப்படவில்லை.

ஆசாரிய புத்திரரில் மறுஜாதியான மனைவிகளைக் கொண்டவர்களாகக் காணப்பட்டவர்களும் இருக்கிறார்கள். மோசேயின் நியாயப் பிரமாணத்தின்படி ஆசாரியர்கள் அந்நிய ஜாதி ஸ்திரீகளை விவாகம் பண்ணக்கூடாது (லேவி 21:14).

இங்கு ஆசாரிய புத்திரரில் 18பேர் மறுஜாதியான மனைவிகளைக் கொண்டவர்களாகக் காணப்படுகிறார்கள். இவர்கள் தங்கள் ஸ்திரீகளைத் தள்ளிவிடுவோம் என்று கையடித்துக் கொடுக்கிறார்கள் (எஸ்றா 10:18-22).

ஆசாரியரைப்போலவே, லேவியரில் ஆறுபேரும், பாடகரில் ஒருவரும், வாசல்காவலாளரில் மூன்றுபேரும் மறுஜாதியான மனைவிகளைக் கொண்டிருக்கிறார்கள். (எஸ்றா 10:23-24).

ஆசாரியர்கள், லேவியர், பாடகர், வாசல் காவலாளர் தவிர, இஸ்ரவேல் புத்திரரில் மேலும் 86 பேர் மறுஜாதியான மனைவிகளைக் கொண்டிருக்கிறார்கள். (எஸ்றா 10:25-44). இவர்கள் எல்லோருமே தங்களுடைய மறுஜாதி ஸ்திரீகளைத் தள்ளிவிடுவதாக வாக்குப்பண்ணுகிறார்கள். (எஸ்றா 10:5,12,19).